# வணிகத்தளிர்

## இதழ்-17




வணிக மாணவர் ஒன்றியம்

யா/திருக்குடும்ப கன்னியர் மடம்
தேசிய பாடசாலை
யாழ்ப்பாணம்

# வணிகத்தளிர்

## தளிர் 17

வணிக மாணவர் ஒன்றியம்

யா/ திருக்குடும்ப கன்னியர் மடம்

தேசிய பாடசாலை

யாழ்ப்பாணம்

2019

| | | |
|---|---|---|
| நூல் | : | "வணிகத்தளிர்" |
| வெளியீடு | : | வணிக மாணவர் ஒன்றியம்<br>திருக்குடும்ப கன்னியர் மடம்<br>யாழ்ப்பாணம் |
| பதிப்பு | : | மாசி 2019 |
| இதழாசிரியர்கள் | : | செல்வி க. ஏஞ்ஜலீன் வெரோணிக்கா<br>செல்வி தே. தீபனா |
| பதிப்பகம் | : | விஸ்டா8 அச்சகம்<br>இல. 164 D, இராமநாதன் வீதி<br>யாழ்ப்பாணம் |
| Title | : | "Vanikaththalir" |
| Published By | : | Commerce Students' Union<br>Holy Family Convent<br>Jaffna |
| Published in | : | February 2019 |
| Editors | : | Miss K. Angelin Veronika<br>Miss T. Theebana |
| Printers | : | Vista8Printers<br>No.164D, Ramanathan Road<br>Jaffna |

# யா / திருக்குடும்ப கன்னியர் மடம்

**தேசிய பாடசாலை**

## யாழ்ப்பாணம்

## வணிக மாணவர் ஒன்றியம்

## ஒன்றியத்தின் தூர நோக்கு (Vision)

சர்வதேச ரீதியில் ஆளுமைத் திறன்மிக்க மாணவர்களை உருவாக்குதல்

## ஒன்றியத்தின் பணிக்கூற்று (Mission )

வணிகத் துறை சார்ந்த அறிவினை வளர்க்கும் பரவச் செய்யும் அனுபவ களங்களின் வழி மாணவிகளின் கல்வித்தர மேம்பாட்டினை உறுதி செய்தல்

# வணிக ஒன்றிய கீதம்

போற்று முயர்திருக்குடும்பம் எனப்புகழ்
ஆற்றும் கன்னியரின்
ஏற்றமுறு மடம் ஈட்டும் வணிகமன்று
ஆக்கும் பணி வளர்க
ஆக்கும் பணி வளர்க!

நேற்று வளர் தளிர் ஏற்று மலர் மணம்
சேர்த்து எழில் மிகவே
ஊற்று வரப் பயன் தூக்கி நுகர்வுற
வீற்று மகிழ்வுறுவோம்!

கேற்று முயர் நெறி தேவன் கருணையால்
கீர்த்தி பெறு முறுதி
பீற்று வரப்பலம் ஊட்டி யெம் மண்ணிலே
பீடுற வாழ்வோமே!

# வணிக மாணவர் ஒன்றியம்
# நிர்வாகக் குழு - 2019

**காப்பாளர்**

அருட்சகோதரி அமிர்தா அன்ரன் தேவதாசன்

அதிபர்

யா/ திருக்குடும்பக் கன்னியர் மடம்

**பொறுப்பாசிரியர்**

திரு. பா.கஜென்

ஆசிரியர் - வணிகத்துறை

யா/ திருக்குடும்பக் கன்னியர் மடம்

| | | |
|---|---|---|
| தலைவர் | :- | செல்வி ந. சாஜினி |
| உப தலைவர் | :- | செல்வி ரா. பேசி சுஜீவா |
| செயலாளர் | :- | செல்வி கொ. வர்ஷா |
| உப செயலாளர் | :- | செல்வி ஜே. சுஜிதா |
| பொருளாளர் | :- | செல்வி வி. விதுசாளினி |
| இதழாசிரியர்கள் | :- | செல்வி க. ஏஞ்ஜலீன் வெரோணிக்கா |
| | | செல்வி தே. தீபனா |

நிர்வாக சபை உறுப்பினர்கள்:

பெ. பிறிஸ்கா

வீ. மாறி அனட் டொறிஸ்

வி. மிதுஷா

பா. சிந்தூரி

நி. உமேனிக்கா

பிரதம விருந்தினர் அவர்களின்

## வாழ்த்துச் செய்தி



யாழ் திருக்குடும்ப கன்னியர் மட தேசிய பாடசாலையின் உயர்தர வணிக மாணவர் மன்ற "வணிகத்தளிர்" மலர் வெளியீட்டிற்கான வாழ்த்துச் செய்தியினை தந்து உதவுதலில் அகமகிழ்வடைகின்றேன்.

வருடா வருடம் வெளி வரும் "வணிகத்தளிர்" மலர் காலத்திற்கு காலம் வணிக துறையால் உலகளாவிய ரீதியில் ஏற்படும் மாற்றங்களை அறிந்து காலத்திற்கேற்ப தமது முயற்சியின் மூலம் கிடைக்கப் பெறும் அறிவுத் திரட்டல்களை மற்றவரும் அறிந்து கொள்ளும் முறையில் ஆவணப்படுத்தி வெளியிட்டுவரும் முயற்சி பாராட்டுக்குரியதாகும்.

"வணிகத்தளிர்" மலரின் வெளியீட்டுக்கு உறுதுணையாக இருந்து வரும் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் வணிக மன்ற அங்கத்தவர்களுக்கு எனது வாழ்த்துக்களை இத்தால் தெரிவித்து நிற்கின்றேன்.

எதிர்காலத்திலும் உங்கள் சீரிய பணி சிறக்கட்டும்.

திரு. இம்மானுவேல் ஆனல்ட்
யாழ். மாநகர முதல்வர்
மாநகரசபை
யாழ்ப்பாணம்

# வாழ்த்துச் செய்தி



யாழ் வலய தேசிய பாடசாலைகளில் ஒன்றான திருக்குடும்பக் கன்னியர் மட மாணவிகளின் "வணிகத் தளிர்" மலரிற்கான வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெரு மகிழ்வடைகின்றேன். மாணவர்களின் எழுத்தாற்றல், தேடும் ஆற்றல் ஆகியவற்றை வளர்க்கும் இவ்வாறான சஞ்சிகைகளின் வெளியீட்டை தொடர்ந்து மேற்கொண்டு வருவது முதற்கண் பாராட்டுக்குரியது.

வணிகத்துறைப் பாடங்கள் வகுப்பறையிலிருந்து கற்பது மட்டுமல்லாது பொருளாதாரத்தில் நடைபெறும் செயற்பாடு களுக்கும் விளக்கமளிக்கக் கூடியதும் புத்தாக்க சிந்தனையை தூண்டக் கூடியதுமான அறிவாகும்.

கைத்தொழிற் புரட்சியில் ஆரம்பித்து இன்று நனோ தொழினுட்பம் வரை நடைபெற்றுள்ள அதிவேக அறிவு வெடிப்பானது (Knowledge Explosion) உலக மயமாதலில் செல்வாக்குச் செலுத்தும் அதே வேளையில் அதற்கேற்ப எமது மாணவச் செல்வங்களை நவீன உலகிற்குத் தயார்ப்படுத்த வேண்டியது நம் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும்.

இவ்வாறான சஞ்சிகைகளின் வெளியீட்டுடன் புத்தாக்க கண்காட்சிகள், ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித் தல் போன்ற செயற்பாடுகள் மாணவர் மத்தியில் மேலும் ஊக்குவிக்கப்படல் வேண்டும் "வணிகத் தளிர்" சஞ்சிகையின் வெளியீட்டுக்கு உழைத்த மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர் ஆகியோருக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு. சு.சுந்தரசிவம்**
**வலயக் கல்விப் பணிப்பாளர்**
**வலயக் கல்வி அலுவலகம்**
**யாழ்ப்பாணம்**

# வாழ்த்துச் செய்தி



யா/திருக்குடும்பக் கன்னியர்மடம் பாடசாலையின் வணிக மன்றத்தினரால் வெளியிடப்படும் "வணிகத்தளிர்" மலரிற்கான வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

மாணவர்களின் மென்திறன்களை விருத்தி செய்வதில் வணிகத்துறை பெரும்பங்கு வகிக்கிறது. அந்த வகையில் இவ்வாறான செயற்பாடுகளை மாணவர்களின் மென்திறன்களான தொடர்பாடல், குழுவாகச் செயற்படல் போன்றவற்றை விருத்தி செய்வதில் முக்கிய பங்கு வகிக்கின்றது.

இம் மலரினை வெளியிடும் வணிக மாணவர் மன்றத்தினருக்கும், அவர்களுக்கு வழிகாட்டல்களை வழங்கும் ஆசிரியர்கள், மற்றும் அதிபர் அவர்களுக்கும் எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.


திரு. அ. சுபாகரன்
உதவிக் கல்விப் பணிப்பாளர்
வலயக் கல்வி அலுவலகம்
யாழ்ப்பாணம்

# ஆசிச் செய்தி



எமது பாடசாலையில் உயர்தர வணிகவியல் கற்கின்ற மாணவர்களின் வணிக மன்றத்தின் சார்பாக 2019ஆம் ஆண்டின் 'வணிகத்தளிர்' எனும் சஞ்சிகை 17ஆவது இதழ் வெளியிடுவதையிட்டு பெரும் மகிழ்வு அடைகின்றேன்.

"வானமே வணிகத்தின் எல்லை" கரை காண முடியாத பரந்த இவ்வுலகத்திலே வேகமும் விவேகமும் முக்கிய இடம் வகிக்கின்றன. அவ்வகையில் உலகத்தையும் உள்ளங்களை-யும் ஒன்றிணைப்பதில் வணிகம் மிக மகத்தான இடம் வகிக்கின்றது.

மாணவர்களின் அறிவு, அனுபவம், ஆக்கம், போன்ற பல்துறைப் பரிமாணங்களின் படைப்பாக இவ்விதழ் வெளிவருவதையிட்டு பெருமகிழ்வடைகிறேன். அத்துடன் இச்சஞ்சிகையினை வெளியிடும் மாணவர்களின் அயராத முயற்சியினையும், தன்னம்பிக்கையினையும் குழு ஒருமைப்பாட்டையும் மனதாரப் பாராட்டுகின்றேன். இச்சஞ்சிகையானது கல்வியியலாளர்களின் பயனுள்ள கட்டுரைகளையும் தன்னகத்தே தாங்கி மலர்வதும் பாராட்டிற்குரியது.

இத்தளிர் வெளிவர அயராது உழைத்த பொறுப்பாசிரியர் திரு. B. கஜென் அவர்களையும் ஏனைய வணிகத்துறைசார் ஆசிரியர்களையும், மகிழ்ச்சியுடன் பாராட்டுகின்றேன். இம் முயற்சி தொடர்ந்து நடைபெற எனது இதயபூர்வமான இறையாசீரை வழங்கி நிற்கின்றேன்.


**அருட்சகோதரி அமிர்தா அன்ரன் தேவதாசன்**
**அதிபர்**
**யா/திருக்குடும்பக் கன்னியர் மடம்**
**தேசியபாடசாலை**
**யாழ்ப்பாணம்**

# ஒன்றியப் பொறுப்பாசிரியரின் மனதிலிருந்து...



யா / திருக்குடும்ப கன்னியர் மடம் (தேசிய பாடசாலை) வணிக ஒன்றியப் பொறுப்பாசிரியராக இருந்து "வணிகத்தளிர்" மலர் வெளியீட்டில் எனது கருத்துக்களை இங்கு உங்களுடன் பகிர்வதில் அகமகிழ்ந்து நிறைவடைகிறேன்.

வணிகத்துறையில் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது அத்துறையின் முக்கியத்துவத்தை வெளிப் படுத்துகிறது. பாடசாலைக் கல்வியின் பின்னரான காலப்பகுதியில் இத்துறைசார் கற்கைநெறிகள் சர்வதேசரீதியில் வளர்ச்சியடைந் துள்ளதும் வருமானம் உழைக்கக்கூடிய தொழிற்துறைகளில் பணியாற்றுவதற்கான தகைமைகளைப் பெற்றுக்கொள்ள இத்துறை உதவுவதுமே காரணங்களாகும். அத்துறைசார் மாணவர்களின் ஆக்கங்களோடு புலமைமிக்க விரிவுரையாளர்கள், துறைசார் தேர்ச்சிபெற்றவர்களின் ஆக்கங்களையும் இம்மலர் தாங்கி வருவது பெருமைக்குரிய தாகும்.

இவ் "வணிகத்தளிர்" வெளியீட்டின் மூலம் மாணவர்களின் தேடல் ஆர்வம் தூண்டப் பட்டிருப்பதோடு அவர்களின் ஆக்கத் திறன்களும் வெளிக்கொணரப்பட்டுள்ளது. இதன் மூலம் மாணவர்களின் தலைமைத்துவப் பண்புகளும் விருத்தியாக்கப்பட்டுள்ளன என நம்புகிறேன்.

மேலும், பல தடைகள், இடர்பாடுகளையும் கடந்து இம்மலர் வெளிவர காலத்தைப் பணித்த கடவுளுக்கு நன்றி கூறுவதோடு வணிகத்தளிர் வெளியீட்டில் அர்ப்பணிப்புடன் பங்கெடுத்த அனைவருக்கும் நன்றி கூறிகின்றேன்.


திரு.B.கஜென்
ஆசிரியர் - வணிகத்துறை
யா / திருக்குடும்பக் கன்னியர் மடம்
தேசிய பாடசாலை
யாழ்ப்பாணம்

# தலைவரின் எண்ணத்திலிருந்து



எமது பாடசாலையின் வணிக மன்றத்தால் வருடா வருடம் வெளியிடப்படுகின்ற "வணிகத்தளிர்" இதழானது இம் முறை 17ஆவது சிறப்பிதழாக வெளிவருவதையிட்டு பெரு மகிழ்வடைகின்றேன். பல்வேறு பயனுறுதிமிக்க ஆக்கங்களைத் தாங்கிய வண்ணம் வெளிவரும் இச் சஞ்சிகையானது அனைவரதும் வரவேற்பையும் பெற்றுக் கொள்ளும் என நம்புகின்றேன்.

இச் சஞ்சிகைகளில் உள்ள அனைத்து ஆக்கங்களும் ஆசிரியர்களின் வழிகாட்டலின் கீழ் மாணவர்களின் சுய சிந்தனைகளினாலும் சுய தேடலினாலும் முன் வைக்கப்பட்ட விடயங்களாகும். இவ் இதழானது எமது கைகளில் தவழ உதவிய கல்லூரி முதல்வர், உப அதிபர், பகுதித்தலைவர், பொறுப்பாசிரியர், வர்த்தகப் பிரிவு ஆசிரியர்கள், இதழாசிரியர்கள் எம்முடன் இணைந்து எந் நேரத்திலும் அனைத்து உதவிகளை வழங்கிய வணிக மாணவர் ஒன்றிய உறுப்பினர்களுக்கும் எமது வர்த்தகப் பிரிவு மாணவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டு எமது வணிகத் தளிரானது தொடர்ந்தும் கிளைகளை பரப்ப வேண்டுமென இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டு நிறைவு செய்கின்றேன்.

செல்வி ந. சாஜினி
தலைவர்
வணிக மாணவர் ஒன்றியம்
திருக்குடும்ப கன்னியர் மடம்
தேசிய பாடசாலை
யாழ்ப்பாணம்

# செயலாளரின் சிந்தனையிலிருந்து...



யாழ்/ திருக்குடும்பக் கன்னியர் மடம் தேசிய பாடசாலையின் வணிக மன்றத்தின் 17ஆவது இதழானது பல தடைகள் மத்தியிலும் எமது மாணவர்களது முத்தான ஆக்கங்களான கட்டுரைகள், கவிதைகள், மற்றும் எமது துறைசார்ந்தவர்களின் பல்வேறுபட்ட ஆக்கங்களும் இணைந்து புதிய சிந்தனைத் துளிர்களுடனும் புதுப் பொலிவுடனும் மலரும் வணிகத் தளிரை வெளியிடுவதில் செயலாளர் என்ற ரீதியில் மட்டற்ற மகிழ்வடைகின்றேன்.

முடிவின்றி தனது வளர்ச்சிப் பாதையில் செல்லும் எம் வணிகத்தளிர் உருவாகுவதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த எமது பாடசாலை அதிபர் அருட்சகோதரி அமிர்தா அன்ரன் அவர்களுக்கும் உப அதிபர் திருமதி A. ஜோண்பிறிற்றோ அவர்களுக்கும் எமது நன்றியை கூறிக்கொள்கின்றோம். மேலும் எமது அறிவிற்கு எட்டாத பல விடயங்களைக் கூறி ஆலோசனை வழங்கி எம்மை வழி நடத்திய எமது மன்றத்தின் பொறுப்பாசிரியர் திரு. B. கஜன் அவர்களுக்கும் வர்த்தகத் துறைசார்ந்த ஆசிரியர்களுக்கும், ஆக்கங்களைத் தந்துதவிய மாணவர்களுக்கும், நிகழ்ச்சிகளைத் தந்துதவிய மாணவர்களுக்கும் மற்றும் விளம்பர அனுசரணையாளர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

1989இல் தனது பயணத்தை ஆரம்பித்த வணிகத் தளிரானது தனது வளர்ச்சிப்பாதையில் வெற்றிநடை போடுவதுடன் எமது வணிகத்தளிரை மென்மேலும் தளிர்க்கச் செய்வதற்கு எமது எதிர்கால சந்ததியினர் முயற்சி செய்வார்கள் என நம்புகின்றோம்.


செல்வி கொ. வர்ஷா
செயலாளர்
வணிக மாணவர் ஒன்றியம்
திருக்குடும்ப கன்னியர் மடம்
தேசிய பாடசாலை
யாழ்ப்பாணம்

# இதழாசிரியரின் இதயத்திலிருந்து...



யாழ்/திருக்குடும்ப கன்னியர்மட தேசிய பாடசாலையின் வணித் துறை மாணவர்களின் திறன்களை வெளிக்காட்டும் வகையில் "வணிகத் தளிரானது" இவ் ஆண்டில் 17ஆவது இதழாக வெளிவருவதையிட்டு பெரும் மகிழ்வடைகின்றோம்.

இவ் இதழானது பல மாற்றங்களை எதிர்கொள்ளும் வணிக உலகிற்கு ஏற்ப அனைவரது அறிவு, ஆற்றல்களுக்கும் விருந்தளிக்கும் என முழுமையாக நம்புகின்றோம். இவ் இதழானது சிறப்புற வெளிவர அயராது உழைத்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் இவ் 17ஆவது வணிகத்தளிரை வெளியிடுவதற்கான ஆக்கங்களைத் தந்துதவிய உள்ளங்களுக்கும் விளம்பர அனுசரணையாளர்களுக்கும் இம் மலருக்கு வாழ்த்துச் செய்தி, ஆசிச்செய்தி வழங்கிய அனைவருக்கும் மலர்க்குழுவின் சார்பாக இதழாசிரியர்கள் என்ற வகையில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

இந் நூலில் ஏதேனும் குறைகள் காணப்படுமாயின் பெருமனதோடு மலர்க்குழுவிற்குத் தெரியப்படுத்து மாறும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இனிவரும் காலங்களில் வெளியாகும் வணிகத்தளிர்களானது வணிக மாணவர்களின் ஆற்றல்களை மெருகூட்டும் வகையில் சிறப்புற வெளியாக்குவதற்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

**செல்வி க. ஏஞ்ஜலீன் வெரோணிக்கா**
**இதழாசிரியர்**
**வணிக மாணவர் ஒன்றியம்**
**திருக்குடும்ப கன்னியர் மடம்**
**தேசிய பாடசாலை**
**யாழ்ப்பாணம்**

# சிறந்த சாதனையாளர் விருது - 2018

## Best Achiever Award - 2018



**செல்வி சர்மிகா ஆறுமுகதாஸ்**

க.பொ.த (உயர்தரப் பரீட்சை - 2018 இல் தோற்றி மூன்று பாடங்களிலும் A தர சித்தி பெற்று (மாவட்ட நிலை 27) எமது வணிகத்துறைக்கும் பாடசாலைக்கும் பெருமை சேர்த்தமைக்காக இவ்விருது வணிக மாணவர் ஒன்றியத்தால் வழங்கப்படுகிறது.

இவ்வாண்டு முதல் இவ்விருது வழங்கும் முறை எமது வணிக மாணவர் ஒன்றியத்தினால் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றோம்.

# தளிர் தரும் துளிகள்...


1. நிறுவனங்களின் கூட்டுச்சேர் சமூகப் பொறுப்பும் அதன் விளைவுகளும்
2. இலங்கை ஊழியச் சந்தையும் வேலைப்படையில் பெண்களின் பங்குபற்றலும்
3. முயற்சியாண்மையும், பெண்களின் பங்களிப்பும்
4. முயற்சியாண்மையின் ஓர் அங்கமாக பங்குச்சந்தை முதலீடுகள்
5. மாணவர்களிடம் எதிர்பார்க்கப்படும் முகாமைத்துவ மனப்பாங்கு
6. பொருளாதார வளர்ச்சியும் சூழல் பாதிப்பும்
7. தொழில்நுட்பத்தால் தூண்டப்படும் எதிர்கால வங்கித்தொழில்
8. மேந்தலைக் கிரயம்
9. பேண்தகு அபிவிருத்தி இலக்குகள்
10. இளம் முயற்சியாளனுடன் ஒரு சந்திப்பு
11. இலங்கையில் அண்மைக்கால அபிவிருத்தித் திட்டங்கள்
12. E- Business and E-Marketing
13. இலங்கையின் வெளிநாட்டு நேரடி முதலீடுகளும் பொருளாதார வளர்ச்சியும்
14. வணிகத்தின் விந்தை
15. இலங்கை மண்ணிலிருந்து பொலித்தீன் காணமல் போகுமா?
16. கணக்கீட்டு எண்ணக் கருத்துக்கள்
17. நீங்கள் வாங்கும்பொருள் எந்த நாட்டிற்குரியது
18. உற்பத்திக் கிரயக் கணிப்பு
19. வணிக நடவடிக்கைகளில் முயற்சியாண்மையின் பங்கு
20. ஊனத்தின் குமுறல்
21. Sustainable Development
22. Unfinished Business
23. இணையப் பாவனையும் இன்றைய மாணவர்களும்
24. படித்ததை மறக்காமல் இருப்பது எப்படி?
25. காலம் மாறிப்போச்சு
26. வணிக தளிரே! நீ வாழி!
27. வணிகங்களின் சமூகப் பொறுப்பு
28. The Inteligent system
29. சிறுவணிகம்
30. கொடுக்கல் வாங்கல்களில் கடனட்டைப் பயன்பாடு
31. E - Waste
32. உலக வங்கி - அறிமுகக் குறிப்பு
33. இலங்கை மத்திய வங்கி ஒரு வரலாற்றுக் குறிப்பு
34. School Days
35. How to Overcome video games addiction
36. வணிக விருத்தியில் தொடர்பாடலின் பங்கு
37. கணக்கீட்டு விகிதாசாரம்
38. குத்தகை ஆதனங்கள் தொடர்பான பதிவுகள்
39. பணவீக்கம் ஒரு கோட்பாட்டு ரீதியான பார்வை
40. International trade organizations.




அருட் சகோதரி அமிர்தா அன்ரன் தேவதாசன்
அதிபர்

# வணிக ஒன்றிய நிர்வாகக் குழு - 2019



இருப்பவர்கள் (இடமிருந்து வலமாக): செல்வி.ந.சாஜினி (தலைவர்), திருமதி.ஆ.ஜோண் பிறிற்றோ (உப அதிபர்), அருட்சகோதரி அமிர்தா அன்ரன் தேவதாசன் (அதிபர்.காப்பாளர்), திரு.பா.கஜென் (பொறுப்பாசிரியர்), செல்வி.கொ.வர்ஷா (செயலாளர்)

நிற்பவர்கள் (இடமிருந்து வலமாக) : செல்வி.ஜே.சுஜிதா (உப செயலாளர்), செல்வி.வி.விதுஷாளினி (பொருளாளர்), செல்வி.பெ.பிறிஸ்கா (உறுப்பினர்), செல்வி.க.ஏஞ்சலின் வெரோணிக்கா (இதழாசிரியர்), செல்வி.தே.தீபனா (இதழாசிரியர்), செல்வி.வீ.மாறி அனற் டொறிஸ் (உறுப்பினர்), செல்வி.வி.மிதுசா (உறுப்பினர்), செல்வி.பா.சிந்தூாரி (உறுப்பினர்), செல்வி.ரா.பேசி சுஜீவா (உப தலைவர்)

# தரம் 12 (2020) வணிகத்துறை மாணவர்கள்



**இருப்பவர்கள் (இடமிருந்து வலமாக):** திருமதி.கார்த்திக். திருமதி ஜெ.ஜெபநேசன்.செல்வி ஆ.சந்திர சேகரம்.திருமதி. கௌ.சண்முகலிங்கம் செல்வி ந.சாஜினி திருமதி.ஆ.ஜோண் பிறிற்றோ (உப அதிபர்).அருட்சகோதரி அமிர்தா அன்ரன் தேவதாசன் (அதிபர்.காப்பாளர்).செல்வி.கோ.வர்ஷா திரு.பா.கஜென் (பொறுப்பாசிரியர்).திரு.இ.குமரன்.திரு. தி.லின்டஸ். திரு.ம.மறோ மக்ஸ்சன்.

**நிற்பவர்கள் (முன்வரிசை இடமிருந்து வலமாக):** செல்வி.டவ்னியா.இ.உஷாந்தினி.செல்வி.ஜோ கெ.மேரி கெமன்சியா.செல்வி.அ.நிவேதிகா. செல்வி.றொ.நிதுசா. செல்வி இ.றொசின்ரா மாறி. செல்வி ல.லுசினா. செல்வி தே.தீபனா. செல்வி ரா.ஜீவிதா. செல்வி அ.சாகரி. செல்வி பா.கிருசா. செல்வி க.நிவோன்சிகா குரூஸ். செல்வி அ.றொக்சியா. செல்வி ச.நித்தியா. செல்வி மு.சிவாஜினி. செல்வி கி.றோமியா. செல்வி அ.செல்வியா றொசானி. செல்வி இ.சாணுஜா மேரி.

**நிற்பவர்கள் (பின்வரிசை இடமிருந்து வலமாக)** : செல்வி பெ.நி.லூட்ஸ் சியோமி. செல்வி அ.அர்ஜனா. செல்வி ச.நிதர்சனா. செல்வி றொ.றொக்சினி. செல்வி அ.அனற்ரா. செல்வி இ.மேரி மான்சிகா. செல்வி ம.மேரி மாதுரி. செல்வி இ.டிலக்சனா. செல்வி மெ.டிசாந்தினி. செல்வி ச.சசியரசி. செல்வி பி.குயின்சி. செல்வி அ.தனோஜியா. செல்வி கு.செல்சியா

# தரம் 13 (2019) வணிகத்துறை மாணவர்கள்



**இருப்பவர்கள் (இடமிருந்து வலமாக):** திருமதி.கார்த்திக்.திருமதி.ஜெபனேசன்.திருமதி......திருமதி.சன்முகலிங்கம்.செல்வி.ந.ஷஜினி திருமதி.பிறிற்றோ(உப அதிபர்), அருட்சகோதரி அமிர்தா அன்ரன் தேவதாசன் (அதிபர்.காப்பாளர்).செல்வி.கோ.வர்ஷா திரு.பா.கஜென் ,திரு.குமரன்.திரு.லிண்டஸ் திரு.மக்ஸ்சன்

**நிற்பவர்கள் (முன்வரிசை இடமிருந்து வலமாக)** : செல்வி.அஷஸானா.செல்வி.ஜே.சுஜிதா , செல்வி.விதுஷாயினி.செல்வி சியானா செல்வி. ஜொனேகா.செல்வி.கேதாயினி, செல்வி.வி.விதுஷாளினி செல்வி.பெ.பிறிஸ்கா , செல்வி.க.ஏஞ்ஜலின் வெரோணிக்கா , செல்வி.வீ.மாறி அனட் டொறிஸ் செல்வி.வி.மிதுசா.செல்வி மாளவிகா.செல்வி சிபோறா.செல்வி.ஆன. சௌமியா.அனுசியா.செல்வி.தெபோ.செல்வி அண்ட்றீயா

**நிற்பவர்கள் (பின்வரிசை இடமிருந்து வலமாக)** : செல்வி.டிலக்டா.செல்வி.குயின்சி.செல்வி.தர்சிகா.செல்வி.லெண்டா.செல்வி.சுதனிகா செல்வி.விஷ்னுஜா.செல்வி.டினோசா சர்மினி.செல்வி விதுஷா.செல்வி.திலக்ஷனா.செல்வி.பேர்சி சுயிவா.செல்வி.சிந்துாரி.செல்வி.அன்டோனிகா.

# வணிகத்துறை மாணவர்கள் போட்டிகளில் பங்குபற்றிய தருணங்களில் சில..



யாழ்ப்பாண பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தினால் பாடசாலைகளுக்கிடையில் வினாடி வினா போட்டி நடைபெற்ற தருனங்களில்...



யாழ்ப்பாண பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தினால் பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட வினாடி வினா போட்டியில் இரண்டாம் இடம் பெற்ற தருணங்களில்..

# நிறுவனங்களின் கூட்டுச்சேர் சமூகப் பொறுப்பும் அதன் விளைவுகளும்

## [Institutional Corporate Social Responsibility (CSR) and its Consequences]

திரு. ம. கருணாநிதி
முதுநிலை விரிவுரையாளர் / தலைவர்
சந்தைப்படுத்தல் துறை
யாழ் பல்கலைக்கழகம்.



**அறிமுகம்**

இன்றைய நவீன பொருளாதாரத்தில் நிறுவனங்களுக்கிடையிலான போட்டி என்பது தவிர்க்க முடியாத ஒன்றாக அமைகின்றது. போட்டி காணப்படும் போது நிறுவனங்கள் தமது நிலைத்திருத்தலை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டியது கட்டாயமானதாகின்றது. இவ்வாறு நிலைத்திருத்தலுக்கு உறுதுணையாகவுள்ள ஒரு செயற்பாடே சமூகப் பொறுப்புசார் நடவடிக்கைகளில் நிறுவனங்கள் ஈடுபாடுடையவையாக காணப்படுவதாகும். அதாவது, நிறுவனங்கள் தாம் சார்ந்துள்ள சமூகங்களுக்குத் தீங்கேற்படுத்தாத வகையில் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதும் சமூகங்களுக்கு பயன்தரக்கூடிய நீண்டகால மற்றும் குறுங்கால செயற்பாடுகளில் முதலீடுகளை மேற்கொள்வதுமாகும். இவ்வாறான பல்வேறு செயற்பாடுகளை இன்று நாம் எம்மத்தியில் காண்கிறோம். நிறுவனங்கள் தமது பொறுப்புக்களில் அல்லது கடமைகளில் ஒன்றாகக் கருதி சமூகப்பொறுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது அவை சமூகங் களின் நிலைபேறானதும் மற்றும் அபிவிருத்தியோடு தொடர்புடையதுமான விடயங்களில் அக்கறைகொண்டுள்ளமையை ஏனையோருக்கு (பொதுமக்களுக்கு) உணர்த்துவதற்குமேயெனவும் கூறலாம். சமூகப்பொறுப்புச் செயற்பாடுகளானவை சமூகம் நோக்கியதான நிறுவனங்களது தார்மீக நடத்தைகளாகவும் கருதப்படுகின்றன.

**வரைவிலக்கணம்**

நிறுவனங்களது கூட்டுச்சேர் சமூகப்பொறுப்பு செயற்பாடுகளென்பது நிறுவனங்களின் ஊழியர்களதும் அவர்களது குடும்பங்களதும் மற்றும் சார்ந்துள்ள சமூகத்தினதும் நிலைபேறான தன்மை மற்றும் அபிவிருத்திக்குப் பங்களிப்பு செய்யக்கூடிய வகையிலான தார்மீக நடவடிக்கை களாகும்.

ஒரு நிறுவனத்துக்குள்ள மேற்படி சமூகப்பொறுப்பானது பின்வரும் அடிப்படையில் பிரிக்கப்பட்டு வேறுபட்ட துறையினர் அடிப்படையில் நோக்கப்படக் கூடியது.


**சமூகம்சார் பொறுப்புக்கள்**

- வணிகத்தினை தார்மீக மற்றும் நெறிமுறைக்குட்பட்ட அடிப்படையில் மேற்கொள்ளுதல்
- சூழல் மாசுபடுவதனைத் தடுத்தல்
- சமநிலையற்ற சூழலியல் செயற்பாடுகளை இழிவுபடுத்தல்
- சமூகம்சார் சுகாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்தல்
- பொருத்தமான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தல்
- ஒட்டுமொத்த சமூக அபிவிருத்தியை நோக்கிய செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்.

**அரசாங்கம்சார் பொறுப்புக்கள்**

- சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளை முறையாகப் பின்பற்றுதல்.
- வரிகளை ஒழுங்காகச் செலுத்துதல்
- சமூக விழுமியங்களை மேம்படுத்தும் வகையில் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுதல்
- வணிகச்சட்டத்தில் காணப்படக்கூடிய ஓட்டைகளை அனுகூலமாக கொள்ளா திருத்தல்
- பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தியை மேம்படுத்தும் வகையில் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுதல்.

**பங்குதாரர்சார் பொறுப்புக்கள்**

- காலப்போக்கில் ஒரு நியாயமான வருவாய் வீதம் கிடைப்பதை உறுதிப்படுத்தல்
- அக்கறையுடையோர் மேம்படுத்தப்படுவதற்கும் தொடர்ந்திருப்பதற்கும் ஏற்றவகையில் செயற்படுதல்
- நிறுவனத்தின் புகழ் மற்றும் நன்மதிப்பு உயர்வடையக் கூடியவகையில் செயற்படுதல்
- வெளிப்படையானதும் பொறுப்புக்கூறக்கூடிய வகையிலும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

**ஊழியர்சார் பொறுப்புக்கள்**

- சாதகமான வேலைச்சூழலை ஏற்படுத்திக் கொடுத்தல்


- நியாயமான வேதனத்தை ஒழுங்காக வழங்குதல்
- பயிற்சி மற்றும் பதவியுயர்வு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்
- நலன்புரி சேவைகளை வழங்குதல்
- நியாயமான வேலை நிபந்தனைகள் மற்றும் நியமங்களைக் கொண்டிருத்தல்
- ஊழியரது மனக்குறைகளைத் தீர்த்து வைக்க வினைத்திறனாக செயற்படுதல்
- கடினமானதும் மற்றும் வினைத்திறனானதுமான செயற்பாடுகளுக்குப் பொருத்தமான அங்கீகாரத்தை வழங்குதல்.

**நுகர்வோர்சார் பொறுப்புக்கள்:**

- சமூகத்திற்கு தீங்கு விளைவிக்காத பொருட்களை வழங்குதல்
- உறுதியளித்த வகையிலான தரம் மற்றும் நியமத்திற்கேற்ப பொருட்களை வழங்குதல்
- நியாயமான விலையிடலைப் பின்பற்றுதல்
- விற்பனைக்குப் பிந்திய சேவைகளை வழங்குதல்
- கறுப்புச் சந்தை நடவடிக்கையில் ஈடுபடாமை மற்றும் அபரிமிதமான இலாபம் உழைக்காமை
- நுகர்வோரது மனக்குறைகளை அறிந்து அவற்றை நிவர்த்திக்கும் வகையில் செயற்படல்
- நியாயமான போட்டியுடன் செயற்படுதல்.

**கூட்டுசேர் சமூகப் பொறுப்பு செயற்பாடுகளின் தன்மை**

- இவை நெறிமுறைக்குட்பட்ட ஒழுங்கான வகையில் அமைய வேண்டும்



- இவையொரு தொடர்புபடுத்தப்பட்ட எண்ணக்கரு அடிப்படையில் அமைய வேண்டும்
- இவை முன்னெச்சரிக்கையுடையவையாகவோ அல்லது எதிர்த்தாக்கமுடயவை யாகவோ அமையலாம்
  உதாரணம்: முன்னெச்சரிக்கையுடையவை தொற்றுநோய்கள் பரவுவதைத் தடுக்கும் செயற்பாடுகள் எதிர்த்தாக்கமுடையவை இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட வர்களுக்கு உதவும் செயற்பாடுகள்
- சகல நிறுவனங்களும் ஒரே வடிவத்திலான செயற்பாடுகளைப் பின்பற்ற வேண்டியது அவசியமில்லை.

சமூகப்பொறுப்புச் செயற்பாடுகள் பின்வரும் கட்டமைப்பிலுள்ள வகையில் ஆய்வு செய்யப்படுவதோடு பொறுப்புக்கூறலுக்குட்படுத்தியே நிறுவனங்களால் அமுல்படுத்து வதற்குரிய அங்கீகாரத்தைப் பெறுகின்றன.

மேற்காட்டப்பட்டவாறு நிறுவனங்களின் கூட்டுசேர் சமூகப்பொறுப்பு செயற்பாடு கள் வடிகட்டப்பட்டு அங்கீகாரம் பெற்று அமுல்படுத்தப்படுகின்றன. இதனால், முன்வைக்கப்படும் சமூகப்பொறுப்பு செயற்பாடுகள் யாவுமே அமுல்படுத்தப்படு பவையாக அமையமாட்டாது. ஏனெனில், அமுல்படுத்தப்படும் செயற்பாடுகள் நிறுவனங்களுக்கும் சமூகத்திற்கும் பரஸ்பரம் பயன்கிடைக்கத்தக்க வகையிலானவையாக இருக்க வேண்டும்.

**சமூகப்பொறுப்புக்களும் தந்திரோபாயங்களும்**

- மனித உரிமைகளுக்கு மதிப்பளிப்பவையாக அமையவேண்டும்.
- வேறுபட்ட வர்க்கத்தினரது மாறுபட்ட கருத்துக்களுக்கு மதிப்பளிக்கத் தக்கவையாக இருக்க வேண்டும்
- எந்தத் தரப்பினரையும் பேதப்படுத்துபவையாக அமையக் கூடாது
- ஓரளவிற்கேனும் சமூகத்திற்கு பயன்தரு பங்களிப்புக்களை மேற்கொள்பவையாக அமைய வேண்டும்.
- சாதகமான பெறுமதிசேர் தன்மை கொண்டவையாக அமைய வேண்டும்
- நீண்டகால நோக்கில் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியை ஏற்படுத்தக் கூடியவையாக அமைய வேண்டும்
- சமூகத்தினரிடமிருந்து பின்னூட்டல்களைப் பெற்றுக்கொள்ளக் கூடியவையாக அமைய வேண்டும்
- சகல தரப்பினரதும் நியாயமான ஒன்றிணைப்பையும் ஈடுபாட்டினையும் பெற்றுக் கொள்ளக் கூடியவையாக அமைய வேண்டும்.

**கூட்டுசேர் சமூகப் பொறுப்புக்களினது சிறந்த நடைமுறைகள்**

செயன்முறைப்படுத்தபடும் கூட்டுசேர் சமூகப்பொறுப்பு நடவடிக்கைகள் பின்வரும் சிறந்த நடைமுறைகளைக் கொண்டவையாக இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

- சாத்தியமானதும், செயலாக்கமுள்ளதும், அளவிடத்தக்கதுமான இலக்குகளைக் கொண்டிருக்க வேண்டும்
- சமூகத்தோடு நீண்டகாலம் நிலைத்திருக்கக் கூடிய உறவினைக் கொண்டதாக இருக்க வேண்டும்
- சமூகத்தின் அடிப்படை விழுமியங்களுக்கு மதிப்பளிப்பவையாக இருக்க வேண்டும்
- விளைவுகள் அறிக்கையிடத்தக்கதாக இருக்க வேண்டும்
- சமூகம் மத்தியில் விழிப்புணர்வினை ஏற்படுத்தக் கூடியவையாக இருக்க வேண்டும்
- கூட்டுசேர் சமூகப் பொறுப்பு நடவடிக்கைகளின் தேவைகளின் விளைவுகள் மதிப்பிடக் கூடியவையாக இருக்க வேண்டும்.

**கூட்டுசேர் சமூகப் பொறுப்புக்களுக்கான தேவை**

- இவை சமூகச் செலவைக் குறைக்கின்றன
- இவை ஊழியர்களின் வினைத்திறனை அதிகரிக்கின்றன
- இவையொரு வகையிலான முதலீடுகளாகும்
- இவை கைத்தொழில் ரீதியிலான சமாதானத்தை ஏற்படுத்தக் கூடியவை
- இவை பொதுமக்கள் மத்தியலுள்ள நிறுவனத்தின் மதிப்பை மேலுயர்த்தக் கூடியவை
- இவை நிறுவனங்களின் இலாபத்தினை அதிகரிக்கக் கூடியவை
- இவை ஒழுக்க நியாயப்படுத்தலை ஏற்படுத்தக் கூடியவை
- இவை நிறுவன நடவடிக்கைகளில் அக்கறை கொண்டோரைத் திருப்திப்படுத்தக் கூடியவை
- இவை அரசாங்கத்தின் விதிகள் மற்றும் கட்டுப்பாட்டினைத் தவிர்க்க உதவுகின்றன
- இவை சூழலை மாசுபடுத்தாத வகையில் சுகாதார நிலைமைகளை அதிகரிக்கக் கூடியவை.

**கூட்டுசேர் சமூகப்பொறுப்பு நடவடிக்கைகளுக்கு சார்பான வாதங்கள்**

- நிறுவனங்களுக்கு சமூகநலனை மேம்படுத்தல் எனும் சமூகப்பொறுப்பு உள்ளமை அவற்றின் ஒழுக்கத்தினொரு பகுதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது
- இவை வளங்கள், இயலுமை மற்றும் திறமை ஆகியவற்றின் சரியான பயன்பாட்டிற்கு உதவுகின்றன
- கூட்டுச்சேர் சமூகப்பொறுப்பு நடவடிக்கைகள் மீதான செலவு ஒரு வகையிலான முதலீடுகளாகின்றது
- இவற்றினை மேற்கொள்வதனால் நிறுவனங்கள் பல்வேறு சட்டச்சிக்கல்களைத் தவிர்க்கக் கூடியதாகவுள்ளது
- இவற்றினூடாக நிறுவனம் பற்றிய சிறந்த தோற்றப்பாடு சமூகத்திடையே ஏற்படும்
- இவற்றினூடாக நிறுவனங்கள் செல்வத்தினொரு பகுதியான வருவாயை உழைத்துக்கொள்ளலாம்.

**கூட்டுசேர் சமூகப்பொறுப்பு நடவடிக்கைகளுக்கு எதிரான வாதங்கள்**

- இவற்றால் வணிகத்தின் அடிப்படைக்கோட்பாடுகள் மீறப்பட வாய்ப்புக்க ளேற்படலாம்
- இவற்றால் வணிக நிறுவனங்களுக்கு குறிப்பிட்ட காலத்தில் பாரியதொரு செலவை ஏற்படுத்துவதாக அமையும்
- இச்செயற்பாடுகள் எப்போதும் வெற்றியடையும் என எதிர்பார்க்க முடியாது
- இவற்றை மேற்கொள்ள வேண்டுமென்பதுபற்றிய நிர்ப்பந்தம் வணிகங்களின் எப்பகுதியிலும் இல்லை
- இவை பங்குதாரர்களது பணத்தினை கையாடல் செய்யத் தூண்டுகிறதெனவும் வாதிக்கப்படுகின்றது.

**முடிவுரை**

முயற்சியாளர் எனப்படுபவர் நிலம், உழைப்பு மற்றும் மூலதனம் என்பவற்றை ஈடுபடுத்தி தமது அசாதாரண நிபுணத்துவத்தினால் வணிக முயற்சிகளை முன்னெடுத்துச் செல்கிறார்கள். இவையே பொருளாதாரத்தின முதுகெலும்பாகின்றன. பொருளாதார சுற்றோட்டமானது தடங் கலின்றி இடம்பெற அங்கு நுகர்வோர் மட்டுமல்லாமல் உற்பத்தியாளரும் அவசியமாகின்றனர். வெற்றிபெற்ற முயற்சியாளர்கள் பொருளாதார வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்களவிற்கு பங்களிப் பினை மேற்கொள்கிறார்கள். ஒரு நாட்டின் பொருளாதாரமானது வளர்ச்சியடைந்து செல்கிறது என்பதற்குப் பல்வேறு பண்புசார் காரணிகளான ஆயுள் எதிர்பார்ப்பு, வாழ்க்கைத்தரம் உயர்தல், வேலைவாய்ப்பு அதிகரிப்பு மற்றும் மக்களுக்கான அரசியல் நலன்களை ஏற்படுத்துதல் போன்றவை சாதகமான நிலையைத் தோற்றுவிக்க வேண்டும். இவற்றை ஏற்படுத்தத் தொழில் முயற்சியாளர் உதவுவதால் இவர்கள் "சமூக தொழில் முயற்சியாளர்" என அழைக்கப்படுகின்றனர்.

இது இன்று உலக நாடுகளில் "சமூக முயற்சியாண்மை" [Social Entrepreneurship] என அழைக்கப்படுகின்றது. இலங்கையைப் பொறுத்தவரையில் இதுவொரு புதிய எண்ணக்கரு வாகக் காணப்படுகின்றது. சமூக முயற்சியாளர் எனப்படுபவர் சமூகப் பிரச்சனைகளைத் தீர்க்கும் நோக்கில் அல்லது சமூகத்தில் மாற்றமொன்றை ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தில் நிறுவனமொன்றைத் தோற்றுவிப்பவராவார். இவர்கள் பொதுவான முயற்சியாளரிலிருந்து வேறுபடுகின்றனர் காரணம் பொதுவான முயற்சியாளர்கள் இலாப நோக்கினை மட்டுமே கொண்டிருப்பார். ஆனால் சமூக முயற்சியாளர் எனப்படுவோர் இலாப நோக்கத்தோடு சமூக மட்டத்திலான பிரச்சனைகளைத் தீர்ப்பதில் கூடுதல் அக்கறை செலுத்துவோராகக் காணப்படுவார்.

ஆகவே நிறுவனங்கள் கூட்டுச்சேர் சமூகப்பொறுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவது தவிர்க்க முடியாததொன்றாகின்றது. மேலும் நிறுவனங்களைத் தரப்படுத்தும் செயற்பாட்டிலும் இவ்வாறான சமூகப்பொறுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் தன்மை அல்லது அளவும் கருத்தில் கொள்ளப்படுகிறது.

**இலங்கையில் சமூகப்பொறுப்பு நடவடிக்கைகளில் கூடுதலானளவில் ஈடுபடும் சில நிறுவனங்கள் வருமாறு**

Nestle Lanka, Cargills Lanka, People Leasing Finance, Dimo, Standard Chartered Bank, Expo Lanka, Hemas Group, Child Fund, EDEX, LOLC Finance, LB Finance, Sri Lanka Telecom, Sampath Bank, Jetwing Hotels, Alliance Finance, INSEE Cement, DSI, Ceylon Biscuits Ltd., Unilever, Singer, Brandix, Hatton National Bank, World of Hayleys, Dialog Axita CIC Holdings, etc……

*உசாத்துணை:*

1. http://www:csrsrilanka.lk/index.php

2. Lecture notes from CA Sri Lanka.

3. Journal of Applied Research, Published by CA Sri Lanka Vol.: 02, 2018

# இலங்கை ஊழியச்சந்தையும் வேலைப்படையில் பெண்களின் பங்குபற்றலும்

# [Sri Lankan Labour Market and Labour Force Participation of Women]

திருமதி. கமலகுமாரி கருணாநிதி
முதுநிலை விரிவுரையாளர்
பொருளியல் துறை
யாழ் பல்கலைக்கழகம்.



## அறிமுகம்

ஒரு நாட்டினது போட்டித்தன்மையை நிர்ணயிப்பதில் அதனது ஊழியச்சந்தைக்கு முக்கிய பங்குண்டு. தாழ் நடுத்தர நாடாக முன்னேற்றம் பெற்றிருக்கும் இலங்கை (2016ஆம் ஆண்டில் தலாதேசிய வருமானம் ரூபா 62,237/= ஆகும்) தனது பொருளாதார வளர்ச்சியை உறுதியாகத் தக்க வைத்துக் கொள்ள தனது செயற்றிறனை அதிகரிப்பதை நோக்கிக் கவனத்தைக் குவிப்பது மிகவும் அவசியமாகின்றது. இலங்கைப் பிரதமர் அவர்களால் அக்டோபர் 2016 இல் வெளியிடப்பட்ட பொருளாதாரக் கூற்றில், இலங்கையில் பொருளாதார வளர்ச்சி 7 சதவீதமாக வேண்டுமெனவும் 2025 ஆம் ஆண்டில் தற்போதுள்ள தலாவருமானத்தை இரட்டித்து, "மேல் நடுத்தர வருமான" நாடாக மாறிக்கொள்ள வேண்டுமெனவும் தெரிவித்திருந்தார். மேற்குறித்த ஆவல் நிறைவேற வேண்டின், உலகப் பொருளாதாரத் - துடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ள இலங்கையானது தன்னைப் பலவிதங்களிலும் போட்டித்தன்மை மிக்கதாக்க வேண்டியது உடனடித் தேவையாகின்றது. அதிகரித்துச் செல்லும் கூலி மட்டங்கள், "மலிவான ஊழியம்" என்ற கருத்தை இலங்கை ஊழியம் தொடர்பாகப் போக்கடித்து விடுமென்பதால், தற்போதுள்ள அபிவிருத்தி மட்டத்தை கவனம் கொள்ளும்போது, இலங்கையானது தனது சந்தைகளைச் செயற்றிறன் மிக்கதாக்குவது இன்றியமையாததாகும்.

பொருளாதாரத்தில் உற்பத்தித்திறனையும் போட்டித்தன்மையையும் அதிகரிப்ப தாயின், திறன்களை அதிகரிக்கத்தக்க உயர்கல்வி, செயற்றிறன்மிக்க பொருட்சந்தை, ஊழியச் சந்தையின் செயற்றிறன், நிதிச்சந்தையின் செயற்றிறன், தொழில்நுட்ப மாற்றங்களை உள்வாங்கும் ஆயத்தநிலை மற்றும் சந்தையின் பருமன் என்பவை தவிர்க்கவியலாதவை. இவற்றுள் இலங்கையின் ஊழியச் சந்தையின் செயற்றிறனைப் பாதிக்கும் காரணிகளை நோக்கின், இறுக்கமான ஊழியப் பாதுகாப்புச் சட்டங்களும் பெண்களின் ஊழியப்படைப் பங்குபற்றலானது கீழ்மட்டத்திலிருப்பதும், தேர்ச்சிமிக்க தொழிலாளர் களை கற்பித்தல் மற்றும் பயிற்சிமூலம் உருவாக்க முடியாதிருந்தலும், அவ்வாறு தேர்ச்சிமிக்க தொழிலாளர் உருவாகும் பட்சத்தில் அவர்களை நாட்டிலேயே தங்கவைக்க முடியாது இருத்தலும் எனக்குறிப்பிடலாம். அதேவேளை, நாட்டுக்குத் தேவையான தேர்ச்சி மிக்க ஊழியத்தை இலகுவில் இறக்குமதி செய்யவும் முடிவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**உலகப்போட்டித் தன்மைச் சுட்டெண் [Global Competitiveness Index GCI]**

உலகப்போட்டித் தன்மை அறிக்கை (2016 17), செயற்றிறன் மிக்க ஊழியச்சந்தை யானது ஒரு நாட்டின் பொருளாதாரத்தின் போட்டித் தன்மையை அதிகரிக்கக்கூடிய 12 தூண்களில் ஒன்றாகும் எனக் குறிப்பிடப்படுகின்றது. ஏனெனில், நெகிழ்வுள்ளதும் செயற்றிறன் வாய்ந்ததுமான ஊழியச் சந்தையானது, தொழிலாளர்களை மிகவும் வினைத்திறனுடன் செயலாற்றத்தக்க வகையில் தேவையான துறைநோக்கி ஒதுக்கீடு செய்யும் அத்துடன் அவர்களது உச்சக்கட்ட இயலளவை வெளிப்படுத்தும் வகையிலான ஊக்குவிப்புகளையும் வழங்கும் மேலும் மீள்ஒதுக்கீட்டினையும் மிகக்குறைந்த பணச்செலவு மற்றும் சமூகச் செலவுடன் மேற்கொள்ளும். அது மாத்திரமன்றி, சிறப்பு வாய்ந்த திறன்கள் அடையாளம் காணப்பட்டு, அவற்றுக்குரிய வெகுமதியளிக் கப்படுவதனூடாக ஊழியம் போற்றப்படும் அதியுயர் திறனடிப்படையில் வெற்றி பெறுவதற்கு, எல்லோருக்கும் சமமான வாய்ப்பும் வழங்கப்படும்.

இலங்கையின் ஊழியச்சந்தையானது மேற்குறித்த இயல்புகளைப் பொறுத்துப் பின்தங்கியுள்ளது என்பதை, உலகப் போட்டித்தன்மைச் சுட்டெண் துணையுடன் நிரூபிக்கலாம். மொத்தமாக 138 நாடுகளை உள்ளடக்கிய இச்சுட்டெண் இலங்கைக்கு 71ஆம் இடத்தையே வழங்கியுள்ளது. எல்லாவற்றையும் உள்ளடக்கிய வகையில் (எல்லாமாக 12 அம்சங்கள்) இவ்வாறு 71ஆமிடம் வழங்கப்பட்டிருப்பினும் ஊழியச்சந்தை வினைத்திறன் மாத்திரம் கவனத்தில் எடுக்கப்படின், இலங்கையானது 138 நாடுகளுள் 128ஆவது இடத்துக்குப் பின்தள்ளப்படுவதை அவதானிக்கலாம். இவ்வாறு பின்தங்கியமைக்குக் காரணங்களாக (1) ஊழியர்களை வேலையைவிட்டு விலக்குதல் இலங்கையில் செலவு மிக்கதாகும் (2) ஊழியப்படையில் பெண்களின் பங்குபற்றல் வீதம் மிகவும் குறைவாயிருக்கின்றது (3) வேலைக்கமர்த்தல் மற்றும் வேலையிலிருந்து நிறுத்துதல் சம்மந்தமான நடைமுறைகள் (4) தேர்ச்சிமிக்க ஊழியத்தை இலங்கையை நோக்கிக் கவரும் இயலளவு என்பன குறிப்பிடப்படுகின்றன.

இவற்றுள் ஊழியப்படைப் பங்குபற்றலில் பெண்களின் பங்குபற்றி விரிவாக நோக்குவோம்.

**பெண்களின் ஊழியப்படைப் பங்குபற்றல்**

உலகளாவிய ரீதியிலும், பெண்களின் ஊழியப்படைப் பங்குபற்றலானது ஏறத்தாழ 50 சதவீதமாக உள்ளதென மதிப்பிடப்பட்டுள்ளது. எனினும் பெண்களின் ஊழியப் படைப் பங்குபற்றலை அதிகரித்துள்ள நாடுகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது முன்னரைவிட அதிகரித்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது உதாரணமாக சர்வதேச நாணய நிதியத்தால் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வறிக்கையானது, அமெரிக்காவில் 5 சதவீதத்தாலும் ஜப்பானில் 9 சதவீதத்தாலும் ஐக்கிய அரபு இராச்சியத்தில் 12 சதவீதத்தாலும் எகிப்தில் 34 சதவீதத்தாலும் அதிகரித்துள்ளதெனக் குறப்பிடுகின்றது.

இது மாத்திரமன்றி, வயது முதிர்ந்து வரும் சனத்தொகையைக் கொண்ட இலங்கையில் (2012 இல் இடை வயது 30 வருடங்களாகும்), பெண்களின் ஊழியப்படைப் பங்குபற்றலானது, வேலைவாய்ப்புக்களில் காணப்படும் இடைவெளிகளை நிரப்புவதற்கு உதவும் இவ்வாறான அனுபவம் ஐரோப்பிய நாடுகளால் உணரப்பட்டுள்ளது.

அதேசமயம், கிழக்காசிய மற்றும் பசுபிக் பிராந்தியப் பொருளாதாரங்கள், வருடாந்தம் 42 47 பில்லியன் அமெரிக்க டொலர்களை, பெண்கள் ஊழியப்படையில் கீழ் மட்டத்தில் பங்குபற்றுவதன் காரணமாக இழக்கின்றன என உலகப் பால்நிலை அறிக்கை (2016) சுட்டிக் காட்டுகின்றது. எனவே முதிரும் வயது கொண்ட சனத்தொகையும், மந்தகதியில் வளரும் அல்லது தேக்க நிலை அடைந்துவிட்ட ஊழியப்படையும் காரணமாக, நாடுகள் தம்கைவசமுள்ள திறமைகளைப் பயன்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தும்போது, பெண்களின் ஊழியப்படைப் பிரவேசம் வரவேற்கத்தக்க ஓர் அம்சமாகின்றது.

**இலங்கை ஊழியப்படையில் பெண்களின் நிலை**

சனத்தொகையில் 50 சதவீதத்துக்கும் மேலாக பெண்களே காணப்படினும், இலங்கைப் பெண்களின் நிலை அசமத்துவமான போக்கினையே பிரதிபலிக்கின்றது. 2017ஆம் ஆண்டில் பொருளாதார ரீதியாக செயலற்றோர் தொகையில் 63 சதவீதமானோர் பெண்களே. அதேபோல, மொத்தப் பெண்கள் தொகையில் 37 சதவீதமானோர் மாத்திரமே ஊழியப்படையில் பங்குபற்றுவதாக இலங்கைச் சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் ஊழியப்படை பற்றிய தரவுகள் தெரிவிக்கின்றன. அதேசமயம் ஆண்களின் வேலைப்படைப் பங்குபற்றல் வீதம் [Labour Force Participation Rate] மொத்த ஆண்களில் 75 சதவீதமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. அதாவது வேலைப்படையில் பங்குபற்றும் ஆண்களின் சதவீதத்தில் பாதியையே பெண்கள் கொண்டிருக்கின்றனர். மேலும் ஆரம்பக்கல்வி கல்வியில் பால்நிலை சமத்துவத்தை எய்தி, அதன்மூலம் புத்தாயிரமாம் ஆண்டு அபிவிருத்திக் குறிக்கோள்களில் ஒன்றை நிறை வேற்றிக் கொண்ட இலங்கையில், வேலையின்மை பற்றிய விபரங்களை நோக்குவோ மாயின் அங்கும் பால்நிலை அசமத்துவம் காணப்படுவதனை அவதானிக்கலாம். உதாரணமாக, மொத்த ஆண்களில் 2.9 சதவீதம் வேலையற்றிருக்க, பெண்களில் 6.5 சதவீதத்தில் வேலையற்றிருப்பதாக 2017 ஆண்டுக்குரிய மத்தியவங்கியின் ஆண்டறிக்கை குறிப்பிடுகின்றது. இலங்கையின் புத்தாயிரமாம் ஆண்டு அபிவிருத்திக் குறிக்கோள்களின் அடைவுபற்றிய மதிப்பீட்டறிக்கையும் (2008/09) கல்விகற்ற பெண்களிடையே நிலவும் வேலையின்மையானது ஆண்களைவிட மூன்றுமடங்கு அதிகமானது எனத் தெரி விக்கின்றது. இவ்வேலையின்மை வீதமானது, 2017ஆம் ஆண்டில் க.பொ.த. உயர்தரமும் அதற்கு மேலும் கற்ற பெண்களிடையே 11.3 சதவீதமளவில் காணப்பட அதேவகுதி ஆண்களிடையே அது 5 சதவிதமாக அமைந்திருப்பதானது, வேலைவாய்ப்புக்களில் ஒரு சிறு முன்னேற்றம் ஏற்பட்டிருப்பினும், அசமத்துவ நிலை மறைந்துவிடவில்லை என்பதை உறுதி செய்கின்றது. பெண்கள் ஈடுபட்டுள்ள வேலைகளின் வகைகளிலும் வேறுபாடு காணப்படுகின்றது் அட்டவணை 1 இதனைப் புலப்படுத்துகின்றது.

அட்டவணை 1: பால் அடிப்படையில் பெண்களின் வேலைவாய்ப்பு நிலை 2017

| வேலைவாய்ப்பு நிலை | மொத்தம் | ஆண் | பெண் |
|---|---|---|---|
| மொத்தம் | 100 | 64.3 | 35.7 |
| ஊழியர்கள் | 100 | 65.5 | 34.5 |
| வேலை வழங்குனர் | 100 | 87.3 | 12.7 |
| சுயதொழில் செய்வோர் | 100 | 70.9 | 29.1 |
| குடும்பத்தொழிலில் பங்களிக்கும் ஊழியர் | 100 | 21.1 | 78.9 |

மேற்குறித்த அட்டவணையின்படி, பெண்கள் செறிந்துள்ள தொழில்வகை, குடும்ப அங்கத்தவர் ஒருவரது தொழிலில் தாமும் ஒரு பங்களிப்பவராக இருப்பதாகும் மறுபுறத்தில் பகுதியான பெண்களே வேலை வழங்குனராக காணப்படுகின்றனர். வேலைவகைகளில் காணப்படும் இந்த அந்தஸ்து வேறுபாடு, இலங்கையின் ஊழியப் படையில் காணப்படும் பலவீனத்தைத் தெளிவாகக் காட்டுகின்ற குறிகாட்டியாகின்றது.

**பெண்களின் ஊழியப்படைப் பங்குபற்றலைப் பாதிக்கும் காரணிகள்**

பெண் ஊழியம்சார்ந்த கேள்வி மற்றும் நிரம்பல் காரணிகள் ஊழியப்படைப் பங்குபற்றலைத் தீர்மானிக்கின்றன. அவை உள்ளகக் காரணிகளாகவோ அல்லது வெளியகக் காரணிகளாகவோ அமைய முடியும்.

இவற்றுள் பெண்கள் தொடர்பான சமூக நியமங்கள் அவர்களது திருமணம், கருவளம், வீட்டுக் கடமைகள் மற்றும் பராமரிப்புக் கடமைகள், தீர்மானமெடுத்தலில் அவர்களின் வகிபங்கு, கல்விநிலை என்பவற்றில் தலையிடுவதால் பெண்களின் ஊழியப்படைப் பங்குபற்றல் பாதிப்புறுகிறது. மேற்குறித்த உள்ளக, நிரம்பல் காரணிகளுடன் கணவன் மற்றும் ஏனைய குடும்ப அங்கத்தவரின் வேலை, அந்தஸ்து, வருமானம் மற்றும் அவர்களின் கல்வித் தகுதி என்பவற்றுடன் பெண்ணொருவரின் அதிகாரத்துக்குட்பட்ட சொத்துக்கள், கடனின் கிடைப்பனவு, மாற்றல் கொடுப்பனவு மற்றும் வெளிநாட்டிலிருந்தான பணவருகை மீதான செலவிடும் அதிகாரம் என்பனவும் பெண்ணொருவரின் ஊழிய நிரம்பலைப் பாதிக்கும் காரணிகளாக அமையும்

இவற்றுக்கும் மேலதிகமாகப் பொருளாதார வளர்ச்சி மற்றும் நகரமயமாக்கம், வேலைத்தலங்களின் அண்மை மற்றும் சேய்மை, நிறுவன ரீதியான சட்ட திட்டங்களும் வெளியகக் காரணிகளாய் அமைந்து நிரம்பலைப் பாதிக்கலாம்.

**முடிவுரை**

மேலே தரப்பட்ட தகவல்களின் அப்படையில் பெண்களின் ஊழியப்படைப் பங்குபற்றலை அதிகரிப்பது, பால்நிலை அசமத்துவத்தை நீக்கி, புத்தாக்கத்தைக் கொண்டுவருவது மாத்திரமன்றி, நிலைபேறான வளர்ச்சிக்கும் வழிவகுக்கக் கூடிய தென்பது புலனாகின்றது. எனவே சமூக மேம்பாட்டைக் கருத்தில் கொண்ட கொள்கைத் தீர்மானங்களும் சாதகமான நிறுவனக் காரணிகளும் (உதாரணமாக: அரசு, சமூகம், குடும்பம், மத நிறுவனங்கள் இன்னும் பிற..) சில மாற்றங்கள் மற்றும் முன்னேற்றங் களினூடே பயணிப்பது அவசியமாகும். உதாரணமாக தற்போதிருக்கும் தொழில்களில் பெண்களின் வரவை அதிகரிக்கும் வகையிலான தர முன்னேற்றங்களை ஏற்படுத்துதல் (உதாரணமாக: வேலைத்தலத்திலான தனிநபர் பாதுகாப்பு), நெகிழ்வுள்ள வேலைப்பாது காப்பை [Flex security] அளிக்க முன்வருவதன் மூலம் பெண்கள் வேலைவாய்ப்பில் மீள் பிரவேசம் செய்ய உதவுதல் போன்றவை இலங்கையின் கொள்கை வகுப்போர் கவனம் கொள்ளத் தக்கவை. ஆயினும் பெண்கள் எல்லோரும் ஓரினமானவர்கள் [Homogenous] அல்ல என்பதால் கொள்கைத் தீர்மானங்கள் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் காரணிகளுடன் தனிநபர் காரணிகளையும் கருத்தில் கொள்வது வெற்றிகரமானதும் செயற்றிறனானதுமான விளைவுகளுக்கு இட்டுச் செல்லும்.

உசாத்துணை நூல்கள்:


- Sri Lanka State of the Economy 2017, Institute of Policy Studies in Sri Lanka, Colombo.
- Annual Report 2017, Central bank of Sri Lanka.
- Labour Force Survey 2017, Annual Report, Department of Census and Statistics, Colombo.
- Lin Lea Lim (2000), 'Female Labour Force Participation', Gender Promotion Program, International Labour Office, Geneva, Switzerland.

# முயற்சியாண்மையும் பெண்களின் பங்களிப்பும்

செல்வி கிறேஸ் ஹயசிந்த் ஹென்ஸ்மன்
விரிவுரையாளர்
சந்தைப்படுத்தல் துறை
யாழ் பல்கலைக்கழகம்



**அறிமுகம்**

"எந்தவொரு இமாலய வெற்றியும் ஓர் இரவில் தீர்மானிக்கப்படுவதில்லை. ஒவ்வொரு கணமும் அவர்களது கடின உழைப்பும், அர்ப்பணிப்பும் மற்றும் பல தோல்விகளுக்கு மத்தியில் அவ்வெற்றி நிர்ணயிக்கப்படுகின்றது".

இவ்வாறிருக்கையில், ஒரு நிறுவனத்தில் ஊழியராகக் கடமையாற்றி மற்றவர்களது இலக்குகளிற்கு செயற்பாட்டு ஊக்கம் அளிப்பவனை விட தனது கனவுகள் இலட்சியங் - களை இலக்குகளாக மாற்றி அதனை அடைந்து உலகில் சாதிப்பதனூடாக முயற்சியாளன் என்றும் முன்னிற்கிறான்.

இன்றைய காலகட்டத்தில் முயற்சியாண்மை என்பது உலகளாவிய ரீதியில் மிகவும் பிரசித்தம் வாய்ந்த ஒன்றாக மாறிவருகின்றது. முக்கியமாக வளர்ந்துவரும் நாடுகள் அதிலும் இலங்கை போன்ற நாடுகளில் முயற்சியாண்மை என்பது நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சி மற்றும் மக்களுடைய வாழ்வாதாரத்தை மாற்றியமைக்கும் ஓர் அம்சமாகவும் கருதப்படுகின்றது.முயற்சியாண்மையானது ஒரு நாட்டினுடைய கைத்தொழில் அபிவிருத்திக்கு மிக முக்கிய பங்கு வகிக்கிப்பதோடு அதிக செல்வத்தை ஈட்டித்தரும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. தனிநபர்களது மூலதனம் நேரம் தொழில் அர்ப்பணிப்பு போன்றவற்றில் இடர் எதிர் கொண்டு ஒரு பொருள் அல்லது சேவைக்கு மேலதிக பெறுமதியை சேர்ப்பதன் மூலம் அவர்கள் இச்செல்வத்தை உருவாக்குகின்றனர்.

தேவையான மூல வளங்கள் மற்றும் திறன்களை பயன்படுத்தி ஒரு பொருள் மற்றும் சேவைக்கு பெறுமதி சேர்க்கின்றனர்.இலங்கையில் 85% மேலாக சிறிய நடுத்தர முயற்சி யாண்மைகள் காணப்படுவதோடு மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு 52% பங்களிப்பையும் வழங்குகின்றது. அத்தோடு 45% வேலைவாய்ப்பினையும் வழங்குகின்றது.

(Daily News ,9 July 2018)

**பெண் முயற்சியாளர்கள் எதிர்கொள்ளும் சவால்கள்**

இம் முயற்சியாண்மை நோக்கில் பெண் முயற்சியாளர்கள் மற்றும் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் என்பவற்றை கருத்தில் கொள்ளுதல் சாலச்சிறந்த விடயமாகும். பெண் முயற்சியாளர் என்பவர்தனியாகவே அல்லது கூட்டாகவே இணைந்து வேலைவாய்ப்புக்களை மற்றவர்களுக்கு உருவாக்கிக்கொடுக்கும் ஓர் சமூகமாகும். இலங்கையில் மட்டுமல்லாது உலகின் பல்வேறு நாடுகளில் பிரதானமாக வளர்சியடைந்துவரும் நாடுகளில் பெண் முயற்சியாளர்கள் பல இன்னல்களிற்கு

முகங்கொடுத்து வருகின்றனர். மூலதனப்பிரச்சனை,வணிக செயல்திறன் (business performance), வலையமைப்புக்களை உருவாக்குதல்,பயிற்சியும் அபிவிருத்தியும் மற்றும் தொழில்-குடும்பநிலை சமத்துவம் போன்ற முக்கிய பிரச்சனைகள் இவர்களால் எதிர்நோக்கப்படுகின்றது.

தொழில்நுட்பம்சார் அறிவு,விழிப்புணர்வு போன்றன இல்லாமையும் பெண் முயற்சியாளர்கள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சனைகளில் ஒன்றாகும் இலங்கையில் குறிப்பாக யாழ் மாவட்டத்தில் பெண்கள் தொழில்நுட்ப அறிவு குன்றியவர்களாகவும் மற்றும் மென்திறன் (soft skills) இன்னுமதிகமாக வளர்த்துக்கொள்ள வேண்டிய நிலையிலுள்ளார்கள். பெண்களாக இருப்பதும் முயற்சியாண்மை ஆக்கபூர்வத்திற்கு ஓர் பெரும் சவாலாகவுள்ளது. ஆண்வர்க்கம் சமூகத்தில் அந்தஸ்தை கொண்டிருப்பாதாலும், பெண்கள் ஓர் சுய தொழிலை ஆரம்பித்தால் நிதி இடர் ஏற்படும் என்ற ஆண்களின் மனோபாவம் இன்றும் ஓர் தடையாகவுள்ளது.

பெண் முயற்சியாளர்கள் எவ்வளவுதான் ஆக்கபூர்வமாக இருந்தாலும், புதிதாக்க திறனுடையவர்களாக இருந்தாலும்,தமது சுய தொழில் முயற்சியை ஸ்தாபிக்க தேவையான மூலதனத்தை திரட்டுவதில் ஆண் முயற்சியாளர்களோடு ஒப்பிடுகையில் வங்கிகள் மற்றும் ஏனைய நிதி நிறுவனங்களும் பெண் முயற்சியாளர்களுக்கு அதிகளவான கட்டுப்பாடுகளையும், ஊக்குவிக்கத்தகாத முறையில் அவர்களை நடத்தி அவர்களது புத்தாக்கத்தை மழுங்கடிக்கச் செய்கிறார்கள்.

பெண் முயற்சியாளர்களிற்கு குடும்பநிலையும் இன்னோர் தடைக்கல்லாக காணப்படுகின்றது. குடும்பதலைவன் பிள்ளைகள் மற்றும் ஏனைய தங்கி வாழ்வோரது (பெற்றோர்) கடமைகளோடு சுயதொழில் ஒன்றினை சிறப்பாக கொண்டுசெல்வது என்பது கடினமானதொன்றாக காணப்படுகின்றது. நிர்வாகத்திறன் பெண் முயற்சியாளர் களிற்கு சற்று குறைவானதாக காணப்படுகின்றது என்பதனை ஆராய்ச்சி முடிவுகள் கூறியுள்ளன. இவர்கள் வேலைத்தள உத்தி யோகத்தரிலும் விசேடமாக சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை செயற்பாடுகளில் அதிகளவாக ஆண்தொழிலாளர்களிடம் தங்கியிருக்க வேண்டிய நிலை காணப்படு கின்றது.

இடர் எதிர் கொள்ளும் தன்மை, மற்றும் இடர் தொடர்பான அணுகுமுறை, மனப்பாங்கு என்பன எதிர்க்கணியமாக காணப்படுதல் ஓர் தடையாகவுள்ளது. கல்வியறிவு குறைவாக காணப்படும் போது தன்னம்பிக்கை குறைவானதாக காணப்படுதல் ஆராய்ச்சி முடிவுகள் மூலம் வலுப்பெற்றுள்ளது. இக்குறைபாட்டினால் சுய தொழிலை ஆரம்பிக்கும் போது ஏற்படும் இடர்கள், மற்றும் அதனை தொடர்ந்து கொண்டு நடாத்துவதற்கான மூலதனப்பிரச்சனை போன்ற ஆபத்துக்கள் பாரிய சவாலாக காணப்படுகின்றது.

இலங்கையின் வடபகுதியில் யுத்தத்திற்கு பின்னரான காலத்தை நோக்குவோமா யின் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் விதவைகள் சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடுவதனைக் காணலாம். யாழ் மாவட்டத்தில் சுய தொழிலுக்கான வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுகின்றன. விவசாயம் மீன்பிடி குடிசைக்கைத்தொழில் போன்றன பிரபல்யமான சுயதொழில் வாய்ப்புகளாக காணப்படுகின்றன. விவசாய உற்பத்திகள், மரக்கறி பழவகைகளை பதப்படுத்தி தென்னிலங்கைக்கு அனுப்புதல்,

பருவகாலம் குன்றிய காலங்களில் உள்ளூரில் விற்பனை செய்தல் போன்ற தொழில் களில்ஈடுபடும் வாய்ப்புகள் அதிகமுள்ளது.

அதே போன்று மீன்பிடித்துறைக்கு பிரசித்தமான இடத்தில் வசிக்கும் எமக்கு இது ஓர் மிகப்பெரும் சந்தர்ப்பமாகும். மீன் கணவாய் இறால் போன்றவற்றை பதப்படுத்தி ஏற்றுமதி செய்தல் மீன் கருவாடு போன்றவற்றை சர்வதேச தரத்தில் உற்பத்தி செய்து அதனை சர்வதேச சந்தைக்கு ஏற்றுமதி செய்தல் போன்ற சுயதொழிலில் ஈடுபடும் வாய்ப்பு பெண்களிற்கு அதிகளவிலுள்ளது. மேலும் குடிசைக் கைத்தொழில்களான பனம்பொருள் உற்பத்திகள் பால் உற்பத்திப் பொருட்கள் தென்னை உற்பத்திகள் தையல் வேலைகள் மட்பாண்ட உற்பத்திகள் போன்றவற்றை யாழ் மாவட்ட பெண்கள் அதிகளவில் செய்யக்கூடிய நிலை காணப்படுகின்றது

**முடிவுரை**

பாடசாலை கல்வியை முடித்துக்கொண்டு விலகும் மாணவர்கள் குறிப்பாக பெண் பிள்ளைகள் தமது எதிர்காலம் குறித்து அதிகம் சிந்திப்பவர்களாக காணப்படுகின்றனர் அதிகமான மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியை பெற்று 4 வருடங்கள் பட்டப்படிப் பினை முடித்து பிற்பாடு அரச துறையிலோ/ தனியார் துறையிலோ தொழில் செய்வதற் காக காத்திருக்கின்றனர் பாடசாலையில் முயற்சியாண்மை தொடர்பான பாடம் ஓர் அடித்தளமாக அமைந்த போதிலும் மாணவர்களுக்கான தொழில்திறன் வளர்ச்சி / ஊக்கு விப்பு குறைவானதாக காணப்படுகின்றது. பாடசாலைக்கல்வியை முடித்த மாணவவர்கள் தமக்கு விரும்பிய துறையில் தொழில்திறன் கற்கைகளை கற்றுக்கொள்ள வேண்டும் அதன் பிற்பாடு அவர்கள் பயிற்சி பெறுனராகஇருந்து (Apprentice) அனுபவத்தை பெற்றுக் கொண்ட பின்னர் தாமாக ஓர் சுய தொழிலினை ஆரம்பித்து பலருக்கு வேலைவாய்ப் பினை வழங்குவதோடு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு முக்கிய பங்கு வகிக்கலாம்.

Vocational Training Centre, College of Technology, Sri Lankan German Training Institution போன்றவற்றில் தொழில் திறன் கற்கைகளை மேற்கொள்ளலாம் என்பதுடன் பகுதி நேரப் பணியாளர், வாழ்த்து அட்டைகள் தயாரிப்பு, தையல், அழகுக்கலை போன்ற சிறு முயற்சி களை தாமே ஆரம்பித்து பெண் முயற்சியாளர்கள் எமது பிராந்தியத்திற்கு வேலை வாய்ப் புகளை வழங்குவதோடு பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்ய வேண்டும்.

**உசாத்துணை: -**

1. Ayadurai, S. and Sohail, M.S., 2006. Profile of women entrepreneurs in a war-torn area: Case study of North East Sri Lanka. Journal of developmental entrepreneurship, 11(01), pp.3-17. Jovanović, D.,
2. Baltezarević, V. and Baltezarević, R., 2014. The Invisible Entrepreneurs-the Neglect of Women Business in Serbian Mass Media. Journal of Women's Entrepreneurship and Education, (3-4), pp.71-82.
3. Garba, A.S., 2011. Stumbling block for women entrepreneurship in Nigeria: How risk attitude and lack of capital mitigates their need for business expansion. European Journal of Economics, Finance and Administrative Sciences, 36, pp.38-49. Daily news 9th June 2018.

# முயற்சியாண்மையின் ஓர் அங்கமாக பங்குச்சந்தை முதலீடுகள்



திரு. மு.திலீபன்
முகாமையாளர்
கொழும்பு பங்குப்பரிவர்த்தனை
யாழ் கிளை




பொதுவாக பங்குச்சந்தை முதலீடுகளை முயற்சியாண்மையின் மறுவடிவமாக நோக்குகின்றேன். சிறப்பாக பங்குச்சந்தை முதலீடு, வியாபார முயற்சியின் தன்மை, தொடர்புடைய உற்பத்திப் பொருட்கள் மற்றும் சேவைகள், சந்தைச் சூழல், வாடிக் கையாளர்கள் மற்றும் கம்பனியின் முகாமையாளர் தொடர்பில் முதலீட்டுத் தீர்மானத்தினை எடுக்க முன்னர் மேற்குறிப்பிட்டவை பற்றி முழுமையாக பகுப்பாய்வு செய்வதுடன் தொடர்புபடுகின்றது. அதனைப்போன்றே முயற்சியாளன் தன்னிடமுள்ள வியாபாரத் திட்டத்திற்கு செயல்வடிவத்தினை கொடுக்கின்ற போது அத்திட்டத்துடன் இணைந்த வியாபாரச் செயற்பாடுகளைப் பகுப்பாய்வு செய்ய வேண்டியிருக்கும்.

பங்குமுதலீட்டிற்கும் முயற்சியாண்மைக்கும் உள்ள பாரிய வேறுபாடாக, பங்கு முதலீட்டைப் பொறுத்தவரையில், எமக்காக யாரோ ஒரு சில முன்னோடிகளினால் வியாபார முயற்சிக்குத் தேவையான அடிப்படைகளை நிறைவு செய்துள்ளமையினை உணரமுடிகின்றது. நாம் கம்பனியின் வியாபாரத்தினை முழுமைாக புரிந்துகொள்வதுடன், நான் கொண்டுள்ள ஒத்த சிந்தனையுடன் கம்பனியானது நெறிப்படுத்துவதனை அவதானிக்குமிடத்து, சந்தேகமின்றி அக்கம்பனியின் பங்குகளை கொள்வனவு செய்து பரபரப்பான, வியாபார முயற்சியில் எம்மை இயக்குனராக மாற்றிகொள்ள முடியும்.

எப்படியாயினும், நாம் பங்குச்சந்தை முதலீட்டை முயற்சியாண்மையின் ஓர் அங்கமாக நோக்குகின்ற ஒரேயோரு சந்தர்ப்பத்தில் மட்டுமே பங்குச்சந்தை முதலீட்டை முயற்சியாண்மையுடன் ஒப்பிட்டு நோக்க முடியும். மாறாக, பரிமாற்றல் கருவியாக (Trading Instruments) நோக்குமிடத்து அதன் பெறுமதி அல்லது விலைகள் காலத்துடன் இணைந்ததாக மாறிக்கொண்டு இருப்பதனை தவிர்க்க முடியாது.

அடுத்த விலை அசைவினை எதிர்பார்த்து மீள் விற்பனையை நோக்காகக்கொண்டு பங்குகளை கொள்வனவு செய்தல் ஓர் முதலீட்டு (Investing) முயற்சி அல்ல அது பங்குவியாபாரமாக (Trading) அமைந்து விடுகின்றது. இங்கு ஆதிக்கவர்க்கம் (Majority shareholder) வியாபாரத்தின் அடிப்படைப் பெறுபேற்று அடைவுகளைக் கருத்தில்

கொள்ளாது, தாம் கொண்டுள்ள திறமையினைப் பயன்படுத்தி ஊகவியாபாரத்தினை (betting or gambling) மேற்கொள்கின்றனர். இது முதலீடு அன்றி பரிமாற்றல் வியாபாரமாக மட்டுமே அமைகின்றது.

பின்வரும் விசேட சிறப்பியல்புகளினால் முயற்சியாண்மையின் ஓர் அங்கமாக பங்குமுதலீடு அமையப்பெறுகின்றது.

**வியாபாரப் புரிந்துணர்வு**

பங்குகளில் முதலீடு செய்ய முன்வருகின்றபோது நீங்கள் கம்பனியின் வியாபார முயற்சி தொடர்பாக தெளிவான புரிந்துணர்வினை ஏற்படுத்திக் கொள்ள பங்குச் சந்தை உங்களை வேண்டி நிற்கின்றது. நீங்கள் நிச்சயமாக கம்பனி எவ்வாறான பொருள் அல்லது சேவையினை உற்பத்தி செய்கின்றது. அவை எங்கே, எவ்வாறு உற்பத்தி செய்கின்றன, எவவ் கையான மூலப்பொருட்களை பயன்படுத்துகின்றன மற்றும் யார் யார் எல்லாம் அதன் வழங்குனராக உள்ளனர், போட்டியாளர்களின் போட்டித்தன்மை எவ்வாறானது, நிதிக்கிடைப்பனவு மற்றும் கையாளுகை தொடர்பாகவும் அறிந்திருத்தல் வேண்டும். இதே போன்ற ஓர் பகுப்பாய்வினை முயற்சியாளன் வியாபார முயற்சியாண்மை தொடர்பில் வளங்களை இணைக்கின்ற போது மிகவும் உன்னிப்பாக ஆய்வு செய்ய வேண்டியிருக்கும். மாறாக அடிப்படை வியாபாரத் தந்திரோபாயங்களைக் கருத்தில் கொள்ளாது பங்குச்சந்தையில் முதலிடுதல், வர்ணப்பூச்சினை கற்பனை இன்றி கைபோன போக்குக்குத் தெளிப்பதாக அமைந்துவிடும்.

**முதலீட்டுத் திரும்பல் அடிப்படையிலான வியாபாரப் பெறுமதி**

பங்குமுதலீடு மற்றும் முயற்சியாண்மை இரண்டும் அடிப்படையில் இடர்நேர்வுடன் (Risk) இரண்டறக் கலந்தவை. வியாபாரத்தின் வெற்றி மற்றும் தோல்வியுடன் நேரடியாக் தொடர்புபடுகின்றது. ஆனால் வேறுபடுத்த முடியாது, மாறாக இழிவுபடுத்த முடியும். நீங்கள் தெரிவு செய்த கம்பனியின் வியாபார பெறுபேறானது சிறப்பாக அமையுமிடத்து, கம்பனி தனது வியாபாரத்தினை விருத்தி செய்வதுடன் உழைக்கப்பட்ட இலாபத்தை பங்குலாபமாக (Dividend) அதன் உரிமையாளர்களுடன் பகிர்ந்து கொள்ளும். இது செல்வங்கள் பெருகுவதற்கான அடிப்படையாக அமைகின்றது. முயற்சியாண்மையும் இதற்கு விதிவிலக்கு அல்ல.

**கடின முயற்சியுடன் இணைந்த அர்ப்பணிப்பு**

இவ் இரண்டு முயற்சிகளும் கடின உழைப்புடன் தொடர்பு பட்டவை. முயற்சி யாண்மையினைப் பொறுத்தமட்டில், வியாபாரத்தினை தொடர்ச்சியாக சரியான பாதையில் இட்டுச்செல்ல வேண்டிய பக்குவம் அவசியம். அதற்கு முயற்சியாளன் தொடர்ச்சியாக, உற்பத்தி மட்டம், விற்பனைப் பெறுபேறு, நிதிநிலமைகள், தொழிலாளர் களின் வினைத்திறன் மற்றும் செலவுச்சிக்கனம் போன்றன கம்பனியின் ஆரோக்கிய நிகழ்வுகளில் கவனம் செலுத்த வேண்டும். அவ்வாறாகவே பங்குமுதலீட்டிலும் இவ்வாறான குறிகாட்டிகளை கம்பனிகளின் காலண்டு மற்றும் ஆண்டு அறிக்கைகளின் ஊடாக மற்றும் செய்தித்தாள், விசேட ஆய்வுக்குறிப்புகளின் உதவியுடன் அறிய

முடிகின்றது. எமது முதலீட்டுத் தேக்கத்தில் (Portfolio) அவ்வாறான கம்பனிகளை இனங்கண்டு நிரல்படுத்த அதிகளவாக நேரம் மற்றும் முயற்சி அவசியம் என்பதனை பங்குமுதலீடு உணர்த்திநிற்கின்றது. பொதுவாக பல கம்பனிகளை பின்தொடர்வதைத் தவிர்த்து, விவேகமான சிந்தனைக்கு அமைவாக எமது வசதிக்கு ஏற்றால் போல் குறித்த ஒரு சில கம்பனிகளை தெரிவுசெய்தல் நன்று.

**வியாபாரத் தெரிவு**

எமது தெரிவானது பிழையாக அமையுமிடத்து ஈடுபடுத்திய மூலதனத்தினை மட்டுமல்ல சிறந்த முதலீட்டு வாய்ப்பினையும் இழக்க நேரிடும். இது பங்கு முதலீட்டிற்கு மட்டுமல்ல முயற்சியாண்மைக்கும் சாலப்பொருந்தும். முயற்சியாளன் தனது யோசனையினை (idea) சரியான நேரத்தில் உரியவாறு நடைமுறைப்படுத்தத் தவறினால் இழப்பு என்பது தவிர்க்க முடியாது. முகாமையாளர் தெரிவும் மற்றும் தராதரம் முயற்சியாண்மையின் தொடர்ச்சியான வெற்றி அதன் முயற்சியாளன் மட்டுமன்றி அவனால் பணிக்கப்படும் தொழில் நிபுணத்துவக் குழுவிலும் (Management) தங்கியுள்ளது. அதாவது காலத்திற்கு ஏற்ப புதிய திட்டங்களை அல்லது யோசனைகளை இணைத்து வியாபார விரிவாக்கத் திற்கு அச்சாணியாக முயற்சியின் முகாமையும், அதன் தரமும் அமைகின்றன. அவ்வாறான, பங்கு முதலீட்டினை ஆரம்பிக்கும் போது நாம் தெரிவு செய்யும் கம்பனியின் முகாமையாளர்கள் மற்றும் நல்லாட்சித் தத்துவம் (Good corporate governance) தொடர்பாக கம்பனி கொண்டுள்ள கொள்கைளை மிகவும் நுணுக்கமாக அவதானிக்க வேண்டும். உங்கள் முதலீடுகளை அச்சமின்றி இவ்வாறான கம்பனிகளில் தொடர்ச்சியாக ஈடுபடுத்திக் கொள்ள முடியும்.

முயற்சியாண்மையின் வெற்றியே நிலையான புகழைத் தோற்றிவிக்கின்றது இவ் இரண்டு முயற்சியும் பலருக்கு செல்வத்தை மட்டுமன்றி மதிப்பிட முடியாத புகழினையும் கொடுத்த பல உதாரணங்களை எமது வாழ்நாளில் அறிந்தோம். இதற்கு அவர்களின் வெற்றியே வித்தாக அமைந்திருந்தது. இருந்தும், உண்மை என்னவெனில், பல ஆயிரக்கணக்கான முயற்சியாண்மையும், பங்கு முதலீடுகளும் தோல்விளைக் கண்டுள்ளன. இவ்விரண்டும் ஓர் இலகுவான முயற்சியாக நாம் கொள்ளக்கூடாது. முயற்சியாண்மையின் அங்கமான பங்குச்சந்தை முதலீடுகள் கொண்டிருக்கும் தனித்தவமான சிறப்புக்களை குறைந்த மூலதனத் தேவை பங்கு முதலீட்டை நாம் மிகவும் குறைந்த மூலதனத்துடன் அதாவது ஒரு சில ஆயிரம் ரூபாக்களுடன் ஆரம்பிக்க முடியும். ஆனால் முயற்சியாண்மை அவ்வா றில்லை. ஆரம்ப மூலதனமாக சில இலட்சங்களை வேண்டிநிற்பினும், தொடர்ச்சியாக மூலதனத்தினை ஈட்ட வேண்டிய தேவையும் ஏற்படலாம்.

**பன்முகப்படுத்தி முதலீடு செய்தல்**

நமக்கு வசதி இருப்பின் எனது முதலீடுகளை குறித்த வியாபாரத் திட்டங்களில் மட்டுமன்றி பல வேறுபட்ட வியாபார முயற்சிகளில் பன்முகபப்டுத்தி முதலீடு செய்யும் வசதி பங்கு முதலீடுகளில் உண்டு. எல்லாத் துறைகளும் ஒரே நேரத்தல் சரிவைச் சந்திப்பதற்கான வாய்ப்பு குறைவு எனவே முதலீடுகளைப் பன்முகப்படுத்தி எமது முதலீட்டுக்கான இடர்நேர்வுகளைக் குறைத்துக் கொள்ள முடியும். முயற்சியாண்மையில் குறித்த நேரத்தில் ஓர் குறித்த வியாபாரத் திட்டத்தினை மையப்படுத்தியே முதலீடு செய்ய முடியும்.

தவறுகளைத் திருத்திக் கொள்ளுதல் ஒப்பீட்டளவில் இலகுவானது துரதிஷ்டவசமாக தவறான பங்குத்தெரிவு எமது முதலீடடுத் தேக்கத்தில் இடம்பெற்றிருப்பின் அதனை நிவர்த்தி செய்வதற்கான பல சந்தர்ப்பங்களை பங்கு முதலீடு கொண்டுள்ளது. நீங்கள் பங்குகளை விற்பனை செய்து வரவிருக்கும் நல்ல சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். ஆனால் முயற்சியாண்மையில் வியாபார முயற்சி வெற்றியடைய வில்லை எனில் ஈடுபடுத்திய மூலதனத்தினை மீளப்பெறுவது என்பது மிகவும் கடினம். மேலும் புதிய யோசனைகளை உள்ளடக்கும்போது நட்டம் மட்டுமன்றி மேலதிக மூலதனத்தினையும் வேண்டி நிற்கும். இலகுவாகப் பணமாக மாற்றிக் கொள்ள முடிதல். பங்குமுதலீடு தேவைக்கு ஏற்ப இலகுவாக இலங்கைப் பங்குச்சந்தை ஊடாக சந்தை விலையில் கைமாற்றம் செய்து பணமாக மாற்றிகொள்ள முடியும். அதாவது பங்குளை விற்பனை செய்து பணமாகமாற்றிக் கொள்ள முடியும். சந்தை விலை என்பது பங்குச்சந்தையில் சுயாதீனமாக கொள்வனவாளர் மற்றும் விற்பனையாளர்களினால் தீர்மானிக்கும் விலை கம்பனிகளின் பெறுபேறு மற்றும் முதலீட்டாளர்களின் எதிர்பார்ப் புக்கு ஏற்ப மாற்றமடையும். முயற்சியாண்மையினைப் பொறுத்தமட்டில், சொத்துக்களை குறித்த காலவரைக்கும் விற்றுத்தீர்த்தல் என்பது ஓர் இலகுவான நடைமுறை அல்ல.

மேலதிக வருமானத்தினை ஈட்டுவதற்கான இலகுவான தெரிவாக அமைகின்றது வருமானத்தினைப் பெருக்குவதற்கான துணைமூலங்களில், எமது அடிப்படை வருமான மூலத்திற்கு எந்தவித இடையூறும் இன்றி எமது இலச்சியத்தினைத் தொடர்வதற்கு மிகப்பொருத்தமான துணைமூலமாக பங்குமுதலீடு அமைகின்றது. அதாவது இணையத் தின் உதவியுடன் எங்கிருந்தும் சிமாட் டிவைஸ் ஊடாக முதலீட்டினை முகாமை செய்து கொள்ள முடிகின்றது. ஆனால், முயற்சியாண்மையில் இவ்வாறான சுதந்திரத்தினை அனுபவித்தல் அரிது, கண்ணும் கருத்துமாய் வியாபார முயற்சியினை அவதானிப்பதன் மூலம் மட்டுமே அதனைத் சரியான பாதைக்கு இட்டுச்செல்ல முடியும்.

முயற்சியாண்மை ஒருவரை உணர்ச்சிகரமான தொழிலதிபராக மாற்றுகின்றது. உங்கள் சுயசிந்தனை (idea) வெற்றி அடைவதற்கான கனவுப் பயணமான அமைகின்றது முயற்சியாளன் தனது சுயசிந்தனைக்கு செயல்வடிவம் கொடுக்கும் மூலமாக முயற்சி யாண்மை மட்டுமே அமைகின்றது. முயற்சியாளன் சிந்தனைக்கு செயல்வடிவம் கொடுக் கக்கூடிய புதிய பொருட்களை உற்பத்தி செய்து தனித்துவத்தினைப் பேணமுடியும். பங்கு முதலீட்டில் தெரிவிற்கு மட்டுமே இடமுண்டு. உங்கள் வியாபார முயற்சி உங்கள் பெயரில் வியாபாரம் ஆரம்பித்த நாள்முதல் உங்கள் பெயரில் உங்கள் முயற்சி அமைந்திருக்கும். நிறுவனத்தின் உரிமையாளர் அந்த முயற்சியாண்மையின் சிந்தனையாளராக அமைகின்றார். பங்குமுதலீட்டைப் பொறுத்தமட்டில் ஆரம்பநிலையில் முதலீட்டாளன் சிறுபான்மையினராக (Minority shareholders) தான் இருக்க முடியும். முதலீட்டுப் பருமனுக்கு ஏற்ப சட்டத்தினால் உரிமைகள் மட்டுப்படுத்தப்படும். ஆனால் நீண்டகாலத் - தில் மாறுபட வாய்ப்பு உண்டு.

முயற்சியாண்மையினைப் பொறுத்தமட்டில் உரிமையாளருக்கும் கம்பனிக்கும் அல்லது வியாபார முயற்சிக்கும் மிகவும் வலுவான பிடிப்பினைப் கொண்டிருக்கும். அதாவது ஒரு தந்தைக்கும் மகனுக்கும் இடையில் இருக்கின்ற பாசப்பிணைப்பிற்கு இணையானதாக அமைந்திருக்கும். பங்குமுதலீட்டில் அவ்வாறான உணர்வுபூர்வமான பிணைப்புக்களுக்கான வாய்ப்புக்கள் அரிது, பிணைப்புக்கள் சட்டங்களினால் வரையறுக் -கப்பட்டுள்ளது.

துணிகரமான முயற்சியாளனுக்கு பங்குமுதலீடு மற்றும் முயற்சியாண்மை இவ்விரண்டிற் கும் உள்ள நன்மைகளும் தீமைகளும் வேறுபடலாம். இவ் இரண்டு முயற்சிகளும் அடிப்படையில் இடர்நேர்வுடன் நெருங்கிய தொடர்புபட்டவை. அவர்களின் முதலீட்டுப் பயணம் இவ் இடர்நேர்வினை வெற்றி கொள்வதில் தங்கியுள்ளது. பங்குமுதலீட்டு முயற்சியினைப் பொருத்தமட்டில் கூழாங்கற்களில் இருந்து இரத்தினக் கற்களை வேறுபடுத்தும முயற்சியாக விபரிக்கலாம். சிலர் இதனை ஒரு சவாலாகக் கொண்டு சொத்துக்களை இலகுவாகப் பெருக்கிக் கொள்கின்றனர். அதனை நாம் ஒரு தொழிலாக அன்றி passion ஆக கொண்டு நிதானமாக எமது தனிப்பட்ட நிதித்திட்டமிடலுக்கு அமைவாக முதலீட்டுப் பயணத்தினை ஆரம்பித்தால் எம்மை யாராலும் நெருங்க முடியாது என்பது வரலாறாக அமைந்துள்ளது.

# மாணவர்களிடம் எதிர்பார்க்கப்படும் முகாமைத்துவ மனப்பாங்கு

திரு. நீ. தவராசா
NDT, BA, PGDE, MA, MED (SLT ES III)
விரிவுரையாளர்
ஆசிரிய மத்திய நிலையம்
வரணி



அறிமுகம்

வாழ்வில் வெற்றி பெறுவதற்கு முகாமைத்துவ மனப்பாங்கு மிகவம் அவசியமானதாகும். உலகில் புகழாரம் பெற்ற அறிஞர்கள் முகாமைத்துவ மனப்பாங்கை சீராக பின்பற்றிய வர்களாவர். நீங்கள் வீட்டிலும் பாடசாலைகளிலும் முதன்மை நிலையில் இல்லாமலிருக்கலாம். இருப்பினும் உங்களிடம் முகாமைத்துவ மனப்பாங்கு நிச்சயம் காணப்படுதல் அவசியமானதாகும். எம்மால் முன்னெடுக்கப்படுகின்ற வேலைகள் எவ்வகையில் நடைபெற வேண்டுமென எதிர் பார்க்கப்படுகிறதோ அவ்வாறு செயற்படுவதை உறுதிப்படுத்தும் முகாமையாளராகவும் நீங்கள் மனதளவில் மதிப்பீட்டு உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். குடும்பத்திலும் பாடசாலையிலும் மற்றும் சமூகத்திலும் பலரும் பலவிதமான எதிர்பார்ப்புக்களுடன் இருப்பார்கள். அவர்களை விளங்கிக் கொண்டு முரண்பாட்டைத் தவிர்த்து சமாளித்து மாணவர் இலக்கை நோக்கி நகரவேண்டம். எப்பொழுதும் உங்கள் கடமைகளில் மிகவும் கவனமாக செயற்பட வேண்டும். மாணவர்கள் எந்த ஒரு பணியையும் குறித்த நேரத்தில் செய்தாலும் தொடர்ந்து அவற்றில் கவனம் செலுத்தல் அவசியமானதாகும். அதாவது காட்டிவரும் பழக்கம் மிகவும் அவசியமாகும். அந்தவகையில் மாணவர்கள் முகாமைத்துவ மனப்பாங்கினை மேம்படுத்த பின்வருவனவற்றை கடைப்பித்தல் சிறப்பானதாகும்.

- சுய முகாமைத்தும்
- நேரமுகாமைத்துவம்
- இலக்கை நோக்கிய வேலை
- தனித்துவமான செயற்பாடு
- முடியும் என்ற உறுதிப்பாடு
- முதன்மையானவராக தொழிற்படுதல்
- நேரான தொடர்பாடல்

**சுய முகாமைத்துவம்**

மாணவர்கள் உங்களது வகிபாகம் பற்றி அதாவது உங்களுக்குரிய பணிகள் பொறுப்புக்கள் பற்றி அறிந்து கொள்ள வேண்டும். நீங்கள் எதிர்காலத்தில் முன்னேறு வதற்கு தற்போதைய பணி எவ்வகையில் உதவும் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். அத்துடன் மற்றவர்களைவிட உங்களால் குடும்பத்திற்கும் பாடசாலைக்கும் ஒட்டுமொத்த

சமூகத்திற்கும் எத்தகைய உண்டு என்பதை வெளிப்படுத்த வேண்டும். எதைச் செய்தால் மற்றவர்களை விடவும் நீங்கள் அதிகம் தேவைப்படுவீர்கள் என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும். உங்களிற்கு கிடைக்கும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி எவ்வகையில் முன்னேற முடியும் என்பதையும் கண்டறியுங்கள். அதாவது உங்களிடமுள்ள பலமான விடயம் எது? அதனை எவ்வாறு சுய முன்னேற்றத்திற்குப் பயன்படுத்த முடியும் என்பதனை யும் தெரிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள். அத்துடன் உங்களிடம் காணப்படும் பலவீன மான அல்லது குறைபாட்டை இனங்கண்டு அதனை அகற்றுவதற்கு முயற்சியுங்கள்.

**நேர முகாமைத்துவம்**

நேரம் என்பது இலவசமாக மனிதருக்கு வழங்கப்பட்டுள்ள பிரிக்க முடியாத வளமாகும். நேரம் வளம் என்பதனால் அது முகாமை செய்யப்படத்தக்கதாகும். இதனை சுய கட்டுப்பாட்டில் வைத்திருத்தல் என்பது முக்கியமான நேரத்தை கல்வி, ஓய்வு, சமூக உறவுகள், குடும்ப வாழ்வு போன்ற பல்வேறு தேவைகளிற்கு பகிர்ந்து கொடுக்கும் ஆற்றலைப் பொறுத்து தனி மனிதர்களின் சுய முகாமை மேம்படுகின்றது. மாணவர்கள் தேவைகளிற்கும் நேரத்துக்குமான தொடர்பை முன்னுரிமைப்படுத்த வேண்டும். இதில்

1. அவசியமானவை
2. அவசரமானவை
3. அவசியமானதும் அவசரமானதும்

என்றவாறு முன்நிலைப்படுத்த வேண்டும். இந்த முன்னுரிமைகள் நாளாந்தம் வேறுபடக் கூடும். உங்கள் நேரத்தை முகாமை செய்யும் போது உங்கள் மதிப்பு இயல்பாகவே உயர்ந்து செல்வதை உங்களால் உணர முடியும்.

**இலக்கை நோக்கிய வேலை**

"குறிக்கோளற்ற நோக்கு குறுட்டு நோக்கு" என்ற அளவையியலாளர்களின் கூற்றிற்கு ஏற்ப எந்தவொரு வேலையைச் செய்யும் போது (சிறதோ பெரிதோ) அதனை ஏன் செய்கின்றொம் என்பதை விளங்கிக் கொண்டு அதனை மனதில் நிலை நிறுத்திக் கொள்ள வேண்டியது அவசியமாகும். அதாவது எந்தவொரு வேலையையும் குறிக்கோளின்றி செய்தல் கூடாது. சிறிய வேலையாக இருந்தாலும் பெரிய விளைவுகளுடன் தொடர்பு கொண்டவையாக அமையலாம். அந்தவகையில் சிறந்த பெறுபேறுகளை அல்லது பயன்தராத எந்தவொரு செயற்பாட்டிலும் உங்கள் நேரத்தையும் வளங்களையும் செலவிடாதீர்கள். கற்றலிலோ, பரீட்சையிலோ எதுவானாலும் சிறப்பாக நடைபெற வேண்டுமென உண்மையாகவே நம்புங்கள். அதில் உங்கள் அர்ப்பணிப்பு அல்லது ஈடுபாடு இருப்பதை உறுதிப்படுத்துங்கள் எந்தவொரு பணியில் ஈடுபட்டாலும் அதி சிறந்த உன்னதமான விளைவைப் பெறுவதற்கு நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டும். இலக்கும் விளைவும் இல்லாத எந்தவொரு வேலையிலும் உங்களை ஈடுபடுத்தாதீர்கள் இது உங்களுக்கு எப்பொழுதும் நன்மையையே பெற்றுத் தரும்.

**தனித்துவமான செயற்பாடு**

சிறந்த அர்ப்பணிப்பான செயற்பாட்டாளர் தமது தனித்துவத்தை ஏதோ ஒரு வடிவில் வெளிப்படுத்தியே தீருவார். அதற்குரிய மனத்தைரியம் உடையவராக இருப்பார். அதற்காக மற்றவர்கள் பின்பற்றிய முன்மாதிரியான செயற்பாடுகளை பின்பற்றலாம் குறிப்பாக கற்றலிலும் வாழ்விலும் வெற்றி பெற முன்மாதிரியானவர்களை சிந்திப்பதும் அவர்களின் வெற்றிக்கான காரணங்களை தேடியறிந்து அதனை பின்பற்றி வாழ்வில்

வெற்றிபெறுவதும் அதிலிருந்து உங்களுக்கான தனித்துவமான பாதையை உருவாக்கி அதில் வெற்றிபெறுவதும் இதனூடாக எதிர்கால சந்ததியினர் உங்களை முன்மாதிரியாக கொண்டு வாழ்வில் வெற்றிபெற வழிவகுக்கும். எல்லோரையும் விட தனித்துவம் கொண்டவர்களாக விளங்குவதற்கு முயற்சி செய்யுங்கள். பூரணமாக ஒரு வேலையை செய்யாவிட்டாலும் அதற்காக முயற்சி செய்து கொண்டு இருங்கள். வெகு விரைவில் நிச்சயம் அந்த நிலையை அடைந்துவிடுவீர்கள்.

**"முடியும்" என்ற உறுதிப்பாடு**

நீங்கள் எப்போதும் "என்னால் முடியும்" என்று எண்ணுங்கள் தினமும் அப்படி எண்ணிக் கொண்டே வந்தால் ஆற்றல் உங்களின் உள்ளேயே வளரத் தொடங்கிவிடும். உங்கள் பணிகளை துணிவோடும் தைரியத்தோடும் பொறுமையுடனும் செய்ய முடியும் என நம்புங்கள். அவ்வாறயின் சவாலாக அமைகின்ற விடயங்களைக் கூட திட்டமிட்டு நிறைவேற்றக் கூடியவர்களாக நீங்கள் வலிமை பெற்றுவிடுவீர்கள். "எதுவும் முடியும்" என நினைத்து கருமமாற்றினால் இலக்கை அடைவது இலகுவாக அமைந்துவிடும். எதனைச் செய்தாலும் சரியாகவும், உரிய நேரத்துக்குள்ளும் மிகச் சிறப்பாகவும் செய்வதில் அக்கறை காட்டுவது அவசியமாகும்.

**முதன்மையானவராகத் தொழிற்படுதல்**

நீங்கள் வீட்டிலும் பாடசாலையிலும் சமூகத்தாலும் செய்யும் ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் பொறுப்பேற்றுக் கொள்ளுங்கள். பாடசாலையில் கற்றலுடன் மட்டும் நின்றுவிடாது ஏனைய இணைபாடவிதான செயற்பாடுகளிலும் ஈடுபடுவதுடன் பாடசாலைக்கு தேவையானவற்றை எப்போதும் சாதகமாக செய்து கொடுக்கும் நபர்களில் முதன்மையானவராக நீங்கள் இருப்பதற்கு முயற்சி செய்யுங்கள். அத்துடன் பாடசாலையின் இயங்கு நிலைக்கு நெருக்கடிகள், இடையூறுகள் கொடுப்பவராக நீங்கள் இருத்தல் கூடாது. மாறாக அதன் சீரான இயங்கு நிலைக்கு ஒத்துழைப்பு வழங்கும் பங்காளியாக ஒவ்வொரு மாணவர்களும் தொழிற்படுதல் எதிர்பார்க்கப்படுகின்றது.

**நேரான தொடர்பாடல்**

மாணவர்கள் பாடசாலையிலும் வீட்டிலும் தாம் வாழும் சமூகச் சூழலிலும் எல்லோருடனும் நல்ல முறையில் தொடர்புகளைப் பேண வேண்டும். அத்துடன் அனைவரும் விரும்பத்தக்க வகையில் உறவுகளைப் பேண வேண்டும். உறவுகளிடையே சிறந்த வலையமைப்பினை உருவாக்கி கொள்ள வேண்டும். அவ் வலையமைப்பு உங்கள் வாழ்வின் இலட்சியத்தை அடைந்து கொள்வதற்கும் வழிகாட்டியாக அமைய வேண்டும்.

**முடிவுரை**

மாணவர்களாகிய உங்களிடம் எதிர்பார்க்கப்படும் முகாமைத்துவ மனப்பாங்குகள் ஏற்கனவே உங்களிடம் இருந்தால் மேலும் மெருகூட்டிக் கொள்ளுங்கள். இவை உங்களிடம் இல்லாவிடில் படிப்படியாக வளர்த்துக் கொள்ளுங்கள். இவ்வாறாக எல்லாத் தகைமையும் உடையவராகும் போது சிறந்த பிரஜையாக வளர்ந்து வாழ்வில் வெற்றி பெறலாம். மாணவப் பருவத்தை பயனுறுதியாகவும் வினைத்திறனாகவும் மாற்றுபவர் எதிர்கால வாழ்வில் வெற்றி அடைகின்றார் வினைத்திறன் மிக்கதாக.

# பொருளாதார வளர்ச்சியும் சூழல் பாதிப்பும்

திருமதி K.M. குகநாதன் M.A, MED
ஆசிரியர்
வ/ இறம்பைக்குளம் மகா வித்தியாலயம்
(தேசிய பாடசாலை) வவுனியா



பொருளாதார வளர்ச்சி என்பது ஒரு நாட்டினுடைய மெய் ரீதியான மொத்தத் தேசிய உற்பத்தி நீண்டகாலப் போக்கில் தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்வதனைக் குறிக்கும். இன்னோர் வகையில் கூறின் நிலையான விலையிலான மொத்தத்தேசிய உற்பத்தியின் தொடர்ச்சியான அதிகரிப்பாகும். நடைமுறை ஆண்டில் நிலையான விலையிலான மொத்தத் தேசிய உற்பத்தியில் ஏற்படும் வீதாசார ரீதியான அதிகரிப்பைக் கணிப்பிடுவதன் மூலம் பொருளாதார வளர்ச்சி வீதத்தினை அளவிட்டுக் கொள்ள முடியும்.

$$\text{பொருளாதார வளர்ச்சி வீதம்} = \frac{\text{நடைமுறையாண்டு நிலையான விலை மொத்தத் தேசியஉற்பத்தி} - \text{கடந்த ஆண்டு நிலையான விலை மொத்தத்தேசிய உற்பத்தி}}{\text{கடந்த ஆண்டு நிலையான விலை மொத்தத் தேசிய உற்பத்தி}} \times 100$$

இப் பொருளாதார வளர்ச்சி வீதமானது நேர்க்கணியமானதாகவோ அல்லது எதிர்க் கணியமானதாகவோ இருக்கலாம். எனினும் நேர்க்கணிய வளர்ச்சியே பொருளாதாரம் வளர்ச்சியடைந்து செல்வதனைக் குறிக்கின்றது. அபிவிருத்தியடைந்த நாடுகளில் இப்பொருளாதார வளர்ச்சி வீதமானது சராசரியாக 8% - 10 % மாக அமைய அபிவிருத்தி யடைந்து வரும் நாடுகளில் இது 4% - 5% க்கும் குறைவானதாகவே காணப்படுகின்றது. பொருளாதார வளர்ச்சியானது பல்வேறு வழிகளில் முக்கியத்துவம் பெறுகின்றது.


- மக்களின் வருமான மட்டத்தினை உயர்த்தி உயர்ந்த மட்ட வாழ்க்கைத்தரத்தை அனுபவிக்க உதவுகின்றது.
- சேமிப்பு மட்டத்தினை உயர்த்தி முதலீட்டு மட்ட உயர்வுக்கு வழிவகுக்கின்றது. வேலை வாய்ப்புக்களை அதிகரிக்க உதவுகின்றது.
- சேமிப்புக்கூட்டத்தினை உயர்த்தி முதலீட்டு மட்ட உயர்வுக்கு வழிவகுக்கின்றது. வேலை வாய்ப்புக்களை அதிகரிக்க உதவுகின்றது.
- வெற்றிகரமாக அரச நிதி முகாமைத்துவத்திற்கு அடிப்படையாகின்றது.
- பொருளாதார அபிவிருத்தி நிலைத்து நிற்கும் அபிவிருத்திக்கு முன் நிபந்தனையாக அமைகின்றது.
- வளர்ச்சி அடைந்து வரும் குடித்தொகையின் உணவு முதலிய தேவைகளை வழங்கி வருகின்றது.

பொருளாதார வளர்ச்சியில் முக்கியத்துவம் காரணமாக உயர்ந்தமட்டத்தில் இதனை அடைந்து கொள்வதில் உலகநாடுகள் யாவும் அதிக கவனம் செலுத்தி வருகின்றன.

பொருளாதார வளர்ச்சியை ஏற்டுத்துகின்ற காரணிகளை இரு பிரதான வழிகளில் இனங்காணமுடியும்.

1) வளங்களின் கிடைப்பனவை அதிகரித்தல்
2) வளங்களின் வினைத்திறனை அதிகரித்தல்

வளங்களில் கிடைப்பனவை அதிகரித்தல் என்பது உற்பத்தி நடவடிக்கைகளின் பயன்படுத்தக்கூடிய உற்பத்திக்காரணிகளான நிலம், உழைப்பு, முதல் முயற்சி என்பவற்றின் அளவில் அதிகரிப்பை ஏற்படுத்துவதனைக் குறிக்கும். புதிய வளக் கண்டுபிடிப்பு, இயற்கை வளங்களை அகழ்ந்து எடுத்தல், வெளிநாடுகளில் இருந்து வளங்களை இறக்குமதி செய்தல், மூலதன ஆக்கத்தை ஏற்படுத்தல் போன்ற நடவடிக்கைகளின் மூலம் உற்பத்திக்காரணிகள் கிடைப்பனவைக் கூட்டி பொருளாதார வளர்ச்சியை அடைந்து கொள்ளலாம்.



வளங்களின் வினைத்திறனை அதிகரித்தல் என்பது ஏற்கனவேயுள்ள வளங்களின் உற்பத்தித்திறனை உயர்த்து வதன் மூலம் உற்பத்திமட்டத்தினை பெருக்குவதனைக் குறிக்கும். நவீன தொழில்நுட்பப் பயன் பாடு, புத்தாக்க கருவிகள், சாதனங்களின் பயன்பாடு, மனித மூலதன மேம்பாடு, முகாமைத்துவ முன்னேற்றம் போன்றவற்றி னூடாக அதே வளங்களின் வினைத் திறனைக் கூட்டி உற்பத்திமட்டத்தை பெருக்கிக்கொள்ள முடியும்.

பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதில் இவ்விரு வழிமுறைகளும் முக்கியத் துவம் பெறுகின்றன என்றும் அபிவிருத்தியடைந்த நாடுகளில் வளங்களின் வினைத்திறனை உயர்த்தும் வழிமுறைகளும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் வளங்களின் கிடைப்பனவை அதிகரிக்கும் நடவடிக்கைகளும் அதிகளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

சூழல் என்பது எம்மைச் சூழவுள்ள அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கும். இது மனிதனுக்கு மட்டுமன்றி இவ்வுலகில் வாழுகின்ற சகல உயிரினங்களுக்கும் பல்வேறு பணிகளை வழங்குகின்ற ஓர் கூட்டுச் சொத்தாகும். சிறப்பாக மனிதனுடைய வாழ்வைக் கட்டுப்படுத்துகின்ற வாழ்க்கைக்கு ஆதாரமாக அமைகின்ற ஓர் அரிய சொத்தாகும். மனித குலத்தின் நெடிய பயணத்தின் ஓர் உற்ற தோழன் உயிரினங்கள் உலகில் உயிர்வாழ்வதற்கு அவசியமான வளி, நீர், சூரிய ஒளி என்பவற்றை மட்டுமன்றி உற்பத்திக்கு அடிப்படையான உள்ளீடுகள், எரிபொருட்கள், சக்தி வளங்கள் போன்றவற்றினையும் பொருளாதாரத்திற்கு வழங்கி வருகின்றது.

மனிதன் தனது தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் சூழலின் அழிவுக்கு நிர்ணயமான

முறையில் இடையறாது பங்களித்து வருகின்றான். உற்பத்திச் செயற்பாட்டின் பொருட்டு உள்ளீடுகளை சூழலில் இருந்து பெற்றுக்கொள்ளும்போதும், உற்பத்தியில் நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தும்போதும் சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்துவது தவிர்க்க முடியாத ஒன்றாக அமைகின்றது. அதாவது பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் கையாளப்படுகின்ற இரு பிரதான வழிமுறைகளும் சூழல்மீது தாக்கத்தினை ஏற்படுத்தி விடுகின்றன.

உற்பத்தியை பெருக்கும் வகையில் சூழலில் இருந்து வளங்களை அகழ்ந்தெடுக்கும் போது அவை தீர்ந்து விடுகின்றன அல்லது குறைவடைந்து விடுகின்றன. இவ் வளங்களில் சில மீள உருவாக்க முடியாதவை. சில மீள உருவாக்கக்கூடியவை. உதாரணமாக யப்பானின் ஒட்டுப் பலகைத் தொழிற்சாலைக்கான மூலப்பொருள் என்றவகையிலும் அமெரிக்காவின் காகித உற்பத்திக்கான மூலப்பொருள் என்ற வகையிலும் இந்தோனேசியாக் காடுகள் பெருமளவில் வெட்டி வீழ்த்தப்படுகின்றன. இவ்வாறே கனிய நெய்வகைகளையும் கனியப்படிவுகளையும் அகழ்ந்தெடுக்கும் போதும் கடல் வளங்களைப் பயன்படுத்தும் போதும் அவை அருகிச் செல்கின்றன.

மறுபுறமாக வளங்களின் வினைத்திறனை பெருக்கும் வகையில் நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துவதும் வேளாண்மைத் துறையில் இரசாயனப்பசளைகள், பீடைகொல்லிகளின் பயன்பாடும் உற்பத்திப் பெருக்கத்திற்கு உதவுகின்றன என்றும் சூழல் மீதும் பெருந்தாக்கத்தினையும் ஏற்படுத்தி விடுகின்றன. உதாரணமாக வேளாண்மைப் பெருக்கத்தின் பொருட்டு யாழ்ப்பாணம், நுவரெலியா போன்ற இடங்களில் அதிகளவில் பயன்படுத்தப்பட்டு வரும் நைட்ரேட் இரசாயனப்பசளை வகைகள் அந்நிலங்களின் மேற்பரப்பு, நீர்வளம் என்பவற்றின் மீது பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. இரசாயனப் பசளைகளின் உபயோகத்தினால் அதிகளவில் மதிப்பிட்ட ஒரு பிரதேசம் மொனரா - கலையாகும். கரும்புப்பயிர்ச் செய்கையின் பொருட்டு பயன்படுத்தப்பட்ட இவ்விரசாயன பசளைகள் மூலம் இப்பிரதேசத்தை ஊடறுத்துச் செல்லும் நதிகளின் நீர்த்தன்மை பாதிக்கப்பட்டதாக ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. இது மட்டுமன்றி கைத்தொழில் நடவடிக்கைகளின் உற்பத்திக்கழிவுகள் எவ்வித தூய்மைப்படுத்தலும் இன்றி அருகில் உள்ள நீர்நிலைகளில் கொட்டப்படுவதால் அவை அசுத்தமடைகின்றன. இரத்மலானை, மொறட்டுவப்பகுதியில் உள்ள தொழிற்சாலைக் கழிவுகள் களனி கங்கையில் சேர்க்கப்படுவதால் நீர், நிலம், வளி என்பன அசுத்தமடைகின்றன.

சூழலில் இருந்து அதிகளவுக்கு மூல வளங்களைப் பெற்றுக்கொள்வதும், கழிவுகளை சூழலில் சேர்ப்பதும் சூழலின் பெறுமதியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. கூடியளவான உற்பத்திக்காக சூழலில் இருந்து மூலவளங்களை அதிகளவில் பெற்றுக் கொள்வதன் மோசமான விளைவு பயன்படுத்தும் தொழில்நுட்பத்திலேயே தங்கியிருப்ப - துடன் சூழல் மீது விரைவான தேய்வினையும் ஏற்படுத்திவிடும். எனவே உயர்ந்த பொருளாதார வளர்ச்சிச் செய்முறையானது அதனுடன் இணைந்தவகையில் மூல வளங்களைக் குறைவடையச் செய்தல், வெப்பநிலை உயர்வடைதல், பனிக்கட்டி உருகுதல், காலநிலைப்பாதிப்பு, பாலைவனங்களின் பரம்பல் ஓசோன்படலத்தின் பாதிப்பு என்பவற்றினை ஏற்படுத்தி சூழலின் சமநிலையை குழப்பமடையச் செய்கின்றது. இது எதிர்காலச் சந்ததியினரின் பொருளாதார மேம்பாட்டைப் பாதிக்கும் வல்லமை

கொண்டது. சுருங்கக் கூறின் நாட்டின் பேண்தகு அபிவிருத்தியை பாதித்து விடுவதாக அமையும்.
இதிலிருந்து பொருளாதார வளர்ச்சியும் சூழலும் ஒன்றுடன் ஒன்று இணைந்த வகையில் முழுமையடைவதனையும் ஒன்றுக்கொன்று பாதிப்பை ஏற்படுத்துவதனையும் எடுத்துக்காட்ட முடிகிறது. பொருளாதார நடவடிக்கைகளுடன் கூடிய சூழல் பாதிப்பு தொடர்பான பிரச்சினையானது அந்தந்த நாடுகளின் பொருளாதாரக் கட்டமைப்பு அபிவிருத்திப்படிமுறை, சூழல் ரீதியான கொள்கைகள், இயற்கையின் கொடை என்பவற்றைப் பொறுத்து நாட்டுக்கு நாடு வேறுபடுவதாக அமையும். இவை அதிகளவில் தொழில் வளர்ச்சி கண்ட நாடுகளின் உயர்மட்ட பொருளாதார வளர்ச்சியின் விளைவாகவே தோன்றியுள்ளன. கைத்தொழில்துறையிலும் வேளாண்மைத் துறையிலும் பாரியளவில் உற்பத்தித் திறன்கள் கட்டியெழுப்பப்பட்டமை, போக்குவரத்து மற்றும் தொடர்பாடலின் சிக்கல்மிக்க அமைப்புமுறைகள் வளர்ச்சி கண்டமை, பெரு நகரங்கள் விருத்தியடைந்தமை போன்றவை ஏதோ ஒருவழியில் சூழலைச் சேதப்படுத்தியுள்ளன.

தனிப்பட்ட ஒவ்வொரு நாடுகளினதும் இச் செயற்பாடுகளின் விளைவுகள் தேசிய எல்லைகளையும் கடந்து சென்று சர்வதேசரீதியில் முழு உலகையுமே அச்சுறுத்தி வருகின்றன. இதனால் இப்பிரச்சினையானது இன்று சர்வதேச அரங்கில் விவாதங் - களுக்கும், கலந்துரையாடல்களுக்கும் உள்ளாகி வருகின்றன. சூழல் பாதிப்புக்கள் உலக நாடுகள் யாவற்றுக்கும் பொதுவானவை எனினும் இப் பாதிப்புக்களால் அதிகளவுக்கு பாதிக்கப்படுபவை உலகில் உள்ள வறிய நாடுகளேயாகும். ஏனெனில் வறியநாடுகளில் வாழ்கின்ற மக்கள் தமது வறுமை காரணமாக அதிகளவுக்கு இயற்கைச் சூழலை சார்ந்து வாழ்பவர்களாக இருப்பதேயாகும்.

எனவே சூழலை பாதுகாப்பது தொடர்பாக ஒவ்வொரு நாட்டு அரசாங்கங்களும் கூடிய கவனம் செலுத்தவேண்டியது மிக அவசியமாகின்றது. இல்லையேல் நீண்ட காலத்தில் நாடுகள் பாரதூரமான விளைவுகளை எதிர்நோக்கவேண்டி நேரிடும். உலகின் குடித்தொகை அதிகரித்து வரும்போது அவர்களுக்கு உணவு வழங்கவும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் உற்பத்தியை விரிவுபடுத்த வேண்டியது அவசியம்தான். ஆனால் இந்நடவடிக்கைகள் சூழலைப் பாதிக்காத வகையில் மேற்கொள்ளப்பட வேண்டும். சூழலுக்கு பாதிப்புக்களை ஏற்படுத்திக் கொண்டு உயர்ந்த பொருளாதார வளர்ச்சியை அடைந்து கொள்வதிலும் பார்க்க பசுமையைப் பேணக்கூடிய ஓரளவான பொருளாதார வளர்ச்சியை பெற்றுக்கொள்வதுதான் பொருத்தமானது என்பதை உலகநாடுகள் இன்று உணரத் தொடங்கியுள்ளன. இதனாலேயே பசுமைத்தேசிய கணக்கீடு என்ற வகையில் தேசியக் கணக்கீட்டை மேற்கொள்வதில் கவனம் செலுத்தப்படுகின்றது. இதற்கேற்ப உற்பத்தி நடவடிக்கைகளில் தூய்மையான தொழில் நுட்பப்பயன்பாட்டிற்கு ஊக்குவிப்பு வழங்கல், சூழலுக்கு நட்பான நுட்பங்களை கையாளக்கூடிய கைத்தொழில் பேட்டைகள் அமைத்தல், நகரவசதிகள், வடிகால் அமைப்புக்கள் போன்றவற்றை சூழலுக்கு இணைவாக உருவாக்குதல் போன்றவற்றின் மூலம் சூழலுக்கு ஏற்படும் பாதிப்புக்களை தணித்துக் கொள்வதுடன் பொருளாதாரரீதியாகவும் மேம்பாடடைந்து கொள்ள முடியும்.

# தொழில்நுட்பத்தால் தூண்டப்படும் எதிர்கால வங்கித்தொழில்
## (The Future of Banking driven by Technology)



திருமதி ஜெனிற்றா ஜெபநேசன்
B.A (Hons) Eco.Spl,Dip.in.Edu.
ஆசிரியர்
யா/ திருக்குடும்ப கன்னியர் மடம்
தேசிய பாடசாலை
யாழ்ப்பாணம்

### வங்கித்தொழிலில் தொழில்நுட்பத்தின் வரலாறு

வங்கித்தொழில் துறையானது மரபுசார்ந்த பாங்கிலான வங்கித் தொழிலிருந்து டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட வங்கித் தொழிலாக மாறி வருகின்றது.

- கி.மு. 600களில் உத்தியோகபூர்வமான முதலாவது நாணயம் வார்க்கப்பட்டது.
- 1659 இல் முதலாவது காசோலை வரையப்பட்டது.
- 1920 இல் கடன் அட்டை உருவாக்கம்.
- 1978 இல் முதலாவது வரவு அட்டை உருவாக்கம்.
- 1984 இல் முதலாவது கணனிவழி நேரடி பொருள் கொள்வனவு கொடுக்கல்வாங்கல் (Online shopping)

### டிஜிட்டல் மயமான சகாப்தம் (Era of Degitilization)

வாடிக்கையாளர்களின் தேவைகள் தொழில்நுட்பத்துடன் பின்னிப்பிணைந்திருப்பதனால், டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட சகாப்தத்திற்கு வங்கிகள் மாற்றமடைவதற்குரிய தேவைக்கு இட்டுச் செல்கின்றது. நடமாடும் பணப்பைகள், ( mobile wallets) இலத்திரனியல் பணப்பைகள், (e-wallets) முற்கொடுப்பனவு அட்டைகள் (pre-paid cards), தொடர்பற்ற அட்டைகள் (contactless cards) மணிக்கட்டு பட்டிகளுக்கூடான கொடுப்பனவுகள் (wrist band payments) மற்றும் ஏனைய டிஜிட்டல் மயப்படுத் - தப்பட்ட மாற்றுவழி ஏற்பாடுகள் என்பன கவர்ச்சிமிக்கவனவாக தோற்றம்பெறும் தொழில்நுட்பத்தின் தொடர்ச்சியான முன்னேற்றம் மற்றும் அதன் மீதான நுகர்வோரின் நம்பிக்கை அதிகரித்து வருகின்றமை காரணமாக வங்கித்தொழிலில் ஏற்படும் மாற்றங்கள் வினைத்திறனானதும் காத்திரமானதுமாக இருக்கும்.

### தொழில்நுட்பத்தால் தூண்டப்படும் எதிர்காலம்

பின்டெக் (Fintechs) மற்றும் தொலைத்தொடர்பூட்டல் நிறுவனங்கள் கடந்தகாலங்களில் பல புதுமைப்படைப்புகளுக்கு இட்டுச்சென்றுள்ளதுடன் நிதியியல் சூழலமைப்பையும் மாற்றியமைத்து வருகின்றன. அதேவேளை வங்கிகளும் வாடிக்கை -

யாளர்களின் இயக்கவாற்றல்களுக்கும் டிஜிட்டல் நிதியியல் சேவைகளுக்கான கேள்விக்கும் ஏற்ற விதத்தில் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும்.

**வளர்ந்துவரும் தொழில்நுட்பங்கள்**

அண்மைக் காலங்களில் வங்கித்தொழில் துறையானது வளர்ந்துவருகின்ற பின்வரும் தொழில்நுட்பங்களை நோக்கி கவரப்பட்டுக் காணப்படுகின்றது.

**(அ) திறந்த வங்கித்தொழில்**

வாடிக்கையாளர் தனியொரு இலத்திரனியல் தளத்தினூடாக வெவ்வேறுபட்ட வங்கிகளில் தரவுகளை அணுகுவதற்கு அனுமதி வழங்கப்படும்.

**(ஆ) க்லவுட் கணனிப்படுத்தல் ( Cloud computing)**

கணனி செயன்முறைப்படுத்துகின்ற வளங்கள் எவ்வாறு உருவாக்கப்படுகின்றன, நுகர்வு செய்யப்படுகின்றன மற்றும் பகிரப்படுகின்றன என்பவற்றிலுள்ள மாறுத - லொன்றாகும்.

**(இ) இலத்திரனியல் நுழைவும் (Electronic onboarding) மற்றும் உறுதிப்படுத்தலும்**

வங்கித்தொழிலில் வர்த்தக உறவுகளைக் கட்டியெழுப்புகின்றபோது நேருக்கு நேரான இடைத்தொடர்பு முக்கிய அம்சமாக அமைகின்றது. எனினும், வங்கிகள் தொழில் நுட்பம் மீது தங்கி இருப்பதனாலும் வாடிக்கையாளர்கள் வங்கிக்குச் செல்ல விரும்பாத -மையினாலும் வாடிக்கையாளர்களின் இலத்திரனியல் நுழைவு தேவைமிக்கதாக மாறி வருகின்றது.

**(ஈ) மெய்நிகர் நாணயம் (Cryptocurrency )**

மெய்நிகர் நாணயம் என்பது மறையீட்டியலைப் பயன்படுத்துகின்ற பரிமாற்று ஊடகமாக தொழிற்படுவதற்காக வடிவமைக்கப்பட்ட டிஜிட்டல்மயப்படுத்தப்பட்ட சொத்தொன்றாவதுடன் மத்திய வங்கியுடன் தங்கியிராது சுதந்திரமான முறையில் செயற்படுகின்றது.

**(உ) பகிரப்பட்ட பேரேட்டு தொழில்நுட்பமும் சங்கிலித்தொடர் பதிவேடுகளும் (Distributed Ledger Technology (DLT) and blockchain )**

பகிரப்பட்ட பேரேட்டுத் தொழில்நுட்பம் என்பது பங்குபற்றுநர்கள் பேரேட்டின் ஒரேமாதிரியான சொந்த பிரதியினைக் பெறக்கூடிய, வலையமைப்பு முழுவதும் பகிரக்கூடிய சொத்து தரவுத்தளமொன்றாகும். இணைப்புச்சங்கிலி தொடர் பதிவேடுகள் என்பது சங்கிலித் தொடராக தரவுகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள பகிரப்பட்ட பேரேட்டு தொழிநுட்பத்தின் மாறுபாடொன்றாகும்.

**செயற்கைப் மதிநுட்பமும், பாரிய தரவுப்பகுப்பாய்வுகளும்**

செயற்கை மதிநுட்பமானது, முன்னர் மனிதனால் செய்யப்பட்ட தொழிற்பாடுகளை கணனி நிகழ்ச்சித் திட்டங்கள் ஊடாக தொடர்பு கொள்ளவும் அறியவும் மிகத்துரித - மானதும் மிகத்துல்லியமான முடிவுகளை மேற்கொள்ளவும் இயலச்செய்துள்ளது.

இதன் பிரதான நன்மைகளாவன,

- மேம்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் தனிப்பயனாக்கல்
- உற்பத்தித்திறன்
- இலாபங்கள்
- மோசடித் தணிப்பு
- சிறந்த உற்பத்தி அல்லது சேவை விதந்துரைப்புக்கள் என்பனவாகும்.

இது படங்கள், குரற்பதிவுகள் மற்றும் சமூக ஊடக நடத்தைகள் போன்ற கட்டமைக்கப்படாத தரவுகளினுடைய பகுப்பாய்வை அனுமதிக்கும் பெரிய தரவு பகுப்பாய்வின் அபிவிருத்திகளால் பூரணப்படுத்துகின்றது.

**தொழில்நுட்பத்தில் தங்கியிருக்கும் காரணத்தால் வங்கித்துறை எதிர்நோக்கும் பிரச்சினைகள்**

(அ) பணம் தூயதாக்கல், வாடிக்கையாளரை தெரிந்துகொள்ளல் மற்றும் தீவிரவாதத்திற்கு நிதியிடுதல்.

குழப்பம்தரும் புதிய கண்டுபிடிப்புகளால் பின்டெக் மற்றும் இலத்திரனியல் வங்கித் தொழில் அபிவிருத்திகள் இ-வாடிக்கையாளர் (e-customers) நுழைவு போன்றன நேருக்குநேரான இடைத்தொடர்புகளை நீக்குகின்றது. மேலும் பணம் தூயதாக்கல், வாடிக்கையாளரைத் தெரிந்துகொள்ளல் மற்றும் தீவிரவாதத்திற்கு நிதியிடல் போன்ற அச்சுறுத்தல்கள் வங்கித்தொழிலின் காத்திரமான கண்காணிப்பின் இயலுமையைக் குறைவடையச் செய்கின்றது.

(ஆ) தொழில்நுட்ப இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் இணையப் பாதுகாப்பு

இது தொழில்நுட்பம் மற்றும் இணைய இடர்நேர்வு வெளிப்பாடுகளை அதிகரிக் - கின்றது. அண்மைக்கால உலகளாவிய இணையத்தள தாக்குதல்கள், அதன் நவீனத் தன்மை நிதியியல் முறைமையின் உறுதிப்பாடுக்கு அச்சுறுத்தலைத் தோற்றுவிக் கின்றது.

(இ) அந்தரங்கமும் தகவல் பாதுகாப்பும்

அந்தரங்கத்தினைப் பேணுவது வாடிக்கையாளர் உரிமை. ஆனால் தரவுப் பாதுகாப்பு என்பது வங்கியினுடைய புதிய பரிமாற்று செயற்பாட்டு சூழலினால் தோற்று விக்கப்படும் சவாலாக மாறிவருகின்றன. உலகளாவிய ரீதியிலான தரவுக் கசிவுகள், உணர்வுமிக்க வாடிக்கையாளர் தகவல்கள் பாதுகாக்கப்படாவிட்டால், தவறானவர் களிடம் சென்றடையும் என்பதை நிரூபிக்கின்றன.

(ஈ) மனிதத்தன்மை மற்றும் உள்ளுணர்வு சார்ந்த தீர்மானமெடுத்தல் என்பவற்றின் மறைவு

வங்கிகளின் தீர்மானமெடுத்தல் இயந்திரவழி பயில்நெறிமுறைகள் பாரிய தகவல் பகுப்பாய்வின் ஆதிக்கம் என்பன கணனியில் உள்ளீடு செய்யப்பட்ட தரவுகளில் முழுமையாகத் தங்கியிருக்கும் சூழலை தோற்றுவித்து தொழில்துறையினை சமூகத்திலிருந்து பிரித்துவைக்கின்றன.

**சவால்கள்**

(அ) சட்ட மற்றும் ஒழுங்குமுறைப் படுத்தல் கட்டமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்தல்.

கணனிக்குற்றவியல் சட்டம் மற்றும் இலத்திரனியல் கொடுக்கல்வாங்கல் சட்டம் என்பன தகவல் முறைமை மற்றும் இலத்திரனியல் கொடுக்கல்வாங்கள் போன்றவற்றோடு தொடர்புடைய் பிரதான சட்டவகைகளாக விளங்குகின்றன. இலங்கை மத்திய வங்கியினால் விதிக்கப்பட்டும் குறித்துரைத்த ஒழுங்குமுறைப்படுத்தலானவை தகவல் பாதுகாப்பு, வாடிக்கையாளர் பாதுகாப்பு போன்ற விடயப்பரப்புக்களை உள்ளடக்குகின்றன. எனினும், தகவல் பாதுகாப்பு, மெய்நிகர் நாணயம் மற்றும் க்லவுட் கணனிச் செயன்முறைகள் என்பன சட்டவாக்கங்கள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தலை கேள்விக்குறியாக்கியுள்ளன.

(ஆ) மத்திய வங்கியின் சவால்மிக்க வகிபாகம்

மெய்நிகர் நாணயம் மற்றும் பகிரப்பட்ட பேரேட்டுத் தொழில்நுட்பம் போன்ற புதிய தொழில்நுட்பத்தைப் பின்பற்றும் சமூக வழக்கானது மத்திய வங்கியின் விலை உறுதித்தன்மை மற்றும் நிதியியல் முறைமை ஆகிய இரு குறிக்கோள்களுக்கும் சவால்களைத் தோற்றுவிக்கின்றன.

(இ) வங்கிகளின் சவால்மிக்க வகிபாகம்

வங்கிகள் டிஜிட்டல் சகாப்தத்தில் முன்னோக்கிச் செல்வதால் சவால்களை அறிந்து கொள்வதற்கும் அதன்மீது எதிர்ச்செயலாற்றுவதற்கும் தமது வியாபார இலக்குகளை எய்துகொள்ளுவதற்கும் தேவைப்பாடு அதிகரிக்கின்றது. மேலும் இணையத் தாக்குதல்கள் பணம் தூயதாக்கல் தீவிரவாதத்திற்கு நிதியிடல் என்பவற்றைத் தீர்ப்பதற்கு எச்சரிக்கையான பாதுகாப்புப் பொறிமுறைகள் தேவைப்படுகின்றன.

**சவால்களை வெற்றிகொள்வதற்குரிய வழிகள்**

- தொழில்நுட்பத்தினை எச்சரிக்கையுடன் பின்பற்றுதல்

  புத்தாக்க தொழில்நுட்பத்தில் தங்கியிருக்கும் வங்கிகள், புதிய இடர்நேர்வு மூலங்களைக் காத்திரமாகக் கையாளுவதனை உறுதிப்படுத்த வேண்டியிருக்கின்றது. மேலும், வங்கிகள் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட நிதிச்சேவைகளுக்காக மூன்றாம் தரப்பு சேவை வழங்குனர்கள் மீது பெருமளவிற்கு தங்கியிருக்க வேண்டியிருப்பதனால் அச்சேவைகளை தாமே கொண்டு நடாத்துவதைப் போன்று அதேதரத்திலான கட்டுப்பாடுகள் காணப்படல் வேண்டும்.

- தொழில்நுட்பம் மீதான நிபுணத்துவத்தினதும் தலைமைத்துவத்திற்கான தூரநோக்குள்ள சபைகளினதும் அவசியம்

  தகவல் தொழில்நுட்பத்தின் முக்கியத்துவமானது வணிகத்திற்கான உட்கட்டமைப்பு வசதிகளின் முகாமைத்துவம் மற்றும் பிரயோகங்களைப் பேணுதல் என்பவற்றைத் தாண்டிச் செல்கின்றது. எதிர்கால வங்கித்தொழிலுக்காக தகவல் தொழில்நுட்ப தொழிற்பாட்டினை உறுதிசெய்வதில் டிஜிட்டல் மயப்படுத்தல் அறிவைக் கொண்டுள்ள முன்மதியுடைய மற்றும் தூரநோக்கு சபைகளின் தேவை அத்தியாவசியமாகக் காணப்படுகின்றன.

- மாற்றியமைக்கத்தக்க ஒழுங்குமுறைப்படுத்தல் அணுகுமுறையும் ஒழுங்குமுறைப் படுத்தல் தொழில்நுட்ப பயன்பாடும்

  வளர்ந்துவரும் இடர்நேர்வுகளிலிருந்து போதியளவு பாதுகாப்புக்காகவும், புதுமைப் படைப்புகளிலிருந்து சமூகமானது உச்சப்பயனைப் பெறுவதற்காகவும் ஆதரவானதும் விழிப்புணர்வு திறன்மிக்கதுமான ஒழுங்குபடுத்தல் முறைமை அவசியமாகின்றது.

**தொழில்நுட்ப இடர்நேர்வின் தாக்குப்பிடிக்கும் தன்மையினை வலுப்படுத்தல்**

மத்திய வங்கியானது வங்கித் தொழில்துறையின் இடர்நேர்வுகளை தாக்குப்பிடிக்கும் தொழில்நுட்பங்களை மேம்படுத்துவதற்கு வழிகாட்டி ஒன்றினை உருவாக்கியுள்ளது. அவையாவன

- தொழில்நுட்ப இடர்நேர்வு மதிப்பீடுகள்,
- அடிப்படை பாதுகாப்பு நியமங்களுடனான இணக்கப்பாடு தொடர்பான வெளிவாரி உறுதிப்படுத்தல்கள்,
- தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்ப கட்டமைப்பின் மீதான பாதுகாப்பு மீளாய்வுகள்,
- பணிப்பாளர் சபை மற்றும் உயர் முகாமைத்துவத்திற்கான விழிப்புணர்வு அமர்வுகள்
- தொழில்நுட்ப இடர்நேர்வு முகாமைத்துவ ஊழியர்களுக்கான பயிற்சி அல்லது சான்றுப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்கள்,
- குறிக்கப்பட்ட தகைமைகளுடனான தகவல் தொழில்நுட்ப ஊழியர்களின் ஆகக்குறைந்த எண்ணிக்கை தொடர்பான விதிகள்,
- கணக்காய்வில் தகவல் பாதுகாப்பில் தகுதிபெற்ற தொழில்சார் நிபுணர்களை நியமித்தல்
- அதிஉயர்ந்த உள்ளார்ந்த தொழில்நுட்ப இடர்நேர்வுகள் கொண்ட வங்கிகளுக்கு தனிப்பயன்மிக்க தகவல் பாதுகாப்பு தொழிற்பாட்டு நிலையங்களை நிறுவுதல்

**இதற்கு மேலதிகமாக,**

- வங்கித்தொழில் செயற்பாடுகளில் டிஜிட்டல் மயமாக்கலை ஒழுங்குமுறைப்படுத்தல்,
- க்லவுட் கணனிச் செயன்முறைக்கான குறைந்தளவிலான ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட எதிர்பார்ப்புக்களை வரையறுத்தல்
- பின்டெக் தீர்மானங்களினுடைய பயன்பாடு போன்றவற்றுக்கு கொள்கை கட்டமைப்புக்களை நிறுவுதல்
- இலங்கையில் சங்கிலித்தொடர் பதிவேட்டுத் தொழில்நுட்பத்தினை பயன்படுத்தல்
- பொருத்தமான பின்டெக் புதுமை படைப்புக்களைப் பின்பற்றுதல்

போன்ற செயற்பாட்டினையும் மத்திய வங்கியானது மேற்கொள்கின்றது.

# மேந்தலைக் கிரயம் (Overhead Cost)

திரு. T. லின்டஸ்
MED, B.Com., H.N.Dip.Acc.,Dip.in.Edu.
ஆசிரியர்
யா/ திருக்குடும்பக் கன்னியர்மடம்
தேசிய பாடசாலை
யாழ்ப்பாணம்



**மேந்தலைக் கிரயங்களுக்கான அறிமுகம்**
## Introduction to overhead cost

உற்பத்தி தொடர்பான மொத்தக் கிரயம் என்பது நேர்க் கிரயங்களையும் (Direct cost) நேரில் கிரயங்களையும் (Indirect cost) கொண்டதாக வகைப்படுத்தப்படும்..

**நேர்க்கிரயங்களாவன**

1. நேர்ப் பொருட்கள் - (Direct cost)
2. நேர்க் கூலிகள் - (Direct wages)
3. நேர்ச் செலவுகள் - (Direct expenses)

**நேரில் கிரயங்களாவன**

1. நேரில் பொருட்கள் - (Indirect materials)
2. நேரில் கூலிகள் - (Indirect wages)
3. நேரில் செலவுகள் - ( Indirect expenses)

இவற்றில் அனைத்து நேர்க் கிரயங்களையும் உள்ளடக்கியது முதற் கிரயம் அல்லது மூலக் கிரயம் (Prime cost) எனப்படும். அனைத்து நேரில் கிரயங்களின் கூட்டுத்தொகை யானது மேந்தலைக் கிரயம் (Overhead cost) எனப்படும். இத்தகைய மேந்தலைச் செலவுகளை "உற்பத்திச் சில்லறைச் செலவுகள் அல்லது பிற்சேர்க்கைச் செலவு (Supplementary cost) அல்லது உற்பத்தியல்லாச் செலவு (Non-productive cost) எனப் பல்வேறு பிற பெயர்களால் குறிப்பிடப்படும்.

உற்பத்தி அலகுடன் அல்லது கிரய நிலையத்துடன் நேர்க் கிரயங்கள் நேரடியாக இனங்காணக்கூடியவையாகும். ஆனால் மேந்தலைச் செலவுகள் உற்பத்தி அலகுகளுடன் அல்லது கிரய நிலையங்களுடன் நேரடியாக இனங்காணப்பட முடியாதவை ஆகும்.

**மேந்தலைக் கிரயம்**

மேந்தலைக் கிரயங்கள் தொடர்பாகப் பல்வேறு வரைவிலக்கணங்கள் உள்ளன. அவற்றில் சில தரப்பட்டுள்ளன.

1. நேரில் பொருட்கிரயம், நேரில் கூலிக்கிரயம், நேரில் செலவுகள் என்பவற்றின் கூட்டு மொத்தத் தொகையே மேந்தலைக் கிரயமாகும். (CIMA London)

2. ஒரு குறித்த உற்பத்தி அலகுடன் நேரடியாக இனங்காணப்பட முடியாத வணிகத் தாபனத்தினது செயற்பாட்டுக்கிரயங்களே மேந்தலைக் கிரயமாகும் (Blocker and weltmer)
3. தனிப்பட்ட கிரய அலகுகளின் உருவாக்கத்திலிருந்தான பெறுபேறாக அல்லாமல் ஏற்படும் கிரயங்களே மேந்தலைக்கிரயமாகும். (Harper)

**நேரில் பொருட்கிரயம் - நேர்ப் பொருட்கிரயம் வேறுபாடு**

உற்பத்திக்குப் பயன்படுத்துவதும் இறுதி உற்பத்தியின் பகுதியாகவும் அமைவதுமான பொருட்களின் கிரயம் நேர்ப்பொருட் கிரயமாகும். இறுதி உற்பத்திப் பொருளில் அடங்காத உற்பத்திக்கு உதவியான ஏனைய பொருட்கள் தொடர்பான கிரயங்களே நேரில் பொருட்கிரயமாகும்.

உதாரணம் :

அச்சகம் ஒன்றில் நூல்களின் தயாரிப்பில் பயன்படுத்தப்படும் கடதாசி, வர்ணம் என்பன நேர்ப்பொருட் கிரயமாகும். இந்நூலைக்கட்டுவதற்கு பயன்படுத்தப்படும் நூல் நேரில் பொருட்கிரயமாகும்.

**நேரில் கூலிக்கிரயம்**

உற்பத்தித்தாபனம் ஒன்றில் வேலையில் ஈடுபட்டுள்ள போதிலும், மூலப்பொருட்களின் கட்டமைப்பை அல்லது தன்மையை மாற்றி உற்பத்தி செய்யும் வேலையில் நேரடியாக ஈடுபட்டிராத ஊழியர்களுக்காகக் கொடுக்கப்படும் சம்பளம் நேரில் கூலிக்கிரயம் ஆகும்.

உதாரணம் :

தொழிற்சாலை மேற்பார்வையாளர் சம்பளம் தொழிற்சாலை எழுதுவினைஞர் சம்பளம் பரிசோதகர் சம்பளம்.

**நேரில் செலவுகள்**

குறித்த உற்பத்தி அலகுக்கென நேரடியாகத் தொடர்புபடாத முழு நிறுவனத்திற்குரிய செலவுகள நேரில் செலவுகள் ஆகும்.

உதாரணம் :

வாடகை, வரிகள், கணக்காய்வுக் கட்டணம், எழுது பொருட்கள்.

**மேந்தலைக் கிரயங்களை பங்கீடு செய்வதன் தேவைப்பாடு /அவசியம்**

நேர்ப் பொருட் கிரயம், நேர் கூலிக் கிரயம் என்பன உற்பத்தியின் குறித்த அலகுக்கு அல்லது குறித்த கிரய நிலையத்திற்கென இனங்காணக்கூடியவை ஆகும். ஆகியவற்றை இலகுவாகவும் நேரடியாகவும் குறித்தொதுக்கல் செய்ய முடியும். ஆனால் மேந்தலைக் கிரயமானது எவ்வுற்பத்தி அலகுக்கானவை எக்கிரய நிலையத்துக்குரியவை என எளிதாக இனங்காணப்பட முடியாதவையாகும். ஆகையால் மேந்தலைக் கிரயங்களை ஏதோவோர் ஒழுங்கு முறைப்படி ஒவ்வொரு அலகுக்கும் அல்லது கிரய நிலையங்களுக்கும் பங்கீடு செய்யவேண்டிய அவசியம் ஏற்படுகின்றது.

**மேந்தலைக்கிரயங்களை வகைப்படுத்தல்**

- ஓர் உற்பத்தித் தாபனத்தின் மேந்தலைக் கிரயங்களைத் தொழிற்பாட்டு (Function) அடிப்படையில் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. உற்பத்தி மேந்தலைகள் - Production overheads
2. நிர்வாக மேந்தலைகள் - Administration overheads
3. விற்பனை விநியோக மேந்தலைகள் - Selling and distribution overhead

- நடத்தை / பண்பு அடிப்படை - **Behaviour**

1. நிலையான மேந்தலைகள்
2. மாறும் மேந்தலைகள்
3. குறைமாறும் மேந்தலைகள்

- கட்டுப்படுத்தல் அடிப்படை - **Controllablity**

1. கட்டுப்படுத்தக் கூடிய மேந்தலை
2. கட்டுப்படுத்த முடியாத மேந்தலை

- துறை ரீதியான அடிப்படை - **Department**

1. உற்பத்திப் பகுதி மேந்தலை
2. சேவைப் பகுதி மேந்தலை

- மூலகங்கள் அடிப்படை - **Elements**

1. நேரில் பொருள்
2. நேரில் கூலி
3. நேரில் செலவு

**மேந்தலைக் கிரயத்தை உற்பத்திக்கு தாக்கல் செய்யும் படிமுறை Steps in overhead distribution**

1. மேந்தலைக் கிரயங்களைத் திரட்டுதல், வகைப்படுத்தல் (Collection and classification of overheads)
2. மேந்தலைக் கிரயங்களை ஒதுக்குதல் / பகிர்தல் (Allocation and apportionment of overhead)
3. மேந்தலைக் கிரயங்களை மீளப்பகிர்தல் (Reapportionment of overhead)
4. மேந்தலைகள் உள்ளடக்குதல் அல்லது உறிஞ்சுதல் (Absorption of overhead)

**மேந்தலைக் கிரயங்களை திரட்டுதலும் வகைப்படுத்தலும்**

உற்பத்தி மேந்தலைக்கிரயங்களை இலகுவாக வகைப்படுத்துவதற்காக அவற்றுக்கு குறியீட்டு இலக்கங்கள் (code number) முற்கூட்டியே தீர்மானிக்கப்படும். மேந்தலைக் கிரயத்தினுள் உள்ளடங்குகின்ற பல்வேறுபட்ட உருப்படிகளை இனங்கண்டு ஒன்று சேர்ப்பதே மேந்தலைகளைத் திரட்டுதல் எனப்படும். இக்கிரயங்களைத் திரட்டுவதற்குப் பின்வரும் மூல ஆவணங்களைப் பயன்படுத்தப்படும்.

- பட்டியல்கள் (Invoice): நேரில் செலவுகளைத் திரட்டுவதற்கு
  உ-ம்: மின்சாரச்சிட்டை, நீர்வரிச்சிட்டை, வாடகை, காப்புறுதி

- களஞ்சியக் கோரிக்கைப் பத்திரம் (Stores requisition): நேரில் மூலப் பொருட்களின் தரவுகளைப் பெற
- சம்பளப் பட்டியல் /கூலிப் பகுப்பாய்வுத் தாள் (Wages analysis sheet): நேரில் கூலிகளின் தரவுகளைப் பெற

நாட்குறிப்புக் கைச்சாத்துக்கள்:- காசல்லாத உருப்படிகளையும் சீராக்கவேண்டிய உருப்படிகளையும் திரட்டுவதற்கு (தேய்மானம், அட்டுறு வாடகை, மின்சாரம் மேந்தலைக் கிரயங்களை ஒதுக்குதல்.

**மேந்தலைக் கிரயங்கள் ஒதுக்குதல் (Allocation of overhead costs)**

மேந்தலைக் கிரயங்களில், எந்தக்கிரய நிலையத்துக்கு அல்லது கிரய அலகுக்கு உரியவை எனத் தெளிவாக இனங்காணக்கூடிய உருப்படிகள் இருப்பின், அவற்றை அக்கிரய நிலையத்துக்கென / கிரய அலகுக்கென ஒதுக்குதல் மேந்தலை ஒதுக்குதல் எனப்படும் இதன் சிறப்பம்சம் யாதெனில், குறித்த கிரய உருப்படியானது பங்கீடு செய்யப்படாது ஒரு கிரய நிலையத்துக்கென அறியக்கூடியதாக இருப்பதாகும்.

**உதாரணம்:** குறித்த நிலையத்துக்குரிய நேரில் கூலி

**மேந்தலைக் கிரயப் பகிர்வு (Apportionment of overhead costs)**

எக்கிரய நிலையத்துக்கு கிரய அலகுக்கு உரியவை என இனங்காண முடியாத மேந்தலைக்கிரயங்களை ஏதேனும் ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படையில் உரிய கிரய நிலையங்களுக்கு கிரய அலகுக்கு பகிரப்படல் மேந்தலைப் பகிர்வு எனப்படும்.

**உதாரணம்:** இறைகள் என்பது முழு நிறுவனத்துக்குமாக அறவிடப்பட்டாலும் கிரயக் கணிப்பின்போது ஒவ்வொரு கிரய நிலையத்துக்கும் பங்கிடப்பட வேண்டும். இது பொதுவாக நிலப்பரப்பின் அடிப்படையில் பகிரப்படும்.

**மேந்தலைப் பகிர்வுக்குரிய கட்டங்கள்**

*1. முதலாம் கட்டப் பகிர்வு/பங்கீடு* **(Primary distribution)**

மேந்தலைக் கிரயம் முதலாவதாக சம்மந்தப்பட்ட கிரய நிலையங்களுக்கு இடையில் பகிரப்படல் முதற் கட்டப் பகிர்வு எனப்படும். இங்கு உற்பத்தி கிரய நிலையத்துக்கும், சேவைக்கிரய நிலையத்துக்கும் இடையில் பங்கிடப்படும்.

**2.** *இரண்டாம் கட்டப் பகிர்வு/பங்கீடு* **(Secondary distribution )**

மேந்தலைக் கிரய உருப்படிகள் முதற் கட்டப் பகிர்வின் மூலம் உற்பத்திக் கிரய நிலையத்துக்கும் சேவைக்கிரய நிலையத்துக்கும் பங்கிடப்படும். உற்பத்திக் கிரய நிலையம் தனது உற்பத்திப் பொருளின் மொத்தக் கிரயத்தைக் கணிப்பதற்கு மூலச் செலவுடன் (முதற் கிரயம்) அதனுடன் தொடர்புடைய உற்பத்தி மேந்தலைகளைக் கூட்ட வேண்டும். இதனால், சேவைக்கிரய நிலையத்தினால் சேர்க்கப்பட்ட மேந்தலைச் செலவு உற்பத்திக் கிரய நிலையங்களுக்கிடையில் மீளப் பங்கிட வேண்டும். மிகுதித் தொகை இருப்பின் நிருவாக கிரய நிலையத்திற்கும் பங்கிடப்படும். இதனை மேந்தலைகளின் இரண்டாம் கட்டப் பகிர்வு என்பர்.

**Reference:**


1. K. கஜேந்திரா, "கிரயக் கணக்கீடு - பாகம் 3"
2. S.K. பிரபாகரன், "கிரயக் கட்டுப்பாடு"

# பேண்தகு அபிவிருத்தி இலக்குகள்

## Sustainable Development Goals (SDG)

### ஒரு சர்வதேச ரீதியான பார்வை

திரு. எஸ். மஜிந்தன்
B.Sc (Hons) (Agri)
ஆசிரியர்
யா/ திருக்குடும்ப கன்னியர்மடம்
தேசிய பாடசாலை
யாழ்ப்பாணம்



பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் எனப்படுபவை 2015ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையினால் உலகிலுள்ள 193 நாடுகளின் ஒத்துழைப்புடன் "நமது உலகத்தை உருமாற்றுதல்" எனும் தொனிப்பொருளில் அடுத்து வரும் 15 ஆண்டுகளில் அதாவது 2015தொடக்கம் 2030 ம் ஆண்டு காலப்பகுதியில் உலகளாவிய ரீதியில் எல்லாத் துறைகளிலும் எட்டப்பட வேண்டிய வளர்ச்சிகளை உள்ளடக்கியவாறு உருவாக்கப்பட்ட குறிக்கோள்கள் ஆகும். இவ் இலக்குகுள் 17 அடையாளம் காணப்பட்டு இவற்றை அடைவதற்கு ஒவ்வொரு இலக்கு களும் பல உப இலக்குகளாகப் பிரிக்கப்பட்டு ஒட்டுமொத்தமாக 169 உப இலக்குகளும் உருவாக்கப்பட்டுள்ளது. இலங்கை இவ் இலக்குகளை அடைவதற்கான சர்வதேச ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளதுடன் தற்போது அவற்றை நடைமுறைப்படுத்தவும் செய்கிறது. இலங்கை தற்போது அபிவிருத்தியடைந்துவரும் நாடாதலால் குறிப்பிட்ட அனைத்து இலக்குகளை டையமுடியாவிட்டாலும் பெரும்பாலான அடிப்படை இலக்குகளை அடைய முழு முயற்சியுடன் ஈடுபட்டு வருகின்றது.

மேற்குறிப்பிட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகளில் எட்டாவது இலக்காக கௌரவமான வேலையும் பேண்தகு பொருளாதார வளர்ச்சியும் எனும் இலக்கு குறிப்பிடுகிறது. இவ்விலக்கு மூலம் ஏற்றுக்கொள்ளக்கூடிய உள்ளீர்க்கப்பட்ட பேண்தகு பொருளாதார வளர்ச்சி, பூரண உற்பத்தித் திறனுடைய வேலைவாய்ப்புக்கள் மற்றும் அனைவரும் கௌரவமான தொழில் காணப்பெற்றுக் கொள்வதை மேம்படுத்தல் என்பவற்றை அடைய எதிர்பார்க்கப்படுகிறது. இவ்விலக்கை அடைவதன் மூலமாகவே மைய அபிவிருத்தி இலக்கான வறுமையை ஒழித்தல் சாத்தியமாகையால் அனைத்து நாடுகளாலும் இது பிரதானமானதொன்றாகப் பார்க்கப்படுகிறது. அத்துடன் உழைப்புக்கேற்ற நிலையான நல்ல ஊதியத்தை தரும் வேலைவாய்ப்பை வழங்குதலே வறுமை ஒழிப்பை அடைய வழிவகுக்கும். இன்று உலக சனத்தொகையான 7.6 மில்லியன் மக்களில் 2.2 மில்லியன் மக்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்றனர். அதாவது அம்மக்கள் நாளாந்த வருமானமாக இரண்டு டொலர்களிலும் குறைவான வருமானத்தைப் பெறுகின்றனர். அத்துடன் சர்வதேச தொழிலாளர் சம்மேளனம் (ILO) உலக அளவில் 204 மில்லியனிலும் அதிகமான மக்கள் வேலையின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனக் கூறுகிறது. இத்தொகையினுள் கணிசமான இளைஞர்களும் யுவதிகளும் உள்ளடங்கு கின்றனர். இவர்களும் புதிதாக வரும் தொழிற்படைக்கு வழங்குவதற்கு 2016 2030 ஆண்டு

காலப்பகுதியில் 470 மில்லியன் வேலைவாய்ப்புக்கள் புதிதாக உருவாக்கிக் கொடுக்கப்பட வேண்டும். அதாவது ஆண்டு தோறும் 30 மில்லியன் வேலைவாய்ப்புக்களை வேலை செய்யும் வயதெல்லையைக் கொண்ட சனத்தொகைக்கு வழங்கவேண்டியுள்ளது. மேற்கூறிய தொழில்வாய்ப்புக்கள் கிடைத்தாலும் நாடும் மக்களும் வறிய நிலையிலிருந்து விடுபட்டு சபீட்சமான அபிவிருத்தியை நோக்கிப் பயணிக்க மேலும் சில விடயங்களில் அவதானம் செலுத்த வேண்டியுள்ளது. அதாவது ஏறத்தாழ 780 மில்லியன் வேலையிலுள்ள ஆண்களும் பெண்களும் பெறும் வருமானம் அவர்களின் பொருளாதார நிலையையும் நமது குடும்பத்தை வறுமையிலிருந்து மீட்டெடுக்கவும் போதாதுள்ளது. மேலும் பெண்களை ஆண்களுக்குச் சமமாக வேலைவாய்ப்புக்களைப் பெறவும் தொழிற்சூழலில் பால் சமத்துவத்தைப் பேணவும் வேண்டியுள்ளது.

மக்கள் அதிகளவு உற்பத்தித்திறனுடனும் நாட்டின் வளர்ச்சியல் சிறந்த பங்களிப்பையும் வழங்கும்போது சமூகம் கூடியளவு பிரதிபலன்களைப் பெற்றுக்கொள்ள முடிவதுடன் உலகமயமாதலுடன் கூடிய வறுமையைக் குறைக்க முடியும். பேண்தகு அபிவிருத்தி இலக்கு எட்டாவதின் பிரதான கருத்தான கௌரவரான வேலை எனப்படும். ஒவ்வொருவருக்கு தொழலி வாய்ப்புக்கான சந்தர்ப்பங்களைப் பெற்றுக்கொள்ளுதலும், அத்தொழில் உற்பத்தித்திறன் மிக்கதாகவும், ஏற்றுக்கொள்ளக்கூடிய வேதனத்தை வழங்குவதாகவும் வேலைத்தளத்தில் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் தொழிலாளர் குடும்பங்களுக்கு சமூகப்பாதுகாப்பைப் பெற்றுக்கொடுத்தலும் தொழில் செய்யும் நபரது தனியான விருத்தியிலும் சமூகத்துடன் அவரை ஒன்றிணைக்கக்கூடியவாறு அமையும், வேலைத்தளத்தில் ஆண் - பெண் சமத்துவத்தும் பேணப்படும் விதத்திலும் இருத்தல் என்பவனவற்றை உள்ளடக்கியதாகும்.

கௌரவமான வேலை மற்றும் பேண்தகு பொருளாதார வளர்ச்சி எனும் இலக்கு 12 அடைவுட்டங்களையும் 17 குறிகாட்டிகளையும் கொண்டுள்ளது. அவற்றுள் பிரதானமானவையாக:

1. தேசிய நிலைமைகளுக்கேற்ப தனிநபர் பொருளாதார வளர்ச்சியைப் பேணுதல் விசேடமாக துறை அபிவிருத்தியுடைய நாடுகளில் மொத்தத்தேசிய உற்பத்தியின் 7 சதவீத வளர்ச்சியை வருடாந்தம் பேணிச் செல்லல்.

2. பல்வகைமை, தொழல்நுட்ப வளர்ச்சி மற்றும் புதிய கண்டுபிடிப்புக்களினூடாக உயர்மட்டத்திலான பொருளாதார உற்பத்திப் பெருக்கத்தை பெற்றுக்கொள்ளல்.

3. 2030ம் ஆண்டளவில் உற்பத்தி மற்றும் நுகர்வில் உலகளாவியரீதியில் வளங்களின் வினைத்திறன் வளர்ச்சியும் பொருளாதார அபிவிருத்தியில் சூழல் மாசடைதலை முகாமை செய்தலும்.

4. தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் பாதுகாப்பான தொழிற் சூழலை மேம்படுத்தல் என்பன கோடிட்டுக் காட்டப்படுகின்றது.

கௌரவமான வேலை தொடர்ச்சியாக இல்லாதிருந்தால் ஜனநாயக சமூகத்தின் சமூக இணக்கப்பாடு தேய்வடைவதற்கு வழிகோலுகிறது. எனவே இப்பிரச்சனையை

தவிர்ப்பதற்கு பல்வேறு பரிந்துரைகள் வழங்கப்படுகின்றது. அவையாவன இளைஞர் - களுக்கு சிறந்த வாய்ப்புக்களை வழங்கி அவர்கள் கண்ணியமாக தொழில் பெறத்தக்கவாறு கல்வியில் முதலீட்டை மேற்கொள்வதும் உச்ச தரத்துடனான தொழில்ப் பயிற்சியை வழங்குவதற்கு இளைஞர்களது திறன்களை விருத்தி செய்தலும் அவர்களுக்கு வழிகாட்டல் ஆலோசனைகளை வழங்குதல், தொழிற் சந்தையின் கேள்விகளை ஈடுசெய்யும் விதத்தில் கல்விக்கட்டமைப்பில் மாற்றங்களைக் கொண்டுவருதல், வெலையின் விதத்தை கருத்தில் கொள்ளாது தொழிலாளர்களுக்கு தொழில் மூலமான சமூகப் பாதுகாப்பையும் அடிப்படை வசதிகளையும் வழங்குதல், உற்பத்தித்திறன் மிக்க வேலைச் சூழலைப் பெற்றுக்கொள்ள பால்நிலை, வருமானஅளவு, பொருளாதார சமூகப் பின்னணி என்பன வற்றைப் பாராது சரிசமமாக தொழிலாளர்களை நடத்துதல் என்பனவாகும். அத்துடன் நாட்டின் அரசும் பேண்தகு பொருளாதார வளர்ச்சியை அடையும் பொருட்டு தொடர்ச்சியாக இயங்குதன்மை கொண்ட நீடித்துநிலைத்த, புதிய முயற்சியும் கூடிய மக்கள் நலநன மையப்படுத்திய பொருளாதாரக் கொள்கையை வடிவமைத்துச் செயற்படுத்துவதும், மகளிருக்கான பொருளாதார வலுவூட்டலை வழங்குதல், இளைஞருக்கான தொழில் வாய்ப்புக்களை இற்றைப்படுத்துதல் போன்றவற்றில் ஆக்கபூர்வமாக ஈடுபடவேண்டும். மேலும் உள்ளூர் அதிகார அமைப்புகளும், சமூகங்களும் தமக்கான நகரங்களையும் மனிதக் குடியேற்றங்களையும் ஏற்படுத்தி சமூக இணைப்பையும் தனிநபர் பாதுகாப்பையும் வழங்கி புத்தாக்கங்களையும் வேலை வாய்ப்பையும் தூண்டும் வழங்குனராக செயற்பட வேண்டும்.

இலங்கையைப் பொறுத்தவரை சமூகக் குறிகாட்டிகளில் வளர்ந்த நாடுகளுக்கு இணையாக காணப்படுகின்றபோது பொருளாதாரம் சார்ந்த நிலைகளில் எட்டப்பட வேண்டிய இலக்குகள் இன்னும் காணப்படுகின்றது. எமது நாட்டின் வேலையின் வீதம் கடந்தசில வருடங்களாக மொத்த சனத்தொகையின் 3% குறைவாகவே காணப்படு கின்றது. எனினும் தொழற்படையின் பங்கேற்பு வீதம் 54% ஆக உள்ளமை கவலை தரும் விடயமாகும். அதாவது தொழில் செய்யும் வயதெல்லையினுள் உள்ளமை கவலை தரும் விடயமாகும். அதாவது தொழில் செய்யும் வயதெல்லையில் உள்ளோரின் அரைவாசியள விலான நபர்களே தொழில் செய்கின்றனர். மேலும் சிறுவர் தொழிலாளர்களின் அளவைப் பொறுத்தவரை நாட்டிலுள்ள சிறுவர் சனத் தொகையின் 1% இலும் குறைவாகவே உள்ளதுடன் அபிவிருத்தியின் பொருட்டு எதிர்வரும் **2025** ஆம் ஆண்டுக்குள் சிறுவர் தொழிலாளர்களை இல்லாது செய்தல் எனும் இலக்கை அரசு நிர்ணயித்துள்ளது. நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கும் மலையக தோட்டத்தொழிலாளிகளின் வருமானம் நாளொன்றுக்கு 5 டொலர்களிலும் குறைவாக உள்ளது. இத்தொகை அவர்களின் வாழ்க்கைச் செலவுக்கும் தங்கிவாழ்வோருக்கும் போதாதுள்ளது. மேலும் இலங்கையிலிருந்து சென்று மத்திய கிழக்கில் தொழில்புரியும் 18 மில்லியன் தொழிலாளர்கள் நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்தியில் பிரதான பங்காளராக உள்ளனர். அவர்கள் தொழிற்திறன் குறைவான நிலையில் செல்லுதல் குறிப்பாக பணிப்பெண்களாகச் செல்வோர் செல்லும் நாடுகளில் பாரிய பிரச்சனைகள் எதிர்கொள்வது செய்திகள் வாயிலாக அறிந்த ஒன்றே. எனவே அவர்களுக்கு சேவை வழங்கும் நிறுவனங்கள் ஒழுங்கு முறைப்படுத்தல், செல்லும் தொழிலாளருக்கு தொழில்சார் பயிற்சி வழங்கி அனுப்புதல் அவர்களது குடும்பங்களை கவனித்தல் குறிப்பாக குழந்தைகள் முதியோரின் சமூகப்பாதுகாப்பை உறுதிசெய்வதும் அவசியமாகிறது. மேலும் வளர்ந்து வரும் சுற்றுலாத்துறையில் புதிய வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்த வேண்டியுள்ளது.

எமது நாட்டின் பெண்களது வேலை ஆண்களின் வேலையின்மையிலும் இரண்டு மடங்காக உள்ளது. மேலும் தொழிலின்மையின் பால்ரீதியான வேறுபாட்டைக் குறைப் பதற்கும் பெண்களின் பங்கேற்பை அதிகரிக்கவும் நெகிழ்வுத்தன்மையுடனான தொழில் வாய்ப்புக்களை பெண்களுக்கு வழங்கவேண்டும். அதாவது அவர்கள் வீட்டிலிருந்தோ அல்லது பகுதிநேர வேலைபாய்பபுக்களை வழங்கவேண்டும். அத்துடன் வீட்டிலுள்ள குழந்தைகள், முதியோரைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பும் அவர்களுக்கு இருப்பதால் தொழிற்சூழலில் நெகிழ்வுப் போக்குடனான அணுகுமுறை அவசியம்.

மேலும் இளைஞர் வேலையின்மையும் நாட்டின் அபிவிருத்திக்கு சவாலாக உள்ளது. இதற்கு தொழிற்துறை சார்ந்த திறன்கள் குறைந்திருப்பது காரணமாகும். குறிப்பாக தொடர்பாடல், பிரச்சினைதீர்த்தல், ஆங்கில மொழியறிவு, கணினி அறிவு என்பவற்றை மேலும் கூட்டி தொழில் சந்தையின் இக்கேள்விகளை ஈடுசெய்ய வேண்டியுள்ளது. நீடித்த பொருளாதார வளர்ச்சிக்கு கைத்தொழில் மற்றும் சேவைத்துறைகளில் வேலைவாய்ப் புக்களை அதிகரிக்க வேண்டியுள்ளது. இதனாலேயே தற்போதைய அரசு 10 லட்சம் புதிய வேலைவாய்ப்புக்களை உருவாக்கும் திட்டத்தை தேசிய அபிவிருத்திக் கொள்கையின் பகுதியாக அமுல்படுத்தி வருகின்றது. இத் தொழில் வாய்ப்புக்களால் சுயமுயற்சியாளர் களை ஊக்குவித்தல், போதுமான முதலீட்டுமூலம் உயர்ந்த தரம் கொண்ட கௌரவமான வேலைவாய்ப்புக்களை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது. தொழில் செய்ய தேவையான மென்திறன்களை வளர்த்துக் கொள்ளக்கூடியவாறு கல்வித்துறையில் அமைப்பில் மாற்றங்கள் கொண்டுவரப்படுகின்றன. இதன் பகுதியாகவே க.பொ.த உயர்தரத்தில் தொழினுட்பப் பாடப்பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. வேலையற்ற இளைஞர்களுக்கு தொழற்பயிற்சிகளை வழங்குவதும் பாடசாலை இடைவிலகியோருக்கு தொழிற்பயிற்சி மற்றும் வழிகாட்டலை வழங்குதல் அவசியமாகும்.

ஒருநாடு பேண்தகுரீதியில் வளர்ச்சியை பெறுதலே அந்தந்த நாட்டிலுள்ள அனைத்து பொருளாதார நிலைகளிலும் பிரிவினருக்கும் வளர்ச்சியின் அனுகூலங்களை அனுப - விக்கும் நிலை ஏற்படுத்தும். பசுமையான பொருளாதாரத்தையும் அபிவிருத்தியையும் எட்டுதல் அனைத்து நாடுகளுக்கும் பொதுவானதெனினும் பொருளாதார குறிகாட்டிகளை நல்ல நிலையில் வைத்திருப்பதும் ஏற்கனவே சிறப்பாக உள்ள சமூக குறிகாட்டிகளுடன் இணைந்து வளர்ந்த நாடாக மாறும் எமது அனைவரினதும் அவாவை நிறைவேற்றவும் கௌரவமான வேலையும் பேண்தகு பொருளாதார வளர்ச்சியும் எனும் இலக்குகளை நாம் அனைவரும் பொறுப்பேற்றுச் செயற்படுத்த வேண்டும்.

# இளம் முயற்சியாளனுடன் ஒரு சந்திப்பு!

திரு. பா. கஜென்
B.Com (Hons)MM spl.Dip.in.Edu.
ஆசிரியர்
திருக்குடும்ப கன்னியர் மடம்
தேசிய பாடசாலை
யாழ்ப்பாணம்



க.பொ.த சாதாரண தரத்தில் 8A,C சித்திகள் பெற்று மருத்துவராக வேண்டும் என்ற உயர்ந்த நோக்கோடு உயர்தரத்தில் உயிரியல் பிரிவில் கல்வி கற்றுக்கொண்டு இருந்த காலத்தில் புற்று நோயால் பாசமான தந்தையை இழந்த காரணத்தால் வறுமைக்குள் விழுந்துபோன குடும்பத்தை எவ்வாறு காப்பாற்றுவது என்ற யோசனையால் கல்வியில் கவனத்தை செலுத்த முடியாது இருந்து பின் அதனைக் கைவிட்டு தொழிலொன்றுக்கு சென்றே ஆக வேண்டும் என்ற நிலை ஏற்பட்டு கணனித் துறையில் இருந்த திறனை நம்பி தற்போது உலகையே வியப்பில் ஆழ்த்தி அதிசயங்கள் புரிந்து கொண்டிருக்கும். Animation | Visual Effect இல் கைதேர்ந்த கலைஞனாக வளர்ந்து மில்லியன் ரூபாய்களில் வருமானம் பெறும் ஒரு முயற்சியாளனாக பரிணமித்துள்ள இவரது துறைசார் அனுபவம், முயற்சி என்பன எமது மாணவர்களுக்கும் ஒரு உந்து சக்தியை வழங்கும் என்ற எதிர்பார்ப்போடு இந்நேர்காணல் இங்கு பிரசுரமாகிறது.



கே:- க.பொ.த. சாதாரண தரத்தில் 8A,C பெற்ற நீங்கள் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தோற்றாமைக்கு என்ன காரணம்?

ப:- உயிரியல் துறையில் சிறப்பாக செயலாற்றிக் கொண்டிருந்தேன். ஒரு வைத்தியராகத் தான் வர வேண்டும் என்ற எண்ணம் எனக்குள் இருந்து கொண்டே இருந்தது. ஆனால் எனது தந்தைக்கு ஏற்பட்ட புற்றுநோயும் பின்னர் அவர் படுத்த படுக்கையாகி வைத்தியர்களால் கைவிடப்பட்டு ஏற்பட்ட திடீர் மறைவும் என்னை மிகவும் வருத்தியது. பொருளாதாரச் சிக்கலிலிருந்து குடும்பத்தை மீட்க வேண்டிய பொறுப்பும் எனது கல்வி மீதான சிந்தனையை சிதறடித்தது. கட்டாயமாக வேலை செல்ல வேண்டிய நிலையையும் அது ஏற்படுத்தியது.

கே:- சிறு வயதிலிருந்தே கல்வியில் மிகவும் ஆர்வமாக செயற்பட்ட உங்களையும் உங்கள் குடும்பத்தையும் உங்களது தந்தையின் இழப்பு எவ்வாறு பாதித்தது எனக் கூறமுடியுமா?

ப:- சாதாரண நடுத்தர நிலையில் இருந்த எனது குடும்பத்தை அவரது மறைவு மன நிலையளவில் மட்டுமல்லாது பொருளாதார நிலையிலும் மிகக்கொடூரமாக பாதித்தது. குடும்பத்தில் மூத்த மகன் என்ற ஸ்தானத்தில் இருந்த எனக்கு இது மேலும் எனது தம்பி, தங்கையையும் தாயையும் எவ்வாறு காப்பாற்றுவது என்ற விடைதெரியாத வினாவை ஏற்படுத்திவிட்டிருந்தது. ஒரு வேளை உணவிற்கே திண்டாட வேண்டிய நிலை ஏற்பட்டதை என்னால் என் வாழ்நாளில் என்றைக்குமே மறக்க முடியாது. தந்தை இருந்தபோது அவரின் தயவில் தான் நாம் வாழ்ந்துகொண்டிருந்தது அவரின் மறைவு எனக்கு வலியோடு உணர வைத்தது. வீட்டு நிலைமை என்னை பாடசாலை செல்வதை தடுத்தது. வேலையொன்றிற்கு சென்றேயாக வேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டமையால் ஒரு கணனி அச்சக நிறுவனம் ஒன்றை நாடினேன். அங்கு எனக்கு ஒரு வேலை கிடைத்தது.

கே:- தற்போது Animation | Visual Effect (VFX) துறையில் சாதித்துக் கொண்டிருக்கிறீர்கள். இத்துறையைத் தெரிவுசெய்யக் காரணம் என்ன?

ப:- தரம் 7 இல் கல்வி கற்றுக்கொண்டிருந்தபோதே எனக்கு இத்துறையில் இயல்பாவே ஆர்வம் ஏற்பட்டது. ஆங்கிலத் திரைப்படங்களில் வரும் தத்ரூபமான (Graphics) காட்சிகளை எவ்வாறு ஆக்குகிறார்கள் என பிரமிப்போடு யோசிப்பேன். நானும் அவ்வாறான எடிட்டிங் வேலைகளை ஆராய்ந்து எனது அப்போதைய அறிவிற்கேற்ப செய்து பார்த்திருக்கிறேன். இயல்பாகவே இத்துறை மீது மிகுந்த ஆர்வம் ஏற்பட்டது அதுவே பின்பு எனது முழுநேர சொந்த தொழிலாக அமைந்துவிட்டது.

கே:- Animation | Visual Effect (VFX) என்பது என்ன? சற்று விளக்கமாக கூறமுடியுமா?

ப:- VFX என்பது Visual Effects என விரிவுபடும். உதாரணமாக "எந்திரன்" திரைப்படத்தில் வருகின்ற அனைத்து காட்சிகளுமே VFX தொழில்நுட்பத்தின் உதவியுடன் உருவானவை. சாத்தியமற்ற காட்சிகளை படமாக்குவதற்கு VFX இன்றியமையாததொன்றாகும். மனதிலுள்ள Creative கற்பனைகளுக்கு VFX இன் மூலம் அனைவரும் பார்க்கக்கூடிய வண்ணம் உயிரூட்டமளிக்கலாம். பொதுவாக *10* செக்கன் VFX காட்சிகளுக்கு சுமார் *1 / 2* மணித்தியாலங்கள் கூட செலவுசெய்ய நேரிடும். Animation | VFX | Motion Graphics என்பன கிட்டத்தட்ட ஒரே துறை சார்ந்த விடயங்களாகும். இதனைத் தமிழில் "அசைவூட்டம்" என்பர். இத்துறையில் மிளிர்வதற்கு இத்துறைசார் அறிவு மட்டுமல்லாது மிகுந்த பொறுமையும் கலையுணர்வும் தேவை. எனவே தான் மற்றவர்களைக் கவரக்கூடியதாக சிறப்பாக இதனைச் செய்ய முடியும்.

கே:- இத்துறைசார்பாக இலங்கையில் கேள்வி நிலைமை எப்படி உள்ளது? இவ்வகை யான சேவைகளை நாடும் வாடிக்கையாளர்கள் எந்தளவில் உள்ளனர்?

ப:- என்னைப் பொறுத்த மட்டில் இலங்கையில் இவற்றுக்கான வாய்ப்பு அல்லது கேள்வி மிகக் குறைவாகவே உள்ளது. கொழும்பு நகரை அண்டிய பகுதிகளில் இவ்வேலைகளுக்கான கேள்வி ஓரளவே காணப்படுகிறது. வெளிநாடுகளில் இவற்றுக்கு மிகுந்த கேள்வி காணப்படுகிறது. எனக்கு கிடைக்கும் கட்டளைகளில் பெருமளவில் வெளிநாடுகளிலிருந்தே கிடைக்கிறது. வெளிநாட்டு நாணயத்தில் சேவை வருமானம் பெறப்படுவதனால் எனக்கு மிகவும் அனுகூலமாகவும் உள்ளது.

கே:- உங்களுடைய அனிமேஷன் வேலைகளுக்கான கட்டளைகளைப் பெறுவதற்கான வாய்ப்புக்களை எவ்வாறு உருவாக்குகிறீர்கள்?

ப:- நான் எனது அனிமேஷன் வேலை மாதிரிகளை எனது இணையத்தளத்திலும், சமூக வலைத்தளங்களிலும் அவற்றைத் தேடுவோர்களுக்கு இலகுவாகச் சென்றடையக் கூடிய முறையில் பகிர்வதனால் இது சாத்தியமாகிறது. இதற்காக குறியீட்டு முறைகளைப் பயன்படுத்தி அதாவது # hashtag உடன் பகிர்வதால் அவற்றைத் தேடுவோர் இலகுவாக இதனைக் காண முடிகிறது.

கே:- சமூக வலைத்தளங்கள் உங்களின் இத்துறைசார் முன்னேற்றத்திற்கு எவ்வாறான பங்களிப்பை வழங்குகின்றன?

ப:- மிகப் பாரிய பங்களிப்பை வழங்குகின்றன. பலர் தற்போது இச்சமூக வலைத்தளங் களை பொழுதுபோக்கிற்காகவும் முறையற்ற விதத்திலும் பயன்படுத்துகின்றனர். ஆனால் அவை எனக்கு எனது இத்துறைசார் வேலைகளில் பெரிதும் துணைபுரிகின்றன. இவற்றினால் தான் நான் எனது வேலைகளை சர்வதேச அளவில் மேற்கொள்ள முடிகிறது. அவை எனக்கு ஒரு பெரிய வரப்பிரசாதங்களாகும்.

கே:- உங்களுக்கு முதன் முதல் வெளிநாட்டு மட்டத்திலான அனிமேஷன் வேலைக்கான வாய்ப்பு எப்போது கிடைத்தது? அது எவ்வாறு இருந்தது?

ப:- Instagram சமூக வலைத்தளத்தில் எனது அனிமேஷன் வேலைகளை பார்த்து வியந்த மலேசிய புகைப்பட வல்லுநர்கள் சிலர் தமது அனிமேஷன் project ஒன்றில் பணியாற்ற கேட்கவே, நான் அதை திறப்பட செய்து வழங்கியிருந்தேன். அது பின்பு அனைவரினதும் வரவேற்பிற்குரியதாய் அமைந்தது. அதன் விளைவாக அவர்களின் முழுச் செலவில் (Full sponsor) 2 மாத கால மலேசியாவிற்கான சுற்றுலா வாய்ப்பும் இலவசமாக கிடைத்தது.

மலேசியா செல்வதற்கு வாய்ப்பளித்த அனிமேஷன் வேலையை பார்வையிட:
YouTube - Kamachi Still Photography Story
மேற்குறித்த வீடியோ முற்றிலும் புகைப்படங்களை மாத்திரம் வைத்து உருவாக்கப் பட்டது என்பது இதன் தனித்தன்மையாகும். (2.5D Parallax Technique)

கே:- இத்துறைசார் விடயங்களை முறையாக கற்றுள்ளீர்களா?

ப:- இல்லை. அனைத்து அனிமேஷன் விடயங்களையும் (Self-Taught) சுயமாகவே இணையத்தில் தேடிக் கற்றுக்கொண்டேன். சில அனிமேஷன் நுணுக்கங்களை நானாகவே ஆராய்ந்து கண்டுபிடித்தும் உள்ளேன். இத்துறையில் தேடல் மிக முக்கியம்.

கே:- உங்களுடைய அனிமேஷன் வேலைகளுக்கான அங்கீகாரம் பற்றி ஏதாவது?

ப:- 2014 இல் ADIC (Sri Lanka) மற்றும் IOGT (Sweden) இனால் நடாத்தப்பட்ட

குறுந்திரைப்பட போட்டியில் VFX மூலம் உருவான எனது 40 செக்கன் குறுந்திரைப்படம் வவுனியா மாவட்டத்தில் முதலிடத்திலும், தேசிய மட்டத்தில் சிறந்த 25 படைப்புக்களில் ஒன்றாகவும் தெரிவுசெய்யப்பட்டு பரிசளிக்கப்பட்டது. குறித்த குறுந்திரைப்படத்தை நான் தொலைபேசி கமரா மூலமே ஒளிப்பதிவு செய்தேன் என்பது குறிப்பிடத்தக்கது.

கே:- வெளிநாட்டு சேவை பெறுநர்களிடமிருந்து நீங்கள் எவ்வாறு உங்கள் சேவைக் கட்டணத்தைப் பெறுகிறீர்கள்?

ப:- PayOneer போன்ற (மாஸ்டர் கார்ட்) மூலம் நான் எனது சேவைக் கட்டணங்களை காலதாமதமின்றி இலகுவாகவும் பாதுகாப்பாகவும் பெறுகிறேன்.

தங்களின் அனிமேஷன் வேலை மாதிரிகளைப் பார்வையிடுவதற்கான இணையத் தள லிங்குளைத் தரமுடியுமா?

ஆம், நிச்சயமாக. இதோ. www.tinyurl.com/rushanthan,
Social Medias @rushanthan93

கே:- தங்களின் தற்போதைய குடும்ப பொருளாதார முன்னேற்றம் எவ்வாறு உள்ளது?

ப:- (புன்னகையுடன்) ஆரம்பத்தில் 2012 இல் மாத வருமானமாக வெறும் 7000 ரூபாவையே பெற்றிருந்தேன். ஆனால் தற்போது ஒரு மாதத்திற்கு சராசரியாக அரை மில்லியன் வரை பெறுகிறேன்.

கே:- தங்களின் தொழில் முறைமை எப்படி உள்ளது? எந்தளவில் இதனை விருத்தி செய்துள்ளீர்கள்?

ப:- தினமும் புதுப்புது விடயங்களை கற்றுக்கொண்டிருக்கின்றேன். ஆரம்பத்திலிருந்து ஒரு வருடம் வரை நான் மட்டுமே வேலைசெய்து வந்தேன். தற்போது கட்டளைகள் அதிகமாகக் கிடைக்கப்பெறுவதனால் எனது தம்பிக்கும் இத்துறை பற்றி பயிற்சி வழங்கி அவரையும் இதில் இணைத்துள்ளேன். எனது வீட்டிலேயே இவ்வேலை களைச் செய்து வருகிறோம்.

கே:- நீங்கள் ஆரம்பத்தில் எண்ணியது போன்று ஒரு மருத்துவராக ஆகாதது பற்றி கவலைப்பட்டதுண்டா?

ப:- (சிரிப்புடன்) இதுவரைக்கும் இல்லை. அதை விட, மனதிற்கு பிடித்த விடயமே (Passion) எனது தொழிலாக (Profession) உள்ளது என்ற நிறைவான மகிழ்ச்சி தான் உள்ளது. எல்லாம் எனது தந்தையின் ஆசீர்வாதங்களே அன்றி வேறில்லை.

கே:- துன்பங்களையும் துயரங்களையும் கடந்து வெற்றிப் பாதையில் பயணிக்கும் நீங்கள் மாணவர்களுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?

ப:- தோல்விகள் என்பது எப்போதும் ஒருவருக்கு நிரந்தமானதல்ல என்பதை நான் நன்கு உணர்ந்திருக்கிறேன். தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் வாய்ப்புக்கான காத்திருப்புமே தோல்விகள், துயரங்களில் கைகொடுக்க வல்லன. எனவே இப்பண்புகளை நாம் வளர்த்துக்கொள்ள வேண்டும். வாழ்க்கையில் இழப்புக்கள் ஏற்படுகையிலும் சோர்ந்துவிடலாகாது. ஒரு வாசல் மூடப்பட்டாலும் மறு வாசல் ஒன்று எமக்காக எப்போதும் திறந்தே இருக்கும். வாழ்தலே சவாலாக உள்ள இக்காலத்தில் தன்னம்பிக்கை மற்றும் விடா முயற்சி என்பவற்றை மாணவர்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும் என அன்பாக வேண்டுகிறேன். Choose a job you

# இலங்கையில் அண்மைக்கால அபிவிருத்தித் திட்டங்கள்

செல்வி பிறியன்னா
தரம் 13 (A/L 2019)



**அறிமுகம்**

தெற்காசிய நாடுகளில் இலங்கை தனது அமைவிடம் காரணமாக பூகோளரீதியில் முக்கியத்துவம் பெறுகிறது. அபிவிருத்திய டைந்து வரும் நாடொன்றாக உள்ள இலங்கையில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள தோடு பல திட்டங்கள் உத்தேச நிலையில் உள்ளன. அண்மைக் காலங்களில் போர்ச் சூழல் ஓய்ந்துள்ளதோடு அபிவிருத்தி பற்றிய அரசாங்கத்தின் பார்வை அதிகரித்துள்ள தோடு பல வெளிநாடு களும் வெளிநாட்டுத் தனியார்துறையினரும் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள் வதில் ஆர்வங்கொண்டுள்ளனர். இவற்றின் விளைவாக அண்மைக் காலங்களில் மாத்தறை பெலியத்த ரயில் பாதை, தாமரைக் கோபுரம், மத்தள ராஜபக்ச விமான நிலையம், அதிவேக நெடுஞ்சாலைகள், துறைமுக நகரத்திட்டம், மாஹம்புர மகிந்த ராஜபக்ச துறைமுகம் போன்ற திட்டங்கள் இக்கட்டுரையில் ஆராயப்படுகின்றன.

**மாத்தறை பெலியத்த ரயில் பாதை**

மாத்தறை கதிர்காமம் ரயில் பாதை அமைப்பின் முதற்கட்டமாக பூர்த்தி செய்யப் பட்டுள்ள மாத்தறை பெலியத்த வரையிலான ரயில் பாதையின் வெள்ளோட்டம் 06 ஜனவரி 2019 காலை பத்து மணிக்கு போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் அர்ஜுன் ரணதுங்க தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. இந்த ரயில் பெலியத்தவிலிருந்து மாத்தறை நோக்கி சென்றது.

மாத்தறையிலிருந்து கதிர்காமம் வரை நடாத்தப்படவுள்ள ரயில் சேவை மூன்று கட்டங்களின் கீழ் முன்னெடுக்கப்படவுள்ளது. அதன் முதற்கட்டமாகவே மாத்தறையி லிருந்து 26 km தூரத்திலுள்ள பெலியத்த வரையில் ரயில் சேவை நடாத்தப்படும். இரண்டாம் கட்டமாக பெலியத்தவிலிருந்து அம்பாந்தோட்டை வரையிலும் 48 km தூரமும் மூன்றாம் கட்டமாக ஹம்பாந்தோட்டையிலிருந்து கதிர்காமம் வரையிலான 39 km தூரமும் ரயில் பாதை அமைக்கப்படவுள்ளது. மாத்தறையிலிருந்து பெலியத்த வரையிலான ரயில் சேவையை முன்னெடுப்பதற்காக சுமார் 278.2 மில்லியன் அமெரிக்க டொலர் செலவிடப்பட்டுள்ளது. இதற்கான நிதியை "சைனா எக்ஸிம வங்கி" வழங்கியுள்ளது.

மாத்தறை பெலியத்த ரயில் பாதையில் கெகதுர, பம்பருந்த வெவுருகன்னல, பெலியத்த ஆகிய நான்கு பிரதான ரயில் நிலையங்கள் உள்ளன. அதே போன்று பிலந்துவ மற்றும் வெஹரஹேன ஆகிய இடங்களுக்கு இடையே 2 உப ரயில் நிலையங்கள் உள்ளன. ரயில்

நிலையத்தில் மக்கள் சென்று வருவற்கு இலகுவாக மேம்பாலத்துக்கு பதிலாக சுரங்கப் பாதை அமைக்கப்பட்டுள்ளது. இலங்கையில் மிக நீளமான சுரங்க ரயில் பாதை மாத்தறை பெலியத்த பாதையிலே அமைக்கப்பட்டுள்ளது.

சுமார் 615 மீற்றர் நீளமான சுரங்கப் பாதையும் 268 மீற்றர் நீளமான இரண்டு சுரங்க பாதைகளும் இங்கு அமைந்துள்ளன. இலங்கையில் 559 மீற்றர் நீளமான சுரங்கப் பாதையே இருந்தது. இதனைத் தவிர பெலியத்த ரயில் பாதையில் மேம்பாலங்களும் அமைந்துள்ளன. நில்வள கங்கையூடாக செல்லும் இப்பாதையில் 12 பாலங்களும் 18 குறுக்கு வீதிகளும் 49 மதகுகளும் 23 ரயில் கடவைகளும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**தாமரைக் கோபுரம்**

தாமரைக் கோபுரம் எனப்படுவது தற்போது இலங்கையில் அமைக்கப்பட்டு வரும் ஒரு கோபுரமாகும். இந்த கோபுரம் கட்டிமுடிக்கப்பட்ட பின்னர் ஆசியாவின் மிக உயர்ந்த கோபுரமாக இது அமையும் என்று கணிக்கப்படுகின்றது. இந்த கோபுரம் கட்டுமானப் பணிகளுக்காக பண உதவித் தொகையான 100 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாக சீன வங்கியான எக்சிம் வங்கி வழங்கியுள்ளது. இந்தக் கோபுரத்தின் கட்டுமானப் பணிகள் சுமார் 30 மாதங்களில் நிறைவு பெறும் என்று எதிர்பாக்கப்படுகின்றது. ஆரம்பத்தில் இக்கோபுரம் கொழும்பு புற நகர் பகுதியான பாலியகொடையில் கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டாலும் பின்னர் டிசம்பர் 2011 இல் அமைச்சரவை முடிவுக்கு இணங்க கொழும்பு நகரின் மையத்தில் இக்கோபுரத்தில் அமைப்பதாக முடிவாகியது.

**மத்தள ராஜபக்ச சர்வதேச விமான நிலையம்**

மத்தள ராஜபக்ச பன்னாட்டு வானூர்தி நிலையம் தென்கிழக்கு இலங்கையைச் சேர்ந்த ஒரு சர்வதேச விமான நிலையமாகும். இது ஹம்பாந்தோட்டையிலிருந்து 18 km தொலைவிலுள்ள மத்தள நகரிலே அமைந்துள்ளது. முதல் பசுமை களமாகவும் இரண்டாவது சர்வதேச விமான நிலையமாகவும் உள்ளது. மத்தள ராஜபக்ச சர்வதேச விமான நிலையம் 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவால் திறந்து வைக்கப்பட்டது. ஆரம்பத்தில் பல விமான சேவைகளும் விமான நிலையத்திற்கு பறந்தன. ஸ்ரீலங்கன் எயாலைன்ஸ் ஒரு மையமாக நிறுவப்பட்டது. இருப்பினும் குறைந்த சேவை காரணமாக இந்த விமானங்களில் பெரும்பாலானவை மத்தளவை விட்டு வெளியேறின. ஜுன் 2018 வரை விமான நிலையத்திலிருந்து திட்டமிடப்பட்ட பறப்பு சேவைகள் இல்லை. குறைந்த எண்ணிக்கையிலான விமானங்கள் காரணமாக நீண்ட கால விமான நிறுத்தல் சேவைகளை வழங்குவதற்கும் விமான நிலையத்திலிருந்து வழங்கப்படும் விமானிகள் பயிற்சிப் பாடசாலைகள் மற்றும் பராமரிப்பு சேவைகளை உருவாக்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டில் இலங்கை அரசு விமான நிலையத்தின் வணிக நடவடிக்கைகளை நடத்துவதற்கான ஆர்வத்தை வெளிப்படுத்த வேண்டும் என்று கோரினார். இது உலகின் சிறந்த சர்வதேச விமான நிலையம் என்று அழைக்கப்படும். கடன்களை மீண்டும் செலுத்துவதற்கான போதுமான இலாபத்தை உருவாக்கவில்லை.

**அதிவேக நெடுஞ்சாலைகள்**

இலங்கையின் தென் மாகாணத்தில் தற்போது 150 km மேற்பட்ட தூரத்தில் அதிவேக நெடுஞ்சாலைகள் அமைக்கப்பட்டு வருகிறது. முதலாம் கட்ட அதிவேக நெடுஞ்சாலை தென் மாகாணத்தில் 95.3 km தூரத்தில் 2011 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது. இரண்டாம் கட்ட அதிவேக நெடுஞ்சாலை 2014 ஆம் ஆண்டு திறந்து மாத்தறை வரைக்கும் விரிவாக்கப்பட்டது. கொழும்பிலிருந்து கட்டுநாயக்க வரையிலான மூன்றாம் கட்டத்தின் அதிவேக நெடுஞ்சாலை 25.8 km தூரமானது. இது இலங்கையின் தலைநகரான கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தையும் உள்ளடக்கியுள்ளது. புதிய வளைந்த அதிவேக நெடுஞ்சாலையானது கடுவெலவுக்கும் கொட்டாவவுக்கும் இடைப்பட்டதாக அமைந்துள்ளது. இலங்கையிலுள்ள அதிவேக நெடுஞ்சாலையில் துவிச்சக்கர வண்டிகள், மோட்டார் வாகனம், முச்சக்கர வண்டிகள், பாதசாரிகள் மற்றும் உழவு இயந்திரங்கள் என்பவை பிரவேசிக்கவும் பயணிக்கவும் தடைசெய்யப்பட்டுள்ளன. இலங்கையின் அதிவேக நெடுஞ்சாலையில் பிரயாணம் செய்யும் வாகனங்களின் உச்சக் கட்ட தூரம் எல்லை மணித்தியாலத்திற்கு 80 km 110 km (50m-68m / h) ஆகும். அதிவேக நெடுஞ்சாலைகளுக்கிடையிலான வலையமைப்பு 2019 ஆம் ஆண்டு 350 km வரை விரிவாக்கப்பட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**மகாம்புர மகிந்த ராஜபக்ச துறைமுகம்**

அம்பாந்தோட்டை துறைமுகம் மகாம்புர மகிந்த ராஜபக்ச துறைமுகம் அழைக்கப்படும். இலங்கையில் அம்பாந்தோட்டையில் உள்ள ஒரு கடல் துறைமுகம் ஆகும். துறைமுகத்தின் முதற்கட்டமாக நவம்பர் 18, 2010 அன்று துறைமுக வசதிகளைப் பயன்படுத்த கடற்படைக் கப்பல் "ஜெட்லைனர்" பெர்மிடில் திறக்கப்பட்டது. முன்னால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச பெயரால் இது பெயரிடப்பட்டுள்ளது. அம்பாந்தோட்டைத் துறைமுகமானது இலங்கைத் துறைமுக அதிகார சபையினால் உள்வாங்கப்பட்டு இயங்கி வருகிறது. திட்டத்தின் முதலாவது கட்ட மதிப்பீட்டின் மொத்த மதிப்பீட்டுத் தொகை 361 மில்லியன் அமெரிக்க டொலர் ஆகும். இவற்றின் 85% நிதியளிக்கும் மக்கள் சீனக்குடியரசின் எக்ஸிம் வங்கியால் நிதியளிக்கப்பட்டது. கொழும்பு துறைமுகத்திற்குப் பின்னர் இலங்கையின் மிகப்பெரிய துறைமுகம் இதுவாகும். துறைமுகக் கடன்களைக் கடினமாக்குதல் 2016 ஆம் ஆண்டில் துறைமுகத்தின் பணமாற்றம் சீனாவின் Merchants Ports Holding Company (CM PORT) நிறுவனத்திற்கு 80% துறைமுகத்தை குத்தகைக்கு விட திட்டமிடப்பட்டுள்ளது. 2018 ஜுலை இலங்கை தனது கடற்படைத் தளத்தை காலி நிலையத்திற்கு அம்பாந்தோட்டையில் மாற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

# E-Business and E-Marketing



செல்வி சாஜினி நவரட்ணம்
தரம் 13 (A/L 2019)

E-Business is the buying and selling of goods or services using the internet and transfer of money and data to execute these transactions. Electronic funds transfer supply chain management, online transaction processing and automate data collection systems.

E-Marketing is the process of planning and executing the conception, distribution, promotion and pricing of a product or service using the internet. Electronic marketing not only includes marketing on the internet, but also includes marketing done via e-mail and wireless media. It uses a range of technologies to help connect business to their customers. It enables business to reduce operational costs.

E-Marketing is the heart of e-business and getting closer to customers and understanding them better, adding value to product and widening distribution channels via social media, search marketing and affiliate marketing are all a part of strategies to see it that the product sold via e-business are reaching the targeted audience to close them as prefect leads and then convert them into customers.

IBM was one of the first company to use the term "e-business" in October 1997 The company spent approximately $500 million on an advertising and marketing campaign to demonstrate the value of e-business

**Types of e-business models**

**1. Business to Consumer (B2C)**

When a business sells a good or service to individual consumer.

E.g: you buy a frock from online retailer

**2. Business to Business (B2B)**

When a business sells a good or service another business.

E.g : A business sells software as a service to other business

**3. Consumer to Consumer (C2C)**

When a consumer sells a good or service to another consumer

E.g: You sell your old phone on e-buy to another consumer



4. **Consumer to Business (C2B)**

When a consumer sells their own product to a business or organization

E.g : An influencer offers exposure to their online audience in exchange for a fee or a photographer licenses their photo for a business to use.

**5. Government to Citizens (G2C)**

When government provides services to citizens

E.g : The people who lives in western province, they can get their license through government's website (www.motortraffic.wp.gov.lk)

**6. Business to Government (B2G)**

When an organization settle their expenditure to government through internet.

E.g : Paying of EPF and ETF

**7. Government to Business (G2B)**

Government provides electronic services to business or organization

E.g : Inter bank payment system

**8. Citizens to Government (C2G)**

A citizen pays to government for the service via internet

E.g : Bills, Examfee, License Payments etc.

**Advantages of e-business**

* It is easy to expand their market to national and international
* It provides better customer services
* 24 hours support (7/365 days service)
* Quicker delivery of products
* A consumer can see the relevant detailed information within seconds, rather than waiting for days or weeks.
* Strengthened marketing capabilities and reach
* Reducing the cost (transportation costs to consumer)
* No need to have a physical place to sell
* No Geographical boundaries

**Limitations of e-business**

* We can't able to see and feel the product
* Risks in online payments
* Requires large investment to build a brand image on internet
* Privacy of consumer is adversely affected specially in the matter of accounts, he is required to tell his credit card number to supplier or e-banker

* Increased competition
* No human interactions

**New trends in e marketing**

**- Viral marketing**

It is a business strategy that uses existing social networks to promote a product. It's name refers to how consumers spread information about a product with other people in their social networks, much in the same way that a virus spread from one person to another

**- Catalog marketing**

It's a sales technique used by businesses to group many items together in a printed piece or an online store. Consumers buy directly from the catalog sender by phone, return envelope or online using information in the catalog.

**- Email marketing**

Sending marketing messages through email or email marketing is one of the most widely used direct marketing methods. One of the reason for popularity of email marketing is relatively inexpensive to design test and send an email message.

**- Tele marketing**

It is which marketers contact customers by phone. It helps business increase sales volume and customer base.

**- Trade fair**

A trade fair is an exhibition organized so that companies in a specific industry can showcase and demonstrate their latest products and services. meet with industry partners and consumers, Study activities of rivals, and examine recent market trends and opportunities.

**Reference :**


Akash choundrury,www.your.articellibrary.com

Amy Bishop www.quora.com

Philip kotter, Principles of marketing", 2008

# இலங்கையின் வெளிநாட்டு நேரடி முதலீடுகளும் பொருளாதார வளர்ச்சியும்



செல்வி வி. மாறி அனட் டொறிஸ்
தரம் 13 (A/L 2019)

வெளிநாட்டு நேரடி முதலீடுகளானவை நாட்டின் பொருளாதார அபிவிருத்தி உயர்வதற்கும், தொழில்வாய்ப்புக்கள் அதிகரிப்பதற்கும் அவசியமானவையாக இருக்கின்றன. தற்போதைய நிலையில் இலங்கை அரசாங்கமானது பல பொருளாதாரம் சார்ந்த பிரச்சினைகளை எதிர் கொண்டு வருகின்றது. அதில் பலரது கவனத்தை ஈர்க்காததும் ஆனால் எதிர்காலத்தில் மிகப்பாரிய பிரச்சினையாக வரக்கூடிய பிரச்சினையாகவும் இருக்கப்போவது "வெளி நாட்டு நேரடி முதலீடுகள் (Foreigin Direct Investament - FDI) பிரச்சினையாகும். இலங்கைக்கு எதிர்பார்த்தளவை விட மிகக் குறைவாகவே வெளிநாட்டு நேரடி முதலீடுகள் கிடைக்கின்றன. இது எமது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அச்சுறுத்தலாகவே உள்ளன.

வெளிநாட்டு நேரடி முதலீடுகள் என்றால் ஒரு நாட்டில் மற்றொரு நாட்டின் நிறுவனமானது உற்பத்தி வணிகத்துறையில் நேரடியாக அந்நியச் செலாவணியை முதலீடு செய்வதாகும். இத்தகைய முதலீடு அந்நாட்டில் உள்ளதோர் நிறுவனத்தைக் கொள்வனவு செய்வதன் ஊடாக அல்லது தன் நிறுவனத்தை விரிவுபடுத்த குறித்த நாட்டிலுள்ள நிறுவனத்துடன் இணைந்து செயற்படுவதாக இருக்கலாம். இது பங்குகளிலோ அல்லது பிணைப்பத்திரங்களிலோ மேற்கொள்ளப்படும் முதலீடல்ல.

ஒரு நாட்டின் உள்ளகத் திறமைகள் / முதலீடுகள் போதாது உள்ள நிலையில் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் அவசியமாகின்றன. வெளிநாட்டு நேரடி முதலீடு ஒரு நாட்டில் உறுதியாக உள்ள போது நிலையான பொருளாதார வளர்ச்சியொன்றை நோக்கி செல்லமுடியும். ஒரு நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மை வெளிநாட்டு நேரடிய முதலீடுகளை அதிகரிப்பதில் முக்கிய தாக்கம் செலுத்தும். அரசியல் ஸ்திரத்தன்மை தளம்பல் நிலையில் இருந்தால் சர்வதேச நாடுகளின் நம்பிக்கை சிதைவடைந்து முதலீடுகள் குறைவடையக் கூடும்.

கடந்த 2017 ஆண்டில் பொருளாதார வளர்ச்சி 3.1% ஆகவும், வேலையின்மை வீதமானது 4.3% ஆகவும் உள்ளது இவ்வாண்டிலேயே அதிகூடிய வெளிநாட்டு முதலீடுகள் இலங்கைக்கு கிடைத்துள்ளன. 2012 ஆம் ஆண்டின் பின் அதிகரித்து வந்த வெளிநாட்டு நேரடி முதலீடுகள் 2015,2016ம் ஆண்டுகளில் குறைவாகி பின் 2017ல் அதிகரித்துள்ளது.

*2012 ஆண்டு - 1382 மில்லியன் டொலர்*
*2013 ஆண்டு - 1437 மில்லியன் டொலர்*
*2014 ஆண்டு - 1635 மில்லயின் டொலர்*
*2015 ஆண்டு - 1160 மில்லயின் டொலர்*
*2016 ஆண்டு - 1079 மில்லயின் டொலர்*
*2017 ஆண்டு - 1900 மில்லயின் டொலர்*



வெளிநாட்டு நேரடி முதலீடானது ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதிலும் அடுத்த கட்டத்தை நோக்கி நகர்த்துவதிலும் முக்கியமானதாகும். வெளிநாட்டு நேரடி முதலீடுகள் ஒரு நாட்டின் உள்நாட்டின் சேமிப்பின் விளைவாக பொருளாதார வளர்ச்சியலிருந்து வெளியேறும் நிதிக்குப் பிரதியீடாக அமைவதுடன் பொருளாதரா வளர்ச்சிக்கும் துணை நிற்கின்றது. இலங்கையின் வெளிநாட்டு நேரடி முதலிடுகள் தனியாக நிதி முதலீடுகளாக மாத்திரமன்றி இலங்கையின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றனவாக உள்ளன.

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியைத் தீர்மானிப்பதில் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் முக்கியமானதொன்றாக அமைகின்றது என்றாலும், ஏற்றுமதி வளர்ச்சி நேரடி முதலீடுகளின் முக்கியத்துவம் இலங்கைக்கு அதிகமாக உள்ளது. இதற்கு காரணம் இத்தகைய துறைகளுக்குப் பங்களிக்கும் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் நிதியாக மட்டுமன்றி முகாமைத்துவ திறனாக, பணி நெறிமுறையாக, ஒழுக்கமாக, தொழிலாளர் திறனை மேம்படுத்த உதவும் கருவிகளாக எனப்பல்வேறு வகைகளில் பங்களிப்புச் செய்கின்றன.

வெளிநாட்டு நேரடி முதலீடுகள் இலங்கையின் பல்தேசிய நிறுவனங்களின் உள்வருகைக்கு அடித்தளம் இடுகின்றன. இதன்போது நாட்டினுள் உள்நுழையும் பல்தேசிய நிறுவனங்கள் வெறுமனே நிதி, திறன், தொழில்நுட்பம் என்பவற்றை மட்டும் கொண்டு வருவதில்லை. இவற்றிற்கு மேலாக சர்வதேச சந்தை வாய்ப்புக்களையும் சேர்த்தே கொண்டு வருகின்றது. அதனாலேயே அனைத்துப் பொருளாதார நன்மைகளையும் ஒருங்கே தருகின்ற வெளிநாட்டு நேரடி முதலீடுகளை பெற்றுக் கொள்ளவதற்காக அனைத்து நாடுகளுமே முனைப்பாக உள்ளன.

2015ம் ஆண்டு தேசிய அரசாங்கம் ஆட்சிப்பீடம் ஏறிய பின் அவர்களது மிக முக்கிய இலக்குகளில் ஒன்றாக நாட்டின் வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சலினை அதிகப்படுத்துவது என்பது காணப்பட்டது. ஆனாலும் இதுவரை காலமும் எதிர்பார்க்கைகளுக்கு அமைவாக இலக்குகளை எட்ட முடியவில்லை. இவ்இலக்கை அடைய முடியாமைக்கான காரணம் இலங்கையின் தளம்பலான பொருளாதாரச் சூழல், வேறுபட்ட பொருளாதார கொள்கைகள் என்பன தடைகளாக அமைந்திருந்தன.

இலங்கைக்கு குறிப்பிடத்தக்க அளவிலான வெளிநாட்டு நேரடி முதலீடுகள் கொண்டு வரப்பட்டன. ஆயினும் இலங்கை அரசாங்கம் முதலீட்டாளர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளினை நிறைவேற்றாமை, அரச ஊழல் என்பன அவற்றைத் தக்க வைத்துக் கொள்வதில் மிகப்பெரும் தடையாக அமைந்திருந்தன. தற்போதைய நிலையில் சர்வதேச

நாணய நிதியத்தைத் திருப்திப்படுத்துவதற்காக பல்வேறு வகைகளிலும் இலங்கை அரசாங்கம் தனது கொள்கைகளிலும், நிர்வகாச் செயற்பாடுகளிலும் இறுக்கமான கொள்கைகளைக் கடைப்பிடிப்பதன் ஊடாக மிகவும் இறுக்கமான பெறும் முயற்சியும் எதிர்பார்க்கைகளும் ஆரம்பித்திருக்கின்றன. இதனைச் சரியாக நடைமுறைப்படுத்தி வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கவர இலங்கை அரசாங்கம் ஊழந்த நிர்வாகத்தை உருவாக்க வேண்டி இருப்பதுடன், ஸ்திரமான பொருளாதாரம் கொள்கைகளை உருவாக்குவதும் அவசியமாகின்றது.

இலங்கையில் அதிகளவு வெளிநாட்டு நேரடி முதலீடுகள் பட்டியலில் சீனா முதலிடத்திலுள்ளது அவுஸ்ரேலியா, இந்தியா, சிங்கப்பூர், ஜப்பான், இங்கிலாந்து ஆகிய நாடுகள் இலங்கையில் முதலீடு செய்கின்றன.

இலங்கையில் முதலீடு செய்ய விரும்பும் பொரும்பாலான முதலீட்டாளர்களின் மிக முதன்மையான நோக்கம் கிரயம் / செலவீனத்தைக் குறைப்பதாகும். ஆனால் இலங்கை இனிவரும் காலங்களில் கடந்தகாலத்தைப் போல் மலிவான நாடாக இருக்காது எனக் கூறலாம். குறிப்பாக இலங்கையைச் சுற்றியுள்ள நாடுகளான வியட்நாம், பங்களாதேஷ் என்பன ஒப்பிட்டளவில் மலிவான தொழிற்படையையும் சக்தி வளத்தையும் கொண்டுள்ளன. இவை நிச்சயமாக முதலீட்டாளர்களின் முதலீட்டுத் தீர்மானத்தில் செல்வாக்குச் செலுத்தும். இது இலங்கை அரசாங்கத்தின் எதிர்பார்ப்புக்கு மிகப்பெரிய சவாலாக அமையும்.

இலங்கையைப் பொறுத்தவரையில் உள்நாட்டுச் சந்தை என்பது மட்டுப்படுத்தப் பட்டதாகவே இருக்கின்றது. குறிப்பாக இந்தியா, சீனா, பங்களாதேஷ் போன்ற நாடுகள் மிகப்பாரிய உள்நாட்டுச் சந்தையையும், விற்பனையையும் கொண்டு இருக்கின்றன. இதன் காரணமாகவே மிகப் பிரபலமான வர்த்தக நாமம் கொண்ட வெளிநாட்டு முதலீட்டாளர்களும் இலங்கையில் பதிலாக வேறு நாட்டைத் தமது முதலீட்டுக்கான இடமாக தேர்ந்து எடுகின்றார்கள். எனவே இலங்கை அரசாங்கம் தனது பொருளாதாரக் கொள்கைகளில் உள்நாட்டுச் சந்தையின் எல்லைகளைத் எவ்வாறு விரிவுபடுத்துவது என்பது தொடர்பில் ஆராய வேண்டியது அவசியமாகின்றது.

இறுதியாக அமைதி, சட்டஒழுக்கு, வரிவிதிப்புக் கொள்கைகள் என்பவை ஒரு நாட்டிற்கு மிக முக்கியமாக அமைகின்றது. ஆனால்அவை மட்டும் வெளிநாட்டு நேரடி முதலீட்டைக் கவரப் போதுமானவையல்ல. மாறாக அரசாங்கத்தில் உள்ள வினைத் திறனற்ற பொருளாதாரக் கொள்கைகள், நிர்வாகத்திறனற்ற சக்திகளின் ஊடுருவல் என்பன நீக்கப்பட்டு அரசியல் ரீதியாக பொருளாதாரத்துக்கு வலுச்சேர்க்கும் மாற்றங்கள் கொண்டு வரப்படும் பட்சத்திலேயே எதிர்பார்க்கப்படும் அந்நிய செலாவணியைப் பெற்று பொருளாதார வளர்ச்சியை அடையமுடியும்.

***உசாத்துணை:*** - Tamil mirror.lk
virakesari.lk

# வணிகத்தின் விந்தை

செல்வி எஸ். மேரி டிலக்ரா
தரம் 13 (A/L 2019)



இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன் பண்டமாற்று மூலம் வணிகம் பரிணாமம் பெற்றது. இன்று நவீன யுகத்தில் கணினி மூலம் நிறைவு செய்கின்றது வணிகம்.

அன்று தாய்ப்பால் தான் குழந்தைக்கு உணவாம்
இன்று வணிகத்தின் விந்தை மாப்பால் தான்
குழந்தைக்கு உணவாம்
அன்று பணம் இல்லை குழந்தை தாயைத் தேடியது
இன்று தாயை மறந்து குழந்தை
Smart Phone ஐ தேடுகின்றது

குழந்தையின் தந்தை முயற்சியாளனாகி
இயந்திரங்களை உருவாக்கி வாழ்வை உயர்வாக்கினான்
ஐயகோ! என்னவொரு பரிதாபநிலை - தன் குழந்தையின்
எதிர்காலத்தைக் கண்டு பரிதபித்து நிற்கின்றான்


காப்புறுதி செய் என்கிறது காப்புறுதி நிறுவனங்கள்
காப்புறுதி செய்தவற்றை சேதமாக்கி
பணம் பறிக்க துடிக்கின்றது - எம்
மனித நிறுவனங்கள்

போக்குவரத்து தொடர்பாடலில் வளர்ச்சிகரம் பல
இவ் வளர்ச்சிகளை கண்டு பெருமை கொள்கின்றது உலகு
இதே வளர்ச்சியால்சிதைந்து சின்னாபின்னமாகி போகின்றது
எம்மவரின் எதிர்கால உலகு

இன்றும் எத்தனை எத்தனை வளர்ச்சிகள் இவ்உலகிலே
அத்தனையும் கண்டு குதுகலிக்கின்றது எம்மவரின் வாழ்க்கை
அவ்வளர்ச்சியால் எங்கே செல்லுமோ?
திக்கு தெரியாமல் தவிக்கின்றது எதிர்கால வாழ்க்கை.

# இலங்கை மண்ணிலிருந்து பொலித்தீன் காணாமல் போகுமா?

செல்வி கே. அனுசியா
தரம் 13 (A/L 2019)



மனிதன் மற்றும் ஏனைய உயிர்வாழ் விலங்குகளுக்கும் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் உட்பட அவற்றிலாலான பொருட்களும் அதிகம் கெடுதல் விளைவித்து வருகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட முயற்சிகளும் பெரிதாக சோப்பிக்கவில்லை. இதன் நீட்சியாக பொலித்தீன், லஞ்ச்சீட், பிளாஸ்டிக் கரண்டிகள், ரெஜிபோர்ம், உணவு பொதியிடும் பொருட்கள் என்பவற்றுக்கு தடை விதிக்கும் நடவடிக்கையினை அரசாங்கம் தற்போது மேற்கொண்டு வருகின்றது.

அரசாங்கமானது குறுங்கால, மத்தியகால மற்றும் நீண்டகால இலக்குகளைக் கொண்ட பொலித்தீன் பாவனையைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. அண்மைய காலமாக இலங்கையில் கழிவகற்றல் பிரச்சினையானது பாரிய சவாலுக்கு உட்பட்டுள்ளது. நாள்தோறும் சேகரிக்கப்படும் கழிவுகளை மீள்சுழற்சிக்குட்படுத்துவதிலும் அவற்றை சேகரிப்பதற்கான பொருத்தமான இடத்தைத் தேர்வு செய்வதிலும் ஏற்பட்ட தடுமாற்றமானது இவ்வாறான இலக்குகளுக்குக் காரணமாக அமைந்திருக்கிறது.

சகல நிகழ்வுகளுக்கும் பொலித்தீன்களைப் பயன்படுத்தி அலங்காரம் செய்தலை தடைசெய்தல், 20 மைக்ரோன்களுக்கு குறைவான அல்லது அதற்குச் சமமான பொலித்தீன் என்ற நடைமுறையை மீறி விற்பனை மற்றும் தயாரித்தல் என்பவற்றை தடை செய்தல், லஞ்ச் சீட்டுக்கள், பொலியெஸ்டரினால் தயாரிக்கப்படுகின்ற பெட்டிகள், தட்டுகள், குவளைகள், கரண்டிகள் என்பவற்றின் விற்பனை, இறக்குமதி மற்றும் உற்பத்தியை தடைசெய்தல், பதப்படுத்தப்பட்ட மற்றும் சமைக்கப்பட்ட உணவுகளை பொலித்தீன் பெட்டிகளில் அடைப்பதை தடைசெய்தல், பொது இடங்களில் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக்குகள் எரிப்பதை தடைசெய்தல், உயிரியல் தன்மையுடைய பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக்குகளை அறிமுகம் செய்தல், உயிரியல் தன்மையுடைய பிளாஸ்டிக்குகளை உற்பத்தி செய்யும் இயந்திர இறக்குமதிக்கு வரிச்சலுகை வழங்குதல், பிளாஸ்டிக் மூலப்பொருட்கள் மற்றும் பொருட்கள் இறக்குமதிக்கு 15 வீதம் செஸ் வரியினை விதித்தல் போன்ற நடவடிக்கைகள் அரசினது இலக்குகளுக்குள் அடங்குகிறது.

இலங்கையானது அவசரமாக பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் பாவனை மற்றும் கழிவு வெளியேற்றம் என்பவற்றிலிருந்து மீள எழவேண்டிய தேவை இருக்கின்றது. கடந்த 40 வருடத்தினை விடவும் 20 மடங்கு அதிகமான பிளாஸ்டிக்குகள் உலகளவில் தற்போது உற்பத்தி செய்யப்படுகின்றன. ஒவ்வொரு வருடமும் 8 மில்லியன் தொன் பிளாஸ்டிக்குகள்

சமுத்திரங்களில் கலப்பதோடு கடல் உயிரினங்கள், மீனினங்கள், சுற்றுலாத்துறை மற்றும் கடல் சுற்றுச்சுழல் என்பவற்றை அதிகம் பாதிக்கின்றது. சீனா, இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ், வியட்நாம் என்பவற்றோடு இலங்கையும் அதிகளவில் பிளாஸ்டிக்கை கடலில் சேர்க்கும் நாடாக மாறியிருக்கிறது. இலங்கையில் ஒவ்வொரு நாளும் ஒரு நபருக்கு 5.1 கிலோ என்றளவிலும் ஒரு நாளைக்கு 1.59 மில்லியன் மெட்றிக் தொன் பிளாஸ்டிக்குகள் கடலில் கலக்கின்றன.

இதனால் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் சார்ந்த பொருட்களை முறையாக மீள்சுழற்சி செய்தல் அல்லது தடைசெய்தல் மற்றும் மாற்றுத் தீர்வுகளை முன்வைத்தல் என்பவையே இச்சூழலியல் பிரச்சனைக்கு மிகச்சரியான தீர்வாக இருக்கும். அதன் படியே அரசாங்கம் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களுக்கான தடையை அமுல் படுத்தியுள்ளது. இருப்பினும் இதனால் பொலித்தீன் உற்பத்தியாளர்கள், விற்பனை யாளர்கள் மற்றும் ஹோட்டல் உரிமை யாளர்கள் இதனால்அரசாங்கம் இவர் களுக்கு முறையான நஷ்டஈட்டினைப் பெற்றுக் கொடுக்குமா? இலங்கையில் சேகரிக்கப்படும் கழிவுகளில் 10-15 வீதமான பொலித்தீன்களும் உள்ளடங் கியுள்ளதாக மத்திய சூழல் அதிகாரசபைத் தலைவரினால் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் இதுவே டெங்கு நோய் பரவலுக்கு பிரதான காரணம் எனவும் தெரிவித்திருக்கிறார்.




மேலும் அண்ணளவாக 20 மில்லியன் லஞ்ச்சீட்டுகள் இலங்கையில் பாவிக்கப்படுகின்றன. இதனாலேயே தடிப்பம் கூடியதும் மனித உடலுக்கு தீங்கு விளைவிக்காததுமான உற்பத்திகளை ஊக்குவிக்க நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது. 2016ஆம் ஆண்டு சிவனொளிபாதமலை பருவ காலத்தின் போது 5.5 தொன் போத்தல்களும், 830கிலோ பிளாஸ்டிக் கழிவுகளும் சேகரிக்கப்பட்டதாக மத்திய சுற்றுச்சூழல் அதிகாரசபை தெரிவித்துள்ளது. இவ்வாறாக பல்வேறு இடங்களிலும் அதிகளவிலான இலத்திரனியல் கழிவுகள் சேகரிக்கப்படுகின்றன. இவ்வாறான சந்தர்ப்ப சூழ்நிலைகளே பொலித்தீன் பாவனை குறைப்பில் கவனம் செலுத்த வேண்டிய அவசியத்தை அனைவருக்கும் தூண்டியுள்ளது.

இருப்பினும் ஹோட்டல்களில் அதிகமாக உணவு பொதிசெய்ய லஞ்ச்சீட்டுகளும் ரெஜிபோர்ம் பெட்டிகளும் பயன்படுத்தப்படுகின்றன. இதற்கு மாறாக வாழையிலை யினைப் பயன்படுத்தினால் ஒரு நாளைக்கு 20 இலட்சம் லஞ்சீட்டுகளின் பாவனைக்கு பதிலாக 20 இலட்சம் வாழை இலைத் துண்டுகளை பயன்படுத்த முடியுமா? சைவ உணவகங்களில் ஒவ்வொரு கறிவகைக்கும் ஒரு பொலித்தீன் பை பயன்படுத்தப்படுகிறது. அவை தடை செய்யப்பட்டால் எவ்வாறு கறிகளை அவர்கள் பொதி செய்வார்கள். கொழும்பில் தலைவாழை இலை ஒரு துண்டு 10 - 20 ரூபாவுக்கு விற்பனை

செய்யப்படுகின்றது. இவ்வாறு சகலரின் தேவைகளையும் பூர்த்தி செய்யக் கூடிய வாழை மரங்கள் இலங்கையில் இருக்கின்றனவா?

அலுவலகம், பாடசாலை மற்றும் ஏனைய தொழிலிடங்களுக்குச் செல்வோர் ரிபன் கெரியார்கள் மூலம் உணவை எடுத்துச் செல்லமுடியும். ஹோட்டல்களிலிருந்து உணவுகளை பெற்றுக் கொள்வோர் எவ்வாறு பெற்றுக் கொள்வார். அதே போல் பொருட்களின் கொள்வனவின் போது பொலித்தீன் பைகள் மூலம் 5 கிலோ வரையான பொருட்களை சுமந்து செல்ல முடியும். இவற்றை கடதாசி பைகளில் செய்யமுடியாது. அதே போல் பொலித்தீன் பைகள் விலையும் குறைவு ஆனால் அதிக பொருட்களை சுமந்து செல்லக்கூடிய துணிப்பைகளை குறைவான விலையில் பெற்றுக் கொள்ளமுடியுமா? அவை எங்கு உற்பத்தி செய்யப்படும்? எங்கு பெற்றுக் கொள்வது போன்ற அறிவுறுத்தல் களும் மக்களுக்கு இதுவரை வழங்கப்படவில்லை.

2018ஆம் ஆண்டிலிருந்து நாட்டில் பொலித்தீன் பாவனையை முற்றாகத் தடை செய்வது தொடர்பான நடடிவக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உலக நாடுகளிலும் இவ்வாறு பொலித்தீனுக்கு எதிரான தடைகள் அமுல்ப்படுத்தப்பட்டு வெற்றியடைந் திருக்கின்றன. 1994ஆம் ஆண்டு டென்மார்க் பொலித்தீன் பைகளில் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்காக அத்தயாரிப்புக்களின் மீது வரி அறவிடும் நடவடிக்கையை மேற்கொண்டது. பாவனை 50 வீதத்தால் குறைவடைந்துள்ளதுடன் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் பொலித்தீன் பாவனைக்கு குறைந்தளவு நுகர்வைக் கொண்ட நாடாகவும் இருக்கிறது என்பதனை உதாரணமாகக் குறிப்பிட்டுக் கூறலாம்.

இலங்கையில் பொலித்தீன் பாவனையானது சவர்க்காரம் முதல் சமையல் பொருட்கள் வரை சகலவற்றுக்கும் உறையாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இவற்றை முற்றாக நீக்க காலங்கள் செல்லலாம். அதே போல் இத்தடையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணங்கள் வழங்கப்பட்டு மாற்றுத் தொழில்களுக்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். மக்களுக்குப் பொலித்தீனுக்குப் பதிலாக மாற்றுப் பொருளை பெற்றுக் கொடுக்க நடவடிக்கையெடுக்க வேண்டும். இவையனைத்தும் முறையாகப் பேணப்படுமாயின் பொலித்தீன் அற்ற, பொலித்தீன்களால் ஏற்படும் சூழல் பிரச்சினைகளற்ற நாடாக இலங்கையும் மாறுமென்பதில் ஐயமில்லை.

உசாத்துணை :

புதன் வசந்தம் தினக்குரல் பத்திரிகை (26 ஜீலை 2017)

# கணக்கீட்டு எண்ணக்கருக்கள்

செல்வி ஞா. மேரி மாலதிக்கா
தரம் 13 (A/L 2019)



**கணக்கீட்டு எண்ணக்கரு**

நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படுகின்ற அடிப்படை கணக்கீட்டு பதிவுவிதிகள், முறைகள், மரபுகள் என்பன கணக்கீட்டு எண்ணக்கருக்கள் எனப்படும். இவ் எண்ணக் கருக்கள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு பின்பற்றப்படு வையாக காணப்படும்.

**கணக்கீட்டு எண்ணக்கருக்களில் தோற்றம்**

கணக்கீட்டின் வளர்ச்சியானது பல்வேறு மரபுரீதியான கருத்துக்கள் மூலம் ஏற்பட்டன. பின்னர் அவை சில அடிப்படைத் தத்துவங்களாக தோற்றம் பெற்றன. இந்த மரபுரீதியான கருத்துக்களும், தத்துவங்களும் கணக்கீட்டு அறிஞர்களை தூண்டி அவை எண்ணக்கருக்கள், எடுகோள்கள், கொள்கைகள், விதிகள் எனத்தோன்றின.

**கணக்கீட்டு எண்ணக்கருக்களின் அவசியம்**

நிறுவனத்தில் அக்கறையுடையோருக்கு தகவல்களை வழங்குவதற்காக நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கும் அவை நம்பகத்தன்மை உடையனவாக அமைவதற்கும் நிறுவன நிதிக்கூற்றுக்கள் ஒரே முறையினை பின்பற்றி தயாரிக்க வேண்டியது அவசியமாகின்றது. எனவே நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக கணக்கீட்டு எண்ணக்கருக்களினை பின்பற்ற வேண்டியது அவசியாமாகின்றது.

**கணக்கீட்டு எண்ணக்கருக்களின் வகைகள்**

- அலகுசார் எண்ணக்கரு
- தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு
- கொள்கைமாறா எண்ணக்கரு
- பண அளவீட்டு எண்ணக்கரு
- இரட்டை விளைவு எண்ணக்கரு
- அட்டுறு எண்ணக்கரு
- பாதுகாப்பு எண்ணக்கரு
- கிரய எண்ணக்கரு
- தேறல் எண்ணக்கரு
- வெளிப்படுத்தல் எண்ணக்கரு
- இணைத்தல் எண்ணக்கரு
- பொருண்மை எண்ணக்கரு
- ஆவர்த்தன எண்ணக்கரு

-தோற்றத்திலும் பார்க்க கருத்து முக்கியத்துவ எண்ணக்கரு

**அலகுசார் எண்ணக்கரு**

நிறுவனம் வேறு அதனை கொண்டு நடாத்துகின்ற உரிமையாளர் வேறு என்ற அடிப்படையிலேயே நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும் என இவ்எண்ணக்கரு கூறுகின்றது. ஏனெனில் உரிமையாளரின் தனிப்பட்ட நடவடிக்கைகள் நிறுவனத்தின் செயற்பாட்டினை பாதிக்ககூடாது என்பதற்காகும்.

பிரயோகம் - நிறுவனத்தின் கணக்குகளில் உரிமையாளர் பற்று, மேலதிக மூலதனம் பதிவு செய்யப்படல், நிறுவன ஸ்தாபனத்தின் பெயர் குறிப்பிடப்படல்

**தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு**

நிறுவனங்கள் தொடர்ச்சியாக பல வருடங்கள் தொழிற்பட்டு தனது இறுதி நோக்கத்தினை அடைந்து கொள்ளும் என்ற அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும் என இவ்எண்ணக்கரு கூறுகின்றது.

இவ்எண்ணக்கருவிற்கமைய சொத்துக்களின் சந்தைப் பெறுமதியில் ஏற்படும் மாற்றங்கள் கருத்தில் கொள்ளப்படுவதில்லை ஏனெனில் இவ்நிறுவனம் தொடர்ச்சியாக செயற்படும் என்பதனாலாகும்.

பிரயோகம் - நிதிநிலைமைக்கூற்றில் சொத்து நடைமுறைச்சொத்து, நடைமுறை அல்லாச் சொத்து என வகைப்படுத்தல்

- பொறுப்புக்களை நடைமுறை பொறுப்பு, நடைமுறை அல்லாப் பொறுப்பு என வகைப்படுத்தல்

**கொள்கை மாறா எண்ணக்கரு**

நிறுவனம் தனது செயற்பாட்டு காலங்களில் தனது கொள்கைகளை அடிக்கடி மாற்றக்கூடாது என இவ்எண்ணக்கரு கூறுகின்றது. ஏனெனில் இக்கொள்கை மாற்றங்கள் கூட நிறுவனத்தின் பெறுபேற்றில் செல்வாக்கு செலுத்தும் கொள்கைகள் அடிக்கடி மாற்றப்படுமாயின் கடந்த கால பெறுபேறுகளினை நிகழ்கால பெறுபேறுகளுடன் ஒப்பீடு செய்து சிறந்த முடிவுகளை பெறமுடியாது. கொள்கைகளினை மாற்றுவதாயின் புதிய கொள்கையினை பின்பற்றுவதனால் ஏற்படுகின்ற தன்மைகளினை நியாயப்படுத்து வதுடன் அவை தொடர்பான ஒரு முழுமையான வெளிப்டுத்தல்களும் வேண்டப்படும்.

பிரயோகம் - ஒரேவிதமான பெறுமானத்தேய்வு முறையினை பின்பற்றல் (நேர்கோட்டுமுறை, ஒடுங்குடாகமுறை)

- இருப்பு மதிப்பீட்டு கொள்கையினை பின்பற்றும் போது ஒரே முறையினை பின்பற்றல் (FIFO முறை)

**பணஅளவீட்டு எண்ணக்கரு**

பணத்தினால் அளவீடு செய்யப்படும் விடயங்கள் மட்டுமே நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுவதுடன் பணத்தினால் அனைத்தையும் அளவீடு செய்யலாம் என இவ்எண்ணக்கரு கூறுகின்றது.

பிரயோகம் - நிறுவன நிதிக்கூற்றுக்களில் பெறுமானங்கள் ரூ "000" வெளிப்படுத்தப்படல்.

**இணைத்தல் எண்ணக்கரு**

ஒரு செலவினை அச்செலவினால் ஏற்படக்கூடிய வருமானங்களுடனேயே ஒப்பீடு செய்தல் வேண்டும் என இவ்எண்ணக்கரு கூறுகின்றது. அதாவது செலவு குறிப்பிட்ட காலப்பகுதியில் எற்பட்டு அதற்கான வருமானங்கள் அடுத்து வரும் காலப்பகுதியில் ஏற்படும் எனின் குறித்த செலவானது அடுத்த காலப்பகுதியில் இலாபங்களுக்கெதிராகவே பதிவழிக்கபடல் வேண்டும்.

பிரயோகம் - ஒரு பண்டத்தினை விற்கும் போது அதன் கிரயம் செலவாக காட்டப்படும் நடைமுறை அல்லாச் சொத்தின் பெறுமானத்தேய்வினை வருமானக் கூற்றில் செலவீனமாக காட்டல்

**பொருண்மை எண்ணக்கரு**

முக்கியமான விடயங்கள் அனைத்தையும் நிதிக்கூற்றுக்களில் காட்டக்கூடிய வகையில் கணக்கீட்டு கொள்கைகள் பின்பற்றபடவேண்டும் என இவ்எண்ணக்கரு கூறுகின்றது. அதாவது முக்கியம் என கருதும் விடயங்களை நிதிக்கூற்றுக்களில் காட்டாது விடுவதையோ / முக்கியமற்ற விடயங்களை தனித்து காட்டுவதனையோ இவ் எண்ணக்கரு தடுக்கின்றது. இவ்முக்கியமற்ற விடயங்களை தனித்து காட்டாமல் ஒன்றுசேர்த்து காட்டுதல் சிறப்பினதாகும்.

மேலும் முக்கியமான விடயம் என்பது நிறுவனத்தின் தன்மையை பொறுத்து நிறுவனங்களிடையே வேறுபடலாம். குறிப்பிட்ட ஒரு நிறுவனத்திற்கு முக்கியம் என கருதும் விடயம் ஒன்று வேறு ஓர் நிறுவனத்திற்கு முக்கியமற்றதாக காணப்படலாம்.

பிரயோகம் - துளைகருவி. பிளாஸ்ரிக் கோவை என்பன 01 வருடத்திற்கு மேற்பட்ட ஆயுட்காலம் கொண்டிருப்பினும் அதனை கொள்வனவு செலவாக காட்டல்

**அட்டுறு எண்ணக்கரு**

குறிப்பிட்ட ஆண்டிற்குரிய செலவுகளும், வருமானங்களும் கருத்திற் கொள்ளப்பட்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும் என இவ்எண்ணக்கரு கூறுகிறது. அதாவது காசாக பெற்றது, காசாக செலுத்தியது போன்ற விடயங்கள் மட்டும் கருத்தில் கொள்ளாமல் கொடுக்க வேண்டியது.பெறவேண்டியது, முற்பணமாக செலுத்தியது. முற்பணமாக பெற்றது தொடர்பான அனைத்து விடயங்களையும் கருத்தில் கொண்டே நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.

பிரயோகம் - கடன் விற்பனை, கடன்கொள்வனவு வருமானக் கூற்றில் காட்டுதல்
- வாடகைக்கு செலுத்திய காசு ரூ 21000 இதனுள் அடுத்த வருட வாடகைக்காசு ரூ 10000 உள்ளடங்கியுள்ளது.

**ஆவர்த்தன எண்ணக்கரு**

நிதிக்கூற்றுக்களை பயன்படுத்துகின்ற நபர்களுக்கு தேவையான தகவல்களை ஒரு ஒழுங்கான கால இடைவெளியில் தயாரித்து வழங்கப்படல்வேண்டும் என இவ்எண்ணக்கரு கூறுகின்றது. இதற்கமைய நிறுவனங்கள் பொதுவாக 12 மாதங் களுக்கான வருமானங்கள், செலவுகள் தொடர்பான விடயங்களினை 12ம் மாத

முடிவிலும், அத்தினத்தில் காணப்படுகின்ற நிதிநிலைமைகள் தொடர்பான விடயங்களையும் அக்காலப் பகுதிக்கான நிதிநிலைமை மாற்றங்கள் தொடர்பான விபரங்களையும் தயாரித்து வழங்குகின்றது.

பிரயோகம் - நிதிக் கூற்றுக்களானது 12 மாதங்களுக்கு ஒரு தடவை தயாரிக்க வேண்டு மென்ற அடிப்படையை வழங்கும் எண்ணக்கரு.

**பாதுகாப்பு எண்ணக்கரு**

நிறுவனங்கள் இலாபங்கள், வருமானங்கள் என்பவற்றினை எதிர்பார்த்து ஒரு போதும் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் கூடாது என இவ் எண்ணக்கரு கூறுகின்றது.

இவ் எண்ணக்கருவிற்கமைய இலாபங்கள், வருமானங்களை கணக்குகளில் காட்டுவதாயின் அவை காசாக தேறியிருத்தல் வேண்டும். தேறக்கூடிய சொத்து வடிவில் காணப்படுவதுடன் அதன் பெறுமதியும் மதிப்பீடு செய்யக்கூடியதாக இருத்தல் வேண்டும். ஆனால் பொறுப்புக்களிற்கு தொகை சரியாகத் தெரியாவிடினும் கிடைக்கக்கூடிய தகவல்களை கொண்டு அதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்.

பிரயோகம் - கடன் பட்டோர் மீதியில் ஐயக்கடனுக்கு ஏற்பாடு செய்தல்

- இருப்பினை கிரயம், தேறக்கூடிய நிகரப் பெறுமதியில் எப்பெறுமதி குறைவானதோ இருப்பாக வெளிப்படுத்தல்.

**வரலாற்றுகிரய எண்ணக்கரு / கிரய எண்ணக்கரு**

நடைமுறை அல்லாச் சொத்துக்கள் எவ்விலையில் கொள்வனவு செய்யப்பட்டதோ அவ்விலையில் தொடர்ந்து புத்தகங்களில் பேணப்பட வேண்டும் என இவ் எண்ணக்கரு கூறுகின்றது. இதற்கமைய காலமாற்றங்களினால் சொத்தின் பெறுமதியில் ஏற்படும் மாற்றங்களை கருத்தில் கொள்ளாமல் கணக்கு வைப்புக்கள் காணப்படும்.

பிரயோகம் - நடைமுறை அல்லாச் சொத்துக்களினை நிதிநிலைமைக் கூற்றில் கிரயப் பெறுமதியில் வெளிப்படுத்தல்,

- இருப்புக்களின் வி/னைக் கிரயத்தினை கணிக்கும் போது இறுதி இருப்பினை கிரயத்தில் கணித்தல்.

**தேறல் எண்ணக்கரு / வருமானக்கோட்பாடு / கைகீட்டிய எண்ணக்கரு**

பொருட்கள் எக்காலப்பகுதியில் விற்பனை செய்யப்பட்டதோ அவை அக்காலப் பகுதியிலேயே வருமானமாக காட்டப்பட்டு கணக்கு வைப்புக்கள் இடம்பெற வேண்டும் என இவ்எண்ணக்கரு கூறுகிறது. அதாவது விற்கப்பட்ட பொருட்கள் வெளியில் அனுப்பப்படும் வரையோ / அதற்கான பணம் கிடைக்கப்படும் வரையோ காத்திருக்காமல் அவை விற்பனை இடம்பெற்ற திகதியிலேயே வருமானமாக காட்டப்பட வேண்டும்.

பிரயோகம் - கடனுக்கு மேற்கொள்ளப்பட்ட விற்பனை

- முற்கூட்டியே மேற்கொள்ளப்பட்ட விற்பனை ஒப்பந்தம்
- வருமானத்தை அடையாளப்படுத்தும் எண்ணக்கரு

**வெளிப்படுத்தல் எண்ணக்கரு**

நிதிக்கூற்றுக்களை பயன்படுத்துகின்ற பல்வேறுபட்ட நபர்களுடைய தேவை களை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் அதிகளவான தகவல்களை நிதிக்கூற்றுக்கள் கொண்டிருக்க வேண்டும் என இவ்எண்ணக்கரு கூறுகின்றது.

நிறுவனம் தொடர்பாகவும். அதன் கணக்கு வைப்புக்கள் தொடர்பாகவும் முழுமையான நம்பிக்கை தன்மையினை அதன் பாவனையாளர்களுக்கு ஏற்படுத்த வேண்டும். அதற்கமைய நிதிக்கூற்றுக்களுக்கு மேலதிமான பிற்குறிப்புக்களும், பிண்ணிணைப்புக்களும் இணைத்தல் வேண்டும்.

பிரயோகம் - பெறுமானத் தேய்வு விதத்தினை வெளிப்படுத்தல்
- நிறுவனம் பயன்படுத்துகின்ற பெறுமானத்தேய்வு முறையினை நிதிக்கூற்றில் வெளிப்படுத்தல்

**தோற்றத்திலும் பார்க்க கருத்து முக்கியத்துவ எண்ணக்கரு**

நடடிவக்கைகளினை நிதிக்கூற்றுக்களில் காட்டும் போது அதன் வெளியார்ந்த தன்மைக்கு முக்கியம் வழங்காமல், அதன் உள்ளார்ந்த தன்மைக்கு முக்கியம் வழங்கி கணக்கு வைப்புகள் இடம்பெற வேண்டும் என இவ் எண்ணக்கரு கூறுகின்றது.

இங்கு தோற்றம் என்பது சட்ட உடன்பாடு ஆகும். கருத்து என்பது தற்போதுள்ள நிலைமையினை குறிக்கும்

பிரயோகம் - விற்பனை இன்றேல் திருப்பி அனுப்புக என்ற அடிப்படையில் அனுப்பப் பட்ட பொருட்கள் வாடிக்கையார் களஞ்சியத்திற்குள் இருந்தாலும் நிறுவனம் தனது இருப்பில் சேர்த்து கொள்கின்றது.

வரையறுக்கப்பட்ட X கம்பனியின் (C)

***31.03.2018*** இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று (A)

*"000"* (B)

| விபரம் | பெறுமதி | பெறுமதி | பெறுமதி |
|---|---|---|---|
| விற்பனை (H) | | XXX | |
| (-) உட்திரும்பல் | | (XX) | |
| (-) விற்பனை கிரயம் | | | |
| ஆரம்ப இருப்பு | | XXX | |
| (+) கொள்வனவு | XXX | | |
| (-) வெளித்திரும்பல் | (XX) | XXX | |
| (+) உட்சுமைக்கூலி | | XX | |
| ஏற்றி இறக்கற் கட்டணம் | | XX | |
| விற்பனைக்கு தயாரான இருப்பின் கிரயம் | | XXX | |
| (-) இறுதி இருப்பு | | (XXX) | (XXX) |
| மொத்த இலாபம் | | | XXX |
| (+) ஏனைய வருமானம் | | | |
| பெற்ற கழிவு | | XX | |
| முதலீட்டு வருமானம் | | XX | |
| பெற்ற வட்டி | | XX | XXX |
| | | | XXX |
| (-) விற்பனை விநியோக செலவு | | | |
| அறவிட முடியாக்கடன் | XX | | |
| கொடுத்த கழிவு | XX | | |
| விற்பனைத் தரகு | XX | | |
| வெளிச்சுமை கூலி | XX | XXX | |
| நிலைய நிர்வாக செலவு | | | |
| வாடகை | XX | | |
| மின்சாரம் | XX | | |
| கட்டட தேய்வு | XX | | |
| தளபாடத் தேய்வு | XX | | |

| | | | |
|---|---|---|---|
| சம்பளம் | XX | | |
| இயக்குனர் கட்டணம் | XX | | |
| காப்புறுதி | XX | XXX | |
| ஏனைய செலவு | | | |
| இரும்பு வீழ்ச்சி நட்டம் | XX | | |
| தீயழிவு நட்டம் | XX | | |
| களவாடல் நட்டம் | XX | XXX | |
| நிதிச் செலவு | | | |
| வங்கிக்கடன் வட்டி | XX | | |
| வங்கி கட்டணம் | XX | XXX | XXX |
| தேறிய இலாபம் உரிமையாண்மைக்கு மாற்றம் | | | XXX |

வரையறுக்கப்பட்ட X கம்பனியின் (c)

31.03.2018ல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று (A)

"000" (B)

| விரயம் | கிரயம் | திரண்டது | தேறியது |
|---|---|---|---|
| நடைமுறையல்லா சொத்து (D) | | | |
| காணி (G) | XXXX | (XX) | XXX |
| கட்டிடம் | XXXX | (XX) | XXX |
| மோட்டார் வாகனம் | XXXX | (XX) | XXX |
| தளபாடம் | XXXX | (XX) | XXX |
| | XXXX | XXX | XXX |
| குத்தகை | | | XX |
| நிலையான வைப்பு (J) | | | XX |
| முதலீடுகள் | | | XX |
| *நடைமுறை சொத்து* (D) | | | |
| சரக்கிருப்பு | | | XXX |
| கடன்பட்டோர் (E) | XXX | | |
| (-) ஐயக்கடன் ஏற்பாடு (F) | (XX) | XXX | |

| | | | |
|---|---|---|---|
| முற்பணச் செலவு (E) | | xx | |
| வருமதி வருமாணங்கள் (E) | | xx | |
| காசு | | xx | xxx |
| மொத்தச் சொத்துக்கள் | | | xxxx |
| உரிமையும் பொறுப்பும் | | | |
| உரிமையாண்மை (C) | | xxx | |
| தேறிய இலாபம் (C) | | xxx | |
| | | xxx | |
| (-) பற்று (C) | | (xx) | xxx |
| நடைமுறையல்லா பொறுப்பு (D) | | | |
| வங்கிக் கடன் | | | xxx |
| நடைமுறைப் பொறுப்பு (D) | | | |
| கடன் கொடுத்தோர் (E) | | xxx | |
| வங்கி மேலதிகப் பற்று | | xxx | |
| முற்பண வருமானம் (E) | | xxx | |
| அட்டுறு செலவு (E) | | xxx | xxx |
| மொத்த உரிமையும் பொறுப்பும் | | | xxxx |

A - கால அளவீட்டு எண்ணக்கரு

B - பண அளவீட்டு எண்ணக்கரு

C - வியாபார அலகுசார் எண்ணக்கரு

E - அட்டுறு எண்ணக்கரு

F - முன் எச்சரிக்கை பாதுகாப்பு எண்ணக்கரு

G - வரலாற்றுக் கிரய எண்ணக்கரு


H - தேறல் எண்ணக்கரு

I - இணைத்தல் எண்ணக்கரு

U - தோற்றத்திலும் பார்க்க கருத்து முக்கியத்துவம்

***உசாத்துணை :*** *- ஆசிரியர் வழிகாட்டி (கணக்கீடு) வணிகத்துறை*
*விஞ்ஞான தொழினுட்ப பீடம் தேசியகல்வி நிறுவனம் மகரகம*

# நீங்கள் வாங்கும் பொருள் எந்த நாட்டிக்குரியது?



செல்வி எல். விதுசா
தரம் 13 (A/L 2019)

பட்டைக் குறியீடு என்பது தானியங்கு சாதானங்களின் தானியங்கு தகவலை படிப்பதற்கான நோக்குடைய பக்கவாட்டு மற்றும் இடைவெளிகளில் இலக்ககங்களின் ஒரு கிராஃபிக் பிரதிநிதித்து வம் ஆகும். இக் குறியீட்டின் கீழ்ப்பகுதியில் மட்டுமே நாம் புரிந்து கொள்ளக் கூடிய புள்ளி விபரங்கள் காணப்படுகின்றன.

பட்டைக் குறி என்பது இப்போது பரிணாம வளர்ச்சியை கண்டு பல வடிவங்களில் காணப்படுகின்றது. நாம் பெரும்பாலும் காணும் பட்டைக்குறி UPC-A வகையாகும். UPC -A 12 என்பது Universal product Code என்று பொருள். இந்த குறியீட்டை உருவாக்கியது UCC (Universal Code Council). இவ்வகை பட்டயக்குறி *02* பகுதிகளைக் கொண்டவை ஆகும். அவையாவன

1. மனிதனால் வாசிக்கக் கூடிய பகுதி (Man readable Part)
2. கணனியால் வாசிக்கக்கூடிய பகுதி (Computer readable part)

**மனிதனால் படிக்கக் கூடிய பகுதி (Man readable Part)**

ஒரு பட்டைக் குறியீட்டை எடுத்துக் கொண்டால், அதிலுள்ள கறுப்பு, வெள்ளை பட்டைகளுக்கு கீழே அந்த குறியீடு எதை உணர்த்துகிறது என்று மனிதன் படித்தறியும் எண்களால் எழுதப்பட்டிருக்கும் இது தான் "மனிதனால் படிக்கக் கூடிய பகுதி" ஆகும்.

**கணனியால் படிக்கக்கூடிய பகுதி (Computer readable Part)**

பட்டைக் குறியீட்டில் மனிதனால் படிக்கக் கூடிய பகுதிக்கு மேலே உள்ள கறுப்பு, வெள்ளை பட்டைகளே கணனியால் படிக்கக்கூடிய பகுதி. இதில் கவனிக்க வேண்டியது என்ன வென்றால் இவை இரண்டுமே ஒரே விடயத்தையே உணர்த்துகின்றன. மொத்தத்தில் இக்குறியீடு *12* இலக்கங்களை உணர்த்துகின்றது.

| |
|---|
| உலகில் முதல் பட்டைக் குறியீட்டை பயன்படுத்தி பொருள் மெல்லு கோந்து (Chewing gum) |

**பட்டைக் குறியீடு எண்கள் பற்றிய தகவல்**

- *முதல் 02 இலக்கங்கள் (சில சமயங்களில் 03 இலக்கங்கள்)*

நாட்டினை குறிக்கும், அதாவது உற்பத்தியாளர்/விற்பனையாளரது நாட்டின் குறியீடு

**- பின் உள்ள 05 இலக்கங்கள்**

*நிறுவனத்தின் பெயர் - தயாரிப்பு உற்பத்தியாளர் / விற்பனையாளர்*

**- ஏனைய 05 இலக்கங்கள்**

தயாரிப்புக்களின் பெயர், நுகர்வோர் பண்புகள், அளவுகள்/எடை, பொருட்கள், வர்ணம் Bar Code என்பது machine readable format இல் இருக்கும். அதில் முதல் 03 எண்கள் **690,691,692** என்றால் அது சீனாவில் தயாரிக்கப்பட்ட பொருள் என்று அர்த்தம். **471**என்றால் தாய்வானில் தயாரிக்கப்பட்ட பொருள் ஆகும். நீங்கள் வாங்கும் பொருள் எந்த நாட்டிலிருந்து வருகின்றது என்று இதனை வைத்து தெரிந்து கொள்ளலாம். போலி மருந்துகள் மாதிரி Expiry date ஐ இதனை வைத்து அச்சடிக்க முடியாது என்பதும் நமக்கு கொஞ்சம் ஆறுதல் அளிக்கிறது. இனிமேல் பார்க்கோடை பார்த்து வாங்குங்கள்

| இலக்கம் | நாடுகள் | இலக்கம் | நாடுகள் |
|---|---|---|---|
| 00-13 | USA & Canad | 609 | Mouritius |
| 30-37 | France | 611 | Moracco |
| 40-44 | Germany | 613 | Algeria |
| 45-49 | Japan | 619 | Tunisia |
| 46 | Russian Federation | 612 | Egypt |
| 471. | Taiwan | 625 | Jordan |
| 474. | Estonia | 626 | Iran |
| 475. | Latvia | 64 | Finland |
| 477. | Lithuania | 690-692 | China |
| 479 | SriLanka | 70 | Norway |
| 480 | Philippines | 729 | Israel |
| 482 | Ukraine | 73 | Sweden |
| 484 | Moldova | 740 | Guatemala |
| 485 | Armenia | 741 | Elsalvador |
| 486 | Georgia | 742 | Honduras |
| 487 | Kazakhstan | 743 | Nicaragua |
| | | 744 | Costa Rica |
| | | | Dominican Republic |
| 50 | United Kingdom | 750 | Mexico |
| 520 | Greece | 759 | Venezuela |
| 528 | Lebanon | 76 | Switzerland |
| 529 | Cyprus | 770 | Colombia |
| 531 | Macedoria | 773 | Uruguay |
| 535 | Malta | 775 | Beru |
| 539 | Ireland | 777 | Bolivia |

| | | | |
|---|---|---|---|
| 54 | Belgium | 780 | Chile |
| 560 | Portugal | 781 | Baraguay |
| 57. | Denmark | 785 | Peru |
| 590 | Poland | 786 | Ecuader |
| 594 | Romania | 789 | Brazil |
| 600 & 601 | Southafrica | | |
| 599 | Hungary | 80-83 | Italy |
| | | 84 | Spain |
| 850 | Cuba | 899 | Indonesia |
| 858 | Slovakia | 90 891 | Austria |
| 859 | Czoch Republic | 93 | Australia |
| 869 | Turkey | 94 | Newzealand |
| 860 | Yugoslavia | 977 | International standard serial Number for paiodicals (ISSN) |
| 87 | Nether landa | 978 | International Standard Book Numbering (ISBN) |
| 880 | South Korea | 955 | Malaysia |
| 885 | Thailand | | |
| 888 | Singapore | 979 | International Standard Musi Number (ISMN) |
| 890 | India | | |
| 893 | Vietnum | | |

# உற்பத்திக் கிரயக் கணிப்பு
# (Calculation of Manufacturing Cost)

செல்வி அ. அஷானா
தரம் 13 (A/L 2019)



உற்பத்தி நிறுவனம் ஒன்ற பொருட்களினை உற்பத்தி செய்வதனால் ஏற்படுகின்ற மொத்த உற்பத்திக் கிரயத்தைக் கண்டு கொள்ளும் நோக்குடன் தயாரிக்கப்படும் கூற்று உற்பத்திக் கிரயக் கூற்று ஆகும். இது நிதிக் கூற்றின் (வருமானக்கூற்று) ஒரு பகுதியாக கொள்ளப்படும்.

**உற்பத்திக்கிரயக் கூற்றை தயாரிப்பதன் நோக்கங்கள்**

- ✦ மொத்த உற்பத்திக் கிரயத்தினைக் கணிப்படுவதற்கு
- ✦ ஓர் அலகிற்கான உற்பத்திக் கிரயத்தினை மதிப்பிடுவதற்கு
- ✦ உற்பத்திக் கிரயத்தினைக் கட்டுப்படுத்திக் கொள்வதற்கு
- ✦ ஓர் அலகிற்கான விற்பனை விலையினை தீர்மானிப்பதற்கு
- ✦ உற்பத்தி தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு

**உற்பத்திக் கிரயம் (Manufacturing Cost)**

உற்பத்தி நிறுவனம் ஒன்று பொருட்களினை உற்பத்தி செய்வதனால் ஏற்படுகின்ற செலவுகளையும் உள்ளடக்கியது உற்பத்திக் கிரயம் ஆகும்.

**உற்பத்திக் கிரயத்தின் கூறுகள் / பகுதிகள்**

*1. மூலக்கிரயம் / முதன்மைக் கிரயம்* (Prime Cost)

*2. உற்பத்தி மேந்தலைக் கிரயம் / தொழிற்சாலை மேந்தலைக்கிரயம்*

(Over heads cost)

உற்பத்தியுடன் தொடர்புபடுகின்ற அனைத்து நேர்க் கிரயங்களினையும் கூட்டி வரும் தொகை முதன்மைக் கிரயம் ஆகும்.

முதன்மை கிரயம் = நேர்ப்பொருள் + நேர் உழைப்புக் கிரயம் + நேர் ஏனைய கிரயம்

**நேர் பொருள் கிரயம் (Direct Materials Cost)**

உற்பத்திக்கு நேரடியாக ஏற்படுவதும் உற்பத்தி அலகுடன் தெளிவாக வேறுபடுத்தி இனங்காணக்கூடிய பொருட் கிரயங்களைக் குறிக்கும். அதாவது பொருள் உற்பத்தியுடன் நேரடியாக தொடர்புபடும் மூலப்பொருட் கிரயத்தின் பெறுமதியினை இது குறிக்கும்.

Eg:- தளபாட உற்பத்தி நிறுவனம் - மரப்பலகை

ஆடை தைக்கும் நிறுவனம் - துணிவகை

**நேர் உழைப்புக் கிரயம் (Direct wages cost)**

உற்பத்தி அலகுடன் தெளிவாக இனங்காணக் கூடியதும் உற்பத்திகளில் நேரடி -யாகப் பங்களிப்புச் செய்யும் உழைப்புக்காகச் செலுத்தப்படும் கூலியாகும். அதாவது பொருள் உற்பத்தியோடு நேரடியாகத் தொடர்புபடும் ஊழியருக்கு வழங்கப்படும் சம்பளம் இதுவாகும்.

Eg:- தளபாடம் - தளபாட உற்பத்தியாளர் கூலி

ஆடை உற்பத்தி நிறுவனம் - ஆடை தைப்பவருக்கு செலுத்திய கூலி

**நேர் ஏனைய கிரயம் (Other Direct cost)**

உற்பத்தி அலகுடன் தெளிவாக வேறுபடுத்தி இனங்காணக்கூடிய பொருள், உழைப்பு அல்லாத உற்பத்தி சார்பான ஏனைய கிரயம் நேர் ஏனைய கிரயம் ஆகும். இது பொருள் உற்பத்தியோடு நேரடியாகத் தொடர்புபடும் ஏனைய செலவீனங்களாகும்.

Eg:- வடிவமைப்புக்கான கிரயம்

உற்பத்தி அலகுகளுக்கமைய செலுத்தப்பட்ட இறைக் கட்டணம்

தனியுரிமைக் கட்ணம்

நேர்ப்பொருள், நேர்க்கூலி ஏனைய நேர்க் கிரயம் என்பன நீங்கலான உற்பத்தியுடன் தொடர்புடைய மற்றைய செலவுகள் உற்பத்தி மேந்தலைக் கிரயம் ஆகும்.

உற்பத்தி மேந்தலைக் கிரயம் = நேரில்பொருட் கிரயம் + நேரில் கூலிக் கிரயம் + ஏனைய நேரில் கிரயம்

**நேரில் பொருட் கிரயம் (Indirect Materials Cose)**

பொருள் உற்பத்தியுடன் நேரடியாகத் தொடர்புபடாத மூலப் பொருட்களின் கிரயம் நேரில் பொருட்கிரயம் ஆகும்.

நுப: சுத்திகரிப்பு பொருள்

பராமரிப்பு பொருட்கள்

**நேரில் கூலிக் கிரயம் (Indirect wages cost)**

உற்பத்தி அலகுடன் நேரடியாகத் தொடர்புபடாத ஊழியர்களுக்கு வழங்கப்படும் சம்பளங்கள் நேரில் கூலிக் கிரயம் ஆகும்.

Eg: மேற்பார்வையாளர் சம்பளம்

தொழிற்சாலை எழுதுவினைஞர் சம்பளம்

**நேரில் ஏனைய கிரயம் (Indirect Other cost)**

உற்பத்தி அலகுடன் தெளிவாக இனங்காணமுடியாத பொருள் உழைப்பு அல்லாத உற்பத்தியுடன் நேரடியாக தொடர்புபடாத ஏனைய செலவீனங்கள் நேரில் ஏனைய கிரயம் ஆகும்.

Eg: தொழிற்சாலை காப்புறுதி

தொழிற்சாலை மின்சாரம்

இயந்திர தேய்வு

**உற்பத்தி வணிகமொன்றில் காணப்படும் இருப்பு வகைகள்**

1. மூலப்பொருள் இருப்பு:- உற்பத்தி செயன்முறையில் நுகர்வதற்காக காணப்படும் பொருட்கள்.
2. நடைமுறை வேலை இருப்பு:- உற்பத்தி செயன்முறையில் காணப்படும் பொருட்கள்.
3. முடிவுப் பொருள் இருப்பு:- விற்பனை செய்வதற்காக தயார் நிலையிலுள்ள பொருட்கள்.

மூலப்பொருள் என்ற வகைக்குள்ளும் முடிவுப்பொருள் என்ற வகைக்குள்ளும் உட்படுத்த முடியாமல் இரண்டுக்கும் இடைப்பட்ட நிலையில் காணப்படும் பொருளே குறை வேலை எனப்படும். அதாவது வழமையான வியாபார நடவடிக்கைகளின் போது விற்பனை செய்வதற்கான உற்பத்தி செயன்முறையில் உள்ள பொருட்களே ஆகும்.

**Note:-** நடைமுறை வேலை இருப்பில் உற்பத்தி மேந்தலைக் கிரயங்கள் உள்ளடக் கப்பட்டுள்ளது எனக் கருதி உற்பத்திக் கிரயத்தில் சீராக்கம் செய்யப்படும். அதாவது உற்பத்திக் கிரயக் கூற்றில் உற்பத்திக் கிரயம் கணிக்கும் போது சேர்த்துக் கொள்ளப்படல் வேண்டும்.

**உற்பத்திக் கிரயத்தினை வருமானக் கூற்றுக்கு மாற்றுவதற்கான நாட்குறிப்பேட்டுப் பதிவு**

| | | |
|---|---|---|
| இலாப நட்டக் கணக்கு (வருமானக் கூற்று) | வரவு | XXX |
| உற்பத்திக்கணக்கு (உற்பத்திக் கிரயக் கூற்று) | செலவு | XXX |

**உற்பத்திக்கிரயக் கூற்றின் மாதிரி வடிவம்**

கரிஷனா உற்பத்தி நிறுவனத்தின்
2019.03.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான உற்பத்திக் கிரயக் கூற்றும் வருமானக் கூற்றும்

| விபரம் | தொகை | தொகை |
|---|---|---|
| **மூலப்பொருள்** | | |
| ஆரம்ப இருப்பு | | XXX |
| கொள்வனவு | XXX | |
| (+) உட்சுமைக்கூலி | XX | |
| சுங்கத் தீர்வைகள் | XX | |
| | XXX | |

| | | |
|---|---|---|
| (-) வெளித் திரும்பல் | (xx) | xxx |
| உற்பத்திக்குத் தயாரான மூலப்பொருட் கிரயம் | xxx | |
| (-) இறுதி இருப்பு | | (xx) |
| பயன்படுத்திய மூலப்பொருட்கிரயம் | | xxx |
| நேர்ச்செலவுகள் | | |
| நேர்க் கூலிக் கிரயம் | xx | |
| தனியுரிமைக் கட்டணம் | xx | |
| வடிவமைப்புக் கிரயம் | xx | |
| ஏனைய நேர் கிரயம் | xx | xxx |
| மூலக் கிரயம் / முதன்மைக் கிரயம் | | xxx |
| உற்பத்தி மேர்தலைக் கிரயம் | | |
| தொழற்சாலை வாடகை | xx | |
| தொழிற்சாலை மின் கட்டணம் | xx | |
| இயந்திர பெறுமானத் தேய்வு | xx | |
| வெப்பமும் வெளிச்சமும் | xx | xxx |
| | | xxx |
| நடைமுறை வேலை இருப்பு | | |
| (+) ஆரம்ப நடைமுறை வேலையிருப்பு | xx | |
| (-) இறுதி நடைமுறை வேலையிருப்பு | (xx) | xxx |
| மொத்த உற்பத்திக் கிரயம் வருமானக் கூற்றிற்கு மாற்றியது | | xxx |
| விற்பனை வருமானம் | | xxx |
| (-) விற்பனைக் கிரயம் | | |
| ஆரம்ப முடிவுப் பொருள் இருப்பு | xxx | |
| உற்பத்திக் கிரயம் | xxx | |
| கொள்வனவு (முடிவுப் பொருள்) | xxx | |
| விற்பனைக்குத் தயாரான இருப்பின் கிரயம் | xxx | |
| (-) இறுதி முடிவுப் பொருள் இருப்பு | xxx | xxx |
| மொத்த இலாபம் | | xxx |

**உதாரணம்: -**

உற்பத்தி நிறுவனமொன்றுடன் தொடர்புபட்ட தகவல்கள் வருமாறு:

| | (ரூபா 000) |
|---|---|
| ஆரம்ப குறை வேலை இருப்பு | 170 |
| இறுதி குறை வேலை இருப்பு | 100 |
| பயன்படுத்திய நேர்மூலப் பொருள் | 180 |
| நேர்க்கூலி | 120 |
| தொழிற்சாலை மேந்தலை | 120 |

பின்வருவனவற்றைக் கணிக்குக.

1. முதன்மைக் கிரயம்

= பயன்படுத்திய நேர் மூலப்பொருள் + நேர்க்கூலி

= 180 + 120

= 300

2. உற்பத்திக் கிரயம்

| | | |
|---|---|---|
| முதன்மைக் கிரயம் | | 300 |
| (+) தொழிற்சாலை மேந்தலை | | 120 |
| | | 420 |
| நடைமுறை வேலை இருப்பு | | |
| (+) ஆரம்ப இருப்பு | 170 | |
| (-) இறுதி இருப்பு | (100) | (70) |
| உற்பத்திக் கிரயம் | | 350 |

**பயிற்சி**

01) கரன் உற்பத்தி நிறுவனத்தின் 2019 மார்ச் மாதத்துடன் தொடர்புடைய தகவல்கள் வருமாறு

| | |
|---|---|
| கொள்வனவு செய்யப்பட்ட மூலப்பொருள் | 400 000 |
| நேர்க் கூலிக் கிரயம் | 200 000 |
| இயந்திர பராமரிப்பு | 25 000 |
| தனியுரிமைக் கட்டணம் | 10 000 |
| தொழிற்சாலை மின்சாரம் | 15 000 |
| இயந்திரத் தேய்வு | 35 000 |
| எரிபொருளும் சக்தியும் | 50 000 |
| 2018.04.01 இல் நடைமுறை வேலை இருப்பு | 140 000 |
| 2019.03.31 இல் நடைமுறை வெலை இருப்பு | 174 000 |

பின்வருவனவற்றை கணிக்குக.

1. முதன்மைக் கிரயம்
2. உற்பத்திக் கிரயம்

*02.* கமலா உற்பத்தி நிறுவனத்தின் *31.12.2015* இல் முடிவடைந்த ஆண்டிற்கான தகவல்கள் வருமாறு.

| | |
|---|---|
| *01.01.2018* இல் இருப்புக்கள் | |
| மூலப்பொருள் | *58 000* |
| குறை வேலை இருப்பு | *59 200* |
| மூலப்பொருள் கொள்வனவு | *325 000* |
| நேர்க் கூலிகள் | *462 000* |
| மூலப் பொருள் வெளித்திரும்பல் | *5 000* |
| இயந்திர பெறுமான தேய்வு | *60 000* |
| ஏனைய தொழிற்சாலை செலவு | *78 000* |
| சிறு கருவி தேய்வு | *3 000* |
| *31.12.2018* இல் இருப்புகள் | |
| மூலப்பொருள் | *25 000* |
| குறை வேலை இருப்பு | *20 000* |

வேண்டப்படுவது: -

1. *31.12.2018* இல் முடிவடைந்த ஆண்டில் நுகரப்பட்ட மூலப் பொருள் கிரயத்தை கணிக்குக
2. ஆண்டுக்கான மொத்த உற்பத்திக் கிரயத்தைக் கணிக்குக.


## Reference

தேசிய கல்வி நிறுவகம் "ஆசிரியர் வழிகாட்டி நூல்" தரம் 12 2018

கடந்தகால கணக்கீட்டு மாதிரி வினாத்தாள்கள்

# வணிக நடவடிக்கைகளில் முயற்சியாண்மையின் பங்கு

## (Role of Entrepreneurship in Business Activities)



செல்வி கி.கேதாயினி
தரம் 13 (A/L 2019)

மனித தேவைகள், விருப்பங்களை திருப்திப்படுத்துவதற்காக புதிய கண்டுபிடிப்புக்களுடாக புதிய வணிகப் பொருளாதார வாய்ப்புக்களை இனங்கண்டு ஆபத்துக்களையும் நிச்சயமற்ற தன்மைகளையும் எதிர்நோக்கி உற்பத்திக்கான பல்வேறு வளங்களை வினைத்திறனாக பயன்படுத்தி நடைமுறையில் உள்ள பொருளாதார முறைமைகளினை மாற்றியமைப்பதன் மூலம் நவீன உற்பத்திகளை அறிமுகப்படுத்தி தேசிய உற்பத்தியின் பெறுமதியினை அதிகரித்தல் முயற்சியாண்மை ஆகும்.

முயற்சியாண்மை என்பதன் ஆங்கில பதம் **Entrepreneurship** என்பதாகும். இது **Entrepreneurship** எனும் பிரெஞ் பதத்திலிருந்து வந்தது. பொறுப்பேற்றல் அல்லது சந்தர்ப்பத்தை உருவாக்கல் அல்லது புதுமை புனைதல் அல்லது தேவைகளையும் விருப்பங்களையும் திருப்தி செய்தல் என்பவற்றை குறிக்கும் வணிகத்துறையில் இதன் அர்த்தம் "வணிகம் ஒன்றை ஆரம்பித்தல்" **(Start a business)**

**முயற்சியாண்மை தொடர்பான வரைவிலக்கணங்கள்**

முயற்சியாண்மை செயல்களில் ஈடுபடும் நபர் முயற்சியாளர் ஆவார். அதாவது வியாபார சந்தர்ப்ப சூழல்களை இனங்கண்டு நிச்சயமற்ற தன்மைகளையும் இடர்களையும் எதிர்கொண்டு வளங்களை வினைத்திறனாக பயன்படுத்தி புதியன புனைதல் மூலம் மாற்றங்களை கொண்டு வரும் நபர் முயற்சியாளர் **(Entrepreneur)** எனப்படுவர்.

**18ம் நூற்றாண்டின் பொருளியல் ரீதியான வரைவிலக்கணம்**

நிலம், உழைப்பு, மூலதனம் எனும் உற்பத்தி காரணிகளைத் திரட்டும் செயற்பாடு முயற்சியாண்மை ஆகும்.

**தற்கால வரைவிலக்கணங்கள்**

புத்தாக்க எண்ணத்துடனான செயற்பாடு முயற்சியாண்மை ஆகும். இங்கு புத்தாக்கம் என்பது புதிய உற்பத்தியாகவோ அல்லது சந்தை புத்தாக்கமாகவோ அல்லது காரணி புத்தாக்கமாகவோ அல்லது புத்தாக்க செயற்பாடாகவோ அல்லது புத்தாக்க அமைப்பாகவோ காணப்படும்.

### William D.Bygrave

சந்தர்ப்பத்தை உருவாக்கி அதிலிருந்து நன்மை பெற அமைப்பொன்றை உருவாக்கும் போது தொடர்புபடும் அனைத்து கருமங்களும் அலுவல்களும் முயற்சியாண்மை ஆகும்.

### Joseph Shumpeter

புதிய பொருட்கள், சேவைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் அல்லது புதிய அமைப்பு முறையினை உருவாக்குவதன் மூலம் அல்லது புதிய மூலப்பொருட்களை பயன்படுத்துவதன் மூலம் அல்லது நடைமுறையில் உள்ள செயன்முறை ஒன்றினை மாற்றுகின்ற செயன்முறை முயற்சியாண்மை ஆகும்.

**Oxford ஆங்கில அகராதி**


மூலதனத்திற்கும் ஊழியத்திற்கும் இடையில் நடுவராக செயற்படுதல் முயற்சியாண்மை ஆகும்.

**சர்வதேச தொழிலாளர் அமைப்பு**

புதிய வணிகம் ஒன்றினை விரிவுபடுத்தி வெற்றிகரமாக நடாத்தி செல்வதற்கான ஆற்றல் முயற்சியாண்மை ஆகும்.

**முயற்சியாண்மை தொடர்பான பொதுவான வரைவிலக்கணம்**

சூழலில் உள்ள சந்தர்ப்பங்களை ஆக்கரீதியாக அறிந்து நட்ட இடரினை ஏற்று புத்தாக்கங்களை உருவாக்கின்ற செயன்முறை முயற்சியாண்மை ஆகும். மனித தேவைகளையும் விருப்பங்களையும் இனங்கண்டு அவற்றை நிறைவு செய்வதற் கான வணிக சந்தர்ப்பங்களை உருவாக்கி நட்ட இடர்களை முகாமைப்படுத்தி மேற்கொள்ளப்படுகின்ற புத்தாக்கங்களை உருவாக்குகின்ற செயன்முறை முயற்சியாண்மை ஆகும்.




### Entrepreneurship

E - Enthusiastic Vision - மிகுந்த ஊக்கமுடைய தூரநோக்கு

N - Newideas Ornovelty - புதிய கருத்துக்களும் ஆக்க திறனும்

T - Total Commitment - முழுமையான அர்ப்பணிப்பு

R - Result Oriented - பெறுபேற்றை நோக்கி முன்னேறும் செயற்பாடு

E - Empathy - கற்பனாசக்தி

P - Passion - பேரார்வம்

R - Risktaker - நட்ட அச்ச இடரை தாங்குதல்

E - Experience - அனுபவம்

N - Needtoachieve - இலக்கை அடையும் தேவை

E - Endurance - பொறுமை

U -Undertake - எதனையும் செய்து முடிக்க பொறுப்பேற்றல்

R - Resourceful - வளங்கள் நிறைந்தவர்

S - Self - Confidence - தன்னம்பிக்கை

H - Hardworking - கடினவேலை

I - Innovative - புத்தாக்கம் செய்பவர்

P -Persistence - தொடர்ச்சியாக முன்செல்லுபவர்

**முயற்சியாண்மைக்கும் வணிகத்திற்கும் இடையிலான தொடர்பு**

மனித தேவைகளையும் விருப்பங்களையும் இனங்கண்டு அவற்றை பூர்த்திசெய்வதற்கான இடர்களை முகாமைப்படுத்தி புத்தாக்கங்களை உருவாக்கின்ற செயன்முறை முயற்சியாண்மை ஆகும்.

மனித தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவு செய்வதற்காக பொருட்கள், சேவைகளை உற்பத்தி செய்தல், விநியோகித்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய இலாப நோக்குடைய இலாப நோக்கற்ற அனைத்து பொருளாதார கருமங்களும் வணிகம் எனப்படும்.

இதற்கேற்ப முயற்சியாண்மையினூடாகவும் வணிகங்கள் மூலமாகவும் மனித தேவைகள் விருப்பங்களை இனங்கண்டு அவற்றினை நிறைவு செய்வதற்கான பொருட்கள், சேவைகளை உற்பத்தி செய்வதுடன் அதனுடன் இணைந்து சேவைகளில் ஈடுபடுகின்றனர். எனினும் ஒப்பீட்டு ரீதியாக முயற்சியாண்மையின் மூலம் வணிக சந்தர்ப்பங்களை இனம்காணல், இடர்களை முகாமை செய்தல், புத்துருவாக்கங்களை உருவாக்கல் ஆகிய கருமங்களில் மேற்கொள்ளப்படும்.

இதற்கமைய சகல முயற்சியாண்மையும் வணிகங்களாக அமைவதுடன் சகல வணிகங்களும் முயற்சியாண்மையாக காணப்படுவதில்லை. முயற்சியாண்மையின் இறுதி விளைவே வணிகம் ஆகும்.

**முயற்சியாளர் என்பதன் கருத்துக்கள் பற்றி அறிஞர்கள் கூறுகையில்**

**Marriam Webster** அகராதியின் படி, "வணிகம் ஒன்றின் இடரை எடுகோளாக கொண்டு அந்த வணிகத்தினை ஒழுங்குபடுத்தி அதனை முகாமை செய்யும் நபர் முயற்சியாளர் ஆவார்."

## Joseph Shumpeter


நடைமுறையில் உள்ள பொருளாதார முறையினை மாற்றி புதிய மூலப்பொருட்களை தேடி அல்லது புதிய ஒழுங்கமைப்பு முறையினை உருவாக்கி புதிய பொருட்களையும் சேவைகளையும் அறிமுகப்படுத்துகின்ற நபர் முயற்சியாளர் ஆவார்.

**William D.Bygrave**

"சந்தர்ப்பம் ஒன்றை உருவாக்கி அதிலிருந்து நலனைப் பெற அமைப்பொன்றை உருவாக்குபவர் முயற்சியாளர் ஆவார்."

**முயற்சியாளர், முயற்சியாண்மை மற்றும் முயற்சி (Venture)**

இங்கு முயற்சியாளர் என்பது வணிக நிறுவனத்தின் அமைப்பாளராக குறிக்கின்றது. இங்கு முயற்சியாண்மை என்பது, ஏனைய வணிக வளங்களை இணைத்து நடைபெறும் புத்தாக்க செயல் செய்முறைகள் ஆகும். இங்கு முயற்சி என்பது நோக்கத்தை அடையும் வகையிலான தொழிலாகும். இவை ஒன்றுடன் ஒன்று தொடர்பானவை ஆகும். இவற்றை கீழ்வருமாறு காட்டலாம்.




முயற்சியாண்மையை நோக்கம் உடமை, அளவு, சந்தை, அமைப்பு வகை எனும் அடிப்படையில் வகைப்படுத்த முடியும். அண்மைக்காலத்தில் முயற்சியாண்மையின் முக்கியத்துவம் உயர்ந்து வருகின்றது. இவ்உயர்வுக்கு பின்வருவன காரணங்களாக அமைகின்றன. உலகமயமாக்கல் காரணமாக நவீன நுட்ப பயன்பாட்டினால் வணிக நடவடிக்கை மாற்றமடைதல்

வேலைவாய்ப்புகள் உருவாகுதல்

மக்களின் வாழ்க்கை முறையை உயர்த்துதல்

நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துதல்

அருமையான மூல வளங்களை வினைத்திறனான முறையில் பயன்படுத்த பல்வேறு முறைகளை கையாளல்

**முயற்சியாளரின் பண்புகள்**

1. புத்தாக்கம் புனைபவன்
2. பேரார்வம் (Passion)
3. தன்நம்பிக்கை / திடசங்கற்பம் (Self Confident)
4. முன்னுணர்வு (Perceptive)
5. கடின உழைப்பு (Hard Working)
6. நெகிழகூடிய தன்மை (Flexible)
7. ஊக்கமாக செயற்படுதல் (Motivated)
8. வளங்களால் நிறைவுடையவன (Resourceful)

*9.* நட்டப்பொறுப்பேற்றல் / இடரை முகாமைசெய்தல் (Able to manage risk)

*10.* தொடர்ச்சியாக செயலாற்றுதல் (Presistence)

*11.* சந்தர்ப்பத்தை தேடுபவர் / கண்டு கொள்பவர் (Opportunity Seekers)

*12.* நோக்கத்தை அடைவதில் ஆர்வம் (Achievement Oriented)

*13.* நல்லெண்ணம் உடையவர் (Optimistle)

*14.* சுதந்திரமானவன் (Independent)

*15.* பங்கீட்டு கொள்ள விருப்பம் உடையவன் (Desire to share)

*16.* பல்திறன் கொண்டவர் (Multi skilled)

*17.* எதையும் செய்து முடிக்கும் வல்லமை உடையவர் (Ablity to get things done)

*18.* தனியாள் சார்பு கொண்டவர் (People oriented)

*19.* தூர நோக்குடையவன் (Visionary)

**முயற்சியாளிடம் காணப்படும் பண்புகள் (10 D** *கள்*

*1.* Dream *(கனவு)*

*2.* Decisivenses *(தீர்மானம் எடுக்கும் ஆற்றல்)*

*3.* Doers *(துரித செயற்பாடு)*

*4.* Determination *(திடசங்கற்பம்)*

*5.* Dedication *(அர்ப்பணிப்பு)*

*6.* Devotion *(பற்றும் ஈடுபாடும்)*

*7.* Details *(விபரம் / தகவல் பெறல்)*

*8.* Destiny *(விதி / தெய்வசெயல்)*

*9.* Dollars *(பணம்)*

*10.* Distribute *(பங்கீடு)*

**முயற்சியாண்மையின் வெற்றிக்கு தேவையான திறன்கள்** (F9 Characteristics)

*1.* Founder *(அமைப்பாளர் / முன்னோடியாக இருத்தல்)*

*2.* Focused *(குறித்துரைத்தல்)*

*3.* Fast *(விரைவு)*

*4.* Flexible *(நெகிழகூடிய தன்மை)*

*5.* Forever innovating *(தொடர்ச்சியாக புத்தாக்கம் புனைதல்)*

*6.* Flat *(கிடையான)*

*7.* Frugal *(சிக்கனம்)*

*8.* Friendly *(நட்பு)*

*9.* Fun *(மகிழ்ச்சி)*

இவ்வாறாக முயற்சியாண்மையில் ஈடுபட்டுவரும் முயற்சியாளர்களிடம் பல்வேறு பண்புகள் காணப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இன்று முயற்சியாண்

மையை எடுத்து நோக்குவோமானால் பெண்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்க அளவில் வளர்ச்சி கண்டு வருவதை அவதானிக்க கூடியதாக உள்ளது. பெண்கள் பல்வேறு முயற்சிகளில் ஈடுபடுவதுடன் வெற்றிகரமான முயற்சியாளர்களாக செயற்பட்டு வருகின்றனர். இதற்கு பெண்களின் கல்வி அறிவு வளர்ச்சி, குடும்பங்களின் அதிகரித்த பொருளாதார தேவை சமூக மனப்பாங்கு மாற்றம் போன்ற காரணிகள் காரணமாக அமைகின்றன. பெண் முயற்சியாண்மையின் அனுகூலங்களாக குடும்ப வருமானம் அதிகரித்தல், பெண்களின் சமூகமயமாக்கல் தன்மை அதிகரித்தல், பெண்கள் சுயமாக வாழும்நிலை ஏற்படும். நாட்டின் வருமானம் அதிகரிக்கும்

**முயற்சியாண்மை திறன்கள் (Entrepreneurial Skill)**

1. *தலைமைத்துவ திறன்* (Leadership Skill)
2. *ஆளிடை தொடர்புதிறன்* (interpersonal skill)
3. *தொடர்பாடல் திறன்* (Communication skill)
4. *அடிப்படை முகாமைத்துவ திறன்* (Basic management)

**முயற்சியாண்மை செயன்முறை (Entrepernenurship Procers)**

வணிக வாய்ப்புக்களை உருவாக்கி கொள்ளல், அவற்றில் இருந்து பயனைப் பெற்றுக் கொள்ளல், ஒழுங்கமைப்புக்களை உருவாக்கி கொள்ளல் போன்ற கருமங்களின் போது மேற்கொள்ளப்படும் சகல செயன்முறைகளும் முயற்சியாண்மை செயன்முறை எனப்படும்.

முயற்சியாண்மை செயன்முறையின் படிமுறைகள்

புத்தாக்கம் புனைதல் (Discovering)

↓

எண்ணங்களை உருவாக்கலும் வணிக திட்டத்தை தயாரித்தலும் (Concept development pf preparing)

↓

தேவையான வளங்களை பெற்றுக் கொள்ளல் (Resourcing)


↓

செயல்நிலைக்கு மாற்றுதல் (Actralication)

↓

அனுகூலங்களை பெற்றுக் கொள்ளல் (Charresting)

# முயற்சியாண்மை செய்முறையின் ஒரு மாதிரி
# (A Model of the entrepreneurial.



முயற்சியாண்மை ஒன்று வெற்றிகரமாக அமைய வாய்ப்புக்கள், வளங்கள், சிறந்த முகாமை, அடையக்கூடிய எண்ணம், முயற்சியாளர் தன்மை பற்றி நன்கு அறிந்திருத்தல் போன்ற காரணிகள் இன்றியமையாதவையாக உள்ளன. இவ்வாறாக வெற்றிகரமாக இயங்கும் முயற்சியாண்மையினால் பல்வேறு சமூக பொருளாதார நன்மைகளும் ஏற்படுகின்றன.

புதிய தொழில் வாய்ப்புக்கள் உருவாகும்
வருமானத்திற்கான சந்தர்ப்பங்கள் தோன்றும்
புதிய பொருட்கள், சேவைகளை பயன்படுத்த சந்தர்ப்பம் ஏற்படும்
மக்களின் வாழ்க்கை தரம் உயர்வடையும்
நிறைதொழில் மட்டம் உருவாகும்
பிரதேச வளங்களை உற்பத்திக்கு பயன்படுத்தலாம்
புதிய சந்தைகள் அபிவிருத்தி அடையும்.

***Reference :-***

S.Mayuran, "Business studies Book - 2" 2008 pp 219
ஜகத் பண்டார நாயக்க "வணிகக் கல்வி உயர்தரம் பாகம் 01", 2012 pp 187 - 204

# ஊனத்தின் குமுறல்

செல்வி A. அனிஷ்ரா
தரம் 13 (A/L 2019)

ஈரைந்து மாதம் சுமந்து
எனை ஈன்றவள் - இன்று
ஊராரின் பழிச்சொல்லிற்கு
அஞ்சி உதறி தள்ளினாள்

அம்மா நான் செய்த பாவம் என்ன
ஏன் என்னை வீசிச் சென்றாய்
நின்சேய் நான் என - உன்
உள்ளம் மறந்ததேனோ

உன் கருவறையில் உதித்த என்னை
தெருவில் வீசிச் சென்றதேனோ
தாய் பால் ஊட்ட மறுத்தாய்
தாலாட்டவும் மறுத்தாய்

உயிரைத்தந்து உடலைத்தந்த
உனக்கு - அதை
அரவணைக்க தெரியாமல் போன - தேனோ
உன் மகவு நானல்லோ

வலிக்கிறது அம்மா என் மனது
செல்லம் கொஞ்சி தாலாட்டி
அரவணைக்க தாய்மடி
இல்லையே என்று

பிறப்பில் ஊனமாய் போனது
என் தவறா? யார் செய்த தவறு
அல்லது ஈசன் செய்த தவறா
என்பிறப்பில் எது உன்னை பாதித்தது

உன் சேயாய் உதித்ததற்கு
பிச்சைப் பாத்திரம் ஏந்த வைத்ததேனோ
ஒருவாய் சோற்றிற்கு பஞ்சம் வந்ததம்மா
உன் மகவிற்கு

இறைவா ஏன் என்னை படைத்தாய்
இரக்கமே இல்லாத மனிதர்கள் மத்தியில்
இன்பத்திற்கு பதில் துன்பத்தையே
விதைக்கின்றனர் கல் நெஞ்சத்தினர்

இறைமகன் உன்னையே விடவில்லை
கல் நெஞ்ச கயவர்கள்
ஊனம் என்னையும்
விட்டா வைப்பார்கள்

துடிதுடிக்கிறது என் இதயம்
ஊனமாய் பிறந்ததற்கல்ல
இரக்கமில்லாத இவ் உலகிலே
ஊனமாய் அவதரித்ததற்கு....

# Sustainable Development

Miss. Lenta Donald
Grade 13 (A/L 2019)



Sustainable development refers to a model of human development in which resource use aims to meet human needs while preserving the environment so that, these needs can be met not only in the present, but also for generations to come. The term "Sustainable development" was used by the Brundtland Comission in 1987 which coined what has become the most aften quated definition of sustainable development.

"Development that meets the needs of thee present without compromising the ability of future generations to meet their own needs"

Sustainable development does not focus solely on environment al issues. The United Nations 2005 World summit outcome document refers to the four "Interdependent and mutually reinforcing pillars" of Sustainable Development as including

**i) Economical Sustainable development**
It is the ability of an economy to support a defined level of economic production indefinitely.

**ii) Social Sustainable development**
It is the ability of a community to develop processes & structures which not only meet the needs of it's current members but also support the ability of future generations to maintain a healthy community.

**iii) Environmental Protection**
It is a state in which the demands placed on the environment can be met without reducing it's capacity to allow all people to live well, now & in the future.

Proponents of sustainable development argue that it provides a context in which over all sustainability is improved where cutting edge. Green development is unattainable

for example, a cutting edge treatment plan with extremely high maintenance costs may not be sustainable in regions of the world with fewer financial resources.

Environmental Sustainability is the process of making sure that the current process of interaction with environment is pursued with the idea of keeping the environment as pristine as naturally possible based on ideal seeking behaviour. An "Unsustainable situation" occurs when natural capital (the sum total of nature's resources) is used up faster than it can be replenished. There fore the long term result of environmental degradation is the inability to use in human life.

**How Can sustainable development be achieved?**

1. To eradicate extreme poverty and hunger
2. To achieve universal primary education
3. To promote gender equality
4. To improve mental health

**The Goals**

The SDGS are part of a break through global agreement called the 2030 Agenda, adapted at the United nations on sept 25, 2015. It's purpose : to transform the world.

**Here are the 17 goals**

1. End poverty in all its forms every where
2. End hunger, achieve food security and improved nutrition and promote sustainable agriculture
3. Ensure healthy lives and promote well being for all at all ages.
4. Ensure inclusive and quality education for all and promote life long learning
5. Achive gender equality and empower women and girls
6. Ensure access to water and sanitation for all
7. Ensure access to affordable, reliable. sustainable and modern energy for all
8. Promote inclusive and sustainable economic growth, employment and decent work for all
9. Build resilient infrastructure, promote sustainable industrialization and faster.
10. Reduce inequality within and among countries
11. Make cities inclusive, safe, resilient and sustainable

12. Ensure sustainable consumption and production patterns
13. Take urgent action to combact climate change and its impacts
14. Conserve and sustainably use the oceans, Seas and marine resources
15. Sustainably manage forests, combact desertificaiton, halt and revers land degradation halt biodiversity loss.
16. Promote just, peaceful and inclusive societies
17. Revitalize the global parnership for sustainable development

**Reference :**


United nations "The sustainable development goals Report " Newyork , 2017

Ottman, Jacquelyn "The new rules of green marketing" Taylort franics, 2017

# Unfinished Business



Miss. E. Andria
Grade 13 (A/L 2019)

Is this it?
The sight of a finish line,
despite all those nights sipping wine,
coming closer
Has anyone ever kept running even
after the race was over?

Is this it?
Echoing in the back of my mind
hushed denials with each squeezing
embrace
Every Potion leading to a bitter after
taste
So I leave these aching memories with haste

Is this it?
My frustration escaped through exhaled
sighs
while you place your hands on my trembling
thighs
Blue, deeper than the ocean, colored
Our sad faces
Because an Orange dream was about to reach its demise

Is this it?
My heart tries to argue:
It cannot be
for every end is a new beginning
with a twist of fate's hand, something
has to brewing
Perhaps lead us back to what was once

felt that was lost as of late
History repeats, a wise folk has once told me,
Make that brave leap & just keep faith
Is this it?
meet me again
After you close your eyes, Please I
implore, count to ten
Drift into a dream and meet me
there
until oneday you don't have to close
your eyes
One day we will be nose to nose under
the same orange skies

# இணையப் பாவனையும் இன்றைய மாணவர்களும்



செல்வி U. ஆன் சௌமியா
தரம் 13 (A/L 2019)

இணையப் பாவனையும் இன்றைய மாணவர்களும் கட்டை வண்டி இல்லாவிட்டால் கால் நடை என்று இருந்த ஆரம்ப கால மனிதன் இன்று தனது காலைச் சாப்பாட்டை கனடாவிலும் மதியச்சாப்பாட்டை லண்டனிலும் இரவுச் சாப்பாட்டை பிரான்சிலும் சாப்பிட்டு விட்டு நிலவை நோக்கி பயணிக்கின்றான் காரணம் இன்றைய தொழில்நுட்பமும் வளர்ந்துள்ளமையே ஆகும்.

உலக வலைப்பின்னல் இணையம் ஆகும். உலகில் எந்த மூலையில் என்ன நடந்தாலும் கண்முன்னே கொண்டு வரும் சிறப்பு வாய்ந்தது இணையம் ஆகும். இவ்வுலகம் மிக வேகமாக ஓடிக் கொண்டிருக்கின்றது. இவ் உலக ஓட்டத்திற்கு அமைவாக நாமும் இசைந்து ஓடவேண்டிய கட்டுப்பாடு உள்ளது. இல்லையேல் நாமும் பின் தள்ளப்பட்டுவிடுவோம். உதாரணமாக பல்கலைக்கழகம் முடித்து வேலைக்காக ஒரு மாணவன் காத்துக்கொண்டு இருக்கும் வேளையில் வேலைக்கான விண்ணப்பம் கோரப்படல் பரீட்சை நடக்கிறது. பல்கலைக்கழகம் முடித்த மாணவன் அந்த வேலையை பரீட்சை எழுதிப் பெறவேண்டி இருக்கிறது. ஆனால் அந்த சாதாரண மாணவனோ **Online** இல் இலகுவாக எழுதி குறித்த வேலையை இலகுவாக பெறுகின்றான். இன்றை உலகம் தொழில்நுட்பத்திற்கே முக்கியத்துவம் கொடுக்கின்றது இருந்தாலும் **Online Exam** முறை மாணவர்களுக்கு இன்றியமையாத ஒன்றாகும்.

அதிலும் மாணவர் என்ன விதிவிலக்கா? இணையப் பாவனை தேவைப்படும் பெரும்பானோரில் மாணவரும் முக்கிய பங்களிக்கின்றனர். இணையத்தள பாவனை மூலம் மாணவரிடையே தேடும் திறன் மேலும் விரிவாக்கப்பட்டு அகராதியின் ஆதிக்கம் குறைந்து மாணவர்கள் இணையத்தளத்தையே அதிகம் பயன்படுத்துகின்றனர். ஆரம்ப காலங்களில் ஆங்கில மொழியில் மாத்திரம் காணப்பட்ட இணையதளமானது இன்று பல மொழிகளில் பாவனை செய்யகூடிய வசதி மேலும் பயனளிக்கிறது. இதன் மூலம் மாணவர்களின் தொழில்நுட்ப அறிவு கூடுதலாக வளர்ச்சியடைகின்றது.



இணையத்தளத்திலே முக்கியமானதொரு பங்கினை வகிப்பது முகப் புத்தகம் என்பதாகும். இது அமெரிக்க பல்கலைக்கழக மாணவர்களால் வடிவமைக்கபட்டதாகும். இதன் ஆதிக்கம் இன்று

மாணவர் மத்தியில் உக்கிரதாண்டவம் ஆடுகிறது இருப்பினும் முகப்புத்தகமானது மாணவர்களின் வளர்ச்சிக்கு முற்றிலும் தடையாக அமையும் என்று கூறிவிடமுடியாது. முகப்புத்தகத்தின் மூலம் அவசர செய்திகளைப் பரப்ப முடியும் ஏனைய நபர்களுடன் நாம் அறியாத பல பொதுஅறிவுகள் நாளாந்தம் அறிய முடியும். முக்கியமாக நோயினால் பீடிக்கப்பட்டு குணப்படுத்த பணவசதி இல்லாமல் இருந்த பலரை இனங்காட்டி அவர்களை சுகதேகிகளாக மாற்றிய சம்பவங்களும் உள்ளன. பல்வேறுபட்ட சமூக சீரழிவுகளுக்கான விடைகளை மக்களிடம் கருத்துக் கணிப்பு போன்ற முறை மூலம் முகப்புத்தகத்தில் பரப்பியமை வியக்க வைக்கிறது.

ஒரு நாணயத்துக்கு எவ்வாறு இரண்டு பக்கங்களோ அவ்வாறே ஒரு விடயத்துக்கு நன்மை, தீமை என்ற இரண்டு விடயப்பரப்புக்கள் உள்ளன. முகப்புத்தகத்தில் ஏற்பட்ட நன்மைகளை பார்த்தாலும் தீமைகளை ஆராய வேண்டிய தேவை நமக்கு உள்ளது. அதாவது மாணவர்களிடையே சோம்பல் தனம் தோன்றுதல், வாசிப்புத்திறன் குறைவடைதல், மாணவர்களின் பொழுதுபோக்கு பாதிப்படைதல், மாணவர்களிடையே காணப்படும் அன்பு கருணை போன்ற நற்குணங்கள் படிப்படியாக குறைவடைதல் போன்றவற்றைக் கூறலாம். மாணவர் முகப்புத்தகத்திற்கு அடிமையாவதன் மூலம் மாணவர்களின் சுயஆற்றல் திறன் குறைந்து கல்வியில் கவனம் செலுத்தாமையால் கல்வி நடவடிக்கைப் பாதிப்படைகின்றன என்பதே பெரும்பாலான ஆசிரியரின் கருத்தாகும். கழிவு பொருட்கள் கிடைக்கப் பெற்ற ஒருவர் அதனை பொருளாக உருவாக்குவதும் கழிவாக குப்பையில் போடுவதும் அவரது சிந்தனை ஆற்றலை பொறுத்ததே. அவ்வாறே முகப்புத்தகத்தைப் பாவிக்கும் மாணவர்கள் அவற்றை தீயவழியில் பயன்படுத்துவதும், நல்வழியில் பயன்படுத்துவதும் அவர்களை பொறுத்ததே.

எனவே இணையத்தளத்தை தீயவழியில் பயன்படுத்துவதை நிறுத்தி நல்வழியில் பயன்படுத்தி சமூகத்தை மிகவும் அறிவு வாய்ந்த சமூகமாக மாற்றுவோம் எனும் நம்பிக்கையை வளர்த்து கொள்வோம். இதன் மூலம் இணையத்தளம் எம்மை வளர்க்கும் ஏணிப் படிகளே அன்றி வளர்ச்சியைத்தடுக்கும் தடைக்கற்கள் அல்ல என்பதை எம்முடைய அனைவரினதும் மனதில் வளர்த்துக் கொள்வோம்.

# காலம் மாறிப் போச்சு!



செல்வி எஸ். சிபோறா
தரம் 13 (A/L 2019)

காலம் மாறிப் போச்சு
மகத்தான மானிட யுகத்தின்
வாழ்க்கைக் கோலங்களும்
மாறிப் போச்சு

குழந்தை தொட்டிலிலே
ஆயா அடுப்பங்கரையிலே
பெற்றெடுத்த அன்னையோ
அவசர வேலை உலகினிலே

அன்னை நிலாவை
வானில் காட்டி
சோறு ஊட்டினாள் - அன்று
கைப்பேசியில் நிலாப்பாட்டு
போட்டு விட்டு
சோறு ஊட்டுகிறாள் - இன்று

வெளிநாட்டு உறவுகள்
தூரமாக இருந்தார்கள் - அன்று
வைபர், வாட்ஸ்அப் - என
ஒரு நொடியினிலே
அருகில் இருக்கிறார்கள் - இன்று

பணத்தைக் கொடுத்து
கொள்வனவு செய்தான் - அன்று
பண அட்டைகளைக் கொடுத்து
கொள்வனவு செய்கின்றான் - இன்று

மனிதனின் கால்கள் என்ன நிறம்
என்று தெரியாது - அன்று
முழங்கால்கள் கூட என்ன நிறம்
என்று தெரிகிறது - இன்று

புகைப்படம் கூட
இல்லாத காலம் - அன்று
செல்பி இல்லாமல்
வாழ்க்கை இல்லை
என்று கூறும் காலம் - இன்று
பரந்த உலகம்
என்று வியந்து பார்த்தான்
மனிதன் அன்று அந்த உலகமே
தமது கைக்குள்ளே
என இலகுவாக
கூறுகின்றான் இன்று

மாற்றம் ஒன்றே
மாறாதது என்ற போது
காலம் மட்டும் விதிவிலக்கா
மாறாமல் இருக்க?
காலமும் மாறிப் போச்சு!



# வணிக தளிரே! நீ வாழி!



செல்வி ஞா. மேரி மாலதிக்கா
தரம் 13 (A/L 2019)

துள்ளித் திரியும் பள்ளிப் பருவத்தில்
பக்குவமாய் பதினொரு ஆண்டுகள் நிறைவேறி
தெரிவு பரீட்சையில் சித்தியடைந்து
போட்டி பரீட்சையை எதிர்நோக்க
வணிகத்துறையை தேர்ந்தெடுத்து
கணக்கீடு, பொருளியல், வணிகக் கல்வியுடன்
தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்
எனும் பாடங்களை தெரிந்தெடுத்து
கல்வியை கற்க தொடங்கிய வேளை...

நான்கு பாடங்களும் நன்றாக நாம் கற்க
பல்வேறு விடயங்களுடன் பாடவிடயங்களையும் - உள்ளடக்கி
பரீட்சை சித்தி திறமைச் சித்தியாக மாற - நீ
தந்த தகவல்கள் சொல்லில் அடக்க முடியாதவை

பாடவிடயங்களை நன்றாக கற்றால் மட்டும் போதாது - என்று
இன்று உலகில் நடக்கும் ஒவ்வொரு வணிக
விடயங்களையும் அடிப்படை அறிவில்லாத - மனிதன்
கூட அறிய வேண்டும்
நீ கொண்ட தகவல்கள் எண்ணற்றவை என

நாம் தமிழில் மட்டுமல்ல ஆங்கில அறிவிலும்
அதிகம் வளர நீ ஆனாய் ஏணியாக
எம் அறிவு தளிர்க்க உன்னை அர்ப்பணித்த
வணிகத்தளிரே - என்றும்
நீ பல கிளைகள் பரப்பி அனைவரும் - உன்
நிழலில் வாழ வாழ்த்துகின்றோம்.

# வணிகங்களின் சமூகப்பொறுப்பு



செல்வி அ. அண்டோனிக்கா
தரம் 13 (A/L 2019)

வணிகங்கள் தமது நோக்கத்தை நிறைவு செய்யும் அதேவேளை சமூகத்தின் தேவைகளை நிறைவேற்றி சமூகத்திற்கும் சூழலிற்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் வணிக ஒழுக்கத்துடன் செயற்படல் வணிகத்தின் சமூகப்பொறுப்பாகும்.

**சமூகப்பொறுப்பு தொடர்பாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வரைவிலக்கணம்**

### World business council for sustainable development

முழுமையான சமூகத்தினமும், ஊழியர்களினதும், அவர்களது குடும்பங்களினதும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும், நாட்டின் பொருளாதார விருத்திக்குப் பங்களிப்புச் செய்கின்றதும் ஒழுக்க சீலர்களாக நடந்து கொண்டு தொடர்ச்சியாக வணிகத்தின் வாழ் தன்மைக்கு அர்ப்பணிப்புச் செய்தல் வணிகங்களின் சமூக ரீதியான பொறுப்பாகும்.

### Mallen Baker

"சமூகத்தில் நேரான தாக்கமொன்றை உருவாக்குவதற்கு வணிகச் செயற்பாடுகளை எவ்வாறு முகாமைத்துவம் செய்வது என்பது தொடர்பான கருத்தொன்றே சமூகப் பொறுப்பாகும்".

### Narayan Murthy

"வாடிக்கையாளர், ஊழியர், சமூகம், அரச, சூழல் போன்ற அனைத்து அக்கறை செலுத்தும் பிரிவினர்களுக்கும் நியாயமான வகையில் கருமமாற்றி பங்காளர்களுக்கு உச்சப் பெறுமானமொன்றை உருவாக்கிக் கொடுப்பதே சமூக ரீதியான பொறுப்பாகும்.

**வணிகத்தின் சமூக ரீதியான பொறுப்புக்கள் தொடர்பாக பல்வேறு நாடுகளினால் முன்வைக்கப்பட்ட வரைவிலக்கணங்கள்**

- **ஐக்கிய அமெரிக்க குடியரசு (USA)**

  "தனது வணிக நடவடிக்கைகள் தொடர்பாகவும் அதன் மூலம் சமூகத்திற்கு ஏற்படும் தாக்கங்கள் தொடர்பாகவும் தனிப்பட்ட ரீதியிலான வணிகப் பொறுப்புக்கள் சமூகப் பொறுப்புக்களாகும்".

**பிலிப்பைன்ஸ்**

"வணிக சமூகத்திற்கு மீள வழங்கப்படுபவைகளே" சமூக ரீதியான பொறுப்பாகும்.

**தாய்வான்**

இலாபம் உழைப்பதற்கு மேலாக இயற்கையினதும் மனித மூலதனத்தினதும் அபிவிருத்திக்கான வணிகங்களின் பங்களிப்பு சமூக பொறுப்பு என அழைக்கப்படும்.

**பிரேசில்**

"மக்களிற்கு நல்ல பொருளாதார விருத்தியை உருவாக்குவதற்கு அர்ப்பணித்தல் ஊழியர்களுக்கு மதிப்பளித்தல், ஊழிய ஆற்றலை விருத்தி செய்தல், சூழலை பாதுகாத்தல் வணிக விழுமியங்களை கடைபிடித்தல் போன்றவற்றுடன் வணிகத்தை விருத்தி செய்வதற்கான கட்டமைப்பின் ஆக்கம் சமூகப் பொறுப்பாகும்.

**சமூகப்பொறுப்பு தொடர்பாக UNO கூறிய முக்கிய விடயங்கள்**

மனித உரிமைகள், ஊழிய உரிமைகள், சூழல் பாதுகாப்பு, சமூக சேவைகள்

வணிகத்தின் மீது அக்கறை செலுத்தும் பிரிவினர்களுக்கும், பொதுவாகச் சமூகத்திற்கும் அழுத்தங்களை ஏற்படுத்தும் காரணிகள் பல வளர்ச்சியடைந்த வண்ணம் உள்ளதைத் தற்போது காணக்கூடியதாக உள்ளது. என்பதற்கான காரணம் / சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டிய தேவை அதிகரிப்பது)

வணிகப்போட்டி


பூகோளமயமாதல்

இலத்திரனியல் வணிகம்

சூழல் மாசடைதல்

**வணிகமொன்றினால் சமூக ரீதியான பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டிய பிரிவினர்களும் அதற்கான உதாரணங்களும்**

- வாடிக்கையாளர்
- ஊழியர்
- உரிமையாளர்
- சமூகம்




**சமூகப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படுவதன் மூலம் வணிகத்திற்குப் பல்வேறு நலன்களைப் பெற்றுக் கொள்ள முடியும் அத்தகைய சில நலன்கள்**

- வணிகத்தின் வாழ்தன்மை உறுதிப்படுத்தல்
- வணிகத்தின் நன்மதிப்பு விருத்தியடைதல்
- வணிகம் தொடர்பான நம்பகத்தன்மை உறுதி செய்யப்படுதல்
- வாடிக்கையாளர்களைத் திருப்திப்படுத்த முடிதல்
- வணிகத்தின் நோக்கம், குறிக்கோள்கள் என்பவற்றை நிறைவேற்றுவது இலகுவாயிருத்தல்

**அனைத்துப் பிரிவினர்களினதும் எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வகையில் சமூக ரீதியான பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு ஊக்குவிக்கப்படும் முறைகள்**

* வாடிக்கையாளர்களுக்குச் சமூகரீதியான பொறுப்புக்களை நிறைவேற்றும் பொழுது அதாவது சேதம் குறைவான பொருளொன்று / சேவையொன்றை நியாயமான விலைக்குப் பெற்றுக் கொடுக்கும் பொழுது ஊழியர்களுக்கு அவர்களது தொழில்சார் உரிமைகளையும் ஏனைய வசதிகளையும் பெற்றுக் கொடுத்தல், உரிமையாளர்களுக்கு போதியளவிலான பொருளாதார அனுகூலங்களை பெற்றுக் கொடுப்பது மட்டுமன்றி சமூகத்திற்குச் சூழலை நேசிக்கக் கூடியதாக கருமமாற்றுவதன் மூலம் ஏனைய பிரிவினர்களுக்கும் பாதகமான நிலைமையொன்று ஏற்படாத வகையில் சகல பிரிவினர்களினதும் எதிர்பார்ப்புக்கள் நிறைவேற்றப்பட வேண்டும்.

* ஊழியர்களின் சமூக ரீதியான பொறுப்புக்கள் பாதுகாக்கும் பொழுது அதாவது அவர்களுக்கு நியாயமான உழைப்பொன்றை / இலாபமொன்றைப் பெற்றுக் கொள்ளும் போது ஏனைய பிரிவினர்களுக்கும் அதாவது வாடிக்கையாளர்களுக்கும் நியாயமான விலையில் பொருள்களைப் பெற்றுக் கொடுத்தல் சமூகத்திற்குச் சனசமூக நலனோன்புச் சேவைகளை வழங்கலும், ஊழியர்களின் தொழில்சார் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் ஏனைய வசதிகளை ஒழுங்கமைத்தல் மூலமும் அவ்வொவ்வொரு பிரிவினரிலும் சமூகப் பொறுப்புக்களும் பாதுகாக்கப்படல் வேண்டும்.

# The Intelligent system

Miss. R. Percy Sujeeva
Grade 13 A/L 2019



An Intelligent system is anything that contains a functional although not usually general purpose. Computer with Internet connectivity and an embedded system may be powerful and capable of complex processing and data analysis, but it usually specialized for tasks relevant to the host machine . As such although they are typically spoken of in terms of devices, intelligent systems include not just intelligent devices but also inter connected collections of such devices, including networks and other types of larger system.

Intelligent systems exist all around us In POS terminals, digital televisions, traffic lights, smart meters, auto mobiles, digital sign age and airplane controls among great number of other possibilities Built in intelligence is an integral component of the developing (IOT) Internet of things in which almost everything imaginable can be provided with unique; identifiers and the ability to automatically transfer data over a network without requiring human to human or human to computer interaction.

Now AI is going to help us make sense of that insight to that customer, that prospect that they can gra into from that stream of information. Artificial intelligence is an area of computer science that emphasizes the creation of intelligent machines that work and react like humans. Some of the activities computers with artificial intelligence are designed for include speech recognition learning. Machine learning is an application of artificial intelligence (AI) that provides systems with the ability to automatically learn and improve from experience without being explicitly programmed

Types of AI
ANI (Artificial Narrow Intelligence)
AGI (Artifical General Intelligence)
ASI (Artifical Super Intelligence)

The applications of AI system are
Optical character recognition
Speech recognition
Face recognition


Artificial creativity
Hand writhing recognitions
Virtual reality and Image processing
Photo and video Manipulations
Computer vision
Diagnosis

Though current AI systems are not nearly smart as a person but it soon possible.

**Latest Technologies used in AI are**

* Machine learning
* Virtual Agents
* Decision Management
* Biometric
* Deep Learning platforms
* Robotic process Automation (RPA)

List of examples that define AI
- Manufacturing
- Health care
- Financial services
- Consumer goods
- Creative arts
- Media
- Energy
- Retail



**Consumer goods**

Companies understand that intelligent systems are now the keys to the kingdom in terms of competitive edge, There's no denying that data intelligence in business is critically important.

**Creative arts**

Current state of art designing and implementing real time, intelligent computing to robotics, alert systems, IOT remote access control multi agent systems, cloud computing, streaming data and many other applications areas.

**Usage of AI in Medicine...**

Medical artificial intelligence mainly uses computer techniques to perform clinical diagnoses and suggest treatments AI has the capability of detecting meaningful relationships in a data set and has been widely used in many clinical situations to diagnose, treat and predict the results.

**Usage of AI in computer vision**

Computer vision is the science and technology of machines that see other parts which sometimes are described as belonging to AI and which are used in lerlation to computer vision is pattern recognition and learning techniques.

**- Onboard Intelligence**

OI is the use of AI that is housed locally in the device it operates

**-Threat Intelligence**

TI also known as a cyber threat intelligence (CTI) is organized, analyzed and refined information about current / potential attacks.

**- Vehicle Intelligence**

VI is the application of sensors mechatronics and AI to enhance vehicles or make them fully autonomous.

**- Clinical business Intelligence**

CBI is the application of data analytics to medical records through various systems to improve medicle care.

**- Intelligent Manufacturing Systems**

IMS is the name of an international organization devoted to developing the next generation of manufacturing

**ITS**

Intelligent transportation system. ITS is the application of sensing analysis, control and communications technologies to ground transportation.

**Augmented Intelligence**

AI is an alternative conceptualization of artificial intelligence that focuses on AI'S assistive role, emphasizing the fact.

**Intelligent agent**

IA is an AI hardware and software system with some degree of autonomy and the capacity to make decisions and take actions.

# சிறுவணிகம்
# Small Business

செல்வி E. ஜினோஷா
தரம் 13 (A/L 2019)



சிறுவணிகம் என்பது குறைந்தளவு மூலதனத்துடன் குறைந்த எண்ணிக்கையுடைய தொழிலாளர்களையும் சக்தியை பயன் படுத்தி வணிக நடவடிக்கைகளில் ஈடுபடும் வரையறுக்கப் பட்ட சந்தையினை கொண்ட வணிகமாகும். சிறிய வணிகங்களின் சந்தை பங்கானது குறுகியதாக காணப்படுவதுடன் தேசிய ரீதியில் வரையறுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

அளவுசார் பிரமாணங்கள், பண்புசார் பிரமாணங்கள் ஈடுபடுத்தப்படும் மூலதனத்தின் அளவு, முதலீடு, ஊழியர் எண்ணிக்கை சக்தி வலுப்பயன்பாடு, நிலையான சொத்து மீதான முதலீடு, வருடாந்த இலாபமும் புரள்வும் உற்பத்தி இயலளவு பயன்படுத்தப்படும் தொழினுட்பததின் தன்மை நிறுவனத் தொழிற்பாட்டின் தன்மை அமைப்பு சார் தன்மை முகாமையும் சந்தையின் தன்மை போன்றவை சிறுவணிகங்களை இனம் காண்பதற்கு ஏற்று கொள்ளப்பட்ட பிரமாணங்களாகும்.

முயற்சியாளர் ஒருவர் சிறுவணிகம் ஒன்றை ஆரம்பிக்க முன்பு கருத்திற் கொள்ள வேண்டிய காரணிகளாக தொழிலின் நன்மை, எதனை உற்பத்தி செய்தல், விற்பனை செய்தல், மூலதன அளவு நிறுவன அமைப்பின் தன்மை, தேவைப்படும் இருப்பின் அளவு, தேவைப்படும் உபகரணங்கள், தொழிலாளர் வசதி, நாட்டில் காணப்படும் சட்டதிட்டங்கள், போட்டி நிறுவனம் பற்றிய தகவல், நுகர்வோர் தன்மை, அரச ஆதரவு அல்லது ஊக்குவிப்பு, எதிர்கால வளர்ச்சி மற்றும் சுயமதிப்பீடு என்பவை கவனத்தில் கொள்ளப்படுகின்றது.

பாரிய வணிகங்களுடன் ஒப்பிடும் போது சிறுவணிகங்களில் அனுகூலங்களாக பின்வருவன காணப்படுகின்றன. அவை குறைந்தளவு மூலதனம் போதுமானது உற்பத்தி தரம் உயர்வானது, வாடிக்கையாளருடன் நேரடி தொடர்பு, சிறப்பு தேர்ச்சி பெற்றவை, அதிகளவு நெகிழ்வுடையது, அரச ஊக்குவிப்பு திட்டம் அதிகம், பிரதேச வளங்களை பயன்படுத்தல், உற்பத்தி தரம் உயர்வு, புதிய வடிவங்கள் உருவாகும் தன்மை போன்றவை காணப்படுகின்றது.

சிறுவணிகங்களில் பல்வேறான நன்மைகள் காணப்பட்டாலும் பிரதிகூலங்களும் காணப்படுகின்றது.

1. வரையறுக்கப்பட்ட உற்பத்தி
2. வரையறுக்கப்பட்ட நிதிமூலம்
3. உற்பத்தி கலவை வரையறுக்கப்பட்டவை

4. தொழினுட்ப பயன்பாடு வரையறுக்கப்பட்டது
5. சந்தைப்படுத்தல் தொடர்பான பிரச்சனை

சிறுவணிகம் ஒன்றை உருவாக்கி கொள்வதற்கான அவசியமான காரணிகளாக தனது வணிகம் தொடர்பான அறிவு, முகாமைத்திறன், மூலதன தேவைப்பாடு தொடர்பான அறிவு, சந்தை தொடர்பான அறிவு, உற்பத்தி பொருள் தொடர்பான அறிவு, சிறந்த விற்பனை சேவை வலைப்பின்னல் நுட்பங்கள் தொடர்பான அறிவு போன்றவை காணப்படுகின்றது.

சிறுவணிகர் ஒருவர் இட அமைவைத் தெரிவு செய்யும் போது கருத்தில் கொள்ள வேண்டிய காரணிகளாக

1. சூழலும் சூழல் தொடர்பான சட்டம்
2. மூலப்பொருட்களை பெற்றுக் கொள்ள கூடிய வசதி
3. ஊழியர் பெற்று கொள்ள கூடிய வசதி
4. உட்கட்டமைப்பு வசதி
5. துணைச்சேவை வசதிகள்
6. சந்தை வாய்ப்பு
7. மூலதனம் என்பவை காணப்படுகின்றன.

இலங்கை பொருளாதார அபிவிருத்திக்கும் சிறுவணிகங்கள் பெரிதும் உதவுகின்றது. வேலைவாய்ப்பு உருவாகுதல், வருமான சமனின்மையும் வறுமை நிலை குறைதல், பாரிய வணிகம் ஈடுபடாத முயற்சியில் ஈடுபடல், தொழிலாளர் நகர்வதை தடுத்தல், வளம் பூரணமாக பயன்படுத்துதல், பொருளாதார வளர்ச்சி, வெளிநாட்டு செலாவணி போன்ற நன்மை தரக்கூடியவை சிறுவணிகம் மூலம் ஏற்படுகின்றது.

இலங்கையில் காணப்படும் பிரதான பிரச்சனையான வேலையின்மை பிரச்சனைக்கு தீர்வு காண்பதில் பாரியளவு வணிகங்களை காட்டிலும் சிறுவணிகம் அதிகளவு பங்களிப்பு செய்கின்றன. பாரியளவிலான வணிகங்கள் நவீன தொழினுட்பத்துடன் இலாபம் தரக்கூடிய சந்தர்ப்பத்தில் மட்டுமே ஊழியச் செறிவான உற்பத்தி நுட்பங்களில் அக்கறை காட்டுகின்றன. ஆனால் சிறு வணிகங்கள் ஊழிய செறிவுடைய உற்பத்தி நுட்பங்களையே அதிகளவு பயன்படுத்துவதனால் சிறு வணிகங்களே வேலைவாய்ப்பிற்கு பங்களிப்பு செய்கின்றன.

இலங்கையின் முக்கிய பிரச்சனையான வறுமை பிரச்சனைகளும் சிறுவணிகம் மூலம் தீர்வு காணப்படுகின்றது. பயன்படுத்தப்படாத பிரதேச வளங்களை பயன்படுத்துவதன் மூலம் வேலைவாய்ப்பு அதிகரித்து உள்நாட்டு உற்பத்தி மட்டம் அதிகரித்து மக்களின் வருமான மட்டம் அதிகரித்து வறுமை குறைக்கப்படுகின்றது.

இலங்கையில் சிறுவணிகங்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளாக பின்வருவன காணப்படுகின்றது.

1. வணிக திட்டம் ஒன்று காணப்படாமை
2. உட்கட்டமைப்பு வசதிபோதாமையால் அவற்றை பெறுவதற்கு கிரயம் அதிகரித்தல்
3. பாரம்பரிய சந்தை நுட்ப முறையை பயன்படுத்துவதால் நடைமுறை சந்தை சவாலை எதிர்நோக்க முடியாமை
4. முகாமைத்துவ திறன் குறைவாக காணப்படுவதால் வணிகத்தை சிறப்பாக கொண்டு நடாத்த முடியாமை
5. சிறந்த திறன் மிக்க ஊழியரை பெற்று கொள்வது கடினம்

சிறுவணிகம் எதிர்நோக்கும் பிரச்சனையை தீர்க்க அரசு பல நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. அவை பல்வேறு கடன் வசதிகளை நடைமுறைப்படுத்தல், ஊழியர் பயிற்சி திட்டத்தை நடைமுறைப்படுத்தல், சந்தை வாய்ப்பை இனம்காண உதவுதல், பொருளின் தரம் தொடர்பான அறிவுரை வழங்கல், உட்டமைப்பு வசதி வழங்கல் ஆகும்.



# கொடுக்கல் வாங்கல்களில் கடனட்டைப் பயன்பாடு
# (Use of the credit Cards in transactions)

செல்வி T. திலக்சனா
தரம் 13 (A/L 2019)



கடனட்டை என்பது ஒரு வங்கி அல்லது நிதி நிறுவனத்தினால் அதனுடைய வாடிக்கையாளருக்கு வழங்கப்படும் ஒரு பிளாஸ்டிக் அட்டை ஆகும். அந்தக் கடனட்டையை பயன்படுத்தி அந்த வாடிக்கையாளர் பொருட்கள் சேவைகளை வாங்கமுடியும். அதன்பின்னர் ஒரு குறிப்பிட்ட திகதிக்குள் அந்த வாடிக்கையாளர் தான் வாங்கிய பொருள் அல்லது பெற்ற சேவைக்கான கட்டணத்தை செலுத்த வேண்டும், ஆகவே கடனட்டையை பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்தலாம்.

"கடனுக்கு பொருட்கள் சேவைகளை கொள்வனவு செய்வதற்கு பயன்படுத்தப்படும் இலத்திரனியல் அடடை கடனட்டை எனப்படும்".

**கடனட்டையை பெறமுன்னர் கவனத்தில் கொள்ள வேண்டிய காரணிகள்**

**1. சேர்க்கை கட்டணம் (Subscription fee)**

ஒரு சில ஆண்டுகளுக்கு முன் வரலாறு எனக் கருதப்பட்ட நிகழ்வுமாறி நிகழ்வுக்கு வந்து விட்டது. அந்த நிகழ்வுகள் 2009 க்கு பிறகு தெரிய ஆரம்பித்தது. சந்தையில் உள்ள பல அட்டைகளுக்கு சேர்க்கை கட்டணம் என்று எதுவும் இல்லை. எனினும் நீங்கள் ஒரு கடனட்டை வாங்கும் முன்னர் அதை ஆராய்ந்து பார்த்து முடிவெடுங்கள்.

**2. ஆண்டுக் கட்டணம் (Annual fee)**

கடனட்டைகளுக்கு நீங்கள் ஒவ்வொரு ஆண்டும் அந்த ஆண்டிற்குரிய கட்டணத்தை செலுத்த வேண்டும். நீங்கள் இலவச கடனட்டை என்கின்ற சொல்லை எங்கேனும் கண்ணுற்றால் அது பொதுவாக இலவச சேர்க்கை கட்டணம் மற்றும் இலவச முதலாம் ஆண்டு கட்டணத்தை குறிக்கும். நீங்கள் இரண்டாம் ஆண்டு முதல் ஆண்டுக் கட்டணத்தை செலுத்த வேண்டும். எனவே இதனை நன்றாக நினைவில் நிறுத்திக் கொண்டால் பின் நாட்களில் வரும் குழப்பங்களிலிருந்து விடுபடலாம்.

**3. வெகுமதி புள்ளிகளை நீங்கள் விரும்பிய கடை அல்லது சேவை வழங்குநரிடம் பணமாக மாற்றிக் கொள்ளும் வசதி**

நீங்கள் அடிக்கடி விமானப் பயணம் மேற்கொள்ளும் நபர் அல்லது அடிக்கடி ஒரு தொடர் சங்கிலி கடையில் பொருள் வாங்கும் நபர் எனில் உங்களுக்கு ஏற்ற ஒரு கடனட்டையை தேர்ந்தெடுக்கலாம். அவ்வாறு செய்வதன் மூலம் உங்களுக்கு நீங்கள் அடிக்கடி வாங்கும் கடையின் காரணமாக அதிகமான வெகுமதிப் புள்ளிகள் கிடைக்கும் அதோடு உங்களுடைய வழக்கமான பிற செலவுகளுக்குரிய வெகுமதி புள்ளிகளும் தடையின்றி கிடைக்கும்.

**4. செலுத்தப்படாத தொகை மீதான வட்டி**

நீங்கள் சரியான காரணங்களுக்காக கடனட்டையை பெற்றுக் கொள்கின்றீர்களா என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஏனெனில் கடனட்டை மிகவும் குறுகிய கால கடன் சார்ந்த விற்பனைக்கு மட்டுமே உகந்தது. நீண்ட கால விற்பனை மற்றும் அதி கூடிய பணப் பரிமாற்றத்திற்கு இதில் மிகவும் அதிக வட்டி விதிக்கப்படும்.

**கடனட்டையை பெறுவதற்கான தகுதி**

நீங்கள் முதன் முதலில் ஒரு கடனட்டைக்காக விண்ணப்பிக்கப் போகின்றீர்கள் எனில் உங்களின் தகுதிக்கு உரிய அட்டைக்கு மட்டுமே விண்ணப்பிக்க இயலும். இது ஒரு சில குறிப்பிட்ட அம்சங்களை உடைய கடனட்டைக்கு விண்ணப்பிப்பதை விட இது மிகவும் முக்கியமானது.

கடனட்டை வழங்குபவர் அல்லது ஒரு அதிகாரியின் எந்த ஒரு வாக்குறுதியையும் நம்பாதீர்கள். அவர்கள் எழுத்து வடிவில் அல்லது மின்னஞ்சல் வடிவில் குறிப்பிட்டால் மட்டுமே அவர்களுடைய வாக்குறுதியை நம்பமுடியும்.

எனவே உங்களுக்கு எந்த ஒரு வாக்குறுதி அளிக்கப்பட்டால் அது கறுப்பு, வெள்ளை வடிவில் உங்களுக்கு கிடைத்த பின்னர் மட்டுமே அதன் மீதான உங்களுடைய முடிவை எடுங்கள். வெற்று விண்ணப்படிவங்கள் அல்லது ஆவணங்களில் கையெழுத்திட வேண்டாம். மேலும் உங்களுடைய எதிர்கால நலன் கருதி நீங்கள் கடனட்டைக்குச் சமர்ப்பித்த எல்லா ஆவணங்களின் நகல்களையும் மிகவும் பாதுகாப்பாக வைத்திருங்கள்

**கடனட்டைப் பயன்பாட்டின் அனுகூலங்கள்**

1. கடனடிப்படையில் பொருட்கள், சேவைகளினை கொள்வனவு செய்யலாம்
2. ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு இலவச கடன் வசதி
3. வெகுமதி, புள்ளி, சலுகைகளை பெறலாம்.
4. நிகழ்நிலை conline மூலம் கொள்வனவு மற்றும் விற்பனைக்கு செய்யலாம்
5. கணக்கு வைத்திருத்தல் அவசியம் இல்லை




**கடனட்டைப் பயன்பாட்டின் பிரதிகூலங்கள்**

1. தாமதமான கொடுப்பனவுகள் அதிக வட்டிக் கொடுப்பனவு
2. சிக்கலான அபராதங்கள் மற்றும் கட்டணங்கள்
3. சேமிப்பை விட செலவழிக்க ஊக்குவிக்கிறது
4. எல்லா வணிகங்களிலும் ஏற்றுக் கொள்வதில்லை
5. நம்பகத் தன்மை குறைவு அல்லது மோசடிகளுக்கு அதிக வாய்ப்பு
6. தொழினுட்ப ரீதியான பிரச்சனைகள்.


## Reference

By : Batri Krishnan
www.goodreturns.in

# E - Waste

Miss. J. Sujitha
Grade 13 (A/L 2019)





Once upon a time
The Earth was lined with trees and plants
and the air was fresh and fine
Then we came by
And produced
Carbon dioxide!
Through making what we want
Like Batteries and smart phone and chips
And TVs,
And circuits
And wiring assemblies!
We put boron and phosphorus
(Which are poisonous)
Onto silicon and gallium arsenide
To make Semiconductors!
And copper on epoxy
To make circuits
And attached tin - lead alloys to the surface!
And we produced hydrochloric acid,
and sulphuric acid
heavy metals,
and organic solvents. Then the sky
started coughing
and the air we breathed
gave us pneumonia, bronchitis
and irritation to the nose, throat and skin
and damage to our nerves, brain, lungs, liver
and
kindneys
Then the clouds started crying
With Acid Rain!
with Nirtogen oxides (NOX)
And sulfur Dioxides
It killed the fish
And lines of trees
Poisoned the air
(Which, in past times,
Has been fine)
Now, this seemed to be a sign
from nature
That what we were doing was a crime
But did we stop?
No, we scampered up the ladder
we were never meant to climb!
and released heavy metals
Like chromium
And cadmium
Into the soil and the sea
Which killed the fish in the short - term
Or stayed in the soil and the sea
To harm us in the long - term!
And waste organic solvents!

Like phosphorus oxychloride
From factories, that was release outside
After stages of electronic manufacture
Into the seas and the river
Which deco - composed in water
To form hydrochloric acid and phosphoric acid
To make it even badder!
And in washington
People's bones and kidneys were poisoned
With cadmium
From cathode ray tubes
And in Guiyu,
In China
80 Per cent
of the children faced
Lead poisoning
And people faced skin damage
Lead poisoning
And people faced skin damage
Headaches
Vertigo, nausea, gastric and duodenal ulcers,
And chronic gastritis
Especially among migrants
Who recycle circuit boards and plastic
Chronic gastritis, and gastric and duodenal ulcers,
especially among migrants who recycle circuit boards
and plastic
And in Delhi,
The people were poisoned by mercury
And brominated flame retardants
Which disrupted hormonal functions
And they gor asthma, brain and kidney damage, and skin diseases

Once upon a time,
The earth was lined with trees and plants
And the air was fresh and fine
But because of our kind
The earth will soon die
So we need to save it now
And I will tell you how!
First, Proper protecative gear
should be worn during manufacture
To minimise exposure
To heavy metals,
Acids,
And organic solvents!
And Reduce use of electronics, there's no excuse
And don't just throw away old gadgets,
cuz that's just spoiling the planet
Recycle your trash or trash your Earth
Cuz when you refuse to reuse,
It's our Earth you abuse.

# உலக வங்கி - அறிமுகக் குறிப்பு



செல்வி V. விதுஷாலினி
தரம் 13 (A/L 2019)

வறுமை உலகளாவிய அக்கறை ஒவ்வொரு ஆண்டும் 03 மில்லியனுக்கு அதிகமான குழந்தைகள் ஊட்டச்சத்துக் குறைவால் இறக்கின்றார்கள். உலகளாவிய அளவில் சுமார் 783 மில்லியன் மக்களுக்கு சுத்தமான நீர் கிடைக்கவில்லை. வளரும் நாடுகளில் வாழும் பலர் மருத்துவ வசதிகளை பெறமுடியாது மற்றும் ஆதரவு வளர்ச்சிக்கு முடிவு கட்டுகிறது. இந்த சர்வதேச அமைப்பு 189 நாடுகளுடன் நீண்டகால உறவுகளை கொண்டிருக்கிறது. பொது மற்றும் தனியார் துறைகளில் கடன்கள் மற்றும் உதவி ஆகியற்றை வழங்கி வருகிறது.

**உலகவங்கி அமைப்பு என்றால் என்ன?**

1944ம் ஆண்டு நிறுவப்பட்ட உலக வங்கி குழு வறுமையை குறைப்பதற்கு சர்வதேச நிறுவனங்கள், பிராந்திய வங்கிகள் மற்றும் தேசிய அரசாங்கங்களுடன் வேலை செய்கின்றது. அமைப்பு பரந்த அளவிலான துறைகள், நிதியியல் மற்றும் கல்வியில் இருந்து காலநிலை மாற்றம் வரை உள்ளடக்கியது. கடந்த 70 ஆண்டுகளில் இது 100க்கும் மேற்பட்ட வளரும் நாடுகளில் மக்களுக்கு உதவியுள்ளது.


உலக வங்கியின் பங்கு சர்வதேச சந்தைகளில் தோல்விகளை சந்திப்பது மற்றும் வறுமையை முடிவு செய்வதாகும். இது மானியங்கள் பூஜ்ஜிய வட்டி கடன்கள் மற்றும் குறைந்த வட்டி கடன்கள் அல்லது முதலீடுகள் மற்றும் ஆலோசனை மற்றும் பயிற்சி ஆகியவற்றை வழங்குகிறது. தற்போது 10,000 கும் அதிகமான ஊழியர்கள் உள்ளனர் மற்றும் சர்வதேச நிதிகூட்டுதாபனமும் (I.N.C) மற்றும் புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியும் (IBRD) உள்ளிட்ட ஐந்து நிறுவனங்களை உள்ளடக்கியுள்ளது. நிறுவனம் அதன் ஆரம்பத்திலிருந்து 12,000 க்கும் மேற்பட்ட அபிவிருத்தி திட்டங்களில் ஈடுபட்டுள்ளது. தற்போது அதன் பிரதான குறிக்கோள் உலகளாவிய தீவிர வறுமை விகிதத்தை 2030க்குள் 3% க்கும் குறைவாக குறைக்க வேண்டும்.

உலக வங்கியின் மற்றொரு செயல்பாடு சுற்றுச்சூழல் நிலைத்தன்மை மற்றும் பச்சை வளர்ச்சிக்கு ஊக்கமளிப்பதாகும். மேலும் அதன் உறுப்பினர்கள் உலகின் வளர்ச்சி சவால்களை சமாளிக்கும் மாநாடுகள் மற்றும் பிற நிகழ்வுகளில் பங்கு பெறுகின்றனர்.

**உலக வங்கியின் நன்மைகள்**

தற்போது உலக வங்கியின் முக்கிய செயல்பாடு வளரும் நாடுகளுக்கு நீண்ட கால கடன்கள் மற்றும் உதவி வழங்குதல் ஆகும். கல்வி, ஆற்றல், வர்த்தகம், நகர்புற மேம்பாடு உள்ளிட்ட

எல்லா துறைகளிலும் இந்த நிதி முதலீடுகளை ஆதரிக்கின்றது. நன்கொடைகளுக்கிடையில் ஒழுங்கான தொடர்பு மற்றும் நிறுவன பொருளாதாரப் பிரச்சினைகள் மற்றும் சமூக சேவை முறைகளில் ஆய்வு நடக்கிறது.




கடந்த பல தசாப்த்தங்களாக உலக வங்கி சமூக அபிவிருத்தி மற்றும் தனியார் வணிக வளர்ச்சி, மேம்பட்ட சுகாதார பாதுகாப்பு மற்றும் கல்வி அணுகல் பல்வேறு திட்டங்கள் ஈடுபட்டு வருகிறது. 2000 மற்றும் 2013க்கு இடையில் 196 மில்லியனுக்கும் 124க்கும் இடைப்பட்ட குழந்தைகள் மற்றும் பதின்வயதுகளின் எண்ணிக்கை குறைந்து விட்டது.

உலக வங்கியின் பிற நன்மைகள் வளரும் நாடுகளில் சிறந்த உட்கட்டமைப்பு மேரும் வெளிப்படையான சேவைகள், வரி குறைப்புக்கள், சுதந்திர வர்த்தகம் மற்றும் சமூக ரீதியாக நிலையான அபிவிருத்தி ஆகியவை அடங்கும். சமூக அறிவியல்கள் மற்றும் வறுமை மதிப்பீடு உள்ளிட்ட அறிக்கைகள் மூலம் அதன் அறிவையும் கண்டுபிடிப்பையும் நிறுவனம் பகிர்ந்து கொள்கிறது. அதன் கொள்கைகள் ஒரு நிலையான பொருளாதார சூழலை உருவாக்குவதோடு தாராளவாத வர்த்தகத்தை ஊக்குவிக்கவும் முயற்சிக்கின்றன.

http: //bizfluent.com

# இலங்கை மத்திய வங்கி

## ஒரு வரலாற்றுக் குறிப்பு



செல்வி உ.மேனிக்கா
தரம்- 13 (A,L 2019)

இலங்கையின் நாணயக் கொள்கை நிதியியல் முறைமையினை கட்டுப்படுத்தல், நெறிப்படுத்தல், நாணயங்களை அச்சிடல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்காக அமைக்கப்பட்ட அரச நிறுவனம் ஆகும். இது இலங்கையின் நாணய மேலாண்மைச் சபையாக விளங்குகின்றது. இலங்கை விடுதலை பெற்று இரு ஆண்டுகளுக்குப் பின்னர் Central Bank of Ceylon எனும் பெயருடன் 1950ல் ஆண்டு ஆகஸ்ட் 28ம் திகதி நிறுவப்பட்டது. பின்னர் 1985ல் தற்போதைய பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டது. இலங்கை மத்தியவங்கியின் முதலாவது ஆளுனராக ஜோன் எக்ஸ்டர் கடமையாற்றினார். இலங்கை மத்திய வங்கியின் நிறுவக ஆளுநராக ஜோன் எக்ஸ்ரர் இருந்த வேளை ஜே.ஆர்.ஜெயவர்த்தன அப்போது நிதியமைச்சராக இருந்தார். அதுவரை நாட்டின் நாணய வழங்கலுக்குப் பொறுப்பாக இருந்த பணச்சபைக்குப் பதிலாக இலங்கை மத்திய வங்கி ஏற்படுத்தப்பட்டது. இது ஆசிய தீர்ப்பணவு ஒன்றியத்தின் உறுப்பினராக உள்ளது.



பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளித்து ஊக்குவிப்பதற்கு தீவிரமாக நாணயக் கொள்கை அமைப்பொன்றும் இயக்க வாற்றல் மிக்க நிதியியல் துறையொன்றும் முக்கியம் வாய்ந்தவை என்பதை அங்கீகரிக்கின்ற விதத்தில் விடுதலைக்குப் பின்னைய அரசாங்கத்தினால் இலங்கை மத்திய வங்கி ஏற்படுத்தப்பட்டது. மத்திய வங்கி நிறுவகப்படுத்துவதற்கு முன்னர் மத்திய வங்கி தொழிலுடன் தொடர்பான தொழிற்பாடுகள் 1884ஆம் ஆண்டின் தாள் நாணய கட்டளைச் சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட பணச்சபையினால் மேற்கொள்ளப்பட்டு வந்தன. அரசியல் சுதந்திரம் அடையப்பட்ட பின்னர் அபிவிருத்தியடைந்து வருகின்றதும் சுதந்திரமானதுமான நாடொன்றின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு பணச்சபை முறைமை போதுமானதற்றது மட்டுமன்றி பொருத்த மற்றதுமானதென கருதப்பட்டது. எனவே 1948 யூலையில் இலங்கை அரசாங்கம் மத்திய வங்கியை ஏற்படுத்துவதற்கான தொழில்நுட்ப நிபுணத்துவத்திற்கு ஐக்கிய அமெரிக்காவின் பொருளியலாளரான ஜோன் எக்ஸ்ரர் என்பவர் இப்பணியினை மேற் கொள்ளவதற்காக தயாரிக்கப்பட்டார்.

மத்திய வங்கிக்கான கோட்பாடு மற்றும் சட்டரீதியான கட்டமைப்பு என்பன மீதான எகஸ்ரரின் அறிக்கை 1949 நவம்பரில் சமர்ப்பிக்கப்பட்டதுடன் இது இதன் உருவாக்கத்திற்கு வழிவகுத்தது. இலங்கை மத்தியவங்கி 1949ம் ஆண்டின் 58ம் இலக்க நாணயச்சட்ட விதியின் மூலம் நிறுவப்பட்டதுடன் 1950 ஒகஸ்ட் 28ம் நாள் செண்டரல் பாங்க் ஒங் சிறிலங்கா (Central Bank of Srilanka) என ஆங்கிலத்தின் மீளப் பெயரிடப்பட்டது.

நாட்டின் நாணயம் வங்கித் தொழில் மற்றும் கொடுக்கல் என்பவற்றை பூரணமாக நிருவகித்து ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான பரந்தளவு அதிகாரங்கள் மத்திய வங்கிக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் இது நாட்டின் பன்னாட்டு ஒதுக்கின் கட்டுக்காப்பாளானாகவும் விளங்கி வருகின்றது. 1949ம் ஆண்டின் சட்ட விதியில் குறித்துரைக்கப்பட்டுள்ள மத்திய வங்கியின் குறிக்கோள்கள் பின்வருமாறு

1. உள்நாட்டு நாணயப் பெறுமதியினை வலுப்படுத்தல் (விலை உறுதிப்பாட்டினை பேணுதல்)
2. இலங்கை ரூபாவின் செலாவணி வீதத்தின் முகப்புப் பெறுமதியினை அல்லது உறுதிப்பாட்டினைப் பேணுதல் (செலவாணி வீத உறுதிப்பாட்டினைப் பேணுதல்)
3. இலங்கையில் உயர்ந்தமட்ட உற்பத்தி, தொழில் நிலைமற்றும் உண்மை வருமானத் தினை ஊக்குவித்துப் பேணுதல்
4. இலங்கையின் உற்பத்தியாக்க மூலவளங்களை முழுமையாக அபிவிருத்தி செய்யும் விதத்தில் ஊக்குவித்து மேம்படுத்தல்

நாணயம் உள்நாட்டில் எதனைக் கொள்வனவு செய்கின்றது என்ற நியதிகளிலும் மற்றைய நாணயங்களின் நியதியிலும் விலை உறுதிப்பாடு நாணயத்தின் பெறுமதியினைப் பாதுகாக்கின்றது. விலை உறுதிப்பாடு அல்லது உறுதியான விலைகள் என்பதன் கருத்து பொருட்கள் சேவைகளின் விலைகள் மாற்றமடையாது இருப்பதாகும். இச்சூழ்நிலையில் வட்டி வீதங்களும் குறைவாகவே இருக்கும். அத்தகையதொரு சுழலானது பொருளாதார அதன் உள்ளார்ந்த வளர்ச்சியை எய்துவதற்கும் உயர்ந்த தொழில் வாய்ப்பினைப் பேணுதவற்கும் இடமளிக்கின்றது. உயர்வானதும் அடிக்கடி மாற்ற முழுவதுமான பணவீக்கத்தின் தடங்கலைத் தரும் பாதிப்புக்கள் இல்லாததொரு சூழலில் நுகர்வோர் மற்றும் உற்பததியாளர் இருவரும் நம்பிக்கையுடன் பொருளாதார திர்மானங்களை மேற்கொள்ள முடியும். குறைந்த பணவீக்கம் அல்லது விலை உறுதிப்பாடு வலுவான நீண்ட கால பொருளாதார வளர்ச்சியையும் தொழில்நிலையையும் பேணி வளர்க்கும் மத்திய வங்கி பணவீக் கத்தினைக் கட்டுப்படுத்துவதற்கு நாணயக் கொள்கை வழிமுறைகளைப் பயன்படுத்து கின்றது.

உறுதியான நிதியியல் முறைமையானது வைப்பாளர்கள் மற்றும் முதலீட்டாளர் களுக்கு சாதகமான சூழலை உருவாக்குகின்றது. வினைத்திறன் மிக்க நிதியியல் இடையீட்டு நடவடிக்கைகளையும் காத்திரமான சந்தைத் தொழிற்பாடுகளையும் ஊக்குவிக்கின்றது. இதன் மூலம் முதலீடும் பொருளாதார வளர்ச்சியும் ஊக்குவிக்கப்படுகின்றது. நிதியியல் முறைமை உறுதிப்பாடு என்பதன் கருத்து யாதெனில் நிதியியல் முறைமையின் (நிதியியல்

நிறுவனங்கள் மற்றும் சந்தைகள்) காத்திரமான தொழிற்பாடு மற்றும் வங்கித்தொழில் நாணயம் மற்றும் சென்மதி நிலுவை நெருக்கடிகள் இல்லாமலிருப்பது என்பதாகும்.

**மத்திய வங்கியிலுள்ள ஆளுநர்களை பட்டியல்கள் வருமாறு**

*1. ஜோன் எக்ஸ்டர் (1950 - 1953)*

*2. என்யூ. ஜெயவர்தன (1953 - 1959)*

*3. ஏ.ஜி. ரணசிங்க (1954-1959)*

*4. டி. டபிள்யூ. ராஜபத்திரன (1959-1967)*

*5. டபிள்யூ. தென்னகோன் (1967-1971)*

*6. டபிள்யூ. ராசபுத்திரம் (1979-1988)*

*7. எச். என். எஸ் கருணாதிலக்க (1995-2004)*

*8. எச. பி திசாநாயக்க (1992-1995)*

*9. எ. எஸ். ஜயவர்தன (1995-2004)*

*10. எஸ். மெண்டிஸ் (2004-2005)*

*11. அஜித்நிவாட்கப்ரால் (2006-2015)*

*12. அர்ஜீனமகேந்திரன் (தற்போது)*

# School Days



Miss. S. Vishnuja.
Grade 13 (A/L 2019)



Oh! the lovely old school days
Which were Filled no doubt with our naught ways
Could just not be forgotten
Till our bodies get rotten.

Oh! the bright old classes,
And the noise of the desks' dashes,
When the girls Sweep every morning
with their hands to the brooms clinging.

Oh! the old white uniforms
Some times get torn and out of form
Caught in the scratches of our desks,
As we run a boat like wild pests.


Oh! The lovely old teachers,
Who some times made us feel creatures,
They're like long lost friends to us
When after school weld missed our bus.

Oh! the lovely play ground
Where the ballin the court kept bouncing
And the big trees which gave us shade
Just when oar moods were on the fade.

Oh! the lovely old school days
Which are just a dream of yester years
Would never in our days come again
As we think it gives us pain

# How to Overcome video games addiction

Miss. K. Angeline Veronikka
Grade 13 (A/L 2019)



**1.What is Video Game Addiction?**

Video game addiction is simply being addicted to video games Unfortunately this addiction is growing at a fast pace. While it may not affect the body directly like alcohol or cigarettes would, it can still devastate lives when people take things way too far when it comes to video games.

**10 Addictive Phone Games**

1. Angry Birds Space
2. Candy Crush Saga
3. Draw Something Free
4. Heads Up!
5. Mine Craft
6. NY Time Crosswords
7. Plants Vs zombies
8. Temple Run
9. Words With Friends Free
10. Year Walk




**2. Symptoms of Video Game Addiction**

There are a few signs that will clue you in if someone has a problem.

**Spends a lot of free time playing video games.**

It may have just started to be a one hour a day thing, but then you notice the person spending every free moment playing a video game or doing something video game related

**Neglects School or work**

This one should be obvious If the person calls in sikck or stays home from School to play a game then there is a problem Having a vacation day from work isn't a bad thing but skipping either work or school can be a bad thing if it's for a video game.

**Ignores Family**

Choosing a Video game over family is always bad. and a sure sign of addiction. If kids are neglected, then there is a problem. Video games are never more important than family.

**Lets their personal appearance go**

Since the person is always playing video games, personal hygiene won't seem as important.

**Health issues start to come up**

If the person stays awake all night playing video games, has mood swings etc. that could be a sign of video game addiction A person can even die if they focus on playing video games without a break.

**Spends money on video games prior to the necessities**

Obviously video games are the priority for this person, and not the things they need to survive If the rent goes unpaid just so the person can buy the latest games, then there is a problem with addiction

**5 Dangerous Online Games that Have driven Teenagers To Self Harm And Even Suicide**

1. The Blue Whale Challenge
2. The pass out Challenge
3. The Salt and Ice Challenge
4. The Fire Challenge
5. The Çutting | Chailling



**3. How to Overcome Video Game Addiction**

Fixing an addiction to video games like all other addictions, can be a difficult process. However, in time Someone can learn to enjoy video games without being addicted to them The following tips can be used to curb a video game addiction.

**Fiod other hobbies**

Start a collection of some sort, do some gardening etc Something else to keep your hands and mind busy. Some of these you can also inclade your friends and family.
Play in Moderation

Set a Specific number of hours Cor minutes) to play video games per day. Set a countdown on your phone. Once that timer goes off, you stop playing.

**Take a break every hour**

For each hour of play, stand up, walk around, etc For a few minutes It s unhealthy to sit in front of a screen for hours at a time without a break.

**Review your life**

Look at your life as it is now What could be better? May be there is a job you missed out on due to your video game addiction Maybe you missed events. Take those wrongs and try to make them right

**Choose games with physical activity**

Games are becoming more movement based, Some require you to stand and move your body while they are still video games, they can encourage exercise.

**10 Video games most dangerous in the world**

Video games developed in response to the human need for entertainment But often it triggers video game Controversy, and even forced some countries to ban a video game the reason for banning video games of all sorts, ranging from content deemed violent to promote gambling

Pokemon
Carmageddon
Foot ball Manager 2005
Mortal Kombat
Left 4 Dead 2
Bully
Grand theft Auto: San Adreas
Call of Duty
Postal
Manhunt

"Playing video games some of the time can be OK. Just choose quality games and limit screetime"

References

www.levelskip.com
www.pcmag.com

# வணிக விருத்தியில் தொடர்பாடலின் பங்கு



செல்வி V. மிதுஷா
தரம் 13 (A/L 2019)

தொடர்பாடல் என்பது ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு தகவலைக் கடத்துவதாகும். இது பொதுவாக மொழியூடாகவே நடைபெறுகின்றது. தகவல் தொடர்பானது ஒரு மூலத்திலிருந்து மற்றொன்றுக்கு செய்தியை மாற்றுவதாகும். குறியீடுகள் மற்றும் செமியாடிக் விதிகளின்படி இருவர் அடையாளங்களை வைத்தும் தொடர்பு கொள்ளலாம். பேச்சு, எழுத்து குறியீடுகளின் மூலம் செய்திகள், கருத்துக்கள் சிந்தனைகளின் பரிமாற்றம் அல்லது அறிவித்தல் தொடர்பு கொள்வதைக் குறிக்கின்றது. தொடர்பு கொள்வதை ஒரு கல்வி முறையாக பார்க்கையில் அதற்கு நீண்ட வரலாறு உண்டு.

தகவல் தொடர்பு என்பது அனுப்புனர் ரகசிய குறியீகளாக செய்தியைத் தொகுத்து பெறுவர்க்கு அனுப்புவது ஆகும். தொடர்பு கொள்ளும் அனைவரும் பொதுவான ஒரு தொடர்பு கொள்ளும் எல்லையை வைத்திருக்க வேண்டும். நமது செவியில் விழுகின்ற பேச்சு, பாட்டு, குரலொலியின் மொழியினாலும் தொடுதல், கண்களை நேராக நோக்குதல், எழுதுதல் கொண்டு தொடர்பு கொள்ளலாம்.

மனிதன் ஒரு தொடர்பாடும் விலங்கு எனக் கூறலாம். மனிதன் எப்போதும் குழுக்களாக வாழவே விரும்புகின்றான். தனியாக எவரும் விரும்புவதில்லை. குழுவாக வாழும் போது அங்கத்தவரிடையே மற்றும் குழுக்களிடையேயும் தொடர்பாடல் செய்ய ஒருமுறைமை தேவைப்பட்டதன் காரணமாகவே தொடர்பாடல் முறைகள் உதயமானது. தொடர்பாடல் முறைகளானது மனித வர்க்கத்தின் அளவுக்கு பழமை வாய்ந்தது எனக் கூறலாம். ஆதிகாலத்தில் மனிதன் தொடர்பாடலை மேற்கொண்ட விதமானது அங்க அசைவுகள், மேளங்கள், நெருப்பு போன்றவற்றினால் ஆகும். உடல் அசைவுளினாலும் குரலாலும், சொற்களாலும் மனிதனால் நேருக்கு நேர் தொடர்பு கொள்ள முடிகிறது. சிந்தனைகளும் உணர்ச்சிகளும் குரலொலியாலும் தனிப்பட்ட நயத்துடனான பேச்சாலும் குறியீடுகளாலும் வெளிக் கொண்டு வரப்படுகின்றன.

தொடர்பாடலின் போது 55% உடல் அசைவுகளாலும் 38% குரலாலும் 7 % கருத்துக்களாலும், சொற்களாலும் ஏற்படுகின்றன என ஆராய்ச்சிகளின் போது தெரியவந்துள்ளன. இவையனைத்தும் உள்ளது தான் மொழி என்றால் விலங்குகளின் மொழி என்பது என்ன? விலங்குகள் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொள்ள எழுத்து வடிவத்தை உபயோகிக்கவில்லை என்றாலும் அவை ஒரு மொழியையே உபயோகிக்கின்றன. அவ்வாறு பார்க்கையில் விலங்கினத்தின் தொடர்புகளைக் கூட நாம் ஒரு தனிமொழியாக கருத்தில் கொள்ளலாம்.

பின்னைய காலங்களில் மெல்ல மெல்ல மொழிகள் விரிவாகத் தொடங்கின. முதலில் பேச்சு வடிவம் மட்டுமே பயன்பாட்டில் இருந்தபோதும் பின்னர மெல்ல மெல்ல எழுத்துவடிவமும் காலத்தின் தேவையுடன் உருவாக்கப்பட்டது. இன்று நாம் என்றுமே இல்லாத அளவுக்கு தொடர்பாடல் தொழில்நுட்பத்தை பயன்படுத்துகின்றோம். இதன் உச்சக்கட்டமாக இணையத்தைப் பயன்படுத்துவதைக் கூறலாம். இன்றைய காலங்களில் இணையமானது தொடர்பாடலில் இருந்த பல தடைக்கற்களை தகர்த்தெறிந்துவிட்டது எனலாம். இந்த வகையில் தொடர்பாடலில் காணப்பட்ட தடைகளாக நேரம்போதாமை, மொழி தெரியாமை, உள்ளடக்கத்தை தெளிவாகப் புரியாமை போன்றவற்றை கூறிக்கொள்ளலாம்.

நாம் எந்தவொரு விடயத்தையும் ஒரு காரணம் இல்லாமலோ அல்லது நோக்கம் ஒன்று இல்லாமலோ செய்வதில்லை. அதே போல் தொடர்பாடல் செய்வதற்கும் பல நோக்கங்கள் உள்ளன. அவையாவன: எங்களது எண்ணங்கள் மற்றும் கருத்துக்களை அயலவரோடு பகிர்ந்து கொள்ள எங்களது திறமைகளை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள பொழுதுபோக்கிற்கு நேரத்தைச் செலவிடுவதற்கும் மற்றவர்களுக்கும் அறிவுறுத்தல் போன்ற நோக்கங்களைக் கூறிக்கொள்ளலாம்.



தொடர்பாடல் நடைபெறும் வழிமுறைகளாக இரண்டு வழிமுறைகள் காணப்படுகின்றன. காட்சிமூலமாக படம், குறியீடு, நிறம் என்பவற்றையும் ஒலிமூலமாக பேச்சு, ஒலி என்பவற்றையும் கூறலாம். தொடர்பாடலின் கூறுகளாக பிரதானமாக மூன்று கூறுகள் காணப்படுகின்றன. அனுப்புனர், ஊடகம், பெறுனர் போன்றவை. நாம் இப்போது கடிதத் தொடர்பாடலை எடுத்துக்கொண்டால் கடிதத்தை எழுதுவது அனுப்புனர் தபால் மூலம் கடிதமானது செல்வது ஊடகம், கடிதத்தை பெறுபவர் பெறுனர் ஆகும்.

இவ்வாறாக பல வகைகள், கூறுகள், பிரிவுகள் என்பன தொடர்பாடலில் இருப்பதைக் காணலாம். ஆரம்பத்தில் கடிதம் ஊடாகவும் முரசு ஊடாகவும் நடைபெற்ற தொடர்பாடலானது இப்போது தகவல் தொழில்நுட்பத்தால் வளர்ச்சி அடைந்து இருப்பதைக் காணலாம். ஆகவே மனிதர்களாகிய எம் ஒவ்வொருவருக்கும் தொடர் - பாடலானது எம் வாழ்க்கைக்கு இன்றியமையாததாக காணப்படுகின்றது.

அன்றைய காலங்களில் பறவைகள், மேளங்கள் என்பவற்றின் மூலம் ஆரம்பித்த தொடர்பாடலானது இன்று படிப்படியாக இலத்திரனியல் வர்த்தகம், தகவல் தொழில்நுட்பம் என வளர்ச்சியடைந்து கொண்டு செல்கின்றது. இலத்திரனியல் தொடர்பாடல் மூலம் பல அனுகூலமான விடயங்கள் நம் மக்களுக்கு கிடைத்துள்ளது. தகவல் தொழில்நுட்பத்தின் விளைவாக உருவான தொடர்பாடல் முறைகள் "இலத்திரனி - யல் தொடர்பாடல்" என வரைவிலக்கணப்படுத்தலாம். இதற்கு உதாரணமாக இணையம்,

இலத்திரனியல் தபால், தொலைநகல், ஒலி அஞ்சல் போன்ற சிலவற்றைக் கூறிக் கொள்ளலாம். இன்றைய காலகட்டங்களில் கணினிகளூடாகவே அனைத்து கொடுக்கல் வாங்கலையும் மேற்கொள்கின்றனர். இதன்மூலம் வணிகங்கள் தமது நடவடிக்கைகளை - யும் இலகுவாக மேற்கொள்ளும் இணையம் எனக் குறிப்பிடுவது வலையமைப்புக்களின் வலையமைப்பு என்பதையே ஆகும். இதனால் பல அனுகூலங்கள் எமக்குக் கிடைக்கும் விரைவு, செலவு குறைவு, ஒரே நேரத்தில் பலருக்கு அநேகமான தகவல்களை வழங்கல் போன்றவற்றை குறிப்பிடலாம்.

இலத்திரனியல் தபால் ஆனது வணிகரிற்கு பெரும்பாலான உதவிகள் அல்லது அனுகூலங்களை வழங்குகின்றது. இலத்திரனியல் தபாலைப் பயன்படுத்துவதால் செலவு குறையும். விரைவாக தகவலை பரிமாறலாம். பாதுகாப்பான முறையில் தகவல்கள் காணப்படும். விரைவான பின்னூட்டலை பெறமுடிதல், விற்பனை பற்றிய தகவல்களை வாடிக்கையாளருக்கு தனிப்பட்டமுறையில் வழங்க முடிதல். ஒரே நேரத்தில் பலருக்கு செய்திகளை வழங்கலாம். Video clips மற்றும் படங்கள் போன்றவற்றுடன் தகவல்களை வழங்கப்பயன்படுத்தலாம். இத்தகைய நன்மைகள் இலத்திரனியல் தபாலை பயன்படுத்தும் போது கிடைக்கும். இதனால் வணிகர்கள் தமது நாளாந்த செயற்பாட்டை இலகுவாகவும் விரைவாகவும் செயற்படுத்துவர்.

அடுத்ததாக ஒலி அஞ்சலை நாம் எடுத்தக் கொண்டால் இது மூலமாக சிரமமில்லாமல் தகவலை தொடர்பாடல் செய்ய கூடியதாக இருக்கும். ஏனெனில் அனுப்புபவரினால் தொலைபேசிமுறையைப் பயன்படுத்தி பெறுனர் இல்லாத நேரத்தில் கூட தகவல்களை வழங்கி அது சேமிக்கப்பட்டு பின் பெறுனர் வந்து அந்த தகவலை பெற்று பின்னூட்டலை வழங்கலாம். இவ்வாறான வசதிகளும் இலத்திரனியல் தொடர்பாடல் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இணையத்தை அடிப்படையாகக் கொண்டு வணிக நிறுவனத்தினுள் காணப்படுகின்ற தரவுகளை அடையக்கூடியதாக உருவாக்கப்பட்டுள்ள நிறுவக ரீதியான வலையமைப்பு "அக இணையம்" ஆகும். இது வணிக நிறுவனத்திற்குள் உள்ள நபர்களிடையே தகவல்களை பரிமாறிக் கொள்ள உருவாக்கப்பட்டது. இதனால் வணிகத்திற்கு வேகமாக தகவலை வழங்கி பின்னூட்டலை பெறலாம். வணிக செயற்பாடுகள் விரைவாக நடக்கும். வணிகம் விருத்தியாகும்.

ஆகவே வணிகங்களின் நீடித்த வாழ் தன்மைக்கும், விருத்திக்கம் தொடர்பாடலானது மிக முக்கியமானதொரு விடயமாக காணப்படுகின்றது.

**Reforence:**


WWW.//https//wikipedia.com

s. Mayuran வணிகக்கல்வி, Brillion Publication

# கணக்கீட்டு விகிதாசாரம்



செல்வி. பா. சிந்துஷா
தரம் 13 (A/L 2019)

இரு கணக்கீட்டு தகவலுக்கு இடையிலான தொடர்பினை அளவீடு செய்வதுடன் தொடர்புடைய ஒரு அலகு கோடே "கணக்கீட்டு விகிதாசாரம் எனப்படும்". இது நிறுவன செயற்பாடு பற்றிய ஆய்வை வெளிப்படுத்தும்.

கணக்கீட்டு விகிதாசாரம் கணிப்பதன் மூலம் நிறுவனம் பின்வரும் அனுகூலங்களை அடைந்து கொள்ளும்.

- நிறுவனத்தின் நிதிக்கூற்றின் முகப்பில் காட்டப்படும் நிலைமைகளை விட இதன் ▪ உள்ளடக்கத்தை விரிவாக அறியலாம்.
- வணிகத்தின் தற்போதைய நிலையை மதிப்பிடலாம்.
- நடைமுறை ஆண்டு மற்றும் முன்னைய ஆண்டு தரவுடன் ஒப்பீடு செய்வதுடன் ஏனைய சமமான நிறுவன தகவலுடன் ஒப்பிடக்கூடியதாய் இருத்தல்.
- முகாமை கருமங்களுக்கு வழிகாட்டியாய் அடைவதுடன் பொருத்தமான தகவல் எடுக்கவும் உதவும்.
- நிறுவனத்தில் அக்கறை உள்ள தரப்பினர் தீர்மானங்கள் மேற்கொள்ள கணக்கீட்டு விகிதங்கள் 5 வகையாக உதவும்.
  - திரவத்தன்மை விகிதம்
  - இணைப்பு விகிதம்
  - இலாபகத்தன்மை விகிதம்
  - செயற்பாட்டு விகிதம்
  - முதலீட்டு விகிதம்

திரவத்தன்மை விகிதங்கள் என்பது நிறுவனங்களின் குறுங்கால கடன்களை உரிய தவணையில் கொடுப்பனவு செய்யக்கூடிய ஆற்றலையும் நிறுவனம் தாம் பெற்ற கடன்களை குறித்த காலத்தில் கொடுத்து தீர்க்கக்கூடிய ஆற்றலை வெளிப்படுத்தும் விகிதங்கள் ஆகும். இது 2 வகைப்படும்.

1) நடைமுறை விகிதம் / நடைமுறை சொத்து விகிதம்
2) விரைவு விகிதம் / விரைவு சொத்து விகிதம் / திரவ சொத்து விகிதம் / அமில பரிசோதனை விகிதம்.

நடைமுறை விகிதம் பின்வருமாறு கணிப்பிடப்படும்.

$$\text{நடைமுறை விகிதம்} = \frac{\text{நடைமுறை சொத்து}}{\text{நடைமுறை பொறுப்பு}}$$

இவ் விகிதமானது 2:1 இருப்பது சிறந்த திரவத்தன்மையை வெளிப்படுத்தும்.

விரைவுவிகிதம் பின்வருமாறு கணிப்பிடப்படும்.

$$\text{விரைவு விகிதம்} = \frac{\text{விரைவு சொத்து}}{\text{நடைமுறை பொறுப்பு}}$$

விரைவு சொத்து = நடைமுறை சொத்து - (இறுதி இருப்பு + முற்பணச் செலவு)

இவ் விகிதமானது 1:1 ஆக இருப்பது மிகவும் சிறப்பாகும்.

இணைப்பு விகிதம் என்பது நிறுவனமொன்றின் நீண்டகால நிதி உறுதித்தன்மையை அளவிடுவதற்காக பயன்படும் விகிதங்கள் ஆகும். இது 3 வகைப்படும்.

1) கடன் விகிதம்
2) கடன் உரிமையாண்மை விகிதம்
3) வட்டி காப்பு விகிதம்

கடன் விகிதமானது பின்வரும் சமன்பாட்டின் மூலம் கணிப்பிடலாம்.

$$\text{கடன் விகிதம்} = \frac{\text{கடன் மூலதனம்}}{\text{மொத்த மூலதனம்}} \times 100$$

கடன் மூலதனம் = வங்கி கடன் + தொகுதிக்கடன்

உரிமை மூலதனம் = கூறப்பட்ட சாதாரண பங்கு + ஒதுக்கங்கள்

மொத்த மூலதனம் = உரிமை மூலதனம் + கடன் மூலதனம்.

கடன் உரிமையாண்மை விகிதம் பின்வருமாறு கணிப்பிடப்படும்

$$\text{கடன் உரிமையாண்மை விகிதம்} = \frac{\text{கடன் மூலதனம்}}{\text{உரிமை மூலதனம்}}$$

கடன் மூலதனத்தைவிட உரிமை மூலதனமானது அதிகமாக காணப்படின் தாழ் இணைபாக்கம் எனவும் கடன் மூலதனம் உரிமைமூலதனத்தை விடக் குறைவாக இருப்பின் அது உயர் இணைப்பாக்கம் எனவும் இரண்டும் சமமாக இருப்பின் சம இணைப்பாக்கம் எனவும் அழைக்கப்படும். இதில் நிறுவனம் தாழ் இணைப்பாக்கத்தில் காணப்படின் சிறப்பானது ஆகும்.

வட்டி காப்பு விகிதம் பின்வருமாறு காணப்படும்.

$$\text{வட்டி காப்பு விகிதம்} = \frac{\text{வரிக்கு முன் இலாபம்} + \text{வட்டி}}{\text{வட்டி}}$$

வட்டி காப்பு விகிதமானது உயர் பெறுமானத்தைக் கொண்டிருப்பது கடன் வழங்குனரிற்கு உச்ச பாதுகாப்பை வழங்கும். இது தடவைகளில் கணிப்பிடப்படும்.

இலாபத்தன்மை விகிதங்கள் என்பது முதலீட்டாளர்கள் நிறுவனங்களில் முதலீடு செய்வதன் நோக்கம் தமது முதலீட்டு வாயிலாக இலாபம் பெறுவதற்காகும். இதன் மூலம் நிறுவன இலாபத்தன்மை என்பது நிறுவனங்கள் இலாபத்தை உழைக்க கூடிய இயலுமையை குறிக்கும். இது 4 வகைப்படும்.

1) மொத்த லாப விகிதம்
2) தேறிய லாப விகிதம்
3) மொத்த சொத்து மீதான வருவாய் விகிதம்
4) உரிமை மீதான திரும்பல் விகிதம்.

மொத்த இலாப வீதம் பின்வருமாறு கணிப்பிடப்படும்.

$$\text{மொத்த இலாப வீதம்} = \frac{\text{மொத்த இலாபம்}}{\text{விற்பனை}} \times 100$$

தேறிய லாப வீதம் பின்வரும் சமன்பாட்டின் மூலம் கணிப்பிடப்படும்.

$$\text{தேறிய இலாபவீதம்} = \frac{\text{வரிக்கு முன் இலாபம் / ஆண்டுக்கான இலாபம்}}{\text{விற்பனை}} \times 100$$

மொத்த சொத்து மீதான வருவாய் வீதம் பின்வருமாறு கணிப்பிடப்படும்

$$\text{மொத்த சொத்து மீதான வருவாய் வீதம்} = \frac{\text{ஆண்டுக்கான இலாபம்} + \text{வட்டி}}{\text{மொத்த சொத்து}} \times 100$$

உரிமை மீதான திரும்பல் வீதம் பின்வரும் சமன்பாட்டின் மூலம் கணிப்பிடப்படும்.

$$\text{உரிமை மீதான திரும்பல் வீதம்} = \frac{\text{ஆண்டுக்கான இலாபம்}}{\text{உரிமை மூலதனம்}} \times 100$$

செயற்பாட்டு விகிதங்கள் என்பது நிறுவனமொன்றின் குறித்த ஆண்டு செயற்பாட்டை மதிப்பிட பயன்படும் விகிதம் இது 4 வகைப்படும்.

1) இருப்பு புரள்வு விகிதம் / இருப்பு சுழற்சி விகிதம்
2) இருப்பு பேணும் காலம் / இருப்பு உடமைகாலம்
3) கடன்பட்டோன் புரள்வு விகிதம் / கடன்பட்டோன் சுழற்சி விகிதம்
4) கடன்பட்டோனிடம் இருந்து பணம் சேகரிப்பு காலம்

இருப்பு சுழற்சி விகிதம் பின்வருமாறு தடவைகளில் கணிப்பிடப்படும்.

$$\text{இருப்பு சுழற்சி விகிதம்} = \frac{\text{விற்பனை கிரயம்}}{\text{சராசரி இருப்பு}}$$

$$சராசரி\ இருப்பு = \frac{ஆரம்ப\ இருப்பு + இறுதி\ இருப்பு}{2}$$

இதன் தடவைகளின் எண்ணிக்கை அதிகமாக இருத்தல் நன்று. இருப்பு உடமைகாலம் நாட்களில் பின்வரும் சமன்பாட்டின் ஊடாக கணிப்பிடப்படும்.

$$இருப்பு\ பேணும்\ காலம் = \frac{சராசரி\ இருப்பு}{விற்பனை\ கிரயம்} \times 365$$

இதில் நாட்கள் எண்ணிக்கை உயர்வாக இருத்தல் சிறப்பு. கடன் பட்டோன் சுழற்சி விகிதம் தடவைகளில் கணிப்பிடப்படும்.

$$கடன்பட்டோன்\ புரள்வு\ விகிதம் = \frac{கடன்விற்பனை}{சராசரி\ கடன்பட்டோன்}$$

$$சராசரி\ கடன்\ பட்டோன் = \frac{ஆரம்பக்\ கடன்பட்டோன் + இறுதிக்\ கடன்\ பட்டோன்}{2}$$

இதில் தடவைகளின் எண்ணிக்கை உயர்வாக இருப்பது நன்று. கடன் பட்டோன் பணம் சேகரிப்பு காலம் நாட்களில் கணிப்பிடப்படும்.

$$கடன்\ பட்டோன்\ பணம்\ சேகரிப்பு\ காலம் = \frac{சராசரிக்\ கடன்பட்டோன்}{கடன்\ விற்பனை} \times 365$$

அல்லது

$$= \frac{வருடத்திலுள்ள\ நாட்கள்}{கடன்\ பட்டோன்\ சுழற்சி\ விகிதம்}$$

முதலீட்டு விகிதங்கள் என்பது நிறுவனமொன்று தமது முதலீட்டின் மூலம் எவ்வாறு பயனைப் பெற்றுக்கொண்டுள்ளனர் என்பதை கணிப்பீடு செய்யும் விகிதங்கள் இவை. இது இரண்டு வகைப்படும்.

1) பங்கொன்றுக்கான உழைப்பு (EPS)

2) பங்கொன்றுக்கான பங்கு லாபம் (DPS)

பங்கொன்றிற்கான உழைப்பு பின்வரும் சமன்பாட்டின் ஊடாக கணிப்பிடப்படும்.

$$பங்கொன்றுக்கான\ உழைப்பு = \frac{ஆண்டுக்கான\ இலாபம்}{சாதாரண\ பங்குகள்\ எண்ணிக்கை}$$

பங்கொன்றுக்கான பங்குலாபம் பின்வரும் சமன்பாட்டின் மூலம் கணிப்பிடப்படும்.

$$\text{பங்கொன்றுக்கான பங்குலாபம்} = \frac{\text{சாதாரணபங்கு இலாபம்}}{\text{சாதாரணபங்குகளின் எண்ணிக்கை}}$$

01) வரை ஜனனி கம்பனியின் 31.03.2019 தகவல் வருமாறு "000"

| | |
|---|---|
| கூறப்பட்ட சாதாரண பங்குமூலதனம் | 1800 |
| நிறுத்திவைத்த வருமானம் | 1200 |
| 15% தொகுதிக்கடன் | 1500 |
| நடைமுறைப் பொறுப்பு | 900 |
| ஆதனம் பொறி உபகரணம் | 3750 |
| இறுதி இருப்பு | 900 |
| வியாபார வருமதி | 1200 |
| காசு | 150 |
| விற்பனை | 9000 |
| விற்பனைக்கிரயம் | 6600 |
| அண்டுக்கான வருமான வரி | 600 |
| ஆண்டு இலாபம் | 1200 |
| ஆரம்ப இருப்பு | 1500 |

1) நடைமுறை விகிதம்
2) விரைவு விகிதம்
3) இருப்பு புரள்வு விகிதம்
4) மொத்த சொத்து மீதான விளைவு விகிதம்
5) கடன் விகிதம்
6) கடன் உரிமை விகிதம்
7) வட்டி காப்பு விகிதம்

$$\text{நடைமுறை விகிதம்} = \frac{\text{நடைமுறை சொத்து}}{\text{நடைமுறை பொறுப்பு}}$$

$$= \frac{2250}{900} = 2.5:1$$

$$\text{விரைவு விகிதம்} = \frac{\text{விரைவு சொத்து}}{\text{நடைமுறைப் பொறுப்பு}}$$

$$= \frac{1350}{900} = 1.5:1$$

$$\text{இருப்பு புரள்வு விகிதம்} = \frac{\text{விற்பனைக் கிரயம்}}{\text{சராசரி இருப்பு}}$$

$$= \frac{6600}{1200} = 5.5 \text{ தடவை}$$

மொத்த சொத்து மீதான விளைவு விகிதம் = $\frac{\text{ஆண்டுக்கான இலாபம்} + \text{வட்டி}}{\text{மொத்த சொத்து}} \times 100$

$= \frac{1200 + 225}{6000} \times 100 = 23.75\%$

கடன் விகிதம் = $\frac{\text{கடன் மூலதனம்}}{\text{மொத் மூலதனம்}} \times 100$

$= \frac{1500}{4500} \times 100 = 33.33\%$

கடன் உரிமை விகிதம் = $\frac{\text{வரிக்கு முன் இலாபம்} + \text{வட்டி}}{\text{வட்டி}}$

$= \frac{1800 + 225}{225} = 9$ தடவை

வட்டி காப்பு விகிதம் = $\frac{\text{வரிக்கு முன் இலாபம்} + \text{வட்டி}}{\text{வட்டி}}$

$= \frac{1800 + 225}{225} = 9$ தடவை

*02)* வரையறுக்கப்பட்ட அஞ்சலி கம்பனியின் தகவல்கள் வருமாறு *"000"*

| | 31.03.2019 | 31.03.2018 |
|---|---|---|
| சரக்கிருப்பு | 3600 | 4400 |
| வியாபார வருமதி | 1080 | 840 |
| காசு | 1320 | 760 |
| கொடுக்க வேண்டிய வட்டி | 600 | 400 |
| வியாபார சென்மதி | 2400 | 3600 |

| | |
|---|---|
| மொத்த விற்பனை | 1600 |
| கொள்வனவு | 7200 |
| ஆண்டுக்கான இலாபம் | 4800 |

மேலதிக தகவல்,

1) வருடத்தில் வேலை நாட்கள் 360
2) சாதாரண பங்குகளின் எண்ணிக்கை 20,000 பங்கு
3) செலுத்திய இடைக்கால பங்குலாபம் 500,000ரூ

கணிக்க

1) நடைமுறை விகிதம்
2) விரைவுச் சொத்து விகிதம்

3) தேறிய இலாப விகிதம்

4) மொத்த இலாப விகிதம்

5) கடன்பட்டோன் பணம் சேகரிப்பு காலம்

6) கடன்பட்டோன் சுழற்சி விகிதம்

7) இருப்பு உடமைக்காலம்

8) இருப்பு சுழற்சி விகிதம்

9) சாதாரண பங்கு ஒன்றுக்கான உழைப்பு

10) பங்கு ஒன்றுக்கான பங்கு லாபம்.

நடைமுறை விகிதம் $= \frac{\text{நடைமுறைச் சொத்து}}{\text{நடைமுறை பொறுப்பு}}$

$= \frac{6000}{3000} = 2:1$

விரைவு சொத்து $= \frac{\text{விரைவு சொத்து}}{\text{நடைமுறைச் பொறுப்பு}}$

$= \frac{2400}{3000} = 0.8:1$

தேறிய இலாப விகிதம் $= \frac{\text{ஆண்டுக்கான இலாபம் x 100}}{\text{விற்பனை}}$

$= \frac{4800 \times 100}{16000} = 30\%$

மொத் இலாபவிகிதம் $= \frac{\text{மொத்த இலாபம் x 100}}{\text{விற்பனை}}$

$= \frac{8000 \times 100}{16000} = 50\%$

க.ப பணம் சேகரிக்கும் காலம் $= \frac{\text{சராசரி கடன்பட்டோன் x 360}}{\text{கடன் விற்பனை}}$

$= \frac{960 \times 360}{16000} = 22$ நாட்கள்

இருப்பு உடைமை காலம் $= \dfrac{\text{சராசரி இரப்பு}}{\text{விற்பனை கிரயம்}} \times 360$

$= \dfrac{4000 \times 360}{8000} = 160$ நாட்கள்

சாதாரண பங்கொன்றுக்கான உழைப்பு $= \dfrac{\text{ஆண்டுக்கான இலாபம்}}{\text{சாதாரண பங்கு எண்ணிக்கை}}$

$= \dfrac{4800\,000}{20\,000} = 240/=$

க.ப சுழற்சி விகிதம் $= \dfrac{\text{கடன் விற்பனை}}{\text{சராசரி கடன்பட்டோன்}}$

$= \dfrac{1600}{960} = 16.6$ தடவை

இரப்பு சுழற்சி விகிதம் $= \dfrac{\text{விற்பனை கிரயம்}}{\text{சராசரி இருப்பு}}$

$= \dfrac{8000}{4000} = 2$ தடவை

பங்கொன்றுக்கான பங்கு இலாபம் $= \dfrac{\text{பங்கு லாபம்}}{\text{சாதாரண பங்கு எண்ணிக்கை}}$

$= \dfrac{500\,000}{20\,000} = 25/=$

உசாத்துணை நூல்

தேசிய கல்வித்திணைக்களம், "ஆசிரியர் வழிகாட்டி, கணக்கீடு, தரம் 13", 2018/19

# குத்தகை ஆதனங்கள் தொடர்பான பதிவுகள்

## LKAS - 17



செல்வி தெபோ விமலதாசன்
தரம் 13 (A/L 2019)

கொடுப்பனவொன்றை செலுத்தி குறிப்பிட்ட காலப்பகுதி வரை சொத்தினை பயன்படுத்தும் உரிமை குத்தகை விற்பனை யாளரால் குத்தகை கொள்வனவாளருக்கு வழங்கப்படுவது தொடர்பான ஒப்பந்தமாகும். குத்தகை முறையில் காணி, கட்டடம், இயந்திரம், மோ. வாகனம், உபகரணம் போன்றவற்றை பெற்றுக் கொள்ள முடியும்.

**குத்தகை இரு வகைப்படும்**

*நிதிக் குத்தகை*
*செயற்பாட்டு குத்தகை*

**நிதிக்குத்தகை**

ஒரு சொத்தின் உரிமை, இடர், அனுகூலங்கள் அனைத்தும் சொத்து கைமாற்றப் -படும் போது குத்தகை கொள்வனவாளருக்கு மாற்றப்படுமாயின் அது நிதிக்குத்தகை எனப்படும். குத்தகை கால முடிவில் இச்சொத்தின் உரிமை கைமாற்றப்படலாம். கைமாற்றப்படாது விடலாம்.

**சொத்தின் இடர்**

- *பராமரிப்பு*
- *பழுதுபார்த்தல்*
- *செயற்பாடற்ற இயலளவு*
- *தொழினுட்ப ரீதியில் காலங்கடந்ததாயிருத்தல்*

**சொத்தின் அனுகூலம்**

- *பொருளாதார அனுகூலம் கிடைத்தல்*
- *சொத்தின் பெறுமதி உயர்வடைதல்*
- *மூலதன இலாபம் கிடைத்தல்*

### LKAS - 17 இன்படி குத்தகையொன்றை நிதிக்குத்தகையாக வகைப்படுத்த பயன்படுத்தப் படும் பிரமாணங்கள்

- *நியாயமானவிலையில் சொத்து கொள்வனவு செய்யக்கூடியதாக இருத்தல்*
- *குத்தகைகாலம் சொத்தின் ஆயுட்காலத்தில் பெரும்பகுதியாக இருத்தல்*
- *குத்தகை கொடுப்பனவின் பெறுமதி சொத்தின் நியாயமான பெறுமதிக்கு சமனாக இருத்தல்.*

சொத்தின் உரிமை குத்தகைக்காலத்திற்கு பின் குத்தகை கொள்வனவாளருக்கு மாற்றப்படல்

குத்தகை கொள்வனவாளர் ஏட்டில் குத்தகை தொடர்பான கணக்கீட்டு ஒப்பந்தம்

01) குத்தகை சொத்தின் நியாயமான பெறுமதி.

உரிய சொத்து கணக்கு வரவு

குத்தகை க/கொ க/கு செலவு

02) குத்தகை சொத்தினை பெறும்போது ஆரம்ப கொடுப்பனவு

குத்தகை க/கொ க/கு வரவு

காசு கட்டுப்பாட்டு க/கு செலவு

03) குத்தகை வட்டிக்கான பதிவு

குத்தகை வட்டி க/கு வரவு

குத்தகை க/கொ க/கு செலவு

04) தவணை கட்டணம் செலுத்தும் போது

குத்தகை க/கொ க/கு வரவு

காசு கட்டுப்பாட்டு க/கு செலவு

சொத்தின் உரிமை குத்தகை கால முடிவில் குத்தகை கொள்வனவாளருக்கு கிடைக்குமாயின் பெறுமான தேய்வு பின்வருமாறு கணிக்கப்படல்.

$$\frac{\text{சொத்தின் நியாயமான பெறுமதி - இழிவுப் பெறுமதி}}{\text{ஆயுட்காலம் (சொத்தின்)}}$$

சொத்தின் உரிமை குத்தகை கொள்வனவாளருக்கு கிடைக்காதுவிடின்

$$\frac{\text{சொத்தின் நியாயமான பெறுமதி - இழிவுப் பெறுமதி}}{\text{குத்தகை காலம்}}$$

பெறுமானத் தேய்வு க/கு வரவு

பெறுமதி தேய்வு ஏற்பாட்டுக் க/கு செலவு

**வருட முடிவில் நிதிக்கூற்றில் குத்தகை க/கொ ஐ வெளிக்காட்டல்**

ந/பொறுப்பு

| | |
|---|---|
| வருடாந்த குத்தகை தவணைக் கட்டணம் | XXX |
| (-) எதிர்வரும் வருடத்திற்கான குத்தகை வட்டி | XXX |
| | XXX |

ந/அ/பொறுப்பு

| | |
|---|---|
| வருட இறுதியில் உள்ள குத்தகை க/கொ மீதி | XXX |
| (-) குத்தகை க/கொ (ந/மு/பொறுப்பு) | (XXX) |
| | XXX |

உதாரணம்

*1) 31.12.2017 இல் எடுக்கப்பட பரீட்சை மீதி*

| | | |
|---|---|---|
| ஒப்படைப்பு வாகனம் (கிரயம்) | *1200000* | |
| வாகன திரண்ட தேய்வு *01.01.17* இல் | | *48000* |
| குத்தகைக் க/கொ சிப்ரா லீசிங் கம்பனி | | *595336* |

*01.01.2015*இல் *1200000* கிரயமுடைய ஒப்படைப்பு வாகனமொன்றை சிப்ரா லீசிங்கம்பனி மூலம் உடன்பணமாக ரூ *309858* செலுத்துவதன் மூலம் குத்தகை அடிப்படையில் கொ/வு செய்தது. குத்தகை காலம் *5* ஆண்டுக்கு வருடாந்த வட்டி வீதம் 12.5% குத்தகைக் கட்டணமாக ஒவ்வொரு வருடமும் *31.12.* இல் ரூ. *250000* செலுத்தப்படல் வேண்டும். ஒப்படைப்பு வாகனத்திற்கு கிரயத்தில் 20% தேய்விடப்படும்.

**வேண்டப்படுவது**

*1) 2017* நிதிக்கூற்று வெளிப்படுத்தல்கள்

குத்தகை க/கொ கட்டுப்பாட்டு க/கு

| | | | |
|---|---|---|---|
| தவணைக்கட்டணம் | *250000* | மீ/வ | *595336* |
| | | குத்.வட்டி | *74417* |
| மீ/செ | *419753* | | |
| | *669753* | | *669753* |
| | | மீ/வ | *419753* |

வருமானக் கூற்று

| | | |
|---|---|---|
| நிதிச் செலவுகள் | | |
| குத்தகை வட்டி | *74417* | |
| நிர்வாக செலவுகள் | | |
| பெறுமான தேய்வு | *240000* | |

குத்தகை வட்டி

$= 595336 \times \frac{12.5}{100}$

$= 74417$

$= 4191753 \times \frac{12.5}{100}$

$= 52469$

நிதிநிலைமைக் கூற்று

| | |
|---|---|
| ந/ அ/ பொறுப்பு | |
| குத்தகைக் க/கொ | 222222 |
| ந. பொறுப்பு | |
| குத்தகை க/கொ | 197531 |

குத்தகை க/கொ

419 753

| ந/பொறுப்பு | ந/அ/பொறுப்பு |
|---|---|
| 250 000 | 419 753 |
| (52469) | (197 531) |
| 197 531 | 222 222 |

உதாரணம்: -

கம்பனி நிதிக்குத்தகையின் கீழ் 01.04.2017 மோ. வாகனமொன்றை கொ/வு செய்தது. இத் திகதியில் மோ. வாகனத்தின் நியாயமான பெறுமதி 2400 000 இது நிகழ்கால பெறுமதிக்கு சமனாக இருந்தது.

சொத்தின் குத்தகை காலம் 4 வருடம்

ஆயுட்காலம் 5 வருடம்

மோ. வாகன உரிமை குத்தகை கால இறுதியில் குத்தகை வி/னையாளனுக்கு மாற்றப்படும்.

வருடாந்த குத்தகை தவணை கட்டணம் 930000

குத்தகை வட்டி:

| | | |
|---|---|---|
| 17/018 | - | 480000 |
| 18/19 | - | 390000 |
| 19/20 | - | 290000 |
| 20/21 | - | 160000 |

31.03.2018 முடிவடைந்த வருடத்தின் குத்தகை சென்மதியாளருக்கு செலுத்திய 1வது குததகை தவணைக்கட்டணம் வியாபார சென்மதியாளர் க/கு இல் வரவு வைக்கப்பட்டுள்ளது.

குத்தகை க/கொ க/கு

| | | | |
|---|---|---|---|
| தவ. கட்ட | 930000 | இயந்திரம் | 2400000 |
| | | குத். வட்டி | 480000 |
| மீ/செ | 1950000 | | |
| | 2880000 | | 2880000 |
| | | மீ/வ | 1950000 |

பெறு தேய்வு

$= \frac{2400000}{4} = 600000$

குத. க/கொ (19500000)

| ந/பொறுப்பு | ந/அ/பொ |
|---|---|
| 930000 | 1950000 |
| (390000) | (540000) |
| 540000 | 1410000 |

| வருமானக் கூற்று | |
|---|---|
| **நிதிச் செலவு** | |
| குத்/வட்டி | *480000* |
| **நிர்வாக செலவு** | |
| இய.தேய்வு | *600000* |

| நிதிநிலைமைக் கூற்று | |
|---|---|
| **ந/அ/பொறுப்பு** | |
| குத். க/கொ | *1410000* |
| **ந/பொறுப்பு** | |
| குத். க/கொ | *540000* |

**குத்தகைகளை வகைப்படுத்தலின் முக்கியத்துவம்**

நிதிக்குத்தகை, நிதிநிலைமைக் கூற்றில் நடைமுறையல்லாத சொத்துக்கள் மற்றும் குத்தகைப் பொறுப்பு ஆகியவற்றிற்கு வழிவகுக்கும். தொழிற்பாட்டுக் குத்தகையானது நிதி நிலைமைக் கூற்றில் சொத்தினையோ / பொறுப்பினையோ ஏற்படுத்த மாட்டாது. குத்தகைக் கொடுப்பனவுகள் இலாப, நட்டக் கூற்றில் செலவாக காடடப்படுவது மாத்திரமே இடம் பெறும்.

சொத்து காட்டப்படாவிடில், சொத்துக்களின் பெறுமதி குறைத்து காட்டப்படுவ தோடு தொழிற்படுத்தப்பட்ட மூலதனம் மீதான வருமானம் (ROCE) அதிகரித்துக் காட்டப்படும் குத்தகைப் பொறுப்பு காட்டப்படாத போது கடன் உரிமையாண்மை விகிதம் குறைத்து காட்டப்படும். இதன் காரணமாகவே நிதிக் குத்தகைகளை சட்டவடிவிலும் பார்க்க அவற்றின் உட்கருத்தின் (அடக்கம்) அடிப்படையில் கணக்கிடுதல் வேண்டும்.

# பணவீக்கம் ஒரு கோட்பாட்டு ரீதியான பார்வை

செல்வி கொ. வர்சா
தரம் 13 (A/L 2019)



எந்தவொரு நாட்டிலும் பணவீக்கமானது காணப்படும். அப் பணவீக்கமானது குறைந்தளவில் அல்லது கூடியளவில் காணப்படும் போது அதன் நன்மை, தீமைகளை அறிய முடியும். அந்தவகையில் பணவீக்கம், பணவீக்கமின்மை என்பன தோற்றம் பெறும்.

**பண வீக்கம்**

பணவீக்கம் என்பது பொது விலை மட்டத்தில் அதாவது எல்லாப் பொருட்கள் சேவைகளினதும் விலைகளின் நிறைப்படுத்திய சராசரிப் பெறுமதியில் ஏற்படுகின்ற தொடர்ச்சியான அதிகரிப்பே பணவீக்கமாகும்.

இதனால் பண வீக்கத்தின் போது பணத்தினுடைய கொடுப்பனவு சக்தியானது குறைவடைந்து செல்வதாகக் காணப்படும். ஏனெனில் பண வீக்கத்தின் போது பெது விலை மட்டம் அதிகரித்துச் செல்லும். இதனால் பொருட்கள் சேவைகளின் விலை உயர்வடைந்து மக்கள் கொள்வனவு செய்யும் அளவானது குறைவடையும்.

பணவீக்கம் விலைச் சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்டு கணிப்பிடப் படுகின்றது. இலங்கையில் தற்காலத்தில் பயன்படும் முக்கியமான விலைச் சுட்டெண்கள்

1) கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்
2) தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்
3) உற்பத்தியாளர் விலைச் சுட்டெண்
4) மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கி

போன்றவற்றைக் கொண்டு பணவீக்கம் கணிக்கப்பிடப்படுகின்றது.

$$\text{பணவீக்கம்} = \frac{\text{குறிப்பிட்ட வருட விலைச் சுட்டெண்மாற்றம்}}{\text{முன்னைய வருட விலைச் சுட்டெண்}} \times 100$$

**பண வீக்கத்தின் வகைகள்**

பண வீக்கமானது விலை அதிகரிப்பினால் நிகழ்வதாகும். அதனடிப்படையில் விலை அதிகரிப்பானது கேள்வி அதிகரித்தல் மற்றும் நிரம்பல் குறைவடைதல் என்பவற்றினால் ஏற்படுகின்றது. இதற்கமைய பணவீக்கமானது,

i) கேள்வித்தூண்டல் பணவீக்கம் கோட்பாடு
ii) செலவுத் தூண்டல்/ நிரம்பல் பக்க பணவீக்கக் கோட்பாடு

என இரண்டு பிரதான கோட்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

i) கேள்வித்தூண்டல் பணவீக்கம் கோட்பாடு

மொத்த நிரம்பலுடன் ஒப்பிடுகையில் மொத்தக் கேள்வி அதிகரிப்பதன் காரணமாக பொது விலை மட்டம் அதிகரிப்பதனால் பணவீக்கம் உருவாகின்றது என்பது கேள்வித் தூண்டல் பணவீக்கக் கோட்பாடு ஆகும். இக் கேள்வித்தூண்டல் பணவீக்கக் கோட்பாட்டின் மாற்று அணுகு முறைகளாக

i) நாணயக்கணியக் கோட்பாடு

ii) கெயின்ஸின் கோட்பாடு

என இரண்டு முறைகள் உண்டு

(i) நாணயக் கணியக் கோட்பாடு

பரிமாற்றுச் சமன்பாட்டை அடிப்படையாகக் கொண்டு விலை மட்டத்தின் நடத்தை தொடர்பாக முன்வைக்கும் கோட்பாடாகும். பணத்தின் அளவு மாற்றத்திற்கும் விலை மட்டத்தின் மாற்றத்திற்கும் இடையே நேரான தொடர்புள்ளதை இக் கோட்பாடு வெளிப்படுத்துகின்றது.

பரிமாற்றச் சமன்பாடு

$$MV = PT$$


M - பண நிரம்பல் V - சுற்றோட்ட வேகம்

P - பொது விலைமட்டம் T - கொடுக்கல் வாங்கலின் அளவு

பரிமாற்றச் சமன்பாட்டிலுள்ள V.T ஆனவை நிலையானதாக இருக்கும் என எடுகோளின்படி பண நிரம்பலுக்கும் விலை மட்டத்திற்கும் இடையே விகித சமமாக மாற்றம் ஏற்படுவதனை பண அளவுக் கோட்பாடானது விளக்குகின்றது.

(ii) கெயின்ஸின் கோட்பாடு

பொருளாதாரமொன்று நிறைதொழில்மட்ட நிலையை அடைந்தபின்னர் மொத்தக் கேள்வி அதிகரிக்கும் போது பொது விலை மட்டமானது உயர்வடைந்து பணவீக்கத்தை ஏற்படுத்தும் என்பது கெயின்ஸின் கோட்பாடாகும். இதனைப் பின்வரும் வரைபடத்தின் மூலம் விளக்கலாம்.




P - விலை மட்டம்

Y - மெய் உ/தி

AD - மொத்தக் கேள்வி

As - மொத்த நிரம்பல்

வரைபடத்தின் படி


- பொருளாதாரமானது P2 எனும் விலையில் நிறைதொழில் மட்டத்தை அடைந்துள்ளது.
- நிறை தொழில்மட்ட நிலையின் பின்னரும் மொத்தக் கேள்வியானது அதிகரிப்பதனால் பொதுவிலை மட்டமும் அதிகரித்து பண வீக்கம் ஏற்படுகின்றது.

மாறாக P1, P2 என விலை மட்டமானது கேள்வி அதிகரிப்பிற்கேற்ப மாற்றமடைகின்றது. ஆனால் அவை பண வீக்கம் எனக் கருதப்பட மாட்டாது. ஏனெனில் பொருளாதாரமானது நிறைதொழில் மட்டத்தினை அடையவில்லை. அதனால் கேள்வி அதிகரிக்கும் போது அவற்றை நிறைவேற்றுவதற்காக உற்பத்தியை அதிகரிக்க முடியும்.

எனவே, நிறை தொழில் மட்டத்தின் பின்னர் மொத்தக் கேள்வியில் ஏற்படும் அதிகரிப்பே பணவீக்கம் என கெயின்ஸினால் கூறப்படுகின்றது.

**பணவீக்க இடைவெளி**

நிறை தொழில்மட்ட உ/திக்குத் தேவையான மொத்தக் கேள்வியிலும் பார்க்க மொத்தக் கேள்வி உயர்வடையும் சந்தர்ப்பத்தில் வீக்க இடைவெளியொன்று உருவாகும் வகையில் பொருளாதாரம் சமனிலை அடைவதாகக் காணப்படுதல் பணவீக்க இடைவெளியாகும். இதனைப் பின்வரும் வரைபடம் மூலம் விளக்கலாம்.




E - மொத்தச் செலவு
Y - மொத்தவருமானம்
a - நிறை தொழில் மட்டம்
b - n - பணவீக்க இடைவெளி
a - y - பணச்சுருக்க இடைவெளி

வரைபடத்தின் படி,

- E1 என்பது நிறை தொழில்மட்ட உ/தியாகும். இங்கு நிறைதொழில்மட்ட வெளியீட்டிற்குச் சமனாக மொத்தக் கேள்வி காணப்படுகின்றது. இதன் போது பணவீக்கம், பணச்சுருக்கம் என்பன தோற்றம் பெறாது.

- E 2 என்பது நிறைதொழில்மட்ட உ/திக்கான மொத்தக் கேள்வியை விட உண்மையான மொத்தக் கேள்வி உயர்வாகக் காணப்படும் நிலையாகும். இதனால் இங்கு பணவீக்கமானது காணப்படும். b - x எனும் புள்ளிகள் பணவீக்க இடைவெளியைக் குறிக்கின்றது.

பண வீக்க இடைவெளியின் காரணமாக வெளியீடுகளின் விலையானது உயர்வடைந்து உ/தியாளர்களுக்கு மிகையான செலவுகள் ஏற்பட்டதனால் அதற்கேற்ப வெளியீட்டை உயர்த்த முடியாததனால் கேள்வித்தூண்டல் பணவீக்கம் ஏற்படும். மேலும் உயர்ந்த விலை மட்டம் காரணமாக பெயரளவு மொத்த உள்நாட்டு உ/தி அதிகரித்த போதிலும் மெய் மொத்த உள்நாட்டு உ/தியானது அதிகரிக்காது.

E3 என்பது நிறை தொழில்மட்ட உற்பத்திக்கான மொத்தக் கேள்வியை விட உண்மையான மொத்தக் கேள்வி குறைவாகக் காணப்படுகின்றது. இங்கு பணச் சுருக்கம் நிலவுகின்றது. a - y எனும் புள்ளிகளுக்கான இடைவெளியின் மூலம் பணச்சுருக்க இடைவெளி காட்டப்படுகின்றது.

பணச் சுருக்க இடை வெளியினால் பொருளாதாரத்தைச் சுருக்கச் செய்வதனால் பொருளாதாரத்தில் வேலையின்மையும் மெய்வெளியீட்டில் வீழ்ச்சியும் ஏற்படும்.

எனவே ஒரு பொருளாதாரத்தில் பணவீக்கம் நிலவுவதும் பணச்சுருக்கம் நிலவுவதும் பாதகமானதாக அமைவதனால் சிறந்த ஒரு பொருளாதாரத்தில் பணவீக்கம், பணச்சுருக்கம் அற்ற நிலை தோன்ற வேண்டும்.

கேள்வித் தூண்டல் பண வீக்கம் ஏற்படுவதற்கான காரணிகள்


- பணநிரம்பலில் அதிகரிப்பு ஏற்படல்
- வட்டி வீதத்தில் ஏற்படும் வீழ்ச்சி
- செலவிடத்தக்க வருமான அதிகரிப்பு
- சொத்துக்கள் மற்றும் செல்வத்தின் மீதான உரிமை விரிவாக்கம்
- நுகர்வுச் செலவு அதிகரிப்பு
- அரசாங்கச் செலவு அதிகரிப்பு
- அரசாங்கக் கடன் அதிகரிப்பு
- நேர்வரியில் குறைப்பு




**2) செலவுத் தூண்டல் பணவீக்க கோட்பாடு**

உள்ளீடுகளின் விலை உயர்வதனால் உ/திச் செலவு அதிகரித்து நிரம்பல் குறை வடைவதன் மூலம் பொது விலை மட்டத்தில் அதிகரிப்பு ஏற்படுவதனால் பணவீக்கம் உருவாகும் எனக் கூறுவது செலவுத் தூண்ட பணவீக்கக் கோட்பாடு ஆகும்.

செலவுத் தூண்டல் பணவீக்கத்தை பின்வரும் வரைபடத்தின் மூலம் காட்டலாம்.




வரைபடத்தின் படி

செலவு அதிகரிப்பதனால் மொத்த நிரம்பல் வீழ்ச்சியடைகின்றது. இதனால் பொது விலைமட்டம் உயர்வடைகின்றது. AS ஆனது AS1, AS2 என நகர்வடையும் போது விலைமட்டமானது P3 இலிருந்து P2, P1 என மாற்றமடைந்து இவ்வாறு மாற்றமடைவதனால் பணவீக்கம் உருவாகின்றது.

**செலவுத் தூண்டல் பணவீக்கத்திற்கான காரணிகள்**

- உற்பத்திதிறன் அதிகரிக்காத நிலையில் காரணிகளின் விலை உயர்வடைதல்
- சிலருரிமை நிறுவனங்கள் இலாபத்தன்மையை அதிகரிப்பதற்கு விலையை உயர்த்துதல்
- உள்ளீடுகள், மூலப்பொருட்களின் விலை உயர்வடைதல்
- இறக்குமதிப் பொருளின் விலை அதிகரித்தல்
- நாணய மாற்று வீதம் வீழ்ச்சியடைதல்
- மறைமுகவரிகள் அதிகரித்தல்
- உற்பத்திக்கான மானியங்கள் குறைவடைதல்

**பண வீக்கத்தின் விளைவுகள்**

முன்பு கூறியுள்ள படி பணவீக்கத்தினால் சாதக, பாதக விளைவுகள் ஏற்படலாம். அதன்படி

சாதக விளைவுகள்

➤ கடன் பெற்றவர்கள் நன்மை அடைவார்கள்

நிலையற்ற வருமானங்கள் பெறுபவர்கள் நன்மையடைவார்கள்

குறுங்கால முதலீடுகள் அதிகரிக்கும்

உற்பத்தி அதிகரிக்கும்

நாணயத்தின் இரண்டு பக்கம் போல் பணவீக்கத்தின் நன்மையான விடயங்கள் காணப்பட்டாலும் பெருமளவில் பாதகமான விளைவுகளையே ஏற்படுத்துவதாக காணப்படுகின்றது.

**பணவீக்கத்தின் பொருளியற் செலவுகள்**

பணத்தின் மெய்ப் பெறுமதி குறைவடையும்.

வருமான ஏற்றத் தாழ்வுகள் ஏற்படும்

பொருளாதார தீர்மானங்களை மேற்கொள்வது பொருத்தமற்றதாக அமையும்

சேமிப்பு வீழ்ச்சியடையும்.

கடன் கொடுத்தோருக்கு பாதகமாக அமையும்

நாணயமாற்றுவிகிதம் தேய்வடைதல்

தனிநபர்களின் வாழ்க்கைச் செலவு அதிகரித்தலும், வாழ்க்கைத்தரம் வீழ்ச்சியடைதலும்

நிலையான வருமானம் பெறுவோருக்கு பாதகமாக அமையும்.

உதாரணம்: - ஓய்வூதியம் பெறுவோர்
அரச சேவையில் உள்ளோர்

முழு வறுமை அதிகரித்தல்

ஏற்றுமதிப் போட்டிக்குப் பாதிப்பு ஏற்படும்.

பணவீக்கமானது விலைச் சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்டு கணிப்பிடப்படுகின்றது. அந்த வகையில் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் படி **3.3** எனவும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்படி **3.1** ஆகவும் காணப்படுகின்றது. மேலும் மத்திய வங்கியினது ஆண்டறிக்கையின்படி இலங்கையின் தேசிய ரீதியான பணவீக்கம் **2016**ம் ஆண்டு 4% ஆகவும் **2017**ம் ஆண்டு 6.54% ஆகவுமுள்ளது. எனவே பணவீக்கத்தை இலங்கையானது குறைக்கின்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

**பணவீக்கத்தைக் குறைப்பதற்கான வழிமுறைகள்**

- மொத்தக் கேள்வி அதிகரிப்பைக் கட்டுப்படுத்தல்
  மத்திய வங்கியானது நாணயக் கொள்கை, இறைக் கொள்கை என்வற்றைப் பயன்படுத்தி மொத்தக் கேள்வி அதிகரிப்பை கட்டுப்படுத்தல்.


- மொத்த நிரம்பல் அதிகரிப்பை துரிதப்படுத்தல்
  அரசானது வரிகளை நீக்குவதன் மூலம் உற்பத்தியாளர்கள் முதலீட்டாளர்கள் ஊக்கப்படுத்தப்படுவார்கள். இதனால் உற்பத்தி அதிகரிப்பு ஏற்படும் இதனால் பணவீக்கம் குறைவடையும்.

- அரசினது நேரடியான தலையீடுகள்
  அரசு விலைக்கட்டுப்பாட்டுக் கொள்கை மற்றும் வருமான கட்டப்பாட்டுக் கொள்கைகள் மூலம் தலையிடுதல்

- செயற்திறனாக வளங்களைப்பகிர்வதிலுள்ள தடைகள் நீக்குதல்
  வரிவிதிப்பு, மானியத்தைக் குறைத்தல், கண்காணிப்பு நிறுவனங்கள் மூலம் விலை நிர்ணயித்தல், இறக்குமதிக் கோட்பாடு முறை போன்ற தடைகள் நீக்குவதன் மூலம் வளப்பங்கீட்டினை வினைத்திறனாக மேற்கொள்வதனால் பணவீக்கத்தை கட்டுப்படுத்த முடியும.

# International trade organizations

Miss. T. Tharshika
Grade 13 (A/L 2019)



## World Bank

The **World Bank** is an international financial institution that provides loans to countries of the world for capital projects. It comprises two institutions: the International Bank for Reconstruction and Development (IBRD), and the International Development Association(IDA). The World Bank is a component of the World Bank Group.

The World Bank's most recent stated goal is the reduction of poverty. As of November 2018, the largest recipients of world bank loans were India ($859 million in 2018) and China ($370 million in 2018), through loans from IBRD.

**Headquarters:** Washington, D.C., United States
**Purpose:** Economic development
**Parent organization:** World Bank Group
**Membership:** 189 countries (IBRD)
173 countries (IDA)

**World Trade Organization**

The **World Trade Organization (WTO)** is an intergovernmental organization that is concerned with the regulation of international trade between nations. The WTO officially commenced on 1 January 1995 under the Marrakesh Agreement, signed by 124 nations on 15 April 1994, replacing the General Agreement on Tariffs and Trade (GATT), which commenced in 1948. It is the largest international economic organization in the world.

WORLD TRADE ORGANIZATION

The WTO deals with regulation of trade in goods, services and intellectual property between participating countries by providing a framework for negotiating trade agreements and a dispute resolution process aimed at enforcing participants' adherence to WTO agreements, which are signed by representatives of member governments and ratified by their parliaments. The WTO prohibits discrimination between trading partners, but provides exceptions for environmental protection, national security, and other important goals. Trade-related disputes are resolved by independent judges at the WTO through a dispute resolution process.

***FUNCTIONS:***

- Administering WTO trade agreements
- Forum for trade negotiations
- Handling trade disputes
- Monitoring trade policies
- Technical assistance and training for developing economies
- Cooperation with other international organizations

**LOCATION:** Geneva, Switzerland
**ESTABLISHED:** 1 January 1995
**MEMBERSHIP:** 164 members
**HEAD:** Roberto Azevêdo (Director-General)
**purpose:** Reduction of tariffs and other barriers to trade.

## International Monetary Fund

The **International Monetary Fund (IMF)** is an international organization headquartered in Washington, consisting of "189 countries working to foster global monetary cooperation, secure financial stability, facilitate international trade, promote high employment and sustainable economic growth, and reduce poverty around the world." Formed in 1944 at the Bretton Woods Conference primarily by the ideas of Harry Dexter White and John Maynard Keynes, it came into formal existence in 1945 with 29 member countries and the goal of reconstructing the international payment system. It now plays a central role in the management of balance of payments difficulties and international financial crises.

**Headquarters:** Washington, D.C., United States
**CEO:** Christine Lagarde
**Location:** Headquartered in Washington, D.C.
**Formation:** 27 December 1945;
**Membership:** 189 countries
**Parent organization:** United Nations
**purpose:** Promote international monetary co-operation, facilitate international trade, foster sustainable economic growth, make resources available to members experiencing balance of payments difficulties.

## South Asian Association for Regional Cooperation

The **South Asian Association for Regional Cooperation** (**SAARC**) is the regional inter governmental organization and geopolitical union of nations in South Asia. Its member states include Afghanistan, Bangladesh, Bhutan, India, Nepal, Maldives, Pakistan and Sri Lanka.

SAARC was founded in Dhaka on 8 December 1985. Its secretariat is based in Kathmandu, Nepal. The organization promotes development of economic and regional integration. It launched theSouth Asian Free Trade Area in 2006. SAARC maintains permanent diplomatic relations at theUnited Nations as an observer and has developed links with multilateral entities, including theEuropean Union.

***The main functions of SAARC have been mentioned below.***

1. To maintain the co operation in this region
2. To prevent the common problems
3. To ensure strong relationship among the SAARC country
4. To remove the poverty in this region permanently
5. To prevent the terrorism in this region .

**Headquarters:** Kathmandu, Nepal
**Founded:** December 8, 1985, Dhaka, Bangladesh
**Demonym:** South Asia
**Member states:** 8 states
**Secretary-General:** Amjad Hussain B. Sial
**Purposes:** The **SAARC** seeks to promote the welfare of the peoples of South Asia, strengthen collective self-reliance, promote active collaboration and mutual assistance in various fields, and cooperate with international and regional organizations.

## Asian Development Bank

The **Asian Development Bank** (**ADB**) is a regional development bank established on 19 December 1966, which is headquartered in the Ortigas Center located in the city of Mandaluyong, Metro Manila, Philippines.

The company also maintains 31 field offices around the world to promote social and economic development in Asia. The bank admits the members of the United Nations Economic and Social Commission for Asia and the Pacific (UNESCAP, formerly the Economic Commission for Asia and the Far East or ECAFE) and non-regional developed countries.From 31 members at its establishment, ADB now has 67 members, of which 48 are from within Asia and the Pacific and 19 from outside.

The ADB was modeled closely on the World Bank, and has a similar weighted voting system where votes are distributed in proportion with members capital subscriptions. ADB releases an annual report that summarizes its operations, budget and other materials for review by the public. The ADB-Japan Scholarship Program (ADB-JSP) enrolls about 300 students annually in academic institutions located in 10 countries within the Region. Upon completion of their study programs, scholars are expected to contribute to the economic and social development of their home countries. ADB is an official United Nations Observer.

**Headquarters:** Mandaluyong, Philippines
**President:** Takehiko Nakao
**Purpose:** Economic development
**Membership:** 67 countries
**Founded:** December 19, 1966
T.Tharshika

# நன்றி

"வணிகத் தளிர்" மலரினை வெளியீடுசெய்வதற்கு எமக்கு சக்தியையும் ஆசீர்வாதத்தையும் அருளிய இறைவா உமக்கு எங்கள் முதல் நன்றிகள்! மேலும், இம்மலரினை வெளியீடு செய்வதற்கு நிதி ஒதுக்கி உதவிய அதிபர், உதவி அதிபர், உடனிருந்து ஆலோசித்துப் பணியாற்றிய மன்றப் பொறுப்பாசிரியர், வணிகப் போட்டிகளை நடாத்துவதற்கு உதவிய எம் வணிகத்துறை ஆசிரியர்கள், ஆக்கங்களை தந்துதவிய விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், புகைப்படங்களை எடுத்து உதவிய புகைப்படக் கலைஞர், விளம்பரங்களை பிரசுரித்து உதவிய வியாபார அன்பர்கள், எமக்கு தோள்கொடுத்து உதவிய எம் பெற்றோர்கள், மலர் ஆக்கத்திற்கு உதவிய எம் நண்பர்கள், வெளியீட்டு விழாவில் கலந்து சிறப்புச் செய்த பிரதம விருந்தினர், முதற்பிரதி மற்றும் சிறப்புப் பிரதிகள் பெற்று கௌரவம் தந்தோர், வெளியீட்டு விழாவை சிறப்பாக நடாத்துவதற்கு ஒத்துழைத்த அனைத்து நல்லுள்ளங்கள், இம்மலரினை அழகுற அச்சாக்கித் தந்த விஸ்டா8 பிறின்டேர்ஸ் அனைவருக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றிகள்!



ஆடை உலகின் முன்னணி வகிக்கும் பெயர்
இஷாரா
நியூ டிறெஸ் (பிறைவேட்) லிமிட்
இல.199/A 199/B
மின்சார நிலைய வீதி.
யாழ்ப்பாணம்
021 221 9925
0772628933
ISHARA
NEW DRESS MART




Prop: J.A.Arun
Tecnology at the Speed of Life
arun
Software Developers
T.P - 021 221 5828
Mob - 0777 123 313
CCTV Cameras
Bar Code
Finger Print
Inter com
Mobile Accessories
No.273,Hospital Road,Jaffna.




ஜீவா
பேக்கரி
JEEVA BAKERY
189,Columbagam Road,
Pandiyan Thallvu,Chudikuli.
T.P 021 2220493,0777110531,0779596626.

வணிகத்துளிர் இதழ் - 17

வணிக மாணவர் மன்றம்




Vista8printers.0212215488